இந்தியா கவர்ன்மெண்டில்

திருத்தங்கள்.

சில பெரியோரது
அபிப்பிராயங்கள்.

சுதேச மித்திரன் ஆபீசிலிருந்து வெளியிடப்பட்டது.

MADRAS.

THE INDIA STEAM PRINTING WORKS.

1908.

 விலை அணா 12.

பொருளடக்கம்.

இந்தியா கவர்ன்மெண்டில்

திருத்தங்கள்.

சில பெரியோரது
அபிப்பிராயங்கள்.

சுதேச மித்திரன் ஆபிசிலிருந்து வெளியிடப்பட்டது.

MADRAS:
THE INDIA STEAM PRINTING WORKS.
1908.

 விலை அணா 12.

முகவுரை.

போனவருஷம் லார்ட் மிண்டோ ஸிம்லாவில் இருந்தபோது இந்தியா கவர்மெண்டின் அமைப்பில் சில திருத்தங்களைப் பிரேரேபித்து ஒருதீர்மானம் பிரசுரம் செய்தார். அதில் புதிதாக தேச மன்னர்களடங்கிய அட்வைவஸரி கௌன்ஸில்களென்று சபைகளும் சட்ட சபைகளில் சில திருத்தங்களும் பிரேரேபிக்கப் பட்டன. பிறகு அதிகாரப் பிரிவினைக்காக ராயல் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. இப்போது இந்தியாவின் நிர்வாக அதிகாரம் ஒரு மத்தியஸ்தானத்தில் இருத்தப்பட்டு, மாகாண கவர்ன்மெண்டா ரும் ஜில்லா அதிகாரிகளும் சுவாதீன மன்றி மத்திய ஸ்தானத்து உத்திரவுப்படியே நடக்க வேண்டியிருப்பதால் தீங்கு விளைகிற தென்றும், அப்படியில்லாமல் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் ஜில்லா அதிகாரிகளுக்கும் சுவாதீனத்தைக் கொடுத்து ஜனங்களு டன் அவர்கள் நெருங்கிப்பழகிக் கால இயல்புக்குத் தக்கபடி நிர்வா கம் நடக்கவேணு மென்றும் கருதி, இந்தக் கமிஷனை சிபார்சுகள் செய்ய இந்தியா மந்திரி நியமித்தார். இந்த கமிஷன் முன்பாக நம்மவர் பலர் சாட்சிசொன்னதில் மிஸ்டர் கோகலேயும் சொன் னார். லார்ட் மிண்டோவின் தீர்மானமும் இந்த அதிகாரப் பிரி வினைக் கமிஷனும் இந்தியாவின் ஆக்ஷியையும் தற்கால நிலைமைக ளுக்குத் தக்கபடி மாற்றவேண்டு மென்ற விருப்பத்தைப்பற்றி யேற்பட்டவை. டாக்டர் ரதர் போர்ட்டும் லார்ட்மார்லியும் இவ்வி ஷயங்களைப் பற்றிப் பார்லிமெண்டில் பேசினார்கள். இந்தியாவில் பெரியோர் பலர் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்ததில், பம் பாயில் ஸ்தாபிக்கப்பட்டு ஸர் பிரோஸஷா மேடா வென்ன, மிஸ் டர் வாச்சா வென்ன, மிஸ்டர் கோகலெ யென்ன இப்படிப்பட்ட மகாபுத்திமான்களால் நடத்தப்பட்டுவரும் பம்பாய் ராஜதானி சபை யும் அபிப்பிராயம் கொடுத்தது. இப்படிக் கொடுத்த அபிப்பிராய மானது மகா சாமார்த்தியத்தையும் ராஜாங்க நிர்வாக அனுபோகத் தையுங் காட்டுகிற தென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் அதைப் பார்த்துப் பிரமித்தனரென்றும் சொல்லப்பட்டது.

ஆகையால் இந்தப் புஸ்தகத்தில் இந்த சபையாரின் அபிப்பிராயங்களடங்கிய பத்திரமானது மொழிபெயர்த் தெழுதப்பட்டிருக்கிறது. சூரத் காங்கரெஸில் டாக்டர் ராஷ்விகாரிகோஷ் தற்காலம் நமது தேச நிலைமையைப்பற்றியும் ராஜாங்கத் திருத்தங்களைப்பற்றியும் பேசினார். அதையும் மொழி பெயர்த்திருக்கிறோம். அதிகாரப் பிரிவினைக் கமிஷன் முன்பாக அபிப்பிராயங் கொடுத்ததில் மிஸ்டர் கோகலே சொன்னது விசேஷ மாகையால் அதையும் மொழி பெயர்த்திருக்கிறோம். ஆகவே, இந்தியாவானது தற்காலம் ஆளப்பட்டு வரும் முறைகளில் குற்றங்கள் சொல்வதிலும் அவைகளுக்குத் திருத்தங்கள் பிரேரேபிப்பதிலும் மேற்குறிப்பிட்டவர்களை விட சாமர்த்தியசாலிகளே இல்லை. இந்திய ராஜாங்கத்தின் அமைப்பையும் அதிலுள்ள குண தோஷங்களையும் அறிய விரும்பும் ஒவ்வொரு இந்தியரும் இந்த புஸ்தகத்தை வாங்க வேண்டியவர்கள். ஆங்கில பாஷையில் தோன்றின வியாஸங்களைத் தமிழில் பெயர்த்தெழுதினபடியால் சொந்தக் கருத்துகளையே அமைத்து எழுதுவதுபோல் நடை அவ்வளவு எளிதாயிராது. மேலும் மொழி பெயர்த்தவர்கள் பலபேராதலால் நடையின் போக்கு சற்று வித்தியாசப்படும். வாசிக்கும் நண்பர்கள் ஒரு முறைக்கு இருமுறையாய் வாசித்தால் விளங்கும். மித்திரனை ஒழுங்காய் வாசிப்பவர்களுக்கு விஷயங்கள் தெளிவாய் விளங்குவதில் சந்தேகமில்லை. ஒரு மாதத்துக்கு முன்னாலேயே வெளி வரக்கூடிய புஸ்தகம் வேறு பல சோலிகளாலும் திருக்குற்றலத்துக்கு நான் தேக சௌக்கியத்தின் பொருட்டு வந்துவிட்டதாலும் தாமசப்பட்டுப் போய்விட்டது.

திருக்குற்றாலம்,
1908௵ ஜூலை௴ 10௳.

G. S.

பார்லிமெண்டில்

இந்தியாவைப்பற்றிப் பேச்சுகள்.

(31, ஜனவரி, 1908.)

டாக்டர் ரதர்போர்ட் பேசினது.

பார்லிமெண்டில் சக்கிரவர்த்தியின் ஆக்ஞாபதிரத்துக்குத் திருத்தப் பிரேரேபணை டாக்டர் ரதர்போர்ட் கொண்டுவந்தபோது (ஜனவரி 31-ந்தேதி)நடந்த விவாதங்களெல்லாம் விஸ்தாரமாய் ஆங்கிலப்பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. நம் நேயர்களுக்காக அவர் பேச்சை இங்குசுருக்கியெழுதுகிறோம்.

"இந்தியா இப்போதிருக்கும் ஸ்திதி சக்கிரவர்த்தியின் கவர்ன்மெண்ட் தட்சணமே ஊன்றிக்கவனிக்கத்தக்கதென்றும், இந்தியா கவர்ன்மெண்ட் ஏற்கெனவே செய்திருக்கும் திருத்தப் பிரேரேபணைகள் இப்போதுள்ளதும் வளருவதுமான அதிருப்தியை மட்டுப்படுத்தத்தக்கவல்லவென்றும், இந்திய ஜனங்கள் தங்கள் விஷயங்களில் அதிகாரம் பெறும்படி விரிவான திருத்தங்கள் இன்றியமையாதவை யென்றும்" பிரேரேபணைசெய்து டாக்டர் ரதர்போர்ட் பேசியது பின் வருமாறு.

இந்தியா நிர்வாகத்தைவிட பெரியபொறுப்பு நமக்குக் கிடையாது. அதைச் சரிவரவகித்தாலன்றி, நம் கடமையைச் செய்தவராகோம். இவ்வாறிருந்தும் இந்தியாவை அலட்சியமும் அவமதிப்புமாய் நடத்தி வந்திருப்பது விசனகரமானது. லார்ட்கர்ஸனுல் திகிலும் இடைஞ்சலுமுற்ற இந்தியர் இப்போதுள்ள இந்தியா மந்திரி (மிஸ்டர் மார்லி) யின் விருத்திக்குதவும் கோட்பாடுகளையும் நடத்தையையும் மனம் கொண்டு ஆவலோடெதிர்பார்த்தும் இதுவரையில் ஏமாற்றமே யடைந்திருக்கிறுர்கள். இப்போது ஏக்கமும், பிரிடிஷ் ஆட்சியில் நம்பிக்கையின்மையும் உண்டாய் விட்டன. இந்தியாவின் அமைதியின்மைக்குக்காரணம் பல. (1) பெங்காளப்பிரிவினை, (2) 1858ல் மகாராணி கொடுத்த பிரமாணப்படி நடவாமை, (3) இந்தியர்கள்மேல் ஐரோப்பியர்கள் காட்டும் அவமதிப்பு, (4) ஜனங்களை இம்சை செய்யும் சட்டங்கள். இச்சட்டங்கள் அயர்லாண்டில் பயன் படவில்லையென்று ஒப்புக் கொண்டிருக்கையில் இந்தியாவில் மட்டும் பயன்படுமோ? லாஜபத்ராய், அஜிட்ஸிங் இவர்களை 1818-ம் வருஷச் சட்டப்படி விசாரணை யின்றிப்பிடித்து தேசப்பிரஷ்டராக்கியது, நம் நாட்டார் பொறுக்கக்கூடிய செய்கையல்ல. அந்தச் சட்டத்தை உடனே ரத்து செய்வதிற் கூச்சமேன்? (5) டிரான்ஸ்வாலில் இந்தியர்களைப் படுத்தியபாடு. (6) போலீஸ் அட்டூழியம். (7) ஜன ஐக்கிய உணர்ச்சி தோன்றியிருத்தல்.

நான் போய்ப்பார்த்த இடமெல்லாம் குழப்பமாகவே யிருப்பதால் வெங்காளப் பிரிவினையை ரத்து செய்யவேண்டியது. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் இந்தியா வருஷா வருஷம் 2 கோடி பவுன் நஷ்டமடைவதாகச்சொல்லுகிறுர்கள். இந்திய துரைத்தனச் செலவுபோல் எங்கு

யில்லை. சம்பளம் பென்ஷன் முதலியவை; இராணுவச்செலவு வேறே. ருஷிய விரோதந்தான் புது உடன்படிக்கையால் தணிந்துபோயிற்றே. இந்தச்செலவு இந்தியாவை யடக்கிவைக்கவா? இது நம்பிக்கைக் குறைவையும் மனஸ்தாபத்தையும்விளைவிக்கிறது. இந்தியாவின்க்ஷேமத்துக்காக அன்றேல், நமக்கு அங்கு என்னவேலை? நம்ஏகாதிபத்திய யுத்தத்துக்கெல்லாம் இந்தியப் படையை யுபயோகிக்கிறோம். இந்திய சைனியச் செலவில் மூன்றிலொன்றுவது நாம் பொறுப்பது யோக்கியதையாகும். பஞ்சாப்பில் குழப்பமென்ன? இராணுவத்தில் இந்திய சிப்பாய்களுக்கும் அவர்கள் உறவினர்களுக்கும் பிரதிகூலமான சட்டங்கள் செய்யப்பார்த்தாலல்லவா?

மிஸ்டர் மார்லி—அவை அங்கிகரிக்கப் படவில்லையே.

ரதர்—நல்லவேளை; அதனாற்றான் பஞ்சாபிய சிப்பாயகளுக்குச் சற்று நம்பிக்கை மீண்டு நின்றது. நிறப் பட்சபாதத்தினால் மிகவும் துன்பமுண்டாகிறது. ஸுபேதார் மேஜர் பதவிக்கு மேல் ஒரு இந்தியனும் வரவிடுவதில்லை. சம்பளத்திலும்வித்தியாசமே. மற்றடிபார்ட்மெண்டுகளிலும் இப்படியே. எக்ஸிகூடிவ் கவுன்சிலாகிய நிர்வாக சபையில் ஒரு இந்தியனும் கிடையாது. ஸிவில் ஸர்விஸில் மிகச் சிலரே. நீதி இலாகாவில் ஆறு வெள்ளையர்க்கு ஒரு இந்தியன். வைத்திய இலாகாவிலும் இதே கதைதான். ரெயில்வேயிலும் வேறு சர்க்கார் உத்தியோகங்களிலும் இப்படியே. ஜனங்கள் விருப்பங்களுக்கு விரோதமாய் ஆட்சிசெய்ய என்னாலியல வில்லையென்று அயர்லண்ட் மந்திரி சொன்னாரே. அது இந்தியாவுக்கும் ஒவ்வாதா? இந்தியாவில் தொழிற்சாலைத் துணிகளுக்கு வரி நம்லாங்காஷைரை யாதரிக்கப் போட்டது இந்தியர்மனதில் உறுத்திக்கொண்

டேயிருக்கிறது. இதை முதல் முதல் ரத்துசெய்விக்கும்படி இந்தியாவில் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களே என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இந்தியர்களுக்கு நீதியிலாகாவில் சரியானபடி நியாயம் கிடைப்பதில்லை. நம்தேசத்தாருக்குப்பணம் பெருகுவதைப்பார்க்கக் கூடாது. இந்தியர்கள் நம்மை (வியாபாரத்தில்) எதிர்க்க நினைக்கிறார்கள். ஆதலால் நமக்கு நஷ்டமே. இந்தியரும் ஐரோப்பியரும், அல்லது ஹிந்துவும் மகமதியனும் எதிரெதிர் நிற்கும் கேசுகளில், நியாயம் கிடைப்பதில்லையென்ற எண்ணம் உண்டாய்விட்டது. பஞ்சாபில் தன் வேலைக்காரனைக்கொன்ற ஐரோப்பியனொருவனுக்கு ஆறுமாதம் காவல்விதித்தார்கள்.

மிஸ்டர் மார்லி—பெயரென்ன?

ரதர்—மறதியாயிருக்கிறது. இந்திய ஸ்திரியைக்கற்பழித்த ஐரோப்பியனை ராவில்பிண்டியில் விடுதலை செய்தார்கள். அவ்வூரிலேயே கலகஞ் செய்ததாக முதன்மையான வக்கீல்களைக் கேசில் மாட்டி சுமார் 5-மாதம் சிறையில் அடைத்து பொய்க்கேசென்று விடுதலை செய்தார்கள். அங்கேயே கலகத்தில் ஒரு மகமதியன் சுடப்பட, மூன்று ஹிந்துக்களைத் தூக்குக்கும் தீபாந்தரத்துக்கும் சிட்சித்து, ஹைகோர்ட்டில் விடுதலையாயிருக்கிறது.

நிலவரி உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. இந்தியாவின் தீராத பஞ்சத்துக்கு இவ்வரி ஒரு காரணம். பாசன வேலைகளில் செலவிடுவது போதாது. ஈஜிப்டைப் பூந்தோட்ட மாக்கியதுபோல இந்தியாவையும் செய்யக்கூடியது பாசனவேலை.

கல்வி விருத்தியில் செலவு மிகவும் குறைவு. வியவசாய தேசத்தில் கல்வி யின்றியமையாதது. கைத்தொழில்

பெருகவும் கல்வி வேண்டும். அமைதி நிலைத்திருக்கவும், ஜனங்கள் நடத்தையையுயர்த்தவும் கல்வி வேண்டும். பிளேக் போன்ற வியாதிகளை யடக்கவும் அப்படியே. ராணுவத்திற்கு ஒரு வருஷமாகும் செலவு கல்விக்குப் பத்துவருஷச் செலவைச் சேர்த்துப்பார்த்தாலும் ஆகக்காணும். இது ஒரு அவமானமும் நம் ஆட்சிக்கு ஒருமாசுமாயிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் வேறான காரணம் இப்போதுள்ள ஆட்சி முறையே. தன்னரசும் கொடுங்கோன்மையும் உதித்திருக்கின்றன. ரிப்பன் பிரபுகால முதல் உத்தியோகக் கூட்டத்தாருக்கும் (Bureaucracy) சங்கடந்தான். எவ்வழியிலும் எத்திசையிலும் இவர்களது ஆதிக்கமும் கொட்டமும் தான். இந்தியர் சுய ஆட்சி கற்பது எப்படி? என்றைக்கு?

"கவர்ன்மெண்டும் இந்திய ஜனமும் பரஸ்பரம் ஒன்றின் மனதை யொன்றறியாதிருப்பது விசனிக்கத்தக்கது" என்று மிஸ்டர் மார்லியே ஒருக்கால் சொல்லியிருக்கிறார். இந்திய ஆட்சிக்கு இது ஏகதேசம் குறை என்றே சொல்ல வேண்டும். இந்திய மனதை யறியவேண்டுமானால் ஜனங்கள் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகளின் மூலமாய்த்தான் ஆகக்கூடியது. இந்தியாவின் நிலை அபாயகரமானதல்ல வாயினும் உடனே கவனிக்கத்தக்கதென்று மிஸ்டர் மார்லி சொல்லியிருக்கிறார். யுத்த சன்னத்தர்களாய் இந்தியர் கிளம்புவார்களென்ற அபாயமில்லை. நம் ஆட்சியில் பற்றற்றுப்போதலை நோக்கில் இந்தியாவின் நிலை அபாயகரமானது. சுமார் 150 வருஷங்களுக்குமுன் இந்தியாவின் காயத்துக்கு ஒட்டுவைத்துக்கட்டினால், இக்காலத்துக்கு அது பொருந்துமா. பாதகமாயல்லவா முடியும்? ஜப்பான், டிரான்ஸ்வால், ஆரெஞ்ச் ரிவர்நாடு, இவை சுவாதீனமடைந்த வழிகளைப்பா

ர்த்து விட்டு இந்தியா சும்மா இரு என்றால் இருக்குமா? பெருத்ததிருத்தங்கள் செய்வதா, அல்லது கலகத்துக்குத் தயாராவதா, இதுதான் யோசிக்கவேணும்.

இப்போது பிரஸ்தாபிக்கப் பட்டுவரும் திருத்தங்கள் திருத்தங்களல்ல. (1) உத்தியோகஸ்தர்கள் மேலாடுதலும், (2) ஜாதிமத வித்தியாசமும், (3) ஜனக்கட்சியை அமிழ்த்தி விடுதலும், ஆகிய மூன்று குணமும் மூன்று தோஷமாய் இத்திருத்தங்களுக்கு உள்ளன. இவை அனைத்தும் இந்தப் பார்லிமெண்டுக்கு ஒவ்வாதவை. 1887ம்வருஷம் லிட்டன் பிரபு ஏற்படுத்திய (ராஜாக்களடங்கிய) ஆலோசனை சபையின் கதிதான்உத்தேசிக்கும் சபைகளுக்கும் நேரும். அதுவன்றி இச்சபைகள் பிரிடிஷ் ஆட்சிக்கே பெரிய ஆபத்தாய்த் தீர்க்கொணாத சங்கடங்களில் நம்மை இழுத்துவிடும்.

அதிகாரத்தைத் துண்டித்துப் பிரிக்க (Decentralisation) ஏற்பட்டிருக்கும் கம்மிஷனால் நன்மை யொன்றும் விளையாது. ஜாதீய ஆட்சியை விரும்பும் இந்தியருக்கு பொய்ப்பகட்டும் தர்பார் டம்பமும் என்னத்திற்கு? தனி ஆட்சிக்கும் அன்னியர்சில ராட்சிக்கும் இந்தியர்கள் இனி உட்படார்கள். இந்தியப் பிரதிநிதிச்சபையும், மாகாணப்பிரதிநிதிச் சபைகளையும் அமைப்பது தான் தக்க பரிகாரமாகும். கவர்னர் ஜனரலும், கவர்னர்களும் இவற்றை, அவசியமான போது, மீறி நடக்க அதிகாரம் கொடுக்கப் படலாம்.

ஸிவில் உத்தியோகஸ்தர்கள், இப்போ தெண்ணுவதுபோல், அவர்கள் ஜனங்களுக்கு எஜமானர்களல்ல, சேவகர்களென்பதைக் கற்கும்படி செய்யவேண்டும். இச்சபைகளில் உத்தியோகஸ்தர் மேம்பாடு கூடாது. ஜனங்கள் தம்முள் நேரில் பூராவும் பொருக்கி எடுப்பதாயிருக்க

வேண்டும். பிரதிநிதிச் சபையில் பிரிடிஷ் இந்தியரும் தேச மன்னர்களும் இடம் பெறவேண்டும். பிரிடிஷ் கொடிக்கீழ் பல சுவாதீன இராஜ்யங்கள் சகோதரபாவச் சேர்க்கையோடு நடைபெறும்படி வைப்பதே ஆங்கிலேயர் நோக்கமாக வேண்டும். "பொறுமையற்ற கற்பனைவாதிகள்" என்று என்போன்றவரை மிஸ்டர் மார்லி சொல்கிறார். நாங்கள் அப்படியிருந்தால், அது அவராலேதான். எல்லாம் அவரிடம் கற்றுக்கொண்டதே. தமக்குத்தாமே ஈடேறத்தக்க திறமையுடையவர்தா னிந்தியர்கள். அவர்களுக்குச் சமயங் கொடுத்தால் தெரியும். தனியாட்சியும் சிலராட்சியும் சேர்ந்து உலகத்துக்கு அனர்த்தங்களிற் பெரும் பான்மையானவற்றை விளைவித்திருக்கின்றன வென்று கூறியுள்ள மிஸ்டர் மார்லி, இந்தியா விஷயத்தில் ஏன் இப்படி தொடைநடுக்கம் காட்டுகிறார்? தென்னாபிரிகா நட்புக்கொண்டதுபோல, இந்தியாவும் நம்மிடம் கொள்ளும். இந்தியாவானது ஜாதிமத விசித்திரக் காட்சிச்சாலை போன்றது என்று சொல்வதுண்டு. ஹிந்து மகமதிய மதவித்தியாச மிருப்பினும், பிரிடிஷ் பாகத்திலன்றி தேச ராஜ்யத்தில் அவர்கள் ஒற்றுமைக் குறைவில்லை. அந்தப்பயம் வேண்டாம். இந்தியா ஆபீஸ் இப்போதிருப்பது பார்லிமெண்டுக்கு ஒருவகையே யன்றிச் சாதகமல்ல. அதைத் தொலைத்துவிட்டு, பார்லிமெண்டில் மிஸ்டர் மார்லி, தமக்கு வேண்டில், ஒரு நிலையான கம்மிட்டி ஏற்படுத்திக் கொள்ளலாம். மேலும் இந்திய ஸெக்ரிடெரி சம்பளத்தைப் பிரிடிஷ் பொக்கிஷச் செலவில் கொண்டுவர வேண்டும். குடியேற்ற நாட்டு ஸெக்ரிடெரிக்கு அப்படித்தானே யிருக்கிறது? நான் சொல்லும் யோசனைகளுக்கு இன்னும் பக்குவம் வரவில்லை

யென்று கூறக்கூடும். ஆனால் 50-வருஷத்துக்கு முன்னமே மிஸ்டர் ப்ரைட், நான் சொல்லுவதற்கு ஏறக்குறைய சமதையான ஏற்பாடு ஒன்றை இந்தியா சம்பந்தமாய்ப் பார்லிமெண்டு முன் கொணர்ந்தனர். இந்தியாவில் எல்லாருக்கும் ஆளுக்கொரு வோட்டுக் கொடுத்து விடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. செலுத்தும் வரித்தொகைகளும், கல்வியுயர்வுமாக இரண்டு ஆதாரங்களின் மேல் வோட்டுக்கள் கொடுக்கலாம். "அயல் நாட்டுக்கு அடங்கிய ஜனத்துக்குப் போதுமான நாகரிகம் வரும்வரையில் தான் அந்த அயல் நாடு அந்த ஜனத்தை ஆளுவது தக்கதாகும்; அந்த ஜனம் அப்படி நாகரிக மடைவதற்குச் சாதகமாயிருந்தால் மட்டுந்தான் அயல் ஆட்சி பொருந்தும்," என்று மிஸ்டர் மில் கூறியிருக்கிறார்.

மிஸ்டர் நெவின்ஸனே, நானே, காங்கரெஸைக் கண்டு நடுங்கி விடவில்லை. அமிதவாதிகளுக்கு மிதவாதிகளிடம் மாறுபாடும் அதனால் ஆத்திரமு முண்டாயின.

மிஸ்டர் மார்லி:—லாஜ்பத்ராய் மிதவாதி (TORY)யா?

ரதர்போர்ட்:—அவரை அமைதியும் விவேகமுமுள்ள கன்சர்வேடிவ் என்றுசொல்லலாம். அற்பமும்பொய்யுமான போலீஸ் பேச்சுகளை நம்பி யிவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது. அது நிற்க, காங்கரெஸ்காரர் சூரத்தில் கேவலம் மூர்க்கத்தனமய்ச் சண்டையிட்டார்கள், அவர்களுக்குச சுய ஆட்சி வேணுமா, வென்று இங்கு பலர் கேலிசெய்கிறார்கள். இங்குள்ள மிஸ்டர் பர்ட், மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் ஆகிய இவர்களைக் கேட்கிறேன். காங்கரெஸ் சண்டை மாதிரி நம்முள் நடந்த தில்லையா? என் அனுபவத்திலேயே அப்படி நடந்திருக்கிறது. அதனால் சுய ஆட்சிக்கு இவ்விடங்கள் அருகமல்ல வென்று பிடுங்கி விட்டதுண்டா!

கர்ஸன் பிரபு இல்லாவிடில் அமிதவாதிகள் இந்தியாவில் உண்டாயிரார்கள். இப்போது பிரஸ்தாபிக்கப்படும் திருத்தங்கள் திருப்தியை யுண்டாக்கா. இருக்கிற மிதவாதிகளை எதிர்க்கட்சியில் அவை சேரச்செய்யும். சுய ஆட்சிக்குப் பக்குவம் வரவில்லையென்று சொல்லவேண்டாம். இந்தியாவின் தேச இராஜ்யங்களில் ஏழுகோடி ஜனங்களிருக்கிறார்கள். அங்குள்ள ஆட்சிமுறையை பிரிடிஷ்பாகங்களில் அனுசரித்தல் தகும், க்ரீஸ், பல்கேரியா, ஸர்வியா, இவைகட்கும் பிரதிநிதி ஸ்தாபனங்கள் கொடுபட்டிருக்கின்றன. நம் தேசத்துக்குத் தான் அவை கிடைத்தபோது நமக்குப் பக்குவ மிருந்ததா? பிறகு நம் தொழிலாளிகட்கு வோட் கொடுத்தபோது அவர்கட்குப் பக்குவம் வந்திருந்ததா? 'கல்வியிருப்பினும், இந்தியருக்குக் குணமில்லை' யென்ற ஆட்சேபமும் என்காதிற்பட்டிருக்கிறது. இப்படி ஒரு ஜனமுழுமைக்குமே குறைசொல்வது அடாத தாகும்.

இங்கிலாந்தில் போர்ச் செலவின் பளு தாங்கமுடியாததாயிருக்கிறது. அது பெரும்பாலும் இந்தியா நம்முடையதா யிருப்பதினாலேதான். இந்தியாவை நாம் சரியாணபடி வைத்தால், இந்தியாவின் வாசற்படியாய்க் கருதும் ஈஜிப்டுக்குச் சுவாதீனம் கொடுக்கலாம்.

கடைசியில், இந்தியாவுக்கும் உலகத்துக்கும் நாம் செலுத்தவேண்டிய கடமையுண்டு. இப்போதைய இந்திய ஆட்சிமுறை இந்தியர்களின் நலத்தை யெல்லாம் அழுத்தி விடுகிறது. இந்தியர்கள் கீழ்க்காலத்தில் மிக விளங்கி மானிட விருத்திக்கும் க்ஷேமத்துக்கும் மகத்தான உதவி செய்த மேலான ஜனங்கள். இந்தியாவில் பிரதிநிதிஸ்தாபனங்கள் அமைத்து, அதை அமைதியாய்வைத்து

வெளிப்பகையினின்றும் காத்து, தனக்குத் தானே அத் தேசம் நிர்வகித்துக் கொள்ளும்வரை அங்கிருப்பதுநம் கடமை. சுவாதீனமடையத்தவிக்கும் எளிய ஜனத்துக்கு தவுவதிலும் மேலான கருமம் எந்த ஜனத்துக்கும் கிடைக்காது. இந்த உன்னதமான தருணத்துக்குத் தக்கபடி நாம் நடப்போமென்று நம்புகிறேன்.

மிஸ்டர் ஜான் மார்லி பேசினது.

சபையோர்களே ! நான் சொல்ல வேண்டியிருக்கிற சில குருப்புகளை முகவுரையாகச் சொல்லி, ஆசியா கண்டத்தாரின் விஷயமாய் திரான்ஸ்வால் துரைத்தனத்தார் செய்திருக்கும் முடிவைத் தங்களுக்கு அறிவிக்க எனக்கு அனுமதி கொடுப்பீர்களென்று நினைக்கின்றேன்.

திரான்ஸ்வாலில் இருக்கும் பிரிடிஷ் இந்தியர்கள்.

இந்த விஷயத்தைப்பற்றி, முக்கியமாய் இந்தியாவில், மிகவும் நல்ல முகாந்திரத்தின் பேரிலேயே, ஏராளமாயும் மனக்கொதிப்போடும் பாராட்டி வந்த கவலையை சபையோரில் ஒவ்வொருவரும் அறிவீர். பீடிகையும் இனியாதொரு முகவுரையும் சொல்லாமலே, சென்ற இராத்திரி திரான்ஸ்வால் துரைத்தனத்தாரிடமிருந்து லார்ட் எல்கினுக்குக் கிடைத்திருக்கும் சமாசாரம் இன்னதென்பதைச் சொல்லி விடுகிறேன். அது என்னவென்றால்:—“ மிஸ்டர் காந்தியும், பின்னும் இந்திய சின, ஜாதியார்களின் மற்றத் தலைவர்களும், படித்தவர்களோ, சொத்துள்ளவர்களோ அல்லது லோகப் பிரசித்தமானவர்களோ, ஆசியா கண்டத்தினருடைய கையெழுத்து மட்டும் ஏற்றுக் கொள்ளுகிறதென்றும், மற்றவர்களுடைய விரற்பதிவை ஏற்

றுக்கொள்ளுகிற தென்றும், ஆசியா கண்டத்தினருக்கு மத சம்பந்தமாய் ஆக்ஷேபணையுள்ள எந்த விஷயத்தையும் நிர்ப்பந்தித்துக் கேட்கிறதில்லை யென்றும், ஆகிய இந்த நிபந்தனைகளுக் குட்பட்டு மூன்று மாசத்திற்குள் பதிவு செய்து கொள்ள அனைவரும் தாமாகவே வலிய ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். திரான்ஸ்வால் துரைத்தனத் தார் இவ்வாறு அவர்கள் அறிவித்த அபிப்பிராயத்தை ஒப் புக் கொண்டு, பதிவு செய்வதற்கிடையில், பதிவு செய்து கொள்ளுகிறவர்களை சட்டப்படிக்குள்ள ஆக்கினைக்குள் ளாக்கிறதில்லையென்று உடன் பட்டிருக்கிறார்கள். தண் டனையடைந்து சிறைச்சாலையிலிருக்கும் ஆசியா கண்டத் தினர் அனைவர்க்கும் விதித்த தண்டனைகளையும் நாளைதினம் மன்னிப்பு செய்யப்படும்" (கரகோஷம்) (Lord Selborne) செல்போரன் பிரபு.

"இந்த ஏற்பாட்டிக்கு இருதிறத்திய இராஜ் ஜிய தந்திர கட்சியாரும் சம்மதித் திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார். இந்தச்சபையின் ஒவ்வொரு கட் சியாருக்கும் இது இனிய சமாசாரமாகவே யிருக்கு மென் பது எனக்கு நிச்சயம். (கரகோஷம்) திரான்ஸ்வால் துரைத் தனத்தார், தொந்தரவும் பிரயாசையுள்ளது மான இந்த சம்பவங்கள் ஆரம்பித்த நாள்முதல் காட்டிவந்த நல்ல எண்ணத்தையும் அவர்கள் விரைவிற் கொணர்ந்திருக்கும் நல்ல முடிவையும் வெளிப்படுத்தி ஒருவார்த்தையேனும் சொல்லாமல் இந்த விஷயத்தை முடித்துவிட எனக்கு இஷ்டமில்லை—அதை வெளியிட்டு நான் சொல்வதில் (Lord Elgin) எல்கின் பிரபுவும் பிரீதியுள்ளவராகவே இருப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இந்தியாவும், பார்லிமெண்டும்.

சபையார் முன்னிருக்கும் (டாக்டர் ஈதர்போர்ட்டின) திருத்தப் பிரேரணையின் விஷயமாக, நடந்த விவாதத்தை நான் மிக்க அவாவோடும் உற்சாகத்தோடும் செறிவோடும் கூடிய பிரீதியுடன் கவனித்து வந்தேன். இந்தச் சபையில் சமயம் நேரும்போதெல்லாம் இந்த பாரமான விஷயங்கள் பேசப்படுவதை எப்பொழுதாவது ஆக்ஷேபித்தவர்களில் நான் ஒருவன் அல்ல. மொத்தமாக, பார்லிமெண்டில் எனக்கு சம்பந்த முண்டாயிருக்கிற காலத்தை—அது இப்பொழுது சுமாராய் ஜாஸ்தியான காலமாகவே யிருக்கிறது—ஞாபகப்படுத்திபார்த்தால், இந்தியாவைப்பற்றிய விவாதங்கள் சிலவாகவே இருந்திருக்கின்றன வென்று நான்நினைக்கிறேன். (கரகோஷம்) அந்த சபையில் நான் வந்து சேருவதற்கு முன், மிஸ்டர் (Mr. Fawcett) பாஸெட்டும், மிஸ்டர் (Mr. Bradlaugh) பிராட்லாவும், பின்னும்இவர்களைப்போன்றதிடமானபுத்திமான்களும் இருந்தார்கள். அவர்கள் இந்திய விஷயங்களை மிக்க உண்மையும் அனுபவசித்தமுமான ஓர்விதமாய் எடுத்துப் பேசினார்கள். ஆனாலும் அப்பொழுது ஆய்ந்தெடுத்துப்பேசிய பலவிவாத அம்சங்களுக்கு நான் சிறிதும் பிடி கொடுக்கமாட்டேன். அந்தக் காரணத்தைக்கொண்டு கவர்ன்மெண்டாருக்குச் சாதகமாய் அபிப்பிராயங்கொடுக்கும்படி நான் மெம்பர்களைக் கேட்டுக்கொள்ளப் போவதில்லை. ஆனால் இந்தியாவைப்பற்றிய மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுடைய தற்கால ராஜரீகமானது இந்த சபையாருடைய விசுவாசத்தையும் பிரிடிஷ் தேசத்தாருடைய விசுவாசத்தையும் பெற்றிருக்கிறதென்று நான்

சொல்லுகின்றேன் (கரகோஷம்). நமக்கும் விசுவாசமிருக்கிறதென்று நான் நினைக்கிறேன். ஒரு மிகவும் முக்கியமான பிரேரணை (Mr. Hart-Davis) ஹார்ட் டேவிஸால் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால்: பார்லிமெண்ட் சபையாரின் கம்மிட்டி ஒன்று—நான் நினைக்கிறபடி இரண்டு சபையாருடையவும் ஏகோபித்த கம்மிட்டி ஒன்று—நியமிக்க வேண்டுமென்பதே. கடைசியாகப் பேசினனது நண்பர் (Mr. Herbert Roberts) ஹர்பர்ட் ராபர்ட்ஸ் அப்படிப்பட்ட ஒரு கமிட்டி இருக்கிறதினாலேயே பார்லிமெண்ட் சபையார் இந்தியரின் மனோபாவத்தை அறிய நெருங்கிய சம்பந்தம் உண்டாகுமென்றார். இந்தியா ஆபிசில் நான் வந்தகாலம் முதற்கொண்டே ஒரு பார்லிமெண்டு கமிட்டி நியமிப்பதில் நான் ஒருவாறு சார்புள்ளவனா யிருந்திருக்கிறேன். ஆனால் அந்த விஷயத்தைப்பற்றி இப்பொழுது விவாதம் செய்யமாட்டேன். நான் என் நண்பர்களுக்கு நிச்சயமாய்ச்சொல்லக் கூடியது என்னவென்றால், இந்த விஷயத்தைப்பற்றி நான் ஆலோசனை செய்திருக்கிறேன். அதனால் என்ன பிரயோஜனம் என்று எனக்குத் தெரியும். அதனால்பெரிய இடைஞ்சல்களும் உண்டாகலாம் என்பதையும் நான் மறக்கவில்லை. அந்தப் பழைய நாட்களில் நியமிக்கப்பட்ட அந்தக்கம்மிட்டிகளில் இந்தசபையின் அங்கத்தினரும் பலவிதமாய் நல்ல நிர்வாகப்பழக்க முண்டாயிருந்த லார்ட்ஸ் சபையாரின் அங்கத்தினரும் உழைக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். இப்போதோலார்ட்சபையிலிருப்பவர்கள் ஏற்கெனவே ஒருவிதமான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களாயிருப்பதை யோசிக்குங்கால், அப்படிப்பட்ட கம்மிட்கள் ஒன்றில் பலபேர்களை அமரும்படி அழைக்கக் கூடுமோ

என்று சந்தேகிக்கின்றேன். பின்னும் மற்றொரு இடைஞ்சலையும் நான்எடுத்துக் காட்டுவேன். இந்தியாவில் தங்களுடைய உத்தியோகங்களைச் செய்து கொண்டிருப்பவர்களை இங்கிலண்டுக்கு அழைக்க வேண்டிவரும். அவர்களுடைய கடமைகளோ அவர்களுடைய கவனம் சாவகாசம் முழுவதையும் பெறவேண்டியிருக்கின்றன. அப்படித்தான் பெற்றுக் கொண்டிருக்கின்றனவென்று நம்புகிறேன். அது ஒரு நம்பிக்கை தானேஎன்றாலும் நான் அதை என் மனதிலிருந்து முற்றிலும் ஒழித்து விடவில்லை. (கேட்க. கேட்க.)

ஜன நாயகமும் "தீர்ந்த விஷயமும்."

இன்று பிற்பகலில் இரண்டு மிகவும் இனிய பிரசங்கங்கள்-மிகவும் முக்கியமான பிரசங்கங்கள்—செய்யப்பட்டிருக்கின்றன. ஒருபிரசங்கம், திருத்தபிரரேபணை செய்தநண்பரால் செய்யப்பட்டது. மற்றொன்று (Mr. O'Grady) மிஸ்டர் ஓகிரேடி என்பவரால் செய்யப்பட்டது. இந்த இரண்டு பிரசங்களும் ஒருமிகவும் முக்கியமான விவாத அம்சத்தை எழுப்பிவிடுகின்றன. மிஸ்டர் ஓகிரேடி என்பவர், "தீர்ந்த விஷயம்' என்று ஒருமுறை வெங்காளப்பிரிவினையை மாற்றாததற்குக் காரணமாகச் சொன்ன என்கொள்கைக்கு ஜனநாயகமானது(democracy)முற்றிலும்விரோதமானதென்றும் அந்தக்கொள்கையை எதிர்க்கக் கூடியதென்றும் சொல்லியிருக்கிறார். ஜனநாயகம் இந்தக்கொள்கையை ஒருக்காலும் ஏற்காதென்றார். நல்லது, அப்படியானால், நான் ஜன நாயகத்தின் பொருட்டு மிக்க விசனப்படுகிறேன். (நகைப்பு) நான்என் கனம் நண்பர் சொல்வதை ஒப்பவில்லை. ஜன நாயகமும் மற்ற யுக்திக்குற்ற ஆட்சிமுறையைப்போல நியாயமானதென்றே நான் நினைக்கின்றேன். மேலும் ஜன நாயக

மானதால் மட்டும், தீர்ந்துபோன ஒரு நிர்வாக விஷயத்தையோ அல்லது ராஜாங்கமுறை விஷயத்தையோ, அது ஒரு பாஷார்த்தமான பொதுக் கருத்துக்கு ஒவ்வவில்லையென்று, மறுபடியும் பிரித்து சோதனைசெய்து மாற்றல் சாத்தியமென நீங்கள் நினைக்கக்கூடுமென்று நான் நம்பவில்லை. தீர்ந்துபோன விஷயங்களை யோசனையின்றிச் சடுதியில் மாற்றி, மூலப் பிரமாணங்களை நம்பி ராஜாங்கக் கடமைகளை நடத்தும்படியிருந்தால், நான் இந்தியா ஆபீசிலோ அல்லது மற்றேதேனும் ஒருபொறுப்புள்ள உத்தரவாதமுள்ள உத்தியோகத்திலோ இருக்கமாட்டேன். இது நிச்சயமாய்ச்சொல்லுகிறேன். அப்படிப்பட்ட பிரமாணங்களைக்கொண்டு யாதொரு நிர்வாக உத்தியோகத்திலும் நான்பிரவேசிப்பதைவிட என்னுடைய வலது கையையே நான் வெட்டிக் கொள்ளுவேன். (கரகோஷம்).

“பொறுமையற்ற கற்பனாவாதிகள்”

பின்னையும், எனது கனம் நண்பர் (Brentford) பிரண்ட்போர்டுக்காக ஏற்பட்டமெம்பர்-இருக்கின்றார். டாக்டர் ரதர்போர்டு, நான்பொறுமையற்ற (Idealists) கற்பனாவாதிகளைப்பற்றி நாட்டுப்புரத்தில்- ஆர்புரோததில்—பேசியபொழுது செய்த என்னுடைய ஓர் பதப்பிரயோகத்தைப்பற்றி வாதித்திருக்கிறார். அல்லாமலும், பொறுமையற்ற கற்பனாவாதிகளாலேயேசரித்திரத்திற்காணும் மிகவும் கொடிய சம்பவங்களில் சில நேர்ந்தனவென்று சொன்னதற்காக என்னைக் கடிந்தார். மற்றவர்களுக்குள்ளே நான்தான் அவரை ஒரு கற்பனாவாதியாகச் செய்துவிட்டேன் என்றும், அதனால் மற்றவர்களோடு நானும் அவருக்குக் குருவாயிருந்து அவரைக் கற்பனாவாதியாக்கி விட்டேனெ

ன்றும், ஆகையால் இவ்விதம் என்புத்திக்கும் ஞானத்துக்கும் உண்டான சந்ததியைப்பற்றி நான் வெட்கப்பட நியாயமில்லை யென்றும், அன்பாய்ச்சொன்னார். (நகைப்பு) என்னுடைய கனம் நண்பரைப்பற்றி நான் வெட்கப்படுகிறேன் என்று சொல்லநியாயமில்லை. நிச்சயமாகவே அவர் யுக்தியான கொள்கைகள் நிறைந்ததும், சாத்தியமான எதிர் காலத் தோற்றங்கள் நிரைந்ததுமான ஓர் உபந்நியாசத்தைச் செய்தார். அந்த உபந்நியாசம் செய்ததற்காக அவரோடு நான் வாதாடவில்லை. அது மிகவும் இனிமையாயிருந்ததென்று நான் நினைத்தேன். அல்லாமலும் அந்தக் கொள்கைகள் இந்தநாட்டிலுள்ள ஜனங்களிடத்தில் ஆதரவைப் பெறுமலும்முற்றிலும் இருக்கவில்லை யென்று நான்நம்புகின்றேன். ருஷியாவில்ஏற்பட்டதுபோல (Imperial Duma) இம்பீரியல் டூமா வென்றசபை இந்தியாவில்ஏற்படுவதைத் தாம் ஆதரிப்பதாகச் சொன்னார். அவர் இந்தியாவை நேரில் போய்ப்பார்த்த அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார். எனக்கோ அது இல்லை. அவர் ஆறுவாரங்கள் முழுவதும் அங்கே யிருந்தார் என்று நான் நினைக்கின்றேன். (நகைப்பு) அவர் சொல்லும் இம்பீரியல் டூமா என்ற சபைக்கு, நான் அறிந்து கொண்டபடி, இந்தியாவில் சமஸ்தமானவர்களுடைய சம்மதியின்பேரில் (வோட்டின்பேரில்) நியமனம் செய்ய வேண்டும்.

டாக்டர் ரதர் போர்டு:—அப்படியல்ல ; சமஸ்தமானவர்களுடைய சம்மதியல்ல. படித்தவர்களுடைய சம்மதி, பணக்காரர்களுடைய சம்மதி—தீர்வை செலுத்துவோர்கள் வரி செலுத்துவோர்கள்—எனறு நான் சொன்னேன்.

மிஸ்டர் மார்லி:—அந்த உபந்நியாசத்திலேயே, இந்தியாவில் நம்முடைய கல்வி முறையைப்பற்றிப் பேசி, நாம்

அவர்களைப் படிப்பிக்கவே யில்லையென்று பலமாய் குற்றஞ் சாட்டினார். ஆகையால் அவர் யோசனைப்படி ஜனத்தொகையில் பெரும் பாகத்தை விலக்கித்தான் ரோமா அமைக்கவேண்டும். இம்பீரியல் ரோமாவானது, அவர் சொல்லுகிற படி, இராஜப்பிரதிநிதி வேண்டுமானால் அதன் தீர்மானங்களை நிராகரித்து விடும்படியான நிலைமையிலிருக்க வேண்டியதாம். நாம் கிரேட் பிரிட்டனிலிருந்து ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை ஒரு இராஜப் பிரதிநிதியை அனுப்புகிறோம். அவர் ருஷியாவில் ஸார் சக்கிரவர்த்தி ரோமாவை எதிர்த்து நிற்பதுபோல ஒரு இம்பீரியல் ரோமாவுக்கு எதிர்த்து நிற்க வேண்டியதாம். நல்லது ஜனநாயகம் என்பதற்கு நான்கொள்ளும் கருத்து அதல்ல. டாக்டர் ரதர்போர்டு தாம் பரோடா இராஜ்ஜியத்தைப் போய்ப் பார்த்திருப்பதாயும் அது நன்றாய் ஆளப்பட்டதாய்த் தாம் நினைத்ததாகவும் சபையாருக்குச் சொன்னார். நல்லது, அங்கே யாதொரு ரோமா இல்லையே. நான் என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை சிறிதும் ஒளிக்காமல் சொல்லுவேன்.

"நான் புதிதாக ஒரு ஏற்பாட்டை உண்டாக்க வேண்டியிருந்தால்"

இந்தியாவுக்காக நான் ஒரு புதிய துரைத்தன ஏற்பாட்டை உண்டாக்கவேண்டியிருந்தால், இம்பீரியல் ரோமாவையும் சமஸ்தமானவர்களுடைய சம்மதியைப்பற்றின ஏற்பாட்டையும் செய்வதைக்காட்டிலும் பரோடா ராஜ்ஜியத்தில் நடைபெற்றுவரும் துரைத்தன ஏற்பாட்டை இருபது மடங்காய் விருத்திசெய்வேன். என்னுடைய கனம் நண்பருடன் நான்விரோதப்படுவதாய் நான்சொல்லவில்லை. வேறுபடுவதாய்க்காண்கிறதைப்பற்றி நான்விசனிக்கிறேன்.

அந்தக்கனம்நண்பருடைய உபந்நியாசம், ராஜதந்திர அனுபோகத்தில் காணப்படும் எத்தனையோ போலிவாதங்களில் பெரும்போலிவாதமாகக் கொள்ளப்படவேண்டும். அதாவது ஆசாரம், மதம், தொழில் நிலை, இவைகளில்முற்றிலும் பேதப்பட்டவெவ்வேறு சமூகங்களுக்கு ஒரேவிதமான ஆட்சியைக் கற்பிப்பதும், அந்தசமூகங்களை ஒரேவிதமான அச்சில் வார்த்து, இங்கு இங்கிலாண்டுக்கு ஒவ்வினவை இந்தியாவுக்கும் ஒவ்வும், திருஷ்டி, நியாயம், சித்தாந்தம் எல்லாம், நமக்குப்பொருந்திஞல் இந்தியாவுக்கும் பொருந்தும், என்றுவாதிப்பதுபெரும்போலிவாதமாகும். அவரதுபோலிவாதத்தைப்போல் தீங்குவிளைப்பதும் நாசஹேதுவுமான துர்வாதம் இல்லவே இல்லையென்று என்நண்பருக்குச்சொல்வேன். லிபரல் கட்சிக்கொள்கைகளில் இவர்துர்வாதம் சேர்ந்ததல்லவென்றும் சொல்வேன். நம்கட்சியின் உள்சரித்திரத்தைச்சொல்லப்போகிறேன். நேயர்கள் மன்னிக்கவேண்டும். என் காலத்திலிருந்த மகத்தான லிபரல் கட்சியார்களில் சிலரைத்தெரிந்திருக்கும் நல்ல அதிர்ஷ்டத்தையும், கௌரவத்தையும், சுதந்தரத்தையும் நான் பெற்றிருக்கிறேன். அந்தமகா புருஷர்களான மாஸ்லினி என்ன, காம்பெட்டாஎன்ன, பிரைட் என்ன, மிஸ்டர்கிளாட்ஸ்டன் என்ன இன்னும் உங்களுக்கிஷ்டமான எவரேனும் ஒருவர், டாக்டர் ரதர்போர்ட்டின் மோகதற்பனைக்குச்சகாயங்களாக தம்புத்திப்பிரமத்தால் சொல்லும்கொள்கையை அங்கீகரிக்கமாட்டார்கள். ஸ்காத்திலாந்துக்கோ, இங்கிலாந்துக்கோ, அயர்லாந்துக்கோ, பிரான்ஸுக்கோ, ஸ்பேயினுக்கோ, சமமாகவே பொருத்தமாக, இராஜதந்திர விதிகளையும் சித்தாந்தங்களையும் நீங்கள் வற்புறுத்தக்கூடுமாஞல், அந்தக் காரணத்திஞலேயே அவைகள் பஞ்சாபுக்கும் ஐக்கியமாகா

ணங்களுக்கும் பொருத்தமாய் இருக்கவேண்டுமென்று சொல்லுகின்ற விவேகியாரேனும் இருக்கின்றனரா?

டாக்டர் ரதர்போர்ட்:—நீமா ஒன்றைத்தவிர நான் செய்த பிரேரேபணையையே அதாவது—மாகாண பார்லிமெண்டுகளையே, மிஸ்டர் பிரைட் எடுத்துப்பேசியதை வாசித்துக்காட்டினேன்.

மிஸ்டர் மார்லி:—மிஸ்டர் பிரைட்டின் நோக்கத்தைப் பற்றி எனது கனம் நண்பர் விவரித்ததை நான் கண்டிக்க வேண்டியிருக்கிறதேயென்று நான் அஞ்சுகின்றேன். பிரைட்டினுடைய நோக்கம் இன்னதென்பதை நான் சுமாராய் நன்றாய் அறிந்திருப்பதாய் நினைக்கிறேன்.

மிஸ்டர் பிரைட்டின் வழி ஒழுங்கானதுதான்.

1858-ம் வருஷத்தில் இந்தியாவின் அரசாட்சியானது மகாராணியவர்களின்வசம் மாற்றப்பட்டபொழுது, மிஸ்டர் பிரைட்டின் அபிப்பிராயங்கள் சரியானவழியில் இருந்ததாக நான் நம்புகிறேன்; ஆனால் அவர் இம்பீரியல் மோவை ஆதரிக்கத்தகுந்த மனுஷரென்று நான் நினைக்கவில்லை. (நகைப்பு). அவர், சமஸ்தமானவர்களுக்கும் வோட்டுக்கொடுக்கிற ஏற்பாட்டுக்குச்சார்பாய் இருக்கவில்லை—அவர் ஒருவாறு பழையமாதிரியானவர். (நகைப்பு). ஆனால் மிஸ்டர் பிரைட்டினுடைய அபிப்பிராயங்கள் எனது கனம் நண்பரின் அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் வித்தியாசமாகவிருந்தன. இந்தியாவைப்பற்றிய விஷயங்களில் சம்மந்தப்பட்டிருந்த ஸர்ஹென்றிமேயினும் மற்றவர்களும் மிஸ்டர் பிரைட்டினுடைய மனோபாவமானது சரியென்றும்—ஒரு மனுஷரை இராஜப்பிரதிநிதியாகவைத்து, அவருக்கு ஒத்தாசையாக ஒரு திறமையுள்ள ஆலோசனை சபையை ஏற்படுத்

தினுலும், அவர்வசம் இந்தியாவைப்போன்ற விஸ்தீரண முள்ளதும் 30-கோடி ஜனத்தொகையுள்ளதும், நானுவித மான ஜாதி, மதம், மனேபாவங்களுள்ள ஜனங்களுள்ளது மான ஓருதேசத்தை ஒப்பிவித்தலானது மகா பலசாலி யான எவனும் சரியாய் வகிக்கக்கூடுமென்று எதிர்பார்க்கக் கூடாத ஓருபாரத்தை ஓருமனுஷனுடைய தோளில் சுமத் துவதாகும். (கேட்க, கேட்க.) இதேமாதிரியான அபிப்பி ராயத்துடன் சிலவேளைகளில் என்மீது பிழையெடுத்துக்கா ட்டி உதவும் எனதுகனம் நண்பரும் மற்றவர்களும், என்னை உண்மையற்ற சிநேகித னென்றும் லிபரல் கட்சியென்ப தே எனக்கு இன்னதென்று தெரியாததென்றும் சொல்லு வதாய்த் தெரிகின்றது. எனக்குத்தெரியுமென்று நான் நினைக்கிறதுமல்லாமல், எனது கனம் நண்பரிடமிருந்து லிபரல்கட்சியைப்பற்றிய விதிகளையோ, சித்தாந்தங்களை யோ, பின்னும் அனுஷ்டானங்களையோ கற்கவேண்டியிரு ப்பதாய் நினைக்கவில்லையென்றும் நான் சொல்வேன். (எதிர் கட்சியாரின் நகைப்பும் கரகோஷமும்.) இந்தியாவைப்பற் றிய மகத்தான பிரயாசைகளையும் பிரசினைகளையும் ஓருங்கே நீங்கள் இயற்கையறிவைக்கொண்டு நிதானிக்கவேண்டும். அவமரியாதையின்றி நான் சொல்லலாமானுல், இம்பீரியல் ரோமாவைப்பற்றிப்பேசுவது இயற்கையறிவு அல்ல.

இப்போதிய நிலைமையில் ஓர் மகத்தான திருத்தம்.

தற்சமயம் இங்கு நந்தனுவர்ஷத்தின் இடையில், வெகுகாலமாய், கிரேட்பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தத்தின் விஷயமாய் செய்யப்பட்டிருக்கிற மிகவும் முக்கியமான காரியங்களில் ஒன்ருகி, அதனுல் நேராகவோ

அல்லது மாறுகவோ உண்டாகக்கூடிய எல்லா பலன்களினுல் மதிப்புக்குரியதுமாகிற ஒருவிஷயத்தைப்பற்றி, அதாவது, செக்கரிட்டரி ஆப்ஸ்டேட்டு என்ற மந்திரியின் ஆலோசனை சபைக்கு இரண்டு இந்திய கனவான்களை நியமித்திருக்கும் விஷயத்தைப்பற்றி, நான் யாதொருவரிடமிருந்தும் உபசாரமாய் ஒரு வார்த்தையேனும் பெற்றிலேன். (கேட்க, கேட்க). எனது கனம்நண்பர் (Mr. Smeaton) ஸ்மீட்டன் இராஜப்பிரதிநிதியின் (Executive Council) நிர்வாகச் சபைக்கு ஓர் இந்தியகனவானை நியமிக்கவேண்டுமென்று என்னை விரும்புகின்ருர். நல்லது, அதுவேறே ஒருவிஷயம். ஆனுல், சமயம் வாய்க்குமானுல், லார்டு மிண்டோவாவது, நானுவது, அதைப்போன்ற ஜனநாயக வழியை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பின்தாங்கமாட்டோமென்பது எனக்கு முற்றிலும் நிச்சயம். இராஜப்பிரதிநிதியானவர், நம்மில் யாரையும் போலவே, சீர்திருத்தத்திலும் ஏற்றத்திலும் அவ்வளவு ஆவலுள்ளவர். இன்றிரவு எனது கனம் நண்பர்கள் சிலரால் மிக்கசொல்வன்மையுடன் விவரித்துச் சொல்லப்பட்ட நிலைமையை அறிந்துகொள்வதிலும் கூர்மையுள்ளவர். இதை நான் அறிவேன். (கேட்க, கேட்க.) சென்ற ஐந்து அல்லது ஆறுவருஷங்களாக இந்தியாவின் ஆகாசத்திலும் சீதோஷ்ண நிலையிலும், அதாவது ஜனங்களின் நிலையில்—உண்டாய்வரும் மன மாறுதல்களை முற்றிலும் தெரிந்தவர்களாய் ஒரு இராஜப்பிரதிநிதியையும் ஒரு ராஜமந்திரியையும் நாம் பெற்றிருப்பதே ஒரு விசேஷமாகும். எங்களைப்பற்றி அவசரப்பட்டு ஒருவிதமாய்த் தீர்மானித்துவிடக்கூடாது. நாங்களோ ஒருவாறு குழப்பமான காலத்தில் வந்தோம். நாங்கள் அலைகளின்றி முற்றிலும் தெளிந்திருக்கும் சமயத்தில் வரவில்லை. நாங்கள் மகத்தானபிரயாசைகளில்

சிக்கிக்கொண்டது உலகமறிந்த விஷயம். அந்தப் பிரயாசைகளை நாங்கள் உண்டாக்கிக்கொள்ளவில்லை. அவைகள் எவ்வாறு உண்டாக்கப்பட்டன வென்பது ஒருபெரியபுராணம். அதற்கும் இந்த பிரஸ்தாப விவகாரத்துக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை. ஆனால் நான் முற்றிலும் உறுதியாய்ச் சொல்லுவது என்னவென்றால், இன்றைய நிலைமையானது இரண்டு வருஷங்களுக்கு முன்னால் நாங்கள் உத்தியோகத்தை வகித்த பொழுது கண்ட நிலைமையின் பெருக்கமேயாம். (கேட்க, கேட்க). இந்த இரண்டுவருஷகாலமாய் இந்தியாவின் அடிவானத்தில் கனத்த கறுப்பு மேகங்கள் கிளம்பி வரலாயின. எங்களுடைய அரசுமுறையினால் அந்தமேகங்கள் கிரமேண சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மேகங்கள் மறுபடியும் ஒருபொழுதும் திரும்பிவந்து சேரமாட்டாவென்று சொல்லும்படி நான் அவ்வளவு புத்திக்குறைவுள்ளவனல்ல. இந்தியாவுக்கும் இத்தேசத்திற்கும் உள்ள சம்பந்தங்களில் நெருக்கமாய்ப் பழகிச் சிந்தித்தவர் ஒருவரும் நாம் மறுபடியும் மகத்தான மேகக் கூட்டங்களை ஒருபொழுதும் பார்க்க மாட்டோமென்று சொல்லமாட்டார். நாங்கள் செய்ததெல்லாம் சரியென்று பின்னால் நேரிட்டதால் ஏற்படுகின்றது.

தேசப்பிரஷ்டங்கள்.

இரண்டு இந்தியகனவான்களை தேசப்பிரஷ்டம்செய்த விஷயமாய் கொஞ்சம் குற்றம் கூறப்பட்டது. அதைப்பற்றிச்சிறிதும் நான் ஆச்சரியப்படவில்லை. அந்த நடவடிக்கையைப்பற்றிக் குற்றங்கூறும் மனுஷனோடு நான் வாதாடவில்லை. ஒருவனைப்பிடித்து அவன் பேரில் யாதொரு குற்றம் சாட்டமலும் அவனை விசாரணைக்குக் கொண்டு

வர உத்தேசமில்லாமலும் அவனை தேசப்பிரஷ்டம் செய்யும் விஷயம், என்னை முகாந்திரம் சொல்லும்படி சபையார் நியாயமாய்க் கேட்கக்கூடிய விஷயம் என்றே நான் நினைக்கின்றேன். என்றால் கூடியவரையிலும் அதற்கு முகாந்திரம் சொல்லியிருக்கிறேன். இன்று பஞ்சாபின் நிலைமையை அறிந்தவர் யாரும், இனி வெகுகாலத்துக்கு அப்பால் என்ன சம்பவிப்பதாயிருந்தாலும், அது இப்பொழுது அமைதியாயும் திருப்திகரமாயு மிருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்வார்கள். தேசப்பிரஷ்டம் செய்ததாகிய மிகவும் பலமான உபாயத்தைப்பற்றி எனக்குள்ள நியாயத்தை மறுபடியும் சொல்லப்போவதில்லை. ஆனால் அதைப்பற்றிச் சட்ட நிர்மாண சபையில் இராஜப் பிரதிநிதி பேசியிருக்கிற வார்த்தைகளை சபையாருக்குப் படித்துக்காட்ட நான் விரும்புகின்றேன். அவர் லார்டு கிட்சனரைப்பார்த்து, "மாட்சிமைதங்கிய சேனாபதியே! மகாராஜாவின் பிரதிநிதியாகிய நான் மகாராஜாவின் இந்திய சைனியங்களைப் புத்தி பேதம் செய்யும்படி சதிசெய்யப்பட்டதை யறிவேன். அதை இந்த சைனியங்கள் அவமதித்து உதறினதற்காக மாட்சிமை தங்கிய சேனாபதியாகிய தாங்கள், ராஜப்பிரதிநிதியாயுள்ள என்னின்பொருட்டு என் வந்தனங்களை அவர்களுக்குச் சொல்லுவீர்களென்று நம்புகிறேன். இராஜதுரோகமான வித்துக்கள் பழிக்கஞ்சாமல் இந்தியாமுழுவதும் மற்றும் எல்லைப் பிரதேச ஜாதியார் வாழும் குன்றுகளிலும் விரைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வெறும் கட்டாந்தரைகளில் விழுந்திருப்பதைப் பற்றி நாங்கள் களிப்புள்ளவர்களா யிருக்கிறோம். ஆனால் இனி ஒருபொழுதும் அவைகளை விதைக்க இடந்தரமாட்டோம்." இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால்

இராஜப்பிரதிநிதி சொன்ன அந்த வாசகத்தில் சாத்திய மெனக் குறிப்பிடப்பட்ட அபாயத்தை நோக்குங்கால் அந்தவிஷயத்துக்குப் பொருத்தமாயிருந்த ரிகுலேஷனை நாங்கள் உபயோகித்தது பிசகென்று யாரேனும் சொல்லுவாரா? நாங்கள் சென்ற வழியைவிட்டு வேறுமார்க்கத்தை அனுசரித்திருந்தால் என்னதீங்கு வந்திருக்குமென்று ஒருவரும் சொல்லக்கூடியதல்ல (கேட்க. கேட்க).

சிம்லா "சீர்திருத்தங்கள்"

இப்பொழுது எனது கனம் நண்பராகிய டாக்டர்ரதர் போர்ட்டின் பிரேரேணையில் சொல்லப்பட்ட சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசுகிறேன். இந்தியாவின் நிலைமையானது மகாராஜாவின் மந்திரிகள் தாமசமின்றி கவலையுடன் கவனிக்கத்தக்கது என்று அப்பிரேரணையில் சொல்லப்படுகிறது. நானும் அப்படியே நினைக்கிறேன். ஆனல், இந்தியாவின் நிலைமையானது எப்போதாவது இந்தியா மந்திரியும் கவர்னர் ஜனரலும் தாமசமில்லாமலும் கவலையுடனும் கவனிக்கத்தகாததாயும் கூட இருக்குமென்று என் நண்பர் நினைத்தனரோ. "இப்போது இந்தியாவில் அதிருப்தி உண்டாகி அதிகரித்து வருகிறதாயும் அதைத்தணிக்க ஸிம்லாதிருத்தங்கள் போதாதா" வென்றும் சொல்லப்படுகிறது. இந்த திருத்தங்கள் இன்னவையென்று என் நண்பர் சொல்லவில்லை. ஒருக்கால் அவரை யொருபரீக்ஷைக்கடிதம் கொடுத்து பரீக்ஷித்தாலும் பரீட்சிக்கலாம். நான் அந்தத் திருத்தங்களை நன்ருய் யறிவேன். ஆறுவாரம் இந்தியாவில் யாத்திரைசெய்து அதற்குள் எல்லாவற்றையும் அவர் அறிந்துவிட்டார். எந்தெந்தபிரசினைகள் வெகு ஊக்கத்துடன் அங்கே பிரஸ்தாபிக்கப்படுகின்றனவோ அவைகளை யெல்

லாம் அறிந்து சொன்னார். சுமார் 20 பிரசினைகளைப்பற்றி அவர் அபிப்பிராயத்தை கண்டிப்பாய் வெளியிட்டார். இந்தியா ஆபீசில் நாங்கள் சிந்தித்துச் சிந்தித்து மாய்ந்துபோகிறோம். என் நண்பரோ வெகு சுலபமாய்க் கண்டனை செய்துவிட்டார். இந்தியா விஷயங்களைக் கவனிக்கவேண்டிய போது நிபுணர்களென்று பரிகாசமாய்ச் சிலர் சொல்லும் உத்தியோகஸ்தர்களைக் கேட்காவிட்டால் கெடுதலே நேரிடுமென்று நான் சொல்லமாட்டேன். நான் உத்தியோகஸ்தர்கையில் மாட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகிறவர்களிற் சிலர் இந்தியாவுக்குப் போகும்போது வேறுவிதமானவர் கையில் அகப்படுகிறார்களே !

டாக்டர் ரதர்போர்டு:— நான் உத்தியோகஸ்தர், இந்தியர்கள், ஆகிய இருவர்களுக்கும் வசப்பட்டிருந்தேன்.

மிஸ்டர் மார்லி:—அப்படியானால் கனம்மெம்பர் அவர்கள் இருவர்களுடைய வசத்தைவிட்டும் இன்னும் கற்கவேண்டிய சில விஷயங்களோடு வந்திருக்கிறார். (நகைப்பும் கரகோஷமும்) இந்திய "துரைத்தனத்தாரின்" தற்காலத்திய "பிரேரேபணைகள் இப்போது தோன்றி விருத்தியாய்க்கொண்டுவரும் அதிர்ப்தியைத் தணிக்கப்போதுமானவைகள் அல்ல" வென்று அவைகளைக் குற்றங் கூறும்படி இந்தச்சபையாரைக் கேட்டுக்கொள்ளும்போது, விஷயங்கள் எந்தநிலைமையில் இருக்கின்றனவென்பது விளங்குகிறதாவென்று நான் அதிசயிக்கின்றேன். விஷயங்கள் எந்தநிலைமையில் இருக்கின்றனவென்று இந்தியாபட்ஜெட்டைப்பற்றி விவாதம் நடந்தபொழுது நான்சொன்னதை மறுபடியும்சொல்லுவேன். இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா ஆபீசுக்குத் தங்களுடைய பிரேரேபணைகளை—அட்

வைசரிகவுன்சில்களைப்பற்றித் தங்களுடைய பற்பல உபாயங்களையும், மற்றவைகளையும்—தெரிவித்தார்கள். இந்தியா ஆபீசில் நாங்கள் அவைகளை சாக்கிரதையாய் ஆராய்ச்சி செய்தோம். இந்தமாதிரி செய்த ஆராய்ச்சியின் பயனாக அவைகளை இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் திருப்பியனுப்பி, அவகைளைப் பற்பல இடங்களுக்கு யோசனைக்காக அனுப்பும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்திருக்கும் உத்திரவு என்னவென்றால், எல்லா உபாயங்களையும், சிக்கல்களையும், முக்கியமான மாறுபாடுகளையும்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுக்குள்ளேயே என்ன பொதுவான அபிப்பிராயத்துக்கு வந்திருக்கிறார்களென்பதை மார்ச்சுமாதம் முடிவிலே இந்தியா ஆபிசார் அறியும்படி செய்ய வேண்டுமென்பதே. அவர்கள் எங்களுக்கு என்ன தெரிவிக்கப்போகிறார்கள் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். அந்தப் பிரேரணைகள் மறுபடியும் நமக்கு வந்துசேரும்பொழுது அப்படி செய்யப்பட்ட ரிப்போர்ட்டு, இந்தியரின் அபிப்பிராயத்தினால் பக்குவமாயிருக்கும். இந்த பிரேரேபணைகள் எவ்வளவு வரையில் மகாராஜா அவர்களுடைய கவர்ன்மெண்டாரின் நோக்கத்திலிருக்கும் அரசுமுறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருமென்பதை ஆலோசிப்பது இந்தியா ஆபீசிலிருக்கும் எங்களுடைய வேலையாகும். நிச்சயமகவே அதுதான் அனுஷ்டிக்கத் தகுந்ததாய் நியாயமாயும் இலகுவாயுமிருக்கும் வழியாகும். பற்பல ஜாதியான கலப்பான ஜனங்களோடும், இந்தியாவின் மற்றெல்லா விசேஷங்களோடும் நீங்கள் பழகவேண்டி வரும்பொழுது உங்களுடைய பிரேரேபணைகள் யெப்படி நடைபெறுமென்பதை நீங்கள் ஆலோசிக்க வேண்டியி

ருக்கிறது. ஜனநாயகம் எவ்வாறு விஷயங்கள் நடைபெறு மென்பதை எப்பொழுதும் ஆலோசிக்கிறதில்லை.

நிர்வாக உத்தியோகங்களும், நியாய உத்தியோகங்களும்.

எனது கனம் நண்பர் (Sir Henry Cotton.) ஸர் ஹென்றி காட்டன் ஒருபிரசங்கம் செய்தார். அதனுடைய சம நிலையினுலும் நீதிநிலையினுலும் எனக்குப் பிரீதி உண்டாயிற்று. அவர் உத்தியோகஸ்தர்களைப் பற்றி நல்ல எண்ணத்தோடு அநேக விஷயங்களை எடுத்துச் சொன்னுர். அவைகளை நான் மரியாதையோடு கிரகித்துக் கொண்டேன். ஏனென்ருல் அவரே, வெகுகாலமாய் மிகவும் பேர் போன ஓர் உத்தியோகஸ்தராய் இருந்திருக்கிருர். (எதிர் கட்சி யாரின் நகைப்பு). ஆகையால் அவருக்கு அதைப் பற்றி யெல்லாம் தெரியும். (அதிகமான நகைப்பு). காரிய நிர்வாகஇலாகாவையும், நியாய இலாகாவையும் சேர்ந்த உத்தியோகங்களைப் பிரிவினை செய்தலாகிய மகத்தான விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே போனுர். அது இந்தியாவின் உயிர்நிலையாயிருக்கிற விஷயங்களில் ஒன்ருய் இருக்கின்றது. அந்த விஷயம் இந்தியாவிலும் இங்கேயும் எங்களுடைய கவனத்தைக் கவர்ந்து நிற்கிறதென்று எனது கனம் நண்பருக்கு உறுதி சொல்லமட்டும் கூடும். அதைப்பற்றி இனி ஒருகாலத்தில் நான் பேசும்படி ஏற்படலாம். மற்ெருரு விஷயம் கனம் மெம்பர் பிரஸ்தாபித்ததும் இந்தியா கவர்ன்மெண்டாருடைய கவனம் முக்கியமாய்ச் செலுத்தப்பட்டிருப்பதுமான விஷயம். என்னவென்ருல், கசையடியைத்தணிப்பதும், ஜன சம்பந்தமான விஷயங்களில் கசையடியை நிபந்தனைக்குள்படுத்துவதும்,

இராணுவ சம்பந்தமான கசையடியை குறிப்பிட்ட விஷயங்களுக்கு வரையறுப்பதுமேயாம்.

"எனது இருதயம் இந்தியாப் பிரஜைகளின் சார்பாகவே யிருக்கின்றது"

எனது கனம் நண்பர் தமது உபந்நியாசத்தின் முடிவில் என்னை நோக்கிப் பிரார்த்தித்து, ஸிக்ரிடரிஆப் ஸ்டேட்டானவர் இந்தியப் பிரஜைகளுக்கும் தமக்கும் உள்ள சம்பந்தத்திலும், அவர்களுக்காகத் தாம் நன்மை கூறுவதிலும், அவர்களுக்காகத் தாம் செய்யும் முயற்சிகளிலும் தம்முடைய இருதயமானது அவர்களுக்குச் சார்ப்பாயிருக்கிற தென்பதை அவர்களுக்குக் காட்டும்படியாய், தாம், பிரீதியும், ஒத்துணர்ச்சியும், சிநேக பாவமுமாகிய அனுதாபத்தினுல் தாம் தூண்டப்படுகிறுர் என்பதை அவர்களுக்குக் காட்டுமாறு ஓரு உறுதிப்பாட்டைச் சொல்வாராகில் இந்தியாவுக்கு நன்மையாயிருக்குமென்று சொல்லுகிறுர். நான் சொல்லவேண்டியிருப்பதெல்லாம நான் வேறுவிதமாய் இருப்பதாய் ஒருபொழுதும் காட்டிக்கொள்ளவில்லை என்பதே. (கேட்க, கேட்க.) என்னுடைய இருதயம் அவர்கள் சார்பாகவேயிருக்கின்றது. பியூரோகிரஸி(Bureaucracy) என்ற அரசுமுறை எனக்குஎன்ன? எனக்கு அது எந்ததேசத்தாரிடமும் எப்பொழுதாவது ஒப்புவிக்கப்பட்டிருக்கிறமிகவும் சிரமசாத்தியமான வேலையைச் செய்து முடிப்பதற்காக ஏற்பட்ட ஒரு சிறப்பான யந்திரம் என்று ஒருவாறு சொல்லக்கூடியதும், இந்தியாவில் உள்ளதுமான மகத்தான யந்திரமேயாம். (கரகோஷம்). ஆனல் அது எங்கே தவறிப்போயிருக்கின்றதென்பதை எனக்குக் காட்டுங்கள். அது ஒவ்வொரு விஷயத்திலும் பூரணமானது என்று யாதொரு விவேகியும் ஒரு

நிமிஷமேனும் வாதிக்க முடியாது. ஆனாலும் அவர்கள் பியூரோகிரஸிஎன்று சொல்லுகிற இதுஎந்தஇடத்தில்எந்தஅம்சத்தில் குறைவாக இருக்கின்றதென்பதை எனக்குக் காட்டுங்கள். எனது கனம் நண்பர்கள் யாரேனும் இந்த செஷன் நடந்துகொண்டிருக்கையில் தினம் தினம் எனக்குக் காட்டட்டும். அந்தக் குறைவை நான் அறிந்திருப்பதாகக் காட்டாமலும் அதைப் பரிகரிக்க என்னால் கூடிய எல்லாவற்றையும் செய்யாமலும் இருக்கக்கூடியவனென்று அவர்கள் எண்ணுகிறார்களா? இந்தியா கவர்ன்மெண்டானது மிகவும் சிங்கலாயும் குழப்பமாயுமிருந்தாலும், நான் பிரீதியும், ஒத்துணர்ச்சியும் சிநேகபாவமுமாகிய அனுதாபத்தினால் தூண்டப்படுகிறேன் என்று இந்தியாவில் வசிப்பவர்களுக்கு மெய்ப்பிக்க எனது சக்தியிலுள்ள எல்லாவற்றையும் செய்வதில் நான் ஒரு நிமிஷமேனும் தவறுவேனென்று அவர்கள் நினைக்கக் கூடாது. (கரகோஷம்).

சூரத் காங்கிரெஸின்

அக்கிராசனப் பிரசங்கம்.

பம்பாய் மாகாணம் சூரத்தில் 1907-ம் ௵ டிசம்பர் மாதம் 26 ந்தேதி கூடிய 23 வது இந்தியன் நாஷனல் காங்கிரஸில் அக்கிராசனாதிபதியா யிருந்த "கனம் டாக்டர் ராஷ் பிஹாரி கோஸின்" அக்கிராசனப் பிரசங்கத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. இப்பிரசங்கம் முற்றிலும் மேற்படி காங்கிரெஸில் பிரசிங்கிக்கப்படாமல், சில பாகம் மட்டும் பிரசங்கிக்கப்பட்டு நின்றுபோயிற்று.

சகோதர டெலிகேட்டுகளே, மாதர்களே, கனவான்களே:—என்னை இந்த அக்கிராசனத்தை வகிக்கும்படி நீங்கள்கோரி அதனால் எனக்குச்செய்த விசேஷ பெருமைக்காக நான் உங்களுக்கு வந்தனத்தைச் செலுத்துவது எனது முதற் கடமையாயிருக்கிறது. என்னால் கோரப்படாமலும் அபேட்சிக்கப்படாமலும் நீங்களாக எனக்குச் செய்த இந்த கௌரவத்திற்காக நான் உங்களுக்கு நன்றியறிவுள்ளவனாயிருக்கிறேன், என்று சொல்வது மட்டும் போதாது. இது நிரம்பவும் மேலான கௌரவம். இதைக் காட்டிலும் மேலான கௌரவம் நீங்கள் செய்யக்கூடியதில்லை. ஆனால் இந்த கௌரவத்தோடு கூட மிகவும் பளுவான பொறுப்பும் தொடர்ந்து நிற்கிறது. எப்படியெனில்

அபாத்திரனை நான் வகிக்கும் இந்த ஸ்தானமானது தற்காலத்தில் மிகவும் கவலைக் கிடமுள்ளதாயிருக்கிறது. அவ்வாறு எக்காலத்திலும் இருந்ததில்லை. ராஜாங்க விஷயம் என்ற வானத்தின் கண்ணே அடர்ந்திருண்ட மேகங்கள் வந்து கூடியிருக்கின்றன. ஆகையால் இன்று உங்கள் முன்னே நிற்கிற நான் சூரியனுடைய ரதத்தை நடத்த ஏற்பட்டவனைப்போல இருக்கிறேன். என்னுடைய கதி "பீடன்" (Phaeton) கதியைப்போலாகாமல் தப்பினால், அவ்வித நல்லதிர்ஷ்டம் உங்களுடைய தயவினாலும், பொறுமையுள்ள அன்பினாலும், எனக்குக் கிடைக்க வேணுமல்லது வேறில்லை. அவ்வித தயவும், அன்பும் நீங்கள் எனனிடத்தில் பாராட்டுவீர்கள் என்பதிலும் நான் சந்தேகிக்கவில்லை. நீங்கள் மனதார என்னுடன் ஒத்து நடப்பீர்களென்றும் நான் நம்புகிறேன். நாமெல்லாம் ஒரேபொதுவான காரியத்தை முன்னிட்டு நிற்பவர்களல்லவா? பலபேர் சேர்ந்த நடவடிக்கைக்கு ஒற்றுமையானது பிராணனென்றும், தீராச் சச்சரவுகளும், வேறுபாடுகளும் உள்ள இடத்தில் அது எப்போதும் தழைக்க முடியாதென்றும் நாம் அறியோமா?

நமது தேசத்தில் இப்போது நடந்தேறி வருகிற காரணமானது விசனகரமுள்ளதாயும் பல விசேஷமான சம்பவங்களுடையதாயும் இருக்கின்றது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. இக்காலம் அதிக நிர்ப்பந்தமும் குழப்பமும் உள்ளதாயிருக்கிறது. ஆகையால் நாம் நமது வகுப்பார்களை யெல்லாம் திரட்டி, உறுதியாய், நெருங்கின ஒற்றுமையோடு நிற்கவேண்டியதற்கு ஏற்றசமயம் இதுவே. நமது தற்கால நிலைமை மிகவும் விசாரத்துக்கும் தீர்க்காலோசனைக்கும் உரியதாயிருக்கிறது. அதில் விசேஷமான

கஷ்டமும் அபாயமும் கூடியிருக்கின்றன. நம்மிடத்தில் வரம்புக்குள்ளடங்கி நடக்கும்பயிற்சியும், பொறுப்புதுள்ளதன்மையும் விசேஷமாய் கூடினாலன்றி காங்கிரெஸ் என்னுங் கப்பலை பாறையின்பேரிலேயே மோதிவிடுவோம். நமக்குள்ளாகவே சச்சரவுகள் தோன்றி, கோபவேசமுள்ள போராட்டங்களைக் கிளப்பி, அப்போராட்டங்கள்மதே நகத்தில் சிற்சில பாகங்களில் பரவிவருகின்றன என்பது மறுக்கமுடியாத பிரசித்தமான விஷயம். நானும் அதை மறுக்கவில்லை. இருந்தபோதிலும் அதைக்குறித்து திகிலடையவாவது அதைரியப்படவாவது ஆஸ்பதமில்லை. ஆனால்நாகப்பூரில் சிலநாளைக்கு முன்நடந்த சம்பவங்கள் சிலருக்கு பீதியை உண்டாக்கலாம். ஆயினும், இந்தக்கலவரங்களெல்லாம்பொறுப்பற்ற ஜனங்களுடைய வீராவேசமான வார்த்தைக்களைக் கேட்டுத் தங்கள் நிலைதவறி மார்க்கம் கெட்ட சிலவாலிபர்களுடைய வேலையென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஒரு விஷயம்மட்டும் நான் நிச்சயமாய்ச் சொல்வேன். அதாவது நாம்கூடவேண்டிய இடத்தைமாற்றும்படி நிர்ப்பந்தமுண்டாக்கினபேர்வழிகள் தங்களுடைய சாமார்த்தியத்தைப் பற்றிப் பெருமைபாராட்ட ஒருபோதும் நியாயமேயில்லை.

இப்படிப்பட்ட சமயத்தில் தாமதமன்றி முன்வந்து, சரித்திராதிகளில் பேர்போன இந்நகரத்தில் காங்கிரெஸ் சபை கூடும்பொருட்டு நம்மை யழைத்த சூரத் மகாஜனங்களுக்கு இங்கே கூடியிருக்கும் டெலிகேட்டுகளின் பொட்டு நான் இப்போது வந்தனம் செலுத்தவேண்டியவனாயிருக்கிறேன். இவ்வாறு காங்கிரெஸ் சபைக்கு இடந்தந்ததில் அவர்கள் தங்கள் பரம்பரையான உதார குணத்தைக் காட்டினார்களே தவிர வேறில்லை. அவர்கள் வசிக்கும் இந்நகரம் சாமான்யமானதல்ல. (Llyndyn)

லின்டின் என்று சொல்லப்படும் ஏரி-கிராமம் (Lake-village) தோன்றினதற்கு முன்னிட்டும், சமுத்திரத்திலிருந்து (Venice) வெனிஸ் நகரமானது வெளிப்பட்டதற்கு வெகுகாலத்துக்கு முன்னிட்டும், இந்த சூரத் நகரமானது மேற்கு இந்தியாவுக்கு ஓர் திலகம்போல் பிரசித்தி பெற்ற வியாபாரஸ்தலமாய் இருந்தாகச் சரித்திரத்தாலறிகிறோம். ஆயினும், தங்கள் வீடுவாசல்களையும், இனத்தாரையும், மனசாக்ஷியின் பொருட்டு சந்தோஷகரமாய் விட்டுப் பிரிந்து, அபிப்ராய பேதத்தை அடக்குவதற்காக, கத்தி, தூக்குமரம், கழுவு இவைகளை பிரயோகிக்கிற வழக்கமில்லாத இத்தேசத்தில் புகழடைந்த பூர்வீக பார்ஸீ யாத்திரிகர்களுக்கு முதல் முதல் இத்தேசத்தில் தங்குமிடமாயிருந்தது இந்நகரத்தின் மேலான பெருமைக்குக் காரணமாயிருக்கிறது. அந்தப் பார்ஸீகளின் சந்ததியார் தங்கள் முன்னோர்களுடைய உதிரத்தோடு கூட அவர்களுடைய நற்குணங்களையும் அடைந்தவர்களாய் இந்தியாவுக்குத் தங்களுடைய கடமையை ஆயிரம் மடங்காகச் செலுத்திவருகிறார்கள். நமது தலைவர்களில் அனேகர் சேர்ந்ததும், நமது "Grand old man" என்று சொல்லப்படும் பெரியவரை நமக்குத் தந்ததுமான அவ்வகுப்பாரைக் காட்டிலும் இத்தேசத்தின் பேரில் அதிக அன்பு பாராட்டும் ஜனங்கள் இல்லவே இல்லை யென்று நான் தைரியமாய்ச் சொல்வேன். இத்தியாதிகாரணங்களினால் இந்நகரமானது நமது நன்றியறிதலுக்கு விசேஷ பாத்திரமாயிருக்கிறது.

யாராருடைய பெயர்கள் வீட்டுவார்த்தைகளாக எங்கும் வழங்கிவருகின்றனவோ, யாராருடைய ஞாபகம் ஜனங்களுடைய மனதில் பதிந்திருக்கின்றதோ, அப்பேர்க்

கொத்த நமது முக்கியமான தலைவர்களில் ஏறக்குறைய எல்லோரும் இச்சபையில் வந்திருப்பதைப் பார்க்க சந்தோஷிக்கிறேன். ஆனல் சில பேர்போனவர்களின் முகங்களை இங்கு காணக் கூடவில்லை. இப்பால் "காளி சரண பானர்ஜி" என்பவரை நாம் இழந்துவிட்டோம். அவர் தெய்வபக்தியுள்ள கிரிஸ்துவர், நிரம்ப னுப்பமானமுள்ள படிப்பாளி, தீரமுள்ள பேச்சுக்காரர், அதிக விஸ்வாஸமுள்ள தேசாபிமானி. அவர் தேசத்தின் எல்லாவகுப்பாராலும் மதிக்கப் பெற்ற சகல நற்குணங்களும் பொருந்திய தலைவர். மிகவும் சிரமப்பட்டு உண்மையாய் உழைப்பவர். அவருடைய முழுமனதும் இந்த காங்கிரெஸில் இருந்தது. அதன்பேரில் அவர் வைத்த அன்பு மரண காலத்திலும் உறுதியாய் நின்றது. கல்கத்தாவில் நாம் கூடிய மீட்டிங்கில் பிரசன்னமாகும்பொருட்டு அவர் நோயாளியாயிருந்த படுக்கையைவிட்டு வந்தது யாருக்குத்தான் ஞாபகமிராது? சபைக்கு வந்ததன்மேல், வெப்பத்தின் கொடுமையால் தளர்ந்தும், டாக்டர்களால் எச்சரிக்கப்பட்டும்கூட அவர் சபையை விட்டுப் போகமாட்டேனென்று சொல்லிக் கடைசியில் அங்கேயே மூர்ச்சையாய் விழுந்து பந்தலினின்றும் எடுத்துக்கொண்டுபோகப்பட்ட சங்கதி யாருக்குத்தான் ஞாபகமிராது? அதற்குப் பிறகுதான் அவர் சிலநாளையில் இறந்து போனர். (Koraya) கொரையாவில் அவருடைய பிரேதத்தை அடக்கம் செய்திருக்கும் தனிமையான (Scotch Cemetery) ஸ்காட்சு சமாதியை நாம் நினைக்கும்போது, அம்மகான் புதைபட்ட இடத்தில் எவ்வளவு படிப்பும், எவ்வளவு அடக்கமும், அமரிக்கையுள்ள தன்மையும், எவ்வளவு தெய்வபக்தியும், எவ்வளவு ஜனங்களை வசப்படுத்தும் பாவனையும்

எவ்வளவு தேசாபிமானமும் அவரோடுகூட புதைபட்டி
ருக்கின்றனவென்று எண்ணாமலிருக்க முடியவில்லை. அவ
ருடைய எந்தக்கையை எல்லோரும் குலுக்கப்பிரியப்
பட்டார்களோ அந்தக்கையானது மறைந்துபோயிற்று.
அவருடைய எந்தத்தொனியை எல்லோரும் கேட்கப்பிரியப்
பட்டார்களோ அந்தத்தொனி அடங்கிப்போய்விட்டது.
ஆனால் ஒருவன் தனக்குப் பிற்காலம் விட்டுவிட்டுப்போ
கும் ஜனங்களின் மனசிலும், ஞாபகத்திலும் குடிகொண்
டிருப்பது அவன் மரணமாகாது என்னில், காளிசர
னும் இப்போது மரிக்கவில்லை. இன்னும் உயிரோடிருக்
கிறார். அவர் தன்னுடைய சொந்தமான சரீரத்தில் இப்
போது இருக்கவில்லையேயொழிய நம்மில் அவர் இன்
னும் ஜீவித்திருக்கிறார். நமது பின்னோர்களிலும் அவர்
இருப்பார். அதுபோன்ற சிரஞ்சீவித்வம் எல்லா ஜனங்
களுக்குமே கிடைக்காது. அலகபாத்தை சேர்ந்த பண்
டிட் விச்வாம்பர நாதரும் அவர் பிதுர்க்களோடு போய்ச்
சேர்ந்தார். நம்குலப்பெரியவர்போன்ற அவரின் புற்ற
முதிர் அறிவை நமது சபைகளில் இப்போது இழந்துவிட்
டோம். இந்த உலகத்தில் அவருடைய வேலையானது முடி
ந்துவிட்டபோதிலும்கடமையில் அவருக்கிருந்த மேலான
சிரத்தையானது அவருடைய தேசத்தாருக்குப் பல தலை
முறைக்குத்தூண்டுகோலாய்நிற்கக் கூடிய திர்ஷ்டாந்தமாய்
இருக்கிறது. அவ்வளவு மேலானகுணம் இருந்ததினா
லன்றோ 1892வருஷத்தில் அவர் மரணமாய்விடத்தக்க அவ்
வளவுஅபாயகரமாய் பாரிசவாயுவினால் அவஸ்தைப்பட்ட
மூன்று வாரத்துக்கெல்லாம், (Reception Committee)
ரிஸெப்ஷன் கமிட்டியின் பிரெசிடெண்டாயிருந்து அலக
பாத்துக்கு டெலிகேட்டுகளை வரவேற்கத்திடமாய் முன்

வந்து நின்றார். பண்டிதர் பலவிதத்திலும் நிரம்ப விசேஷமானமனுஷர். விச்வாம்பரநாதருடைய ஞாபகம் மறக்கத்தக்கதாய் நம்மில் வேறொரு நீதிசாஸ்திரவானும், படிப்பாளியும், தேசாபிமானியும் உண்டாவதற்கு வெருகாலம் செல்லும்.

சமீபத்தில் நடந்த தேசப்பிரஷ்டங்கள்.

கனவான்களே,—இப்போது முடிவுக்கு வரப்போகிற வருஷத்தில் நமது தேசமானது மிகவும்அல்லோலகல்லோலப்பட்டு அதில் ஒருபெரிய நாடகம் போன்ற சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. இதன் முதல் அங்கத்தில் லாலாலஜபதிராய், அஜீத்சிங்கு இவர்கள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார்கள். அதற்குப்பிறகு பஹிரங்கமான கூட்டங்களைத்தடுத்து ஒருவிதி (Ordinance) ஏற்பட்டது; பிறகு ராவல்பிண்டி கேஸ்விசாரணையும், பிறகு பஞ்சாப்பிலும், பங்களாத்திலும் பத்திரிகைகளின் பிராசிக்யூஷன்களும் நடந்தேறின. கடைசியாக, சிம்லாசட்டசபையில் பஹிரங்கமான கூட்டங்களைப்பற்றிய ஆக்ட்டு பாஸானது இதன் கடைசி அங்கம். இத்தோடாவது இந்நாடகம் முடிவு பெற்றதாக நினைத்து அவ்வாறு நாம் கோருகிறோம்.

பழமையாய்ப் போன 1818௵க்கிய III. வது ரிகியுலேஷனை இப்போது அமுலுக்குக் கொண்டுவந்ததற்கு சமாதானமாக அது ஒரு நிலையான சட்டம் என்று சொல்லப்படுகிறது. அது நிலையான சட்டமன்று; சட்டங்களுக்கெல்லாம் நிலையானமறுப்பு. நிலையானசட்டமன்று; நமது சுதந்தரங்களுக்கு அபாயகரமான நிலையான ஆயுதம். இத்தேசத்தின் சட்ட புஸ்தகத்துக்கு நிலையான

அபகீர்த்தி. ஒரு பிராசிக்யூஷன் நடத்தினல் அதைஎல்லாரும் கவனிக்கும்படி நேரிடுகிறதாகையால் ராஜநிந்தனைக்காக கோர்ட்டுகளில் விசாரணை நடத்துவது யுக்தமல்லவென்று வெகுநியாயமாய்ச் சொல்லவருகிருர்கள். இந்த நியாயம் ஓர் காலத்தில் "ஸ்காட்லெண்டு" எல்லையில் ஒரு புராதன பட்டணத்தில் வழங்கிவந்த பழமையான நியாயம் சுருக்கமானவழி. அங்கேயுங்கூட ஒரு நிலையானசட்டம் இருந்ததென்றுபெயர். ஆனல் அந்த "ஜெட்பார்க்" என்னும் பட்டணத்தில்கூட விசாரணை நடத்துகிறதென்கிற கிரமம் இல்லாமற் போகவில்லை. ஆனல் தீர்மானம் முடிந்தபிறகு விசாரணை நடக்கும்! நான் சொல்லப்போகிறது, நான் லாயராகையால், ஒருக்கால் எனக்குள்ள குறைபாயிருக்கலாம். இருந்தபோதிலும், சித்தர வதைக்குரிய பூர்வீக யந்திரங்களைப்போல் நாகரீக தர்மசாஸ்திரங்களுக்கு அவ்வளவு புறம்பான ஓராயுதத்தைப் பிரயோசம் செய்ததைப் பற்றி நான் இந்தியா கவர்ன்மெண்டாரைகொண்டாடக் கூடவில்லையென்று சொல்லுகிறேன். தாங்கள் வெளிப்படுத்தக்கூடாத காரணங்களையிட்டு ஒருவனை தேசப்பிரஷ்டம்செய்த நடவடிக்கையானது "நியாயவிரோதமானது," "ஒழுங்குதப்பினது." "குரூரமானது," "மனம்போன செய்கை." "தைரியமான பிசகு," "அசம்பாவிதம்." இங்கே பிரயோகிக்கப்பட்ட பதங்களில் ஒன்றேனும் என்னுடையதல்ல அவைகள் "ஹான்சார்ட்" என்னும் புஸ்தகத்திலிருந்து ஓர்குறிப்பான சமயத்தில் "லிபரல்" கக்ஷியைச்சேர்ந்ததக்கபேர்வழி ஒருவரால் பிரயோகிக்கப்பட்டது என்னல் இங்கே எடுத்துக்கூறப்பட்டது. காமன்ஸ் சபையில் மிஸ்டர் பார்லி உரைத்த பதிலைப்போல் அவ்வளவு கிரமமும் நியாயமும் தப்பின பதிலை சைமண்டி

மாண்ட் வோர்ட். (Simon de Montfort) பார்லிமெண்டை நிலைநாட்டின நாள்முதல் யாரேனும் கேட்டதுண்டா? ஆனால், இந்த பூகோளத்தின் ஒரு ரேகையில் என்ன நியாயமோ அது மற்றொரு ரேகையில் இல்லையென்றே தோன்றுகிறது. கேட்டவுனுக்கு ஒரு நியாயம் பஞ்சாபுக்கு ஒரு நியாயம்.

இந்த மனம்போன அதிகாரத்துக்கு முதல் இலக்காக யாரைப் பொறுக்கினார்களென்பீர்களோ? மதம், ஆசாரம் இவைகளின் சீர்திருத்தங்களில் சிரத்தை மேற்கொண்டவரும், மாசுமறுவற்ற குணவானும், தமக்காகவன்றி பிறரின்பொருட்டு ஜீவிப்பவரும், பஞ்சாப் மாகாணத்தார் அனைவராலும் கொண்டாடப் பெற்றவருமான ஒருவரைப்பொருக்கினார்கள். இப்படிக்கொத்த மனுஷரை கலகக்காரன் என்பதாயும், பிரிடிஷ் துரைத்தனத்தார்பேரில் விரோதப்பைத்திய மேறின ராஜாங்க விரோதியென்றும், இரகசியத்தில் அத்துரைத்தனத்தை பலாத்காரமாய் கவிழ்த்துவிடபிரயத்தனங்கள் செய்பவரென்றும் இரகசியப்போலீசார் எப்படியோ சடுதியாய் கண்டுபிடித்துவிட்டார்கள். லாலா லஜபதிராயை குற்றம்சாட்டி விசாரித்திருப்பார்களானால், தாம் நிரபராதி யென்பதையும், சாமர்த்தியமுள்ள லெப்டினெண்டு கவர்னர்களானாலும் பிசகிப்போகக் கூடாதவர்கள் அல்ல என்பதையும், எளிதாய்க் காட்டியிருப்பார். வாவதார் (Wafadar) என்னும் பத்திரிகையில் அவருடைய பேச்சிலிருந்து எடுத்தெழுதியதாய்க் கண்டிருந்த வாசகங்கள் தம்முடைய பேச்சை முற்றிலும் வித்தியாசப்படுத்திப் பொய்பாக எழுதப்பட்டவையென்பதையும் சௌரியமாய்க் காட்டியிருப்பார். தமமுடைய நோக்கங்கள், மார்க்கங்கள் எல்லாம் கொஞ்ச

மேலும் ஒழுங்குக்கு மாறில்லை யென்பதையும் ராஜ நிந்தனைக்காவது கலகத்துக்காவது இடந்தரத்தக்க கக்ஷிவாதங்களுக்குத் தான் ஒருபோதும் சார்பாயிருந்ததில்லையென்பதையும் எளிதாய்க் காட்டியிருப்பார். ஆனால் கேவலமான ஒரு குற்றவாளிக்குங்கூட கிடைக்கத்தக்க இவ்வித சுதந்தரமானது நம்மில் முதன்மையானவர்களில் ஒருவருக்கு மறுக்கப்பட்டது. இப்போது லாலா லஜிபதிராயை பொதுவாய் அவர் தேசத்தார்களெல்லாம் சத்காரியத்திற்கு இரையான ஒருபெரிய நிஷ்டராக பாவிப்பார்களானால் அந்த பதவிக்கு அவரை உயர்த்தி, அவருடைய தலையில் அந்த முட்கள் கோர்த்த மகுடத்தை வைத்ததற்கு துரைத்தனத்தாரே காரணமன்றி வேறில்லை. மாண்டலே (Mandalay) யிலுள்ள கோட்டையானது இப்போது புண்ய பூமியாகக் கருதப்படுமானால் (அவ்வாறே அதை என்தேசத்தாரில் பலர் கருதுகிறார்களென்று நான் அறிவேன்) அவ்வித மேம்பாட்டை அதற்குக் கொடுத்ததற்கும் காரணம் நமது துரைத்தனத்தாரேயன்றி வேறில்லை.

ராவல் பிண்டி கேஸ்.

எட்வா (Etawah) விலும் கூட இம்மாதிரி துக்ககரமான சம்பவம் நடந்திருக்கும். ஆனால் அங்கே "சர்ஜான் ஹியூவெட்" (Sir John Hewett) என்பவருடைய விவேகத்தினால் அது தவிர்க்கப்பட்டது. அங்கே வெகுதந்திரமாய் யத்தனிக்கப்பட்ட சூழ்ச்சிகளின் அக்கிரமத்தை அவர் தெளிந்து கண்டுகொண்டார். ஆனால் பஞ்சாப் அதிகாரிகளுக்கோ ஏதோ பெரிய கலக எழுச்சியானது நெருங்கிவிட்டதாக பீதியுண்டாய், அவர்களுடைய திர்ஷ்டியானது மங்கிப்போய், சாதாரண ஒரு தெருக்கலகத்தை வைத்துக்கொண்டு பிரிடிஷ் அரசாட்சியையே அடி

யோடு சாய்த்துவிட பலமான யத்தனம் இருப்பதாக நினைத்துவிட்டார்கள். அதன் பலன் என்னவாயிற்றென்றால்:—ராவல் பிண்டி பிராசிக்யூஷன் நடந்து அதினால் ராஜ நிந்தனையைத் தேடிக்கண்டுபிடிப்பவர்களுடைய பயங்கரமான வழிகளைப்பற்றி வெளிச்ச மேற்பட்டது. உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களாயும், பஞ்சாப்வாசிகளால் தங்கள் தலைவர்களாக மதிக்கப்பட்டவர்களாயும் உள்ளவர்களை, ஏதோ ராஜநிந்தனையான பேச்சுகளினால் பலமான கலகங்களைத் தூண்டி விட்டதாகச் சொல்லி இழிவான குற்றவாளிகளை நிறுத்தும் கூண்டில் நிறுத்தினார்கள். ஆறு மாத காலபரியந்தம் அவர்கள் ஜயிலிலடைபட்டிருந்தார்கள். ராஜ்யத்தின் பந்தோபஸ்தை யுத்தேசித்து அவர்களை வெளியில் விட முடியாதென்ற காரணத்தினால் அவர்களுக்கு ஜாமீனும் மறுக்கப்பட்டது. ஆனால் இந்த பிராசிக்யூஷன் முடிவு என்னவாயிற்று? அவர்கள் நிரபராதிகளென்பது பரிஷ்காரமாய் வெளியாய். பிராசிக்யூஷன் கேஸின் ஆபாசமும் நன்றாய் வெட்ட வெளிச்சமாயிற்று. உண்மையான சில குறைகளின் நிமித்தம் ஜனங்களுக்குள் நியாயமாய் உண்டான கொதிப்பை அதிகாரிகள் பீதியினால் ராஜாங்கவிரோதமான கலகம் என்று கொண்டு திகிலடைந்து விட்டதாக ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டின் ஜட்ஜ்மெண்டினால் வெளியாகிறது. எந்த சாக்ஷியத்தின் பேரில் 6-பேர் லாயர்களை ஜயிலில் மாதக்கணக்காக வைத்திருந்தார்களோ, அது "கற்பனை அல்லது சந்தேகத்துக்கிடமுள்ளதென்று" கண்டிருக்கிறது. பிரிடிஷ் ராஜாங்கத்துக்கு விரோதமாக எவ்வித சதியோசனையிலும் அவர்கள் எவ்விதமாகவும் சம்பந்தப்பட்டதாக ருசுப்படுத்த ஒரு துள்ளத்துளி சாக்ஷியம் கூடக்காணவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் நான் மற்றொரு சங்கதியும் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. அதாவது லாலா லஜபதிராயைச் சிறைப்படுத்துவதற்கு சில மணி நேரத்துக்குமுன்னதாகத்தான் அவர் எழுதிய ஒருகடிதத்தில் பஞ்சாபின் நிலைமையை நன்றாய்ச் சுருக்கி விளக்கியிருக்கிறார். சிற்சில காரணங்களையிட்டு பொது ஜனங்களுள் அதிர்ப்தி உண்டாயிருப்பதாய்ச் சொல்லி, அந்தக் காரணங்களின்னவையென்றும் தெரிவிதாராகச் சொல்லியிருக்கிறார். அவையாவன:—

(a) "தற்காலத்தின் அறிகுறிகள்" ("Signs of the times") அன்ற தலைப்பின் கீழ் "சிவில் அண்டு மிலிட்டெரி கெஜட்டில்" (Civil and Military Gazette) சென்ற ஜூலை, ஆகஸ்டு மாதங்களின்போது வெளிவந்த நிருபங்களும், வியாசங்களும்.

(b) "பஞ்சாபி" என்னும் பத்திரிகையை மட்டும் பிராசிக்யூஷன் செய்து அந்தப்படி "சிவில் அண்டு மிலிட்டெரி கெஜட்டின் பேரில் நடவடிக்கை நடத்தமாட்டோமென்று கவர்மெண்டார் சொல்லிவிட்டது.

(c) குடியேற்ற மசோதா.

(d) நிலங்களின் பராதீனத்தைக் குறித்த சட்டத்தின் திருத்த மசோதா.

(e) "பாரிடோப் கனல்" (Bari-Doab Canal) என்னும் வாய்க்காலின் நீர்வைவிகிதங்களை உயர்த்தியது.

(f) "ராவல் பிண்டி" ஜில்லாவில் நிலத்தீர்வையை மிதமிஞ்சி உயர்த்தினது.

(g) பிளேக்கினால் அளவற்ற ஜனங்கள் மாண்டு ஜனங்களெல்லாம் நொந்துபோய், வேலையாட்கள் கிடையாமல், கூலிகள் அபரிமிதமாய் உயர்ந்துபோனது.

இவ்விதமாய் அவர் எடுத்துக்காட்டின முகாந்திரங்கள் முற்றிலும் சரியே. எப்படி யென்றால், மேற்கண்ட குறைகளில் மிகவும் நெருக்கமான சில குறைகள் நீக்கப்பட்ட வுடனே பஞ்சாப் மாகாணம் அமைதியாய்ப் போய் விட்டது. ஆனால் லாலா லஜபதிராய், அஜீத்சிங்கு இவர்களை வெளியேற்றினதினால் தான் அவ்வித நன்மை யுண்டாயிற்றென்றும், தங்கள் தீர்க்க திர்ஷ்டியாலும், சமயோஜிதமான எச்சரிக்கையாலுந்தான் முன்னர் நடந்தவண்ணம் மற்றொரு கலக எழுச்சி இத்தேசத்தில் உண்டாகாதபடி தடுக்கப்பட்டதென்றும் அதிகாரிகள் ஒரு சமயம் நினைத்தாலும் நினைப்பார்கள்.

பத்திரிகைகளின் பிராசிக்யூஷன்கள்.

துரைத்தனத்தார் வெகுமலைசாய் ஆரம்பித்து நடத்திய பத்திரிகைகளின் பிராசிக் யூஷன்கள் கூட அவ்வளவு விவேகமான நடவடிக்கைகள் அல்ல. சில கேசுகளில் சர்க்கார் தரப்பில், குற்றவாளியின் குற்றத்தை ருசு செய்யக் கூடவில்லை. இவ்வித கேசுகளில்தோல்வி அடைவது துரைத்தனத்தாருக்கு அவமதிப்புக் கிடமில்லவா? பின்னும், தங்களை நிர்ப்பந்திக்கும் பொருட்டுச்செய்யப்படும் எவ்வித எத்தனங்களையும் சுதாரிக்கத் தயாராய் ஜனங்களுக்குள் தோன்றிவரும் புதிய மனோதைரியம் இப்படிப்பட்டதென்று கல்கத்தாவில் நடந்த பிராசிக்யூஷன்களினால் வெளியாயிற்று. இக்கேசுகள் பலவற்றில், பிரதிவாதிகள் எதிர்வாதம் சொல்லமாட்டோம் என்று மறுதளித்து சந்தோஷமாய் ஜெயிலுக்குப்போனார்கள். இதில், யார் தற்காலம் இந்தியாவில் தோன்றிவரும் ஜாதீய ஐக்கிய உணர்ச்சியை கவனிக்கவில்லையோ அவர்கள் குருடராய்த்தான்

இருக்கவேண்டும். இந்த உணர்ச்சி இந்திய வாலிபர்களு க்கும், அந்தப்புரத்தில் ஒதுங்கிநிற்கும் ஸ்திரீகளுக்கும் கூட உண்டாயிருக்கிறது. "யுகாந்திர்" (Yugantar) பத்திராசிரியரை ஜயிலுக்கு அனுப்பியபோது கல்கத்தாவில் ஹிந்துமாதர்கள் ஒருபெரிய கூடம் கூடி அவருடைய தயாருக்கு துக்க சமாதனம் சொல்லி யனுப்புதற்குப் பதிலாக ஒரு சந்தோஷ நிருபம் எழுதியனுப்பினார்கள். அதற்கு அந்த விருத்தாபிய முள்ளமாது என்னவிடை யளித்தார் என்றால்: "பியூபின்(Bupin) ஜயிலுக்குப்போன இப்போதான் அவனுடைய சார்த்தகமான வாழ்க்கைதொடங்கியது. அவன் தன்தேசத்தாருக்குள்ளே ஒருவனை இருந்துகொண்டு அற்பவேலைகளைப்புரிவதைக் காட்டிலும் இப்போது அவனுடைய செய்கையானது மற்றவர்களுக்கு வழிகற்பிக்கத்தக்க அதிகபிரயோஜனகரமாயிற்று" என்று சொன்னார். தவிர, பாரிஸால் கன்பரென்ஸைப் பலவந்தமாய் கலைத்தார்களே. அப்பொழுது அங்கேவந்திருந்த சிலமாதர்கள் தங்கள் புருஷரடைந்த அவமதிப்பை ப்பார்த்துசகிக்காமல், அவர்கள் தங்கள் சுதந்தரங்களை ப்பாதுகாக்கவகைதெரிந்து கொள்கிறபரியந்தம் தாங்கள் போகாதிகளை விலக்கி விடவேண்டியதென்கிற சங்கல்பம் பூண்டு தங்கள்மேலணிந்திருந்த ஆபரணாதிகளை கழற்றி வீசி எறிந்து விட்டார்கள். இந்த பிராஸிக்யூஷன்களோடும் துரைத்தனத்தார் திருப்தி யடையாமல் பள்ளிப்பிள்ளைகளின் பேரில் படையெடுத்தார்கள். அச்சிறுவரில் சிலருக்கு பகிரங்கமான பிரம்படி தண்டனையும், சிலருக்கு கடினகாவலும் விதித்தார்கள். இவ்விதச்செய்கை தேசமெங்கும் அதிகமான கோபத்தைக் கிளப்பிவிட்டது ஓர் ஆச்சரியமா? அதிகாரிகள் அதை நம்பமாட்டார்கள். இரு

ந்தபோதிலும், இந்தியனுனுலும் அவனும் கை, கண், மூக்கு, அவயவங்கள், உணர்ச்சிகள், கோப தாபங்கள், படைத்தவனென்று அவர்களுக்கு நாம் உறுதியாய்ச் சொல்லக்கூடும்.

ராஜாங்க விஷயமாய் ஜனங்களின் ஆரவார மானது நாளுக்குநாள் அதிகரித்து மிதவாதிகளாயுள்ள அனேகரையுங்கூட, அவர்களால் அசம்பாவித மனோராஜ்யக்காரரென்று முன்னால் பாவிக்கப்பட்டிருந்த கக்ஷியாரோடு சேர்ந்து கலந்துவிடும்படி தூண்டிவிட்டதைப்பார்க்க மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் பங்காளத்தின் அமைதிக்குறைவைப்பற்றி கொஞ்சம் பிரஸ்தாபிக்க வேண்டி வருகிறது. பங்காளப் பிரிவினை யானது அனேக ஜனங்களுடைய ராஜ விஸ்வாசத்தை தளர்த்தி விட்டதுமன்றி, அதற்குக் காரண பூதமாயிருந்தவர் எதிர்பார்த்திருக்கக்கூடிய வண்ணமே பல துக்கசம்பவங்களையும் கொண்டுவந்துவிட்டது. கீழ் பங்காளத்தில் மகம்மதியருடைய செல்வாக்கைப்பலப்படுத்துவது அந்தப் பிரிவினையின் நோக்கங்களி லொன்று. அவ்விதமாகவே, அந்த செல்வாக்கும் பலப்பட்டது. ஆனால் அந்தபலம் வினோதமான வழியில் போய் வெளிப்பட்டது. கீழ்பங்காளத்தில் நடந்த மகம்மதியர் கலகங்களையாவது, துராகிர்தங்களையாவதுபற்றி நான் இங்கே பிரஸ்தாபிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, எந்த "ஒருகண்டிப்பு" பாரபட்சமின்மை இவைகளுக்காக நாம் இங்கிலாண்டினிடத்தில் ராஜ பக்தி பாராட்டுகிறோமோ, அந்த பெருந்தன்மைகளில் கீழ்பங்காளஸ்தல அதிகாரிகள் சற்றே குறைவுகாட்டிவிட்டார்கள். நான் அடக்கமா

கவே பேசவிரும்புகிறேன். என்றாலும் கூட, ஒருசெஷன்ஸ் ஜட்ஜியாகப்பட்டவர், சாட்சிகளை இந்துக்கள், மகம்மதியர் என்று இரண்டுகூறாகப்பிரித்து, ஹிந்துக்களைவிட மகம்மதியருடைய சாட்சியத்தை, மகம்மதியர் என்கிற கிற காரணத்தினாலேயே, மேலான மதிப்புக்குரியதாய் பாராட்டுவாரானால் நாம் என்னவென்றுதான் நினைக்கிறது? இப்படி ஸ்பஷ்டமாய் பக்ஷபாதம் காட்டுவதினால் ஹிந்துக்கள் மனது வேறுபட்டு அவர்கள் கோபமூண்டவர்களா யிருக்கிறார்கள்.

"மாசிடோனியா" (Macedonia) வின் சமீபத்திய சரித்திரத்தை யறிந்தவர்களெல்லாம் (அதை நமது அதிகாரிகள் நன்றாய் அறிவார்களே யொழிய அறியாதவர்களல்ல) எந்த தேசத்தில் ஜாதமத விரோதங்களினால் ஜனங்கள் வேறு பட்டிருக்கிறார்களோ அத்தேசத்தில் சுவராஜயமானது கிட்டுவது கஷ்டம் என்பதை நன்றாய் அறிவார்கள். ஆனால், குடிகளை வேற்றுமைப் படுத்தி ஆள்கிறதென்கிற உபாயம் எந்த இங்கிலீஷ் காரனுக்கும் அருவருப்பாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் அவ்வித தந்திரங்களை யனுஷ்டிப்பதாக நாம் எந்த இங்கிலீஷ் அதிகாரியையும் குற்றம் சொல்ல விரும்பமாட்டோம். ஆயினும், பங்காளத்தில் இதுவரையில் இல்லாமல், இப்போது, புதியமாகாணத்தில், முன்னே மிகவும் நேசப்பான்மையோடு கலந்திருந்த வகுப்பார்களுக்குள்ளே புதிதாய் ஜாதி, மதவிரோதங்கள் தோன்றிப் பரவிவருகின்றன என்பது வாஸ்தவமான சங்கதி. "ஹிந்துக்கள் பேரில் மகம்மதியரைத் தூக்கிவிடதான் ஒருபோதும் நினைத்ததில்லை" யென்று லார்டு கர்ஸன் ஆட்சேபித்துச்சொல்கிறார் என்று எனக்கு தெரி

கிறது. அப்பேர்ப்பட்ட கனவான் மறுத்துச் சொல்லுகிறவார்த்தையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது கடமைதான். என்றாலும், சட்டத்தில் வழக்கமாய் ஒருநியாயம் சொல்லப்படுகிறது. அதாவது ஒவ்வொருவனும் தன்னுடைய செய்கையால் விளையக்கூடிய பயன்களைத் தெரிந்தே அச்செய்கையைச் செய்ததாய் பாவிக்கவேண்டுமென்பதே. இருந்தபோதிலும் மேற்படி கனவான் விஷயத்தில், அவருடைய ஸ்வபாவக்குறைகளை யறிந்த நாம் இந்த ப..மையான சட்டநியாயத்தைக் கொண்டு தீர்மானிக்கக் கூடவில்லை.

ஏதோ, ஹிந்துகளுடைய "பாய்காட்டு விலக்கு" முயற்சியினால் மகமதியர்களுக்கு கோபாவேசம் மூண்டுவிட்டதாயும், இக்காரணத்தையிட்டுத்தான் மகம்மதியரில் கீழ் பங்காளத்திலெங்கும் சில மாதங்களுக்குமுன் பெரிய நெருப்பு ஜ்வாலையாய் பற்றிக்கொண்டதாயும் அதிகாரிகளில் சிலர் இன்னும் நம்பியும், சிலர் நம்புவதாய் காட்டியும் வருகிறார்கள். அப்படியானால் அவ்விதமுயற்சி வெகு உக்கிரமாய் இருந்த தருணத்தில் இம்மாதிரி அக்கிரமங்கள் ஒன்று நடவாமலிருந்தது மெத்த ஆச்சரியமே. தவிர அதிகாரிகள் சொல்லும் கக்ஷி வாஸ்தவமானால் கீழ்த் தேசத்தாருக் கெல்லாம் புத்திமாருட்டமாய்த் தானிருக்க வேண்டும். ஏனென்றால் பாய் காட்டினால் மகம்மதியருக்கு அனுகூலமுண்டாயிற்றே தவிர ஹிந்துக்களுக்கல்ல. மகம்மதியருக்கு வெகுகாலமாய் பிழைப்புக்கு ஆதாரமாயிருந்த நெசவுத்தொழிலை அது உயிர்ப்பித்தது. எது எப்படியிருந்த போதிலும், இவ்விஷயத்தைப் பெருக்கிப் பேசுவது அனாவசியம். ஏனெனில் அவ்விஷயம், விவாதத்துக்கிடமின்றி கோர்ட்டு ஜட்ஜ்மெண்டுகளினால் தீர்மா

ளிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜட்ஜ்மெண்டுகளைச் சொன்னவர்களும் இங்கிலீஷ், மகம்மதிய மாஜிஸ்திரேட்களேயன்றி ஹிந்துக்களல்ல.

“ மைமென்சிங்கு ” ஜில்லாவில், கலகங்கள் முதல் முதல் ஆரம்பித்த “ ஜமல்பூரில் ” போலீஸ் ஸ்டேஷனில் தாக்கலான பிரதம சமாசார அறிக்கையில், “ பாய்காட்டையாவது ” அதற்காக கூட்டம்கூடி நிர்பந்திப்பதையாவதுபற்றி யாதொரு பிரஸ்தாபமுமில்லை. “ திவான்கஞ்சில் ” விசாரணை நடத்திய மாஜிஸ்திரேட்டு மிஸ்டர் பியாட்சன் பெல் என்பவர் அந்தக் கலகங்களுக்கு “பாய்காட் ” காரணமல்லவென்று சொல்லியிருக்கிறார். திவான்கஞ்சில் மற்றொரு ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டு நல்ல நாகரீகப்பயிற்சியுள்ள மகம்மதிய கனவான் ஒருவர் என்ன சொன்னாரென்றால், கலகத்துக்கு கொஞ்சமேனும் நியாயமான முகாந்திரம் இல்லை. கலக்காரர்களுடைய பொது நோக்கம் ஹிந்துக்களை ஹிம்சிக்க வேணுமென்பதேயென்று பரிஷ்காரமாய் தெரிகிறது. ” என்றார். மற்றொரு கேசில், அதே மாஜிஸ்திரேட்டு “ பிராசிக்யூஷன் தரப்பின் சாக்ஷியத்தால், கலகம் நடந்த அன்றையதினம் எதிரிகள் மகமதிய கூட்டத்தாருக்கு ஒரு விளம்பரத்தை எழுதிப் படித்து, ஹிந்துக்களை கொள்ளையடித்து ஹிம்சைசெய்தால் அதற்காகயாரும் தண்டிக்கப்படமாட்டார்களென்று துரைத்தனத்தாரும் “ டாக்கா ” நவாப்பஹதூரும் உத்தரவுகள் பிறப்பித்திருப்பதாகச் சொன்னதாகத் தெரிகிறது. அதன்பேரில், காளியின் பிரதிமையை மகம்மதியர் உடைத்து சேதப்படுத்திய தன்மேல், ஹிந்து வர்த்தகர்களுடைய கடைகளும் கொள்ளையிடப்பட்டன. ” என்று சொன்னார் “மெலண்டஹாட்” கலகத்தைப்பற்றி ரிபோர்

ட்டு செய்ததில், "ஜமல்பூர் சப்டிவிஷனல் ஆபீசர் மிஸ்டர் பார்னிவில்" என்பவர் "ஹிந்துக்களைக்கொள்ளையிடத் துரைத்தனத்தார் அனுமதி கொடுத்துவிட்டார்களென்று தண்டோரா மூலியமாய் சில மகம்மதியர்கள் பிரசித்தப் படுத்தினார்கள்." என்று சொல்லியிருக்கிறார். பின்னும் "ஹார்கில்சார்" பெண் களவு கேசில் அதே மாஜிஸ்திரேட்டு என்ன சொன்னாரென்றால், ஹிந்து விதவைகளை "நிக்கா" வழக்கப்படி மகம்மதியர் விவாகம்செய்து கொள்ளலாமென்று துரைத்தனத்தார் அனுமதிகொடுத்துவிட்டதாய் கட்டிவிட்ட புரளி காரணமாக இப்படிப்பட்ட துராகிர்தச் செய்கைகள் நடந்தன" வென்று சொன்னார்.

இவ்வித துராகிரதமான கலகத்துக்கெல்லாம் உண்மையான காரணம் கிழக்கு பங்காளத்தில் மகம்மதியருக்குள்ளே பிரகடனம் செய்யப்பட்ட "சிவப்பு பத்திரிகை" என்று தெரிகிறது. அதில் பாய்காட்டைப் பற்றியாவது, ஹிந்து வாலண்டியர்களைப் பற்றியாவது ஒருவார்த்தைகூடக்காணவில்லை. அந்த "சிவப்பு பத்திரிகை" யில் சொல்லியிருக்கிறதாவது "ஓ மகம்மதிய ஜனங்களே, நீங்கள் உறக்கத்தை விட்டு எழுந்திருங்கள், எழுந்திருங்கள், ஹிந்துக்களோடுகூட ஒரே பாடசாலைகளில் வசிக்கவேண்டாம். ஹிந்து கடையிலிருந்து யாதொன்றையும் வாங்க வேண்டாம். ஹிந்து கைகளால் செய்யப்பட்ட எந்த சாமானையும் தொடாதீர்கள். ஹிந்துவாயுள்ள எவனையும் வேலைக்கு சேர்க்கவேண்டாம். ஒரு ஹிந்துவின் கீழாக இருக்கிற எந்த இழிவான வேலையையும் நீங்கள் அங்கீகரிக்கவேண்டாம். நீங்கள் மடமைத்தனமாயிருக்கிறீர்கள். உங்களுக்கு அறிவு உண்டாயிற்றானால் நீங்கள் அப்போதே

எல்லா ஹிந்துக்களேயும் நரகத்துக்கு அனுப்பிவிடவே ணும். இந்த மாகாணத்தில் அதிகமான ஜனங்கள் நீங்களே. விவசாயிகளிலும் அதிகமாயுள்ளபேர் நீங்களே. ஐசுவரியத்துக்கு மூலமாயிருப்பது விவசாயமே. ஹிந்துவுக்குத் தன் சொந்தமாகச்செல்வம் கிடையாது. உங்களுடைய சொத்தை அபகரித்துத்தான் செல்வவானுயிருக்கிருன். நீங்கள் போதுமானபடி புத்திதெளிவீர்களானுல் ஹிந்துக்கள்பட்டினிகிடந்து சீக்கிரத்தில்மகம்மதியர்களாய்விடுவார்கள்.'' இம்மாதிரி மத ஆவேசத்தைக் கிளப்பிவிடப்பார்த்த பேர்வழிக்கு, மறுபடியாதொருகலகமும் செய்யாதபடி ஒரு வருஷத்துக்கு ஜாமின் வாங்கப்பட்டதைத் தவிர, வேறேதண்டனே விதிக்கப்படவில்லே. அவனே அவ்வளவு தயாவய்விட்டு விட்டதைப்பற்றி நீங்கள் ஒருக்கால்ஆச்சரியப்படுவீர்கள். பங்காளத்தில் எங்களுக்கு ஆச்சரியமில்லே. அவ்வளவுமட்டில் ஜாமீனுவது வாங்கினதைப்பற்றி ஆச்சரியப்பட்டோம்.

இச்சமயம் கீழ்பங்காளத்தில் யாதொரு கலகமுமில்லாமல் அமைதியாய் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லே. ஆனுல் அம்மாகாணத்தில் மறுபடியும் பழயபடி மிதமிஞ்சிய ஆவேசமும் மிருகத்தனமான துராகிரதமும் கூடிய மற்றொரு சண்டமாருதம் கிளம்பி விடாதென்று யார் கண்டார்கள்? மதத்துவேஷம், மதவிரோதம் என்கிற பிசாசை யாரும் சுளுவாய் எழுப்பிவிடலாம். அதை அவ்வளவு சுளுவாய் அடக்கமுடியாது.

ராஜநிந்தனையான கூட்டங்களைப்பற்றிய ஆக்ட்டு.

இவ்வித கலவரங்களுக்கெல்லாம் பங்காளப்பிரிவினை யொன்றே ஆணிவேராக நிற்கிறது. அதினால் உண்டான அதிருப்தி தேசத்தின் எல்லாபாகங்களிலும் பரவியிருக்கிறது. முடிவில், எங்கும் கலக்கமானது மேலிட்டு, துரைத்தனத்தாருடைய அபிப்பிராயத்தில் தற்கால நிலைமை மிகவும் சிந்தனைக்கிட முள்ளதாயிருக்கிறது. ஆனால் இந்த சங்கடத்துக்கு பரிகாரம் தேடிக்கொள்வது மிகவும் எளிதான காரியமல்லவா? ஜனங்களுடைய ஒற்றுணர்ச்சியும் நம்பிகையும் இல்லாமல் இந்தியாவை ஆளமுடியாது. அந்த ஒற்றுணச்சியையும் நம்பிக்கையையும் லார்ட். கர்ஸன் தம்முடைய மனம் போன செய்கையினால் தளர்த்திவிட்டார். இப்போது பழயபடி அந்த அனுதாபத்தையும் நம்பிக்கையையும் சம்பாதிக்க வேண்டுமானால், அவர் சொந்த ஏற்பாட்டை மாற்றுவதினாலாகவேண்டுமே தவிர சென்ற நவம்பர் மாதம் 10-தேதி செய்யப்பட்ட ராஜநிந்தனை கூட்டங்களைப் பற்றிய ஆக்டினாலாகாது. அந்த ஆக்டைப்பற்றி பொறுமையுடன் பேச எனக்குச் சாத்தியப்படவில்லை. ஆனால், எனது கனம்பொருந்திய சினேகிதர் மிஸ்டர்கோகலே சட்டசபையில் சொன்னதுபோல, அந்த ஆக்ட்டைக்காட்டிலும், அந்த ஆக்டில் உள்ளடக்கமாயிருக்கிற ராஜரீக முறையானது நிரம்பவும் அஞ்சத்தக்கதாயிருக்கிறது. அந்த முறைமெத்தவும் விவேகமற்றது. அதுமற்ற இடங்களிலெங்கும் எப்படி பலிக்கவில்லையோ அப்படியே இந்தியாவிலும் பலிக்காதென்பது திண்ணம். அது ஜனங்களுடைய மனதில் கடு

மையான நினைப்புகளை என்றும் மறக்கவொட்டாமல் மூட்
டிவிட்டுக்கொண்டே எரியும். தவிர, எந்தத் தீங்கை அடக்
கும் பொருட்டு அது ஏற்பட்டதோ அந்தத் தீங்கை அது
இன்னும் அதிகப்படுத்தும் என்று நாம் பயப்படவும்
நியாய மிருக்கிறது.

இருந்த போதிலும், அதிகாரிகளுக்குக் கிடைத்திருக்
கிற இந்த புதிய ஆயுதத்தை அவர்கள் வெகு மிதமாகவே
பிரயோகிப்பார்களென்று நாம் நம்பியிருக்கிறோம். இப்
போது சிலநாளைக்குமுன்னேதான் பிரதம மந்திரியானவர்
என்ன சொன்னார் என்றால்:— ராஜாங்கவிஷயமாய் ஜனங்
கள் செய்யும் எந்த ஆரவாரமானாலும், அதினால் ராஜரீக
ஒழுங்குக்கு நேராய் தீங்கு விளையக்கூடா திருக்குமானால்,
அந்த ஆரவாரத்துக்கு தாராளமாய் இடந்தருவது தமக்கு
அங்கீகாரமான கக்ஷி என்று சொன்னார். இப்போது
இந்தியாகவர்ண்மெண்டாரைப்பிடித்திருக்கும் வீண்பீதி
நீங்கி அவர்கள் தெளிந்தவுடனே அவர்களும் இம்மாதி
ரியான பொறுமையுள்ள கோட்பாடுகளுக்குக் கீழ்ப்
படிந்தேநடப்பார்களென்பதில் நான் சந்தேகிக்கவில்லை.
ஆரவாரமெல்லாம் ஒழுங்குக்கு விரோதமாகமாட்டாது.
ஆரவாரக் காரரெல்லாம் ராஜவிரோதிகளல்ல. ஆனால்
அப்படித்தான் சில ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள்
நினைத்து எழுதுகின்றன. வார்த்தையிலும், தோரணையி
லும் ஒருவர் பேசும் பேச்சானது ஆக்ஷேபகரமுள்ளதா
யிருக்கலாம். அதினால் பின்னிட்டு ராஜ்யஒழுங்குக்கு ஏதா
வது தீங்கு நேரிட்டாலும் நேரிடலாம் என்கிற சந்தே
கத்தை யிட்டே அதை அடக்கிவிடுவது சரியல்ல.

லார்டு கர்ஸன்.

அனுதாபகுணம் வாய்ந்த வைசிராய் ஒருவரும், லிபரல் (Liberal) கக்ஷியைச் சேர்ந்த பிரிடிஷ் மந்திரிகளில் (Secretary of State) ஒருவரும் கூடி நிர்ப்பந்தமுள்ள ராஜதந்திரங்களை அனுஷ்டிக்கும்படியாக இந்தியாவின் தலைவிதி இருந்தது. ஆனால் லார்டு கர்ஸன் மட்டும் அவ்வித முறைகளைத் தாம் பிரயோகிக்கதமக்கு ஆவசியகம் உண்டானதில்லையென்று ஓயாமல் சொல்லிக்கொண்டு வருகிறார். ஆயினும், இந்தப் புதிய ராஜரீகமுறைக்கு முதல் உத்தரவாதம் லார்ட் கர்ஸனைச்சாருமேயன்றி மிஸ்டர் மார்லியையாவது, லார்ட் மிண்டோ வையாவது சாராது. அவர்கள் வந்து சேர்ந்த துறைமுகம் அமைதியுள்ளதாயிருக்கவில்லை. லார்டு கர்சன் வேலையைவிட்டுப் போவதற்கு முன்னிட்டே பலத்த புயல்கள் வீச ஆரம்பித்துவிட்டன. அவர் செய்யவேண்டாததை யெல்லாம் செய்தும், செய்ய வேண்டியதையெல்லாம் செய்யாமலும் விட்டுவிட்டுப்போனார். அந்த கனவான் இங்கிலாந்தின் சரியானவேலை இந்தியாவை அரசாளவேண்டியதென்றும், அதற்கு ஜனங்களுடைய ஆலோசனையாவதுஉதவியாவதுதேவையில்லையென்றும், தாம் அபிப்ராயப்படுவதாக ஒளியாமல் காட்டியிருக்கிறார். அதையிட்டு ஜனங்களுக்குத் தங்களை ஆள்வோரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை குறையஆரம்பித்தது. வியாபாரார்த்தமாய் இத்தேசத்தின் பொருள்களை வெளியேற்றுவதும், ஆங்கிலேயரைக்கொண்டு அதை ஆட்சி செய்வதும் அவருடைய ஏகசக்ராதிபத்ய நோக்கங்கள். நம்பிக்கையும் பொறுப்பும் வாய்ந்த எல்லா உத்யோகங்களிலிருந்தும் இந்தியர்களை நீக்கி, அவைகளை "அரசாளும் வகு

ப்போருக்கென்றே" பிரத்தியேகமாய் விட்டுவைக்கவேண்டியது. அவ்வித உத்யோகங்களுக்குத் தங்களை லாயக்காக்கிக்கொள்வதற்குக்கூட இந்தியர்களுக்கு அவகாசம் கொடுப்பதில்லை. தம்முடைய தேசத்தாருக்குக் கிடைக்கும் பொருட்டே சர்க்கார் ஊழியத்தின் ஒவ்வொரு பிரிவிலும், அனேக பெரிய சம்பளங்களுள்ள உத்யோகங்களை அவர் ஏற்படுத்தி வைத்தார்.

கனவான்களே, லார்டு கர்ஸன் பேரில் நாம் குற்றம் சொல்லக்கூடிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. அவர் இத்தேசத்தின் கல்வி அபிவிர்த்தியைத் தடுத்தாரென்று குற்றம் சொல்வோம். சுய அரசாட்சியின் தோரணையைத் தடுத்து அதை பின்னடையச் செய்ததாகக் குற்றம் சொல்வோம். இங்கிலீஷ் வியாபாரிகளுடையதும் அதிகாரிகளுடையதுமான பிரியத்தை சம்பாதிக்கும்பொருட்டு இந்திய ஜனங்களின் க்ஷேமலாபத்தை மனதாரத்தெரிந்தே நாசப்படுத்தினரென்று குற்றம் சொல்வோம். பின்னும், பங்காளத்தில் ஓரே தீயாய் பற்றிக்கொண்டெரியும்படி செய்தாரென்றும், குற்றம் சொல்வோம். புதுக்கக்ஷியார் தோன்றினதற்கு லார்டு கர்ஸன் ஒருவரே காரணமன்றி வேறல்ல. அவர் அவ்வளவு தூரம் ஜனங்கள் மனதைப் புண்படுத்தி அவர்களை பித்தேற்றி விட்டு விட்டார். இப்போது லார்டு கர்ஸன் வேலையைவிட்டுப் போயுங்கூட புதுக்கக்ஷியாரின் சங்கியை அதிகமாய்க்கொண்டே வருகிறது. இவ்வாறு புதியகக்ஷி விருத்தியாவதற்கும், அதன் தீவிரம் விருத்தியாவதற்கும் லார்டு கர்ஸன் ஒருவரே காரணமன்றி வேறெயாருமல்ல. "அடர்ந்த புதர்வனத்தில் நெருப்பு வைப்போர் கையைப்பிடித்து தடுக்கவேண்டியது நம்கடமை" என்று மிஸ்டர் மார்லி சொல்லுகிறார். அப்

படியிருந்தால் அவர் எதிர் கட்சியிலிருந்துங்கூட லார்டு கர்ஸன் கையை ஏன்பிடித்துத்தடுக்க எத்தனிக்கவில்லை. அப்படி செய்திருப்பாரானால் அதைக்காட்டிலும் அவர் இந்தியாவுக்கும் இங்கிலாண்டுக்கும் உபகாரமான காரியம் செய்திருக்க முடியாது. நமது ராஜசுவாசத்தைக் கெடுப்பதற்கு மேற்படி வைசிராய் செய்ததைவிட வேறே எந்த ஆங்கிலேயனும் செய்ததில்லை. அவர் மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்களின் இந்திய குடிகளை மட்டுமல்லாமல், பெரிய ராஜ்யத்தலைவர்களையுங்கூட சிறுமைப்படுத்த முயன்றார். அக்கனவானுடைய நல்லெண்ணங்களைக் கண்டறிய நாம் தவறிப்போனவர்களாயிருக்கக்கூடும். ஆனால், லார்டு கிளேவின் குணவிசேஷங்களை இப்பால் நமக்கு ஞாபகமூட்டி எடுத்துக்காட்டவந்த தூதராகிய அவருக்குஅவர் செய்கைக்குரிய பலன் அல்லது நியாயம் தப்பாமல் பின்னிட்ட சரித்திராதிகளில்காணலாம் என்கிறசமாதானத்தை நாம் சொல்வோம்.

இப்போது பஞ்சாப் அமைதியாயிருக்கிற தென்றால், அதற்குக் காரணம், அங்கே ஜனங்களுடைய குறைகள் நீக்கப் பட்டுவிட்டன என்பதே. இன்னும் பங்காளம் கலகஸ்திதியிலிருக்கிற தென்றால், அதற்கு காரணம் பங்காளப் பிரிவினையானது ஆறாதபுண்ணாக ஜனங்களுடைய மனதில் புழுங்கிக் கொண்டிருக்கிற தென்பதே. பங்காளி பாஷையைப் பேசும் ஜனங்களை எல்லாம் ஒருநிர்வாக சபையுடன் கூடினஒரு கவர்னரின் கீழ்வைத்துவிடட்டும். உடனே எங்களுடைய மனோவியாகுலம் தீர்ந்து நாங்கள் சந்தோஷப் படமாட்டோமா? பலாத்காரமானது ஒருபோதும் பரிகாரமாகாது. ஜனங்கள் அமெரிக்கையா யிருப்பதற்கு மேலான பந்தோபஸ்து என்ன வென்றால், உண்மையான

எல்லாக் குறைகளும் நீக்கப்படும் என்கிற எண்ணம் ஜனங்களுக்குள் உண்டாவதே. தேசப்பிரஷ்டங்களாவது, நிர்பந்திக்கும் ஆக்டுகளாவது அல்ல. ஆகையால் இப்போது பரவிவரும் அதிர்ப்பதியைத் தடுப்பதற்கு சமயோசிதமாய் ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு இணங்கிப்போவதே யுக்தமென்று நான்சந்தேக மில்லாமல் சொல்வேன். ஜனங்களின் அதிர்ப்தி என்கிற மேகமானது இப்போது கையளவு சிறிதாயிருந்தாலும், நாளடைவில் தேசமெல்லாம் மூடிவிடும்படியாக அவ்வளவு பெரிதாய் விடக்கூடும்.

மிஸ்டர் மார்லி

இந்த சந்தர்ப்பதில், பங்களாப் பிரிவினையை மாற்ற முடியாதென்று சொல்லி மிஸ்டர் மார்லி செய்த பெருத்த பிசகைப்பற்றி சற்றுப் பேசவேண்டியதாகிறது. அந்தப் பிசகினால் லிபரல் கக்ஷியைச் சேர்ந்தவரென்றும், ராஜதந்திர நிபுணரென்றும் அவருக்குள்ள கீர்த்திக்கு மோசம் நேரிட்டது. அவர் பங்காளப்பிரிவினையானது "தீர்ந்துபோனகாரியம்" என்று சாக்குச் சொல்லிக் கழித்து விட்டார். அவர் கொஞ்சம் தைரியமா யிருந்திருப்பாரானால் பங்காளம் அவ்வளவு கலவரப்பட்டிராது. நிர்ப்பந்தமான ராஜதந்திரங்களைப் பிரயோகிக்கவும் இதனால் அவருடைய மேற்சொன்ன கீர்த்திக்கு ஹானியுண்டாகவும் இடமிருந்திராது. பங்காளப்பிரிவினையை மாற்றுவதற்கு அசம்மதமாயிருந்தபோதிலுங்கூட, தம்முடையமுதல் பட்ஜெட், (Budget) பேச்சில் மிஸ்டர் மார்லியானவர் இந்தியாவில் தோன்றிப் பரவிவரும் புதிய உணர்ச்சியைப்பற்றி அனுதாபம் காட்டியே பேசினார். இந்தியாவின் துரைத்தன ஏற்பாடு குறுகியவழியிலேயே நடத்தி முடியாதென்றும்

அதைச் சீர்படுத்தி விசாலப்படுத்துவது அவசியமென்றும் ஒப்புக்கொண்டார். இந்தியன் காங்கிரசைப் பற்றிப்பேசி அதினால் கோரப்படும் சீர்திருத்தங்களைப் பற்றி பயப்பட நியாயமில்லை யென்றும் அது முரட்டுத்தனமான அல்லது பீதியுண்டாக்கத்தக்க புதியமார்க்கங்கள் ஏதையும் கோரவில்லையென்றும் சொன்னார். மில் என்னும் தத்துவசாஸ்திரியின் பெரிய சிஷ்யராகிய இவர் அரசு முறையைப் பற்றி அதிர்ப்திப்படுவது ராஜவிரோதமாகாது என்றும் கூறினார். இந்தியாவில் சகலருக்கும் ராஜ்ய சுதந்தரங்கள் கிடைக்க வேணுமென்றாவது. சுவய அரசாக்ஷி படைத்த குடியேற்ற நாடுகளைப்போல அதேபதவியில் இத்தேசத்தையும் வைக்கவேணு மென்றாவது அவர் அபிப்பிராயப்படா விட்டாலும் கூட, இங்கிலீஷ் ஸ்தாபனங்களின் தோரணை, மாதிரி ஏற்பாடுகள், கோட்பாடுகள் இவைகளை இந்தியாவின் துரைத்தனத்திலும் அனுஷ்டிக்க வேண்டியதுதானென்று வற்புறுத்திச் சொன்னார்.

பிரிடிஷ் குடிகளாகிய ஆங்கிலேயர் முதலியோருக்கு கிடைப்பது போலவே, ராஜாங்கத்தில் மேலான உத்தியோகங்களுக்கு யோக்கியதையும் சாமர்த்தியமும் உள்ள இந்தியர்களையும் நியமிக்கிற விஷயமாய் இன்னும் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், விக்டோரியா மகாராணியவர்களால் செய்யப்பட்ட விளம்பரப் பத்திரிகையை (Proclamation) சாதுரியமுள்ள ஒரு வக்கீல் குமாஸ்தாவுடைய குயுக்தியைப்போல குயுக்தியாய் சமாதானம் சொல்லிவிடாமல் விசாலமான புத்தியைக்கொண்டு பெருந்தன்மையாய் அர்த்தப்படுத்த வேணுமென்னும் மிஸ்டர் மார்லிசொன்னார். கிளாட்ஸ்டனுடைய நண்பரும் அவர் சரித்திர கர்த்தாவுமான அவர் பின்னும் என்ன சொன்

ஞர் என்ருல்:—இந்தியாவில் புதிதாய்த் தோன்றிவரும் உணர்ச்சியை நாம் அறிந்துகொண்டு அதைக் கபடமில்லா மனும் பட்சமாகவும் பாராட்டப்பின்னடைவதாகக்காட்டிக் கொள்வோமாஞல் இந்தப் பார்லிமெண்டின் பரம்பரையான மார்க்கங்களுக்கும், நீண்டகாலமாய் அப்போதைக்கப்போது நமது லிபரல் கக்ஷியின் தலைமை வகித்திருந்த பேர்களுக்கும் நாம் துரோகிகளாவோம், என்றுசொன்ஞர். இந்தப் பேச்சுகளெல்லாம் என்னமாய் முடிந்தனவென்று நமக்குத்தெரியும். அவைகளெல்லாம் தேசப்பிரஷ்டங்களிலும், சட்டத்துக்கு பதிலான விதிகளிலும் (Ordinances.) ஜனங்களைக் குற்றஞ்சாட்டுவதிலும்,தண்டப்போலீஸிலும், மிலிட்டேரி போலீஸ் சிப்பந்திகளிலும் பொதுக்கூட்டங்களைப்பற்றிய ஆக்டுகளிலும் வந்து முடிந்தன.

கடைசி பட்ஜெட் (Budget) வாதத்தின்போது இந்தப் பெரிய லிபரல் (Liberal) மந்திரியானவர் என்ன சொன்ஞரென்ருல்:—பஞ்சாப்பில் நடந்த தேசப்பிரஷ்டங்களைப் பற்றித்தாம் யாதொரு மன்னிப்பும் கேட்க அவசியமில்லையென்றும், இந்தியாவில் கண்டிப்பான ராஜதந்திர முறையை அனுஷ்டிப்பது யுக்தமென்றும் சொன்ஞர். இந்தியாவில் கண்டிப்பான முறை என்பதற்கு நிர்ப்பந்தம் என்ற பொருள்படக் கூடியதாயிருக்கிறது. மிஸ்டர் மார்லியின் விசுவாசத்திலும் அனுதாப குணத்திலும், நீதி தவருத மார்க்கத்திலும் நம்பிக்கைவைப்பது சற்று பிரயாசையாயிருந்தாலும் கூட, நாம் நம்பிக்கைவைக்கத் தயாராகவே இருக்கிருேம். ஆயினும் தம்முடைய நங்கூரம் முன்னேநின்ற நிலையிலேயே இப்போது நிற்பதாய் அவர் சொல்வாராஞல், அவருடைய கப்பல் அலைகளிஞல் இடத்தைவிட்டு நகர்ந்துவிட்ட தென்பதைமட்டும் அவருக்குநாம்

எடுத்துக்காட்டக் கடமையுண்டு. தம்முடையஸ்தானத்தை விட்டு மாறினதாக அவர் ஒருக்கால் ஒப்புக்கொள்ளா விடினும், அவர் தம்முடைய நிலைமைவிட்டுப் பெயர்ந்துவிட்டார் என்பதுமட்டும்திண்ணம். ஆனால் மிஸ்டர் மார்லியின் தன்மையில் இந்த விசனகரமான மாறுதல் உண்டானதற்கு வகைசொல்லுவது பிரயாசனமேயல்ல. அவருடைய பொறுப்புவாய்ந்த ஆலோசனைக்காரர்களால் அவர் கெடுக்கப்பட்டாரென்பது பரிஷ்காரம். அந்த ஆலோசனைக்காரர்கள் இத்தேசத்தின் ஸ்திதியைப்பற்றி அறிந்துகொண்ட விஷயங்கள் அவருக்கு இரகசிய போலீஸ் அறிக்கைகளினால் கிடைத்தவைகள். அந்த ஆலோசனைக்காரர்கள் இத்தேசத்தில் எங்கே பார்த்தாலும் ராஜநிந்தனை பரவி விட்டதாயும், வெறும் கலகத்தோடே நிற்காமல் பிரிடிஷ் அரசாட்சிக்கே விரோதமான பெரிய எழுச்சி நெருங்கிவிட்டதாயும், பெண்டுகளும், குழந்தைகளும்கூட புருஷர்களை எதிர்த்து நிற்கப்போவதாயும், இவ்வாறெல்லாம் அவருக்குப் போதித்திருக்கிறார்கள். அனேக ஆங்கிலேயப் பத்திரிகைகளும் கூட, பலவிதமான கொடுமைகளும், கொலைகளும் நடந்த பழய "இந்தியன் மியூடினி" (Indian Mutiny) என்னும் பயங்கரமான காலத்தின் ஞாபகத்தை இப்போது கிளப்பிவிட்டு இரு ஜாதியாருக்குள்ளும் மனஸ்தாபத்தைக் கொண்டுவந்து போடப்பார்த்தன. லண்டன் டைம்ஸ் (London Times) என்னும் பத்திரிகை தன்னுடைய பழமையான வழக்கத்தை யனுசரித்து, நம்பேரில் நம்மை யாள்வோருக்கு க்ஷாத்திரம் முற்றும்படியாக அந்த பழயகதைக்குப் பல சிட்டைகள் கட்டிச் சொல்ல ஆரம்பித்தது. இதையெல்லாம் பார்க்கும்போது, சுவாதீன போதகராகிய மிஸ்டர் மார்லி பொறுப்புவாய்ந்த

ஆலோசனைக் காரராலும், மேற்சொன்ன பத்திரிகைகளா லும், செய்யப்பட்ட நிர்ப்பந்தத்துக்குத் தீராமல் இணங் கும்படி நேரிட்டிருக்கிறதென்று விளங்கவில்லையா? மிஸ் டர் மார்லி சொல்கிற ராஜீய முகாந்தரங்கள் (Reasons of State) என்பவை கொடுங்கோல் செலுத்துகிறவனுடைய நியாயமன்றி வேறென்ன? இங்கிலாண்டில் டோரி (Tory) கட்சியார் சொல்வது போல, மிஸ்டர்மார்லியின் சுபாவம் மாறி விட்டதாக நான் சொல்லமாட்டேன். ஆனால் அவ ரைப்பற்றி நினைக்கும்போது 'சைகோராக்ஸின்' (Sycorax) கோரமானசிறையில் அகப்பட்ட "ஆரியல்லின்" (Ariel) ஞாபகம் நமக்குண்டாகிறது. உண்மை யென்னவென் றால், இக்காலத்திலுங்கூட ராஜாங்கவிஷயம் என்பது சாங் தைபோலத் தொட்டால் ஒட்டிக் கொள்கிற சுபாவமுள் ளதாயிருக்கிறது. தன்னுடைய அறையில் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய நடத்தையைப்பற்றி மேலான மார்க்கங்களை சித்தாந்தப்படுத்தி வைத்துக்கொள்கிற தத் துவசாஸ்திரி இந்தியாவைப் போன்ற ஒருராஜ்யத்தை ஆண்டுநிர்வாகம் செய்யுங் காரியத்தில் முன்நிற்பது யுக்த மல்ல வென்று கோந்த் (Comte) என்பவர் எச்சரிக்கை செய்திருக்கிறபடிக்காவது, நமது மந்திரி யானவர் விலகி நின்றிருக்கலாம். இந்தியாவைப் போன்றதேசத்தில் லிப ரல் கட்சியைச்சேர்ந்த ஒருராஜதந்திரி பலசமயங்களில் பிரயோகிக்க நேரிடுகிற தந்திரங்கள் உத்தியோகஸ்தர் களுடைய மனச்சாக்ஷிக்கு ஒத்திருந்தாலும், சாதாரண மனுஷர்களுடைய மனச்சாக்ஷிக்கு ஒத்திரா.

பாபுசுரேந்திரநாத்பானர்ஜியின் "மகுடாபிஷேகக்" கதையும், கிழ் பங்காளத்தில் நாஷனல் வாலண்டியர்க ளால் (National Volunteeers) நடந்ததாய் சொல்லப்

பட்டகொடுமைகளின் கதையும், பாரிஸாலில் நேர்ந்த பீதியைப்பற்றிய கதையும், மற்றொரு இந்தியன் மியூடினி (Indian Mutiny) உற்பத்தி யாவுதாகச் சொல்லப்பட்ட கதையும், கடைசியாகப் மிஸ்டர் கீர்ஹார்டி (Mr. Keir Hardie) செய்ததாய் சொல்லப்பட்ட ராஜாத்துரோகமான போதனைகளைப்பற்றிய கதையும், யாருக்குத்தான் ஞாபகமிராது? மிகவும் உதவியற்று நொந்து மெலிந்துபோன ஜனங்களின் நம்பிக்கையை வருவிப்பதற்கு இது வழியேயல்ல.

காங்கிரெஸின் கோரிக்கைகள்.

மிஸ்டர் மார்லி தான்கடைசியாய் பேசினபேச்சில், தாங்களாகவே மெதுவாயும் கிரமமாயும் எல்லாம் செய்ய யத்தனித்துக் கொண்டிருக்கையில், இந்தியராகிய நம்மையாளுவோரை நாம் இன்னும் என்ன செய்யும்படி கோருகிறோமென்று தாம் அறியக்கூடவில்லை என்று சொன்னார். அவருடைய எண்ணத்தில் நாம் ஏதோ சாத்யமில்லாத காரியத்தை கோருவதாக நினைக்கிறார் போல் தோன்றுகிறது. ஆனால், மிலிட்டேரி செலவுகளைக் குறைக்கவேணுமென்று கேட்கிற நாஷனல் காங்கிரெஸ் அசாத்தியமான காரியத்தையொன்றும் கோரிவிடவில்லை: கௌவரக்குறைவான சட்டவிதிகளை இந்நாட்டில் ஏற்படுத்துவதைக் குறித்து ஆக்ஷேபிப்பதிலும், இந்தியர்களுக்கு பிரிடிஷ் குடிகளைப்போலவே குடியேற்ற நாடுகளில் சுதந்தரங்கள் கிடைக்க கிடைக்க வேணுமென்று கேட்பதிலும் நாஷனல் காங்கிரெஸ் அசாத்தியமான காரியம் ஒன்றையும் கோரிவிடவில்லை. நிர்வாக அதிகாரங்களிலிருந்து நியாய அதிகாரங்களைப் பிரித்து விடவேணுமென்று கேட்பதிலும், பங்காளப் பிரிவினையை கூடாதென்று ஆக்ஷேபிப்பதிலும் நாஷ

னல் காங்கிரெஸ் அசாத்தியமான காரியம் ஒன்றையும் கோரிவிடவில்லை. கிழ்தரப்படிப்பை எங்கும் பரவச்செய்ய வேணுமென்றுவற்புறுத்துவதிலும், சர்க்காருக்குச்சேர்ந்த நிலங்களின் தீர்வைகளுக்கு ஒருவரையறை ஏற்படுத்தும்படி கோருவதிலும் நாஷனல் காங்கிரெஸ் அசாத்தியமான காரியம் ஒன்றையும் கோரிவிடவில்லை. வைசிய்ராயிடவும், மதிராஸ், பம்பாய் கவர்னர் களிடவும் சட்டசபைகளிலும், நிர்வாக சபைகளிலும், ஜனங்களுக்குத் தகுதியான பிரதிநிதிகள் ஏற்படவேண்டிய தவசியமென்று காட்டுவதிலும் நாஷனல் காங்கிரஸ் அசாத்தியமான காரியம் ஒன்றையும் கோரிவிடவில்லை.

லார்டு கிட்சனரை உடனே சீமைக்கு வரவழைத்துவிடவேணு மென்றுவது, இந்தியாவின் சேனையை கலைத்தொழித்து விடவேணு மென்றுவது நாம் கோரவில்லை. நம்மில் சகலமான பேருக்கும் ஒன்றுபோல ராஜ்ய சுதந்தரங்கள் வேணுமென்றும் நாம் கோரவுமில்லை. இருந்தும் மிஸ்டர் மார்லியானவர் "அப்ரோதில்" (Abroath) பேசிய பேச்சில் இங்கிலீஷ் பொது ஜனங்களுக்கு இம்மாதிரியான திகில் உண்டாகும்படி பேசினார். நாம் கோருகிறது என்னவென்றால், மூன்று தலைமுறையாக மேற்றிசையாருடைய ராஜாங்க வழிகளில் பயின்றுவந்த இந்நாட்டு ஜனங்கள் இப்போது விரும்புகிறபடி ஸ்வராஜ்யம் அவர்களுக்கு சித்திக்கும் பொருட்டுக் கொஞ்சம் கொஞ்சமாயாவது சில் திருத்தங்களைச்செய்து வரவேணுமென்பதே நமது கோரிக்கை. தங்களுடைய சொந்த அனுகூலத்துக்காக ஆங்கிலேயர் இத்தேசத்தில் இருக்கவில்லை யென்றும், தங்களுடைய பாதுகாப்பில் வைக்கப்பட்ட லக்ஷக்கணக்கான இந்நாட்டு ஜனங்களின் அனு

கூலத்துக்காக இருக்கிறார்களென்றும் மிஸ்டர் மார்லி ஒப்புக்கொள்கிறார். ஆனால், இந்த வார்த்தையில் கொஞ்சம் பிரதிஷ்டாதர்மம் கலந்திருப்பதாகத் தோன்றின போதிலும், அந்த வார்த்தையைக் கொஞ்சம் உப்போடு கூடச்சேர்த்து நாம் கொள்ள வேண்டியதும் அவசிய மாயிருந்தபோதிலும், ஆங்கிலேயருடைய பெரியதனம் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியதல்ல என்பதையும், இந்தியாவுக்குத் தன்னைத் தானே ஆண்டுகொள்ளும்படி போதிப்பதே அவர்களுடைய முக்கியமான நோக்கம் என்பதையும் எந்த ஆங்கிலேயனும் மறுப்பானென்று நான் நினைக்கவில்லை. சுவாதீனம், நீதி என்கிற உள்ளு ணர்ச்சிகளோடு பிறந்த உண்மையான ஆங்கிலேயன் ஒவ் வொருவனுக்கும் சுவய அரசாட்சியில் நம்பிக்கையுண்டு என்பதை நான் திடமாய்ச் சொல்வேன். மேலும், அன்னிய அரசாட்சியானது எவ்வளவு அனுகூலமுள்ளதா யிருந்த போதிலும், மனுஷத்தனம் அல்லது ஆண்மை முற்றிலும் அற்றுப்போகாத எந்த ஜனங்களும் அந்த அரசாட்சியின் நுகத்துக்கு என்றென்றும் கீழ்படிந்திருக்கசம்மதிக்கமாட் டார்கள், என்பதையும் நான் திட்டமாய்ச் சொல்வேன். அந்த நுகத்தடியை புஷ்பங்களால் அலங்கரித்துஎவ்வளவு மிருதுவாகக் காட்டினபோதிலும் சம்மதிக்கமாட்டார்கள். இந்த சுவபாவமான உணர்ச்சியை உண்மையான மனது ள்ள ஒவ்வொரு ஆங்கிலேயனும் சரியானதென்றே ஒப்பு க்கொள்வான். "பிரிடிஷ் மகுடத்தின் மிகுந்த காந்தியுள்ள ரத்தனமாய்" மதிக்கப்படும் இந்நாட்டை பிரிடிஷ் சாமான் கள் விலையாவதற்குறிய சாமானியசந்தையைப் போலவா வது, பிரிடிஷ் முதலாளிகளின் பணத்தை லாபத்துக்காக போட்டுவைக்கப் பந்தோபஸ்தான உறையிடமாகவாவது,

"நமது பிள்ளைகளுக்கு" உயர்ந்த உத்தியோகப்தவிகள் கிடைப்பதற்குத்தகுந்த வாசலாயாவது பாராட்டக்கூடாது. இத்தேசத்தில் தன்னுடைய கடமையை நிறைவேற்றுவதற்கென்னென்னகாரியம் இங்கிலாந்துசெய்திருக்கக்கூடுமோ அதையெல்லாம் செய்திருப்பதாக யாராவது மனதாறச் சொல்லக்கூடுமா? இந்த ஒன்றரை நூற்றுண்டாக நீங்கள் அதிகாரம் செலுத்திவந்து என்ன சாதித்தீர்கள் என்று நம்மை யாளுவோரை நான் கேட்கிறேன். தேசத்தின் பொருளாதார நிலையை அபிவிர்த்திசெய்திருக்கிறீர்களோ? சரி. அப்படியிருந்தும் ஜனங்கள் பஞ்சத்தினுல் மாய்ந்துகொண்டிருக்கிறார்களே. எங்களுக்கு உயர்ந்தபடிப்பு கொடுத்திருக்கிறீர்களோ? சரி. அப்படியாளுல், அது நீங்களே சொல்லுகிறபடி திர்ப்தியை யுண்டாக்காமல் அதிர்ப்தியை யுண்டாக்குவானேன்? ஆனுல் கீழ்த்திசையாரின் மார்க்கத்தில் காரண காரியம் என்கிற சம்மந்தம் அவ்வளவு சரியாய் பொருந்தாமலிருந்தாலும் இருக்கலாம். ஆனுல், நாங்கள் சொல்லுகிறபடி அந்தப் படிப்பினுல், என்ன கேடுகள் நேரிட்டிருந்தபோதிலும், தங்களுடைய ஆங்கிலேய சகோதரர்களுக்கு சமதியான சாமர்த்தியமும், ராஜவிஸ்வாசமும் கூடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அதினுல் உண்டாகவில்லையா? அப்படியுண்டானது வாஸ்தவமானுல், தங்களுடைய தேசத்தின் அரசாட்சியில் படித்தவகுப்பாருக்கு ஜாஸ்தியான சம்மந்தம் கொடுக்கவேண்டிய காலம் வந்துவிடவில்லையா? ஐம்பது வருஷத்துக்குள்ளாக ஜப்பான் செய்திருக்கிற சாமர்த்தியமான காரியங்களை நாங்கள் பார்க்கிறோம், பெர்ஷியா வைப்பார்க்கிறோம். சீனு வைப் பார்க்கிறோம். எங்களுக்கு ஒன்றும் செய்ய மார்க்கமின்றித் தயங்கி நிற்கிறோம். பழமையாய்ப்போன இனியவசனங்க

ளால் இனிமேல் எங்கள்பசி ஆராது. அவ்வசனங்களை உபயோகிக்கிற மிஸ்டர் மார்லியானவர் நாங்களும் சுவல்பம் பர்க் (Burke) மில் (Mill) இவர்களுடைய விசேஷமான கிரந்தங்களினின்றும் எங்கள் புல்லறிவாகிய விளக்குகளை எற்றிக்கொண்டவர்கள் தான் என்பதைச் சற்றுமறந்து விட்டார்போலும். இத்தேசத்து ஜனங்கள் எல்லாம் ராஜாங்க விஷயங்களில் ஒற்றுமையாய் ஒரேகட்டாய்ச்சேருவதற்கு மார்க்கம் சரீசானதல்ல வென்பதை நாங்களும் ஏகதேசம் அறிந்திருக்கிறோம். அந்தமார்க்கமானது மிகவும் நீண்டதாயிருக்கிறது. செல்லும் தரையானது மிகவும் கரடுமுரடாயிருக்கிறது. நாங்கள் வெகு சிரமப்பட்டு எங்கள் பாதங்களிலும், முழங்கால்களிலும், ஹிருதய பீடங்களிலும் ரத்தம் வடிய வடிய அந்தமார்க்கத்தில் செல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால் இவ்வளவு சிரமமுள்ள எங்களுடைய பிரயாணத்துக்குத் தடை செய்ய நீங்கள் உருவின கத்தியோடு வழிமறிக்காமலிருக்கும்படி உங்களை நாங்கள் மிகவும் மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

மிஸ்டர் மார்லி யானவர் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் மந்திரத்துக்குள்ளகப்பட்டுவிட்டார். அவர் நல்ல எண்ணம் கொண்டவர்தானென்று நாம் நம்ப சித்தமாயிருக்கிறோம். வாஸ்தவத்தில் "காமன்ஸ் சபை"யைப் போலவே "இந்தியாஆபிசி" லும் நல்ல எண்ணங்கள் என்னும் கற்பலகைகளைக் கீழ்த்தளவரிசையெங்கும் பரப்பிவைத்திருக்கிறது. இப்போது அரசாட்சி முறை இருக்கிற எற்பாட்டில் ஒண்டியாக யாதொரு மனுஷனாலும் நமக்கு எந்த உண்மையான உபகாரமும் செய்யமுடியாது. இந்தியா உத்தியோகஸ்தர்களிடமிருந்து "சிக்ரடெரி ஆப்

ஸ்டேட்'' சங்கதிகளை கிரஹிக்க வேண்டியதாயிருக்கிறது. அவர் ஏகதேசம் தெரிந்துகொள்கிற பொதுஜன அபிப்ராயம் இந்தியாவின் பொதுஜன அபிப்ராயமல்ல. அயோக்கியத்தனமுள்ள நிருபர்களால் எழுதி விடுக்கப்பட்டு இங்கிலீஷ் பத்திரிகைகளில் அப்படியே பெயர்த்தெழுதப்படும் அபாண்டங்களினுல் வளரும் இங்கிலீஷ் பொதுஜன அபிப்பிராயம் ஒன்றே அவர் அறிந்தது.

புதுக்கக்ஷியின் வளர்ச்சி.

இந்தியாவில் ஒரு புதிய கக்ஷிதோன்றி வளர்ந்தேறி வருவது இத்தேச அரசாட்சியின் சீர்திருத்தங்களையெல்லாம் தாமதப்படுத்தி நிறுத்திவைப்பதற்குத் தகுதியான முகாந்திரமாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் தற்சமயத்தில் இந்தக் கக்ஷியால் எவ்வித அபாயத்துக்கும் இடமில்லையென்பதை நான் சொல்லவேண்டியவனு யிருக்கிறேன். புத்தியுள்ளவர்கள்யாரும் அந்தக்கக்ஷியின் மார்க்கங்களைச் சரியென்று ஒப்புக்கொள்கிறதில்லை. துரைத்தனத்தார் மட்டும் மிதவாதிகளைத் தங்கள் பட்சமாகச் சேர்த்துக்கொண்டு, இத்தேசத்தைக் காலக்கிரமத்தில் சுவய அரசாட்சியுள்ள ஒரு சமஸ்தான மாயாவது, அவ்வித பல சமஸ்தானங்கள் கூடிய ஒரு சமூகமாயாவது செய்விக்கக் கொஞ்சம் கொஞ்சமாய் ஏற்பாடுசெய்து வருவார்களேயானுல், புதுக்கக்ஷியென்பதே இல்லாமல் ஒழிந்துவிடும்; இத்தேசத்தின் எதிர்கால ஸ்திதியைக் குறித்து விசாரத்துக்கிடமாய்த் தோன்றிவரும் பயங்கரமான நிழலும் மறைந்துவிடும். ஆனுல் ஆங்கிலேய உத்தியோக சமூகத்தாருக்கு நம்மில் சீர்திருத்தங்களைவேண்டி உண்மையாய் உழைக்

கிறபேர் இன்னுரென்றும், துரைத்தனத்தாரோடு எவ்வித சேர்க்கையும்கூடாதென்கிறபொறுப்பில்லாப் போராட்டக் காரர் இன்னுரென்றும் வித்யாசம் கண்டறியக் கூடாம லும், கண்டறியப் பிரியமில்லாமலும் இருக்கிறது. நம் மெல்லோரையும் ஒரே வகுப்பில் சேர்த்துத்தள்ளி விட் டார்கள். பிரிடிஷ் துரைத்தனத்தின் க்ஷேமத்துக்கும் உறுதிக்கும் அவசியமாகக் கருதித் தங்களுடைய தேசத் தின் அரசாட்சியில் தங்களுக்கு அதிகமான பங்கு இருக் கும்படி இடந்தரவேணுமாய்க் கேட்பவர்களையும், அன் னிய தேசத்தான் என்கிற பகைவனை சமுத்திரத்தைப் பார்த்து ஓடும்படி இத்தேசத்தைவிட்டுத் துறத்திவிட வேணுமென்கிற விஷமப் போர்வழியையும் ஒன்றுபோல நினைக்கிறுர்கள். கிரமவழிகளை விட்டுவிலகாமல் ஓரியாடி வந்தால் தாங்கள் நியாயமாகக்கோரும் எல்லாவற்றையும் தங்களை ஆளுவோரால் காலக்கிரமத்தில் அடையலாமென் கிற நம்பிக்கைகொண்டு தங்கள் தேசத்தார்களை பொறு மையுடனிருக்கும்படி புத்தி சொல்கிறவர்களையும், இங்கி லாண்டினுல் யாதொரு நன்மையும் உண்டாகமாட்டா தென்றும், நமக்குள்ளே கட்டாக இருக்கத் தீர்மானித்து விடுவோமானுல் ஆங்கிலேயர் இத்தேசத்தைவிட்டு வெளி யே கிளம்பவேண்டியதுதானென்றும் சொல்லுகிறவர்களை யும் ஒருப்போல பாவிக்கிறுர்கள். இப்படிச் செய்வது விபரீதமான பிசகல்லவா? படித்தவகுப்பார் அனைவரும் ராஜவிரோதிகள் என்று ஒருமிக்க தூறலாமா? இது ராஜ தந்திரத்தில் குற்றஞ்செய்வதைக்காட்டிலும் குரூரமான பிசகல்லவா? இவ்வாறு ஏகமாய்த் தூறுவதினுல், சில சம யங்களில் அவ்வாறே சம்பவித்துவிடக் கூடியதாயு மிருக் கிறது.

இங்கிலாண்டின் விரோதிகள் யார்?

மிஸ்டர் மார்லி சமீபத்தில் "இங்கிலாந்தின் விரோதிகளைப்பற்றிப்" பேசினார். ஆனால் இந்த விரோதிகள் யார்? இந்தியாவின் விவேகத்துக்குச்சாட்சியான படித்தவகுப்பார் அல்லவேயல்ல. இங்கிலாந்தின் உண்மையானவிரோதிகள் யாரென்றால்:—இத்தேசத்து ஜனங்கள்பேரில் தங்களுடைய பகையையும் வெறுப்பையும் சமயம்வாய்த்தபோதெல்லாம் தப்பாமல் காட்டிவருகிற ஆங்கிலேயர்கள் யாரோ அவர்களே. ஆளும் வகுப்போரென்கிற மிதமிஞ்சிய செருக்கினால் இத்தேசத்தவர்களை சிநேகத்துக்கும் அன்னியோன்னிய சகவாசத்துக்கும் தகாத ஒரு கீழ் ஜாதியாரைப்போலவே அவர்கள் நடத்துகிறார்கள். இவ்வாறு பாராட்டுவதினால் விளையக்கூடிய தீங்கை லார்டு சாலிஸ்பரி என்னும் கனவான் நன்குணர்ந்து, அவர்இந்தியாவின் "சிக்ரெடெரி ஆப் ஸ்டேட்" டாய் இருந்தபோது, முப்பது வருஷத்துக்கு முன்னமே "கூபர்ஸ் ஹில் காலேஜ்" (Cooper's Hill College) வித்தியார்த்திகளைப் பார்த்து பின்வரும் விசேஷமான எச்சரிக்கை செய்திருக்கிறார்.

"ஆளுவோர் ஆளப்படுவோர் என்னும் இருதிறத்தாருக்குள் ஒருவருக்கொருவர் தாழ்ச்சியென்பதாயாவது, ஒருவரால் மற்றொருவர் அவமதிப்படைந்தாவது இருக்குமானால் அந்த துரைத்தனம் ஸ்திரமாயிராது. இத்தேசத்திலிருந்து இந்தியாவை ஆளுவதற்காகச் செல்லுவோருக்கெல்லாம் நான் முக்கியமாகச் செய்யக்கோரும் எச்சரிக்கையாவது என்னவென்றால்:—நீங்கள் தான் உங்களுக்கு அப்படி விருப்பமிருந்தால் இங்கிலாண்டின் விரோதி

களாகக்கூடுமே தவிர வேறில்லை. இங்கிலாந்தின் எதிர்கால அரசாட்சிக்குப்பலமான ஆபத்துண்டாக்க உங்களுக்குப் பிரியமிருந்தால், நீங்கள் செய்யக்கூடுமே தவிர மற்றவர்கள் யாரும் செய்யமுடியாது.” இந்த எச்சரிக்கை கொடுத்த தற்கிப்பால் இருவகுப்பாருக்குள்ளும் ஒற்றுணர்ச்சி இன்னும் கெடாய்ப்போய் விபரீதமான கலவரத்துக்கிடந்தரத்தக்க ஜாதிவைரம் உண்டாகத் துவக்கியிருக்கிறது. அன்றைக்கு மிஸ்டர் மார்லி சொன்னது போலே அகங்காரமும் உதாசீனமுமுள்ள நடத்தையானது இந்தியாவில் ராஜதந்திரக் குற்றமாகிறது.

இங்கிலாந்தின் உண்மையான விரோதிகள் யாரென்றால்:—இந்தியாவின் விஷயத்தில் இங்கிலாந்தின் மேன்மையான கடமையைப் பற்றி பேசுகிறதுமட்டுமேயன்றி அந்தக்கடமையை நிறைவேற்றக் கூடியவர்கள் அந்நிய தேசத்தாராகிய ஆங்கிலேய உத்தியோகக் கூட்டத்தாரே யென்றும், இத்தேசத்து ஜனங்களின் க்ஷேமத்தையுத் தேசித்தே அவர்களுக்கு இத்தேசத்தின் அரசாட்சியில் யாதொருவிசேஷமான சம்பந்தமும் கூடாதென்றும் நம்புகிறவர்களும் நம்புகிறதாய் நடிக்கிறவர்களும் யாரோ அவர்கள்தான் உண்மையான விரோதிகள். தர்ம சாஸ்திரப் பிரவிர்த்தகர்களுக்குள்ளே மிகவும் நயமும், பெருமையும், உற்சாகமும், அமரிக்கையும் வாய்ந்த மிஸ்டர் மார்லி சொல்லுகிறது போலே, “மற்றவர்களுக்குத் தீங்கு செய்கிறவர்களெல்லாம் அவர்களுக்கு நன்மை செய்வது தான் தங்களுடைய எண்ணம் என்று சமாதானம் சொல்கிற வழக்கம்.”

இங்கிலாந்தின் உண்மையான விரோதிகள் யாரென்னில், சீர்திருத்தம் என்கிற பிரஸ்தாபம் வரும்போதெல்

லாம் முகங்கோணாத பல பொய்களைச் சொல்லிப் பத்திரிகைகளில் ஜாதிவிரோதத்தை யார் கிளப்பிவிடுகிறார்களோ அவர்கள்தான் பிரிடிஷ் அரசாட்சிக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடியவர்கள். இப்பேர்ப்பட்டவர்களின் நடத்தையைப்பற்றிப்பேசப்புகுந்தால் என்னசொல்லவேண்டி வருமோஎன்று பின்னடைகிறேன். இப்பேர்க்கொத்த விசாரத்துக்கிடமான சமயத்தில் "டெயிலிமெயில்" (Daily Mail) என்னும் ஆங்கிலப் பத்திரிகைக்கு இந்தியாவின் சமாசாரங்களைத் தெரிவிப்பதற்கென்று அபரிமிதமான சம்பளத்தின்பேரில் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு நிருபரைப் பொறுக்கி ஏற்படுத்தினதைப்பற்றி நாம் நிரம்பவும் மனவருத்தமடைகிறோம். அந்தப்பத்திரிகையின் சாமர்த்தியமான செய்கைகளைப்பற்றி— ஆபிரிகா, சீனா, இந்தியா, இத்தேசங்களிலும், உலகத்தின் எல்லா பாகங்களிலும் யாருக்குத்தான் தெரியாது? பாபு சுரேந்திரநாத் பானர்ஜியின் "மகுடாபிஷேகக்" கதையும், கீழ்பங்காளத்தில் "நாஷனல் வாலண்டியர்களின்" (National Volunteers) கொடூரச் செயல்களும், "பாரிஸால் பீதி" (Barisal scare) யும் வேறொரு இந்தியக்கலக உற்பத்தியும், கடைசியாக, மிஸ்டர் கீர்ஹார்டி (Mr. Keir Hardie) யின் ராஜத்துரோகமான போதனைகளும் யாருக்குத்தான் ஞாபகமிராது? முற்றிலும் உதவியற்றுநொந்து மெலிந்துகிடக்கிற ஜனங்களின் நம்பிக்கையைச் சம்பாதிப்பதற்கு இது வழியேயல்ல.

புதிய உணர்ச்சி.

நாம் அசாத்தியமான காரியம் எதையும் வேண்டிக்கூக்குரலிடவில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். நாம் கோருவதெல்லாம், மற்றதேசங்களுக்குள்ளே இத்

தேசமும் அதன் நியாயமான ஸ்தானத்தை இங்கிலாந்தின் ஆதிபத்தியத்தின் கீழ் வகிக்கவேணுமென்பதே தவிர வேறில்லை. நாம் பேருக்குமட்டுமல்லாமல் உண்மையிலும் பிரிடிஷ் ராஜ்யத்தின் மக்களாக விரும்புகிறோம். நம்முடைய ஆவல் எல்லாம் இங்கிலாண்டோடுகூட இன்னம் நெருங்கிச் சேரவேணுமென்றும், இப்போது நமக்கு இடமில்லாத பெரிய பிரிடிஷ்ராஜ்யத்தில் நாமும் ஐக்கியப்படவேணுமென்றும் தான் இருக்கிறது. நாம் எந்த நோக்கத்துக்காக சிரமப்படுகிறோமோ அது பிரிடிஷ் ராஜ்யத்திற்குள்பட்ட சுவயாதிகாரம் நமக்கு வேணுமென்பதே யொழிய முற்றிலும் சுவாதீனம் வேணுமென்பதல்ல. இந்த உத்தேசம் நிறைவேறுவதற்கு இங்கிலாண்டு நமக்கு உதவி செய்யுமேயானால் அத்தேசத்தின் கீர்த்தியானது என்றென்றும் பிரகாசமாய் ஒளிவீசி நிற்கும்.

இந்தியாவில் ஒரு புதிய உணர்ச்சி தோன்றி தற்காலத்துக்கு உசிதமல்லாத இந்திய அரசாட்சி முறையைச் சீர்திருத்தும்படி கோரப்படுகிறது. மேற்றிசையின் கருத்துகள் நூல்கள், இவைகளில் பயின்றுவரும் ஜனங்களுக்குத்தப்பாமல் உண்டாக்கக்கூடிய புதிய ஆவல்களை திர்ப்தி செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. இங்கிலாண்டுக்கு மேலான கீர்த்திக்கிடமுள்ள காலமென்பதாய், மெகாலே (Macaulay) எதிர்பார்த்த காலமானது இப்போது வந்துவிட்டது. புதிய எண்ணங்களும் புதிய நோக்கங்களும் இத்தேசத்தில் எங்கும் பரவி விர்த்தியாய் விட்டபடியால், இந்தியர்கள் தங்களுடையசொந்த ராஜ்யகாரியங்களை நிர்வகிப்பதில் தங்களுக்கு முன்னிலும் அதிகமான பொறுப் பிருக்கவேணுமென்று கோருகிறார்கள். இக்கோரிக்கையை, இத்தேசத்து ஆங்கிலேய அதிகா

ரிகள் என்னும் கூட்டத்தார் தங்களுடைய சுதந்தரங்களுக்கு கொஞ்சமேனும் குறைவுண்டாகக்கூடாதென்கிற பெருமையினால் ஆட்சேபித்துப் போராடுகிறார்கள். இத்தேசத்து ஜனங்கள் மிகவும் பணிவுள்ளவர்களென்றும், சட்டத்துக்கு கீழ்ப்படிந்து நடப்பவர்களென்றும், யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இருந்தும் இத்தேசத்தின் பல பாகங்களில் ஜனங்களுக்குள்ளே இப்போது கொந்தளிப்புண்டாயிருக்கிறது. இதற்குக் காரணம், தங்களுடைய சொந்தக்காரியங்களை நிர்வாகம் செய்வதில் தங்களுக்கு அதிகமான இடம் தரவேணுமாய் ஜனங்கள் கோருவதைத் தடைசெய்வதுமன்றி, இப்போதுசிலவருஷ காலமாய் துரைத்தனத்தார் பிடிவாதமாய்ச் செய்துவரும் பின்னேக்கிய ராஜரீகமுறையும், ஜனங்களுடைய நியாயமான கோரிக்கைகள் விஷயமாயும் பொது ஜன அபிப்ராய விஷயமாயும் துரைத்தனத்தாருக்குள்ள அலட்சியமும், இதற்குக்காரணம். இந்தியாவில் இப்போது ராஜாங்கவிஷயமாய்த்துடித்துக்கொண்டிருக்கிற சிரத்தையை அதிகாரிகள் பட்சமாய் அங்கீகரித்து நடக்கவேண்டியதாயிருக்க, துரைத்தனத்தார் அவ்விதமான பிரயத்தனம் யாதொன்றும் இதுவரையில் செய்ய முற்படக்காணேம். இதினால் எங்கேபார்த்தாலும் அதிருப்தி மேலிட்டிருக்கிறது. ஆங்கிலேய அதிகாரக் கூட்டத்தார் கூடியவரையில் தங்களுக்குள்ளேபுத்திசாலிகள் தான், சந்தேகமில்லை. அதிருப்தியானது நாளுக்குநாள் பெருகி அதினின்றும் ராஜத்துவேஷமானசெய்கைகள் உண்டாகிறவரையில் சீர்திருத்தங்களைச்செய்யாமலே காலம் போக்கிவிட்டு, பிறகு கொடுமையான ஏற்பாடுகளைச்செய்வதற்கும் சுவயாதிகாரத்தை பரீட்சார்த்தமாய் ஏற்படுத்துவதற்குங்கூட குறிப்பில்லாமல்

தவணையோட்டுவதற்கும் மேற்படி ராஜநிந்தனையான செய்கைகளை ஒரு சாக்காக எடுத்துக்காட்டுகிறார்கள். இவ்வாறேதான் ஸ்பெயின்தேசத்து மல்லக ஜெட்டிகள் முரட்டு எருதுகளோடு யுத்தம் செய்து காட்டும் போது, அவைகளை அங்குமிங்கும் அலைக்கழித்து அவைகளுக்குப்பைத்திய முண்டாகும்படிச் செய்துவிட்டுப் பிறகு அவைகள் கழுத்தில் தங்கள்கத்தியைச் செலுத்துகிறவழக்கம்.

தற்சமயம் முக்யமாய்வேண்டியது அனுதாபம் (அதாவது ஜனங்களிடத்தில் அன்பு). சரீரபலத்தை முன்னிட்ட காரியங்கள்வரவரக்குறைந்துபலமான மனோதிடம், விசாலமானபுத்தி, அன்புள்ளஹ்ருதயம் இவைகளோடு கூடிய காரியங்கள் வரவர அதிகரிக்கவேணுமென்று விரும்புகிறோம். சமீபத்தில் பிரதம மந்திரி சொன்னது போலே, இந்திய அரசாட்சியானது இந்திய ஜனங்களோடு மேன்மேலும் நெருங்கியிருக்கும்படிச் செய்யவேண்டும். அப்படிச் செய்ய உண்மையாயும், தைரியமாயும், பிடிவாதமாயும் முன்வந்தால்தான் இங்கிலாண்டானது, எத்தேசத்துக்கும் கிடைக்காமல் தனக்குக்கிடைத்த மகத்தான இந்தப்பொறுப்பை நிறைவேற்றும். இந்தியஜனங்களிடத்தில் அன்பு பாராட்டுவதற்கும் இதைக்காட்டிலும் ஏற்றசமயம் இருந்ததில்லை. இந்தியாவானது உண்மையில் இப்போது பலவிதமான துக்கங்களுக்குள்ளாய், பிளேக்கினாலும் பஞ்சத்தினாலும் மிகவும் நொந்து போயிருக்கிறது.

சீர்திருத்தங்கள்.

கடைசி இந்தியன்பட்ஜெட் வாதத்தின்போது மிஸ்டர் மார்லி தன்னுடையபேச்சின் முடிவில் சூசனையாய்க் காட்டிய சீர் திருத்தங்களைப்பற்றி இவ்விடத்தில் சற்றே

பேசவேண்டி வருகிறது. இவைகள் என்னவெனில், அதிகாரங்களெல்லாம் மிதமிஞ்சி ஒருகையில் போய்ச்சேர்ந்துவிடக்கூடியதாயிருக்கிற தற்கால ஏற்பாட்டின் கெடுதிகளைப்பற்றிவிசாரிக்கும் பொருட்டு நியமிக்கப்படலான ராயல்கமிஷன் (Royal Commission) ஒன்று; பிரபலஸ்தர்கள் கூடிய ஆலோசனை சபை ஏற்படுத்தினது ஒன்று; சட்ட சபைகளை விசாலப்படுத்துவது ஒன்று; வைசிராயின் சபையில் பட்ஜெட்டைப்பற்றி இன்னும் விஸ்தாரமாய் எடுத்துப்பேச இடம் கொடுப்பது ஒன்று; லண்டனில் உள்ள சிக்ரடெரி ஆப் ஸ்டேட்டின்சபைக்கு இரண்டு இந்தியர்களைப் பொறுக்கி நியமித்தது ஒன்று.

மேற்சொன்ன ராயல்கமிஷனுடைய வேலையைப்பற்றி எவ்வித அபிப்ராயமும் தெரிவிக்க இன்னும் சாவகாசம் போதாது. ஆயினும், மேற்படி கமிஷனால், முனிசபல்போர்டுகளிலும், லோகல் போர்டுகளிலும், மெம்பர்களை ஜனங்கள் தங்களுக்குள்ளாகவே பொறுக்கி எடுக்கிற ஏற்பாடு இன்னும் பலப்படுமென்றும், அங்கங்கே ஸ்தல அரசாட்சி வேலையில் ஜில்லா அதிகாரியோடுகூட ஜனங்களுடைய பிரதிநிதிகளும் சேர்க்கப்படுவார்களென்றும் நம்பவேறது விருக்கிறது. கமிஷன்களில் அனேகம்பேருக்கு நம்பிக்கைகிடையாதென்பது எனக்குத் தெரிந்த விஷயம் ஆனால், லார்டு கர்ஸனுக்கு மட்டும் அவ்வித அவநம்பிக்கை இருந்ததில்லை. ஆனபோதிலும், மேற்படி கமிஷனனது மாமூல் வழக்கத்துக்கு ஒரு விலக்காக ஏற்படுமென்றும், அதினால் அரசாட்சியில் பலமேலான நன்மைகள் விளையுமென்றும் நாம் நம்புகிறோம். ஏனென்றால், ஷை கமிஷனுக்கு கொடுத்திருக்கிற வேலையின் நிபந்தனைகள் அவ்வளவு விசாலமாய் இருக்கின்றன. முனிசிபல் போர்டு

களையும், லோகல் போர்டுகளையும் பலப்படுத்தி அபிவிர்த்திசெய்து ஸ்தல சுவய அரசாட்சியை விஸ்தரிக்கும் பொருட்டும் ஜில்லா உத்யோகர்தர்களின் அதிகாரங்களை பிரத்யேகமாய் பிரித்துவிடும்பொருட்டும் அவசியமான பிரேரேபணைகளைச் செய்யும்படி மேற்படி கமிஷன்கோரப்பட்டிருக்கிறது. இந்தியா கவர்ண்மெண்டு, மாகாண கவர்ன்மெண்டுகள் இவர்களுக்குள்ளே எவ்வாறு அதிகாரப் பிரிவினைசெய்கிறதென்கிற விஷயம் நாம் அவ்வளவு கவனிக்கத் தக்கதல்ல. ஆனால் முனிசிபாலிட்டிகளிலும், டிஸ்டிரிக்டு, லோகல்போர்டுகளிலும் ஸ்தலவிஷயங்களில் நமது ஆளுகை எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கிறதென்பதும், ஒரு ஜில்லாவை ஆளுகிற "கலெக்ட்டர் அண்டு ஜில்லா மாஜிஸ்திரேட்டு" எவ்வளவு தூரம் அந்த ஜில்லா பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்துக்கு இணங்கி நடக்கிறார் என்பதும் நமக்கு அத்தியாவசியமான விஷயங்கள். மேற்படி கமிஷனுடையவேலைகளின் முடிவுஎன்னவாகுமென்று இப்போது நாம் சரியாய் நிதானித்துச் சொல்லக்கூடாவிட்டாலும், நம்மில் முக்யஸ்தராயுள்ள பேர் முன்வந்துமேற்படி வேலைகளை பிரயோசனமுள்ளவைகளாகச் செய்யவேண்டியதவசியம். அப்படிச் செய்வதற்கு நம்மில் பலபேர் மேற்படி கமிஷன் முன்பாக சாக்ஷி சொல்வதற்குத் தயாராய் முன்வரவேண்டும். ஆனால் அப்படி சாக்ஷிசொல்ல முன்வருகிறபேர் விஷயஅம்சங்களைப் பற்றி நன்ராய் அறிந்தவர்களாயும், ஸ்தலசுவயஅரசாட்சியையும் ஜில்லா ஆளுகையையும் பற்றி கொஞ்சம் நேரான அனுபோகமுள்ளவர்களாயும் இருக்கத்தான் வேணும். மேற்படி கமிஷனை அதன்பாட்டில்விட்டுவிட்டு அதன்ஜோலிக்குப் போகாமலிருந்து விடவேணுமென்று இத்தேசத்

தில் பொதுவாய் உண்டாயிருக்கிற எண்ணம் மிகவும் விசனிக்கத்தக்கது. அதினால் நமக்குத்தான் கெடுதியுண்டாகும். முனிசிபாலிட்டிகளிலும், டிஸ்டிரிக்டு, லோகல் போர்டுகளிலும் முற்றிலும், அல்லது ஏறக்குறைய முற்றிலும், ஜனங்களே மெம்பர்களைப் பொறுக்கி எடுக்கிற ஏற்பாடு உண்டாம்படிக்கு நாம் போராடவேண்டியது. பின்னும், அந்த போர்டுகளுக்குச் செலவுசெய்ய இப்போதிருப்பதைக் காட்டிலும் தாராளமான சுவதந்திரம் கொடுபடவேண்டும் என்றும் நாம் போராடவேண்டும். தவிர, இங்கிலாந்தில் லோகல் கவர்ன்மெண்டு போர்டு (Local Government Board) எப்படியோ அந்தவிதமாய் இங்கேயும் லோகல் போர்டுகளின்பேரில் துரைத்தனத்தார் ஆளுகை இருக்கவேணுமென்றும், அங்கே எப்படியோ அப்படியே இங்கும் துரைத்தனத்தார் ஆளுகை லோகல் போர்டுகளின் வேலைத்திறமையையும், அவர்கள் நடவடிக்கைகளின் பரிசுத்தத்தையும் மட்டும் உத்தேசித்துச் செலுத்தப்படவேண்டுமென்றும், இவ்வித ஆளுகைக் குட்பட்டிருப்பதல்லாமல் மற்றப்படி தங்களுடைய காரியங்களை நிர்வகிப்பதிலும், தங்களுடைய பண்டுகளைச் செலவு செய்வதிலும் லோகல்போர்டுகள் தங்களிஷ்டப்படி நடந்து கொள்ளக்கூடியவர்களாயிருக்க வேணுமென்று நாம் போராடவேண்டியது. அப்படி செய்தால்தான் ஸ்தல சுவயஅரசாட்சியில் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியுண்டாகும். அப்படிக்கில்லாமல் அவர்களுடைய காரியங்களில் அதிகாரிகள் இப்போது செய்துவருகிறபடி ஓயாமல் பிரவேசித்து தொந்திரவு உண்டாக்கி வருவார்களானால் ஸ்தல சுவய அரசாட்சி என்பது ஒருபோதும் தழைக்கமாட்டாது. ஜில்லா ஆளுகையிலும், கலெக்ட்டருக்கு கவர்ன்

மென்டு சிக்ரடெரி ஆபீஸில் இப்போது ஏற்பட்டிருக்கிற மிதமிஞ்சிய தனிக்கையை நீக்கிவிடவேண்டியதவசியம் என்பதை யாரும் அங்கீகரிப்பார்கள். அதற்குப் பதிலாய் ஒவ்வொரு ஜில்லாத்தலைவருக்கும் அவரோடு உதவியாய் வேலை செய்யும் பொருட்டு ஒரு "போர்டு" ஏற்படவேண்டியது. அதன் மெம்பர்களில் சிலரை துரைத்தனத்தாரே நியமித்தும், சிலரை ஜனங்கள் பொறுக்கி எடுத்தும் ஏற்படுத்தலாம். இந்தபோர்டு ஆரம்பத்தில்முற்றிலும், அல்லது ஏறக்குறைய முற்றிலும் ஆலோசனைக் குரியதாகமட்டும் இருக்கலாம். ஆனால் வரவர அதற்குக் குறிப்பான அதிகாரங்கள் ஏற்பட்டு அவைகள் காலக்கிரமத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் விஸ்தரிக்கப்படவேண்டும். மிகவும் அந்தரங்கமானவைகள் என்று பாராட்டத்தக்க விஷயங்கள் நீங்கலாக, ஜில்லாவின் மற்ற எல்லாமுக்யமான ராஜாங்க காரியங்களும் அந்தபோர்டின் ஆலோசனைக்கு உள்ளாகவேண்டும். போர்டார் சொல்லும் ஆலோசனையைக்கலெக்ட்டர் எழுத்து மூலமான முகாந்திரம் காட்டாமல் தள்ளிவிடக்கூடாது. இவ்விதமான ஏற்பாடு அனுபவசித்தமாகக் கூடியதே தவிர வேறில்லை. அப்படியாமானால் தீர்வையிலாகா, காட்டிலாகா, பஞ்சம், பிளேக் நோய் இவைகளைக்குறித்த திட்டங்களிலும் இவைபோன்ற ஜில்லா ஆளுகைக்கு சம்பந்தமுள்ள ஏறக்குறைய எல்லா முக்யமான விஷயங்களிலும் போர்டார் தங்களுடைய விசேஷ ஆளுகையைச்செலுத்தும்படியான அதிகாரம் அவர்களுக்கு ஏற்படவேண்டியது.

மிஸ்டர் மார்லியால் பிரஸ்தாபிக்கப்பட்ட மற்ற அடுத்த மூன்று சீர்திருத்தங்களை "சிம்லாஸ்கீம்" (Simla Scheme) என்ற பெயரால் இத்தேசத்தில் சொல்லப்படுகி

றது. அந்தச் சீர் திருத்தங்களைப் பற்றியும் மிகவும் சுருக்கமாக இங்கே பேசவிரும்புகிறேன். மன்னர்கள் சேர்ந்த ஆலோசனை சபையைப்பற்றிய யோசனை புதிதல்ல. 1877-ம் வருஷத்தில் லிட்டன் பிரபுவால் இதேமாதிரி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் மிஸ்டர் மார்லி சொல்லுகிறபடி, அது முற்றிலும் நிஷ்பலமாய்விட்டது. ஆகையால் இப்போது செய்யப்பட்டிருக்கிற யோசனையை விஸ்தாரமாய் மாற்றினாலல்லாமல் அதன் முடிவும் அம்மாதிரியே ஆகும் என்று அஞ்சுகிறேன். ஏனெனில் மேற்படி சபையானது தேச நன்மைக்கு விரோதமான சபையாகவே முடியும். அது இந்தியாவில் ஒரு லார்ட்ஸ் சபை (Indian House of Lords) யாகுமானாலும், இங்கிலீஷ் அவுஸ் ஆப் லார்ட்ஸ் (English House of Lords) க்கும் அதற்கும் வித்தியாசமிருக்கும். அதாவது "இங்கிலீஷ் அவுஸ் ஆப் லார்ட்ஸில்" பால்யத்திலிருந்தே ராஜாங்க விஷயங்களில் சிக்ஷைப்பட்டவர்களும், பொதுஜன அபிப்ராயத்தின்போக்கில் விசேஷமாய்க்கலந்து நிற்பவர்களும் ஆகிய அநேக சாமர்த்திய சாலிகளும் சதுரர்களும் இருக்கிறார்கள். எப்படியிருந்தபோதிலும், இங்கே ஏற்படுத்த உத்தேசிக்கிற சபையின் அங்கங்களைச்சரியாக அமைத்து அதன் வேலைகளையும் சற்று விசாலப்படுத்துவார்களானால் அந்த சபை பிரயோஜன முள்ளதாயிருக்கும் என்பதை நான்மறுக்கவில்லை. ஆனால் இப்போதிருக்கிற ஸ்திதியில் மேற்சொன்ன யோசனையானது பல ஆக்ஷேபணைகளுக்கிடமுள்ளதாயிருக்கிறது. முதலாவது, ஆளும் குறுநில மன்னர்களை அவர்களுடைய ராஜ்யங்களின் க்ஷேமத்துக்குரிய காரியங்களைப் பற்றியாவது, அல்லது பிரிடிஷ் ஆதிபத்யத்துக்கும் அவர்களுக்கு முள்ள

சம்பந்தங்களைப் பற்றியாவது, விசாரிக்கத்தக்க ஒரு சபைக்கு மெம்பர்களாயிருக்கும்படி கோரலாமே தவிர, பிரிடிஷ் இந்தியாவை மட்டும் பொறுத்த விஷயங்களைப் பற்றிய ஆலோசனை சபைக்கு பிரிடிஷ் இந்தியர்களை மட்டும் மெம்பர்களாகப்பொறுக்க வேண்டிய தவசியம். ஏனென்றால், இவ்விஷயங்களைப்பற்றி மேற்கண்ட மன்னர்கள் அவ்வளவாகப் பிரயோசனகரமான ஆலோசனை ஏதும் சொல்ல முடியாது.

ஏற்படுத்த உத்தேசிக்கிற ஆலோசனை சபைக்கு மற்றொரு ஆக்ஷேபனையும் இருக்கிறது. அதாவது, இவ்வாலோசனை சபையாரை ஒருமித்து ஆலோசனைகேட்காமல் தனித் தனியாய்ப் பிரித்துக் கேட்கிறதொன்று. மேலும், ஜனங்களுக்கு நம்பிக்கை வருவிக்கும்பொருட்டும், ஏகதேசமாயாவது பொது ஜனங்களின் பிரதிநிதித்வம் ஏற்படும் பொருட்டும், ஷை சபையின் மெம்பர்களுள் ஒருபாகஸ்தரையாவது பல மாகாணங்களிலிருந்தும் பொறுக்கியெடுக்கவேண்டியது அத்தியாவசியம். மேற்படி சபையும் குறித்தகாலங்களில் கூட வேண்டியது. மேலும் உத்தேசிக்கிற பிரேரபணைகள் மெம்பர்களில் பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப்படாவிட்டால் அவைகளை அடியோடே விட்டுவிட வேண்டும்; அல்லது அப்படிப்பட்ட விஷயங்களை மறுபடியும் பின்னால் யோசிப்பதற்காகத் தள்ளிவைக்கவாவது வேண்டும். அபிப்ராயங்களைச் சொல்லும் படியாகக் கோரி, பின்னர் அவைகளையசட்டை செய்வது நியாயமல்ல.

வைசிராயின் சட்ட சபையின் சீர்திருத்தத்தைப் பற்றிய யோசனையும் பின்நோக்கிச் சொல்லும் வழியாகவே காணப்படுகிறது. அப்படிக்கில்லாவிடினுங்கூட அது பலவிசேஷமான ஆக்ஷேபனைகளுக்கிடமுள்ளதாயி

ருக்கிறது. இப்போது மாகாணசபைகளிலிருந்தும் 54 பேரைப் பொறுக்கி எடுப்பதற்குப் பதிலாக 7 பேரைமட்டும் பொறுக்கி எடுக்கிற அந்த யோசனையை சகலமான பேரும் கண்டிக்கிறார்கள். அது படித்த வகுப்பாருடைய செல்வாக்கை வெகுவாய்க் குறைத்துவிடக்கூடியது. புத்தி நுட்பக்காரர்கள், லாயர்மார்கள், ஸ்கூல்வாத்தியார்கள் என்பதாய் என்ன இழிவாகப் பேசினபோதிலும் அவர்கள் தான் பொதுஜன அபிப்பிராயத்துக்கு உண்மையான தலைவர்களாயிருக்கிறார்கள். அவநம்பிக்கையினால் அவநம்பிக்கையானது உண்டாகிறது. ஆகையால் கிரீக் (Greece) தேசத்தாருடைய பிரியமான நன் கொடைகளில் டிராய் (Troy) நகரத்தார் எப்படி அவநம்பிக்கைப்பட்டார்களோ அப்படி துரைத்தனத்தாருடைய யோசனைகளைப் பற்றி என்னுடைய தேசத்தார் அவநம்பிக்கைப் படுவதில் துரைத்தனத்தார் ஆச்சரியப்பட நியாயமில்லை.

மேற்படி சபையின் வேலைகளையும் விசாலப்படுத்தி பட்ஜெட்டின்பேரில் நடக்கும் வாதத்தை வித்யார்த்திகளின் வெறும் அப்பியாசவாதம்போல் பாவிக்காமல், உண்மையான சிரத்தையோடு நடத்தவேண்டிய தவசியம். இப்படிச்செய்யவேணுமானால், பட்ஜெட்டின் யாதாமொரு அம்சத்தைப் பற்றி வித்யாசமான அபிப்ராயங்கள் நேரும் போது, அவ்வித அபிப்ராய பேதங்களை நன்றாய் அறிய பிரத்யேகமான வோட்டுகள் எடுப்பிக்கச் செய்ய வேண்டும். தவிர அரசாட்சி முறையைப் பற்றிய எந்தெந்த விஷயங்களில் பொது ஜனங்களுக்குள் ஆத்திரமான உணர்ச்சி உண்டாயிருக்குமோ அவைகளைப்பற்றிச் சிலஅவசியமான வரையறைக்குட்பட்டு மேற்படி சபையின் மெம்பர்கள் தாராளமாய் எடுத்துப்பேச அவகாசம் தரவேண்டும்.

மாகாண சபைகளையும் அந்தமாதிரி விசாலப்படுத்தி ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஒரு மெம்பரைப்பொறுக்கி அனுப்ப இடந்தரவேண்டும். அரசாட்சி முறையில் மாகாணகவர்னர்களுக்கு யோசனை சொல்வதற்காக ஏற்படும் ஆலோசனை போர்டுகளையும், வைசிராயின் பிரபலஸ்தர்களுடைய சபை எப்படியோ அந்தமாதிரியாக அமைத்து ஏற்படுத்தவேண்டும். மாகாண அரசாட்சிக்குரிய எல்லாமுக்கியமான காரியங்களிலும் யாதொரு நடவடிக்கையும் நடத்துவதற்குமுன்னுல், ஷெ போர்டுகளின் அபிப்பிராயத்தைக் கேட்டே நடத்தவேண்டும். இப்படிச்செய்தால்மட்டும் அரசாட்சிமுறைக்கும் ஜனங்களுக்கும்சம்பந்தம் ஏற்படும்.

சீர்திருத்தத்திற்காகச்செய்யப்பட்டிருக்கும் மேற்படி பிரேரேபணைகளை நீங்கள் ஜாகிரதையாக யோசிக்கவேணுமாய்க்கோருகிறேன். நீங்கள் யோசித்துச்செய்யும் எந்த ஆலோசனைகளையும் துரைத்தனத்தார் கிரமப்படி கவனித்து நடம்பார்களென்பதில் சந்தேகமில்லை. அந்த பிரேரேபணைகள் பொதுஜனங்களின் அபிப்பிராயங்களை வேண்டியே வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளைப் பரிஷ்காரப்படுத்துவதற்காக என்னென்ன சேர்க்கைகள் மாறுதல்கள் செய்யவேண்டியதாய் நமக்குப்படுகின்றனவோ அவைகளை எடுத்துச்சொல்லவேண்டியது நமது கடமையாகிறது. மேற்படி பிரேரேபணைகள் வேண்டிய அளவு நமக்குத் திர்ப்திகரமாயில்லையென்று நாம் கோபத்தினல் அவைகளைப் பாராட்டாமல் விடுவது விவேகமல்ல. ஆனல், இப்போது ஜனங்களுடைய மனோபாவம் இருக்கிற ஸ்திதியில், பிரிடிஷ் குடிகளை விசாரணையின்றி தேசப்பிரஷ்டம் செய்ததற்கும், பங்காளப் பிரிவினைக்கும் ஒரு

ஆறுதலாகச் செய்யப்பட்ட மேற்படி அரைகுறையான சமாதானங்களினால் என்னுடைய தேசத்தார் திர்ப்தியடையாவிட்டால் அதைக்குறித்து துரைத்தனத்தார் ஆச்சரிப்படவும் நியாயமில்லை.

மிஸ்டர் மார்லியின் 4-வது பிரேரேபணையைப்பற்றி மட்டும் பேசவேண்டியிருக்கிறது. அது எற்கெனவே நடவடிக்கைக்கு வந்துவிட்டது. இது நமக்கு மிகவும் சாதகமான காரியம்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதன் பிரயோஜனகரம், மெம்பர்களை ஜாக்ரதையாகப் பொறுக்கி எடுப்பதைப் பொறுத்திருக்கிறது. இப்போது செய்யப்பட்டிருக்கிற நியமனங்களைப்பற்றி ஜனங்களுக்கு அவ்வளவாகத்திர்ப்தியில்லை. ஜனங்களுக்குத் திர்ப்தியுண்டாக வேண்டுமானால் மெம்பர்களை நியமிப்பதில் ஜனங்களுக்கு ஒருவித சுதந்தரம் இருக்கவேணும். ஆகையால் இனிமேல் ஒரு இந்தியனை நியமிக்க வேண்டிவருகிறபோதெல்லாம், எல்லா சட்டசபைகளின் பிரதிநிதி (Elected) மெம்பர்களுங்கூடி மூன்று பேர்களைப் பொறுக்கியெடுத்து "சிக்ரடெரி ஆப் ஸ்டேட்"டுக்கு அனுப்பும்படிக்கும், அந்தமூவரில் ஒருவரை அவர் பொறுக்கி நியமிக்கும்படிக்கும் ஏற்பாடாகவேணுமாய் நாம் கோரவேண்டும்.

நமது நாஷெனல் காங்கிரெஸின் தற்காலநிலைமையைப்பற்றி இங்கே சற்று பிரஸ்தாபிக்கிறேன். கனவான்களே, நமது வகுப்பாருக்குள்ளே தீராத பிரிவினை ஏற்பட்டுவிட்டதென்றும், இனிமேல் நாம் வெவ்வேறாய்ப் பிரிந்து நடக்கவேண்டிய காலம் நேர்ந்து விட்டதென்றும் சொல்லப்படுகிறது. ராஜாங்க ஒழுங்குக்கு மாறில்லாத வழிகளில் நம்பிக்கை வைத்திருப்பவர்களென்றும், அவைகளில் நம்பிக்கை முற்றிலும் அற்றுப்போனவர்களென்றும்

நாம் இருகக்ஷிகளாய்ப்பிரிந்திருப்பதாயும், இந்தஇருகக்ஷி யாரும் இனி ஒன்று சேர்ந்து நடப்பது அசாத்திய மென்றும் சொல்லப்படுகிறது. தேசத்தின் எல்லா வகுப்பாரும் உள்ளடங்கிய இந்த இந்தியன் காங்கிரெஸைப் போன்ற ஒருபெரிய அமைப்பில் அபிப்ராய பேதங்கள் அவசியம் இருந்தே தீரும். ஆனால் அந்த அபிப்ராய பேதங்களை நமது காரியத்துக்கு ஹானியுண்டாகத்தக்க அவ்வளவு தூரம் வ ரவிடக்கூடாது. அவ்வளவு விபரீதத்திற்குப் போகாத நமது சச்சரவுகள் நம்முடைய சேர்க்கையின் பலத்தைக் காட்டுமல்லது பலஹீனத்தைக் காட்டாது. அவைகள் ஜீவிதசைக்குரிய திடத்தை காட்டுமல் லது நாசத்திற் கறிகுறியான தளர்ச்சியைக்காட்டாது. ஆனல், நாம் ஒன்றைமட்டும் மறக்கக்கூடாது. அதாவது இந்த நாஷெனல் காங்கிரெஸானது ராஜாங்க ஒழுங்கை மீறுத வழிகளில்மட்டும் பிரயத்தனங்கள் செய்யக்கட்டைப்பட்டு அவ்வழிகளில் கட்டுப்பட்டிருக்கிறது. புதுக் கக்ஷியாருக்கு இவ்வழிகள் அங்கீகாரமில்லாமல், அவர்கள் பழைய கக்ஷியாரோடு இசைந்து நடக்கக்கூடாவிட்டால், புதுக் கக்ஷியாருக்குகாங்கிரெஸின் அமைப்பில்இடமில்லை என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டியது தான். ஆகவே, அக்கக்ஷியார் பிரத்யேகமாய்ப் பிரிந்துவிடுவதைத் தவிர வேறே வழியில்லை. ஆனல் அவ்விதமாக ஒன்றும் நேரிடமாட்டாதென்று நான் ஆவலோடு நம்பியிருக்கிறேன். நாமெல்லாம் "ஸ்வராஜ்" என்று சொல்லப்படும் பெரிய போரின்பொருட்டு சென்ற வருஷம் தாதாபாய் நவரோஜி அவர்களால் செய்யப்பட்ட பேரிமுழக்கத்தின்படி ஒரேகாரியத்திற்காக, ஒரேகொடியின் கீழ் முன் செல்கிற போர்வீரர்களல்லவா? நாமெல்லாம் ஒரேநோக்

கங்களையும், ஒரே எண்ணங்களையும், ஒரே விருப்பங்களையும், ஒரே யத்தனங்களையும் முன்னிட்டு நடப்பவர்களல்லவா? காங்கிரெஸானது நம்மை ஒன்றுபடுத்த ஏற்பட்டிருக்கிற தேயல்லாமல் வேறுபடுத்த அல்லவே. செலவு மிகுந்த தற்கால அரசாட்சி முறையை கிரமமாய் நீக்கி சர்க்கார் அலுவல்களில் இத்தேசத்து ஜனங்களை இன்னும் அதிகமாய் நியமிக்கவேண்டுவதைப்பற்றி எப்போதும்போலவே அது பிரதிக்ஞை பூண்டிருக்கிறது. சட்ட சபைகளில் ஜனங்களின் பிரதிநிதித்வம் அதிகமாவதைப்பற்றி அது எப்போதும்போலவே சிரத்தையுள்ளதாயிருக்கிறது. அபாரமான ராணுவச் செலவைக் குறைப்பதைப்பற்றியும் அந்தபளுவை இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் கூடியவரையில் சமனாகப் பிரிப்பதைப்பற்றியும் அது எப்போதும் போலவே சிரத்தையுள்ளதாயிருக்கிறது. நிலத்தீர்வைக்கு ஒரு வரம்பு ஏற்படுத்துவதைப்பற்றி அது எப்போதும்போலவே சிரத்தையுள்ளதாயிருக்கிறது. நிர்வாக உத்தியோகஸ்தர்களிடமிருந்து நீதி செலுத்துகிற அதிகாரங்களைப் பிரிந்துவிடுவதைப்பற்றி அது எப்போதும்போலவே சிரத்தையுள்ளதாயிருக்கிறது. சுவதேசி யத்தனங்களைப்பற்றி அது எப்போதும்போலவே சிரத்தையுள்ளதாயிருக்கிறது. பங்காளத்தில் அம்மகாணப்பிரிவினையைககண்டித்து துவக்கப்பட்ட "பாய்காட்டு" ஏற்பாடு நியாயமானதென்று செய்யப்பட்டலான தீர்மானத்தில் அது எப்போதும்போலவே சிரத்தையுள்ளதாயிருக்கிறது. முடிவில், இங்கிலாந்தானது அதன் குடியேற்ற நாடுகளுக்கு இப்போது நியாயமாய்க் கொடுத்திருக்கிற சுவய அரசாட்சி சுதந்தரத்தை எல்லாவித ஒழுங்கான மார்க்கங்களினாலும் இத்தேசத்துக்கும் நாளாவர்த்தியில் கிடைக்கும்படி செய்வதில்

அது எப்போதும்போலவே சிரத்தையுள்ளதா யிருக்கிறது.

சுதேசியும் பாய்க்காட்டும்.

நமக்குள் ஒற்றுமையும், தேசநன்மைக்காக சுவயநல மறுப்பும், அத்தியாவசியமென்பதை நாமெல்லாம் அறிவோம்; தேசத்தார்களின் பெருமை அந்தந்த தேசத்தார்களாலேயே ஏற்படவேண்டுமென்றும் நாமெல்லாம் அறிவோம். நாம் ராஜ்ய தந்திரவழிகளில் அதிக மேம்பாடடைவதற்கு சுவதேச வழிகளில் பயிற்சி நடத்துவதும், சாமான்ய ஜனங்களின் இருப்பு நிலைமையை விர்த்திசெய்வதும் அவசியமானதென்றும் நாமெல்லாம் அறிவோம். கைத்தொழில் அபிவிர்த்தியாவது அவசியமானதென்று நாமெல்லாம் அறிவோம். ராஜாங்க சீர்திருத்தங்களைக்காட்டிலும், வெறும் துரைத்தன ஒழுங்குகளைக் காட்டிலும், இத்தேசத்தின் கைத்தொழில் சீர்திருத்தமானது முக்யமான சங்கதியாயிருக்கிறது. சுவதேசி முயற்சியில் நாம் உறுதியாய்நிற்கக்கடவோம். அம்முயற்சியானது விஸ்வாசத்தினல் அமைந்ததேயொழிய விரோதத்தினல் அல்ல. அதாவது நமதுசொந்த தேசத்தில் நமக்குள்ள விஸ்வாசத்தினலன்றி அன்னியதேசத்தார்பேரில் விரோதத்தினலல்ல. இந்தியாவை நாம் நமக்கே பிரயோஜனகரமாக்கிக்கொள்ள வேண்டியதென்கிற சுருக்கமான நோக்கமே நம்முடையது. அதாவது சட்டவரம்புக்குள்பட்டு சுவதேசியத்தை நாம் அனுஷ்டிக்கவேண்டியது. அது சுவதேச விஸ்வாச நினைப்பேயல்லது, அதில் ராஜதுரோகம் எதும் இல்லை. கூடுமானவரையில் அன்னிய தேச வஸ்துக்களை நாம் உபயோகிக்கிறதில்லையென்று தீர்மானித்திருக்கிறோம்.

எவ்வித நிர்ப்பந்தமும் நம்மை அந்த தீர்மானத்தை அநுஷ்டிப்பதிலிருந்து விலக்கிவிட முடியாது. ஏற்றுமதி இறக்குமதியைக்குறித்த சட்ட ஏற்பாடுகளினுல் நமது கைத்தொழில்களைப் பாதுகாக்கமுடியாது. ஆனுல் சொல்லமுடியாத வறுமையில் அழுந்திக்கிடக்கும் நமது சாமான்ய ஜனங்களிடத்தில் அநுதாபம் காட்டுவதினுல் நாம் நமது சுதேச விஸ்வாசத்தைக் காட்டமுடியும். இவ்வித முயற்சியைக்கண்டு ஆங்கிலோ இந்தியக்கூட்டத்தார் பீதியடைந்திருக்கிருர்கள். அந்த பீதி துரைத்தனத்தாரையுங்கூடப் பிடித்திருக்கிறது. அதினுல் அவர்கள் "சுவதேசி" என்பதற்கும் "பாய்காட்" என்பதற்கும் ஏதோ நுணுக்கமான வித்யாசத்தைஎடுத்துக்கூறுகிருர்கள். ஆனுல், "பாய்காட்" டுடன் துஷ்டச்செய்கை கலந்தாலொழிய, உண்மையில் இரண்டுக்கும் என்ன வித்யாசமிருக்கிறது ?

நமக்குள் நாம் எப்போதும் அன்னியோன்னியமாய் ஏன் வேலை செய்யக்கூடாதோ அந்தக்காரணம் எனக்குப் புலப்படவில்லை. ஒரு குடும்பத்தில் பிரிவுபட்டால் அந்தக்குடும்பம் தலையெடுக்கமுடியாது. ஆகையால் நமக்குள் ஐக்கியக்குறைவு என்கிற குரூரமான ஆபத்துக்கு நாம் இடம்கொடாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். வேகமாய் ஓடுகிறவனே பந்தயம் கெலிக்கிருனென்பதும், பலாட்டியனே போரில் ஜயிக்கிருனென்பதும் இல்லை. ஆகையால், பொறுமையுடன் கீழ்ப்படிதலும், அடக்கமும் இல்லாமலும், தைரியமும் வைராக்கியமும் இல்லாமலும் ராஜவிஸ்வாசம், ஒழுங்கு, கடமை- இவைகளில் கவனம் இல்லாமலும் இருப்போமாகுல், நமது பிரயத்தனங்களெல்லாம் நிஷ்பலமாகத்தான் முடியும் என்பதை நீங்கள் நன்ருய் நம்பியிருங்கள். ஜெரிகோ (Jericho) வின் மதில்க

ளைக்காட்டிலும் ஆங்கிலேய அதிகாரக் கூட்டத்தாரின் கோட்டையானது அதிக வலுவானது. சகோதர டெலி கேட்டுகளே, இப்போது மிகவும் இருண்டு புயலோடு கூடிய இரவாயிருக்கிறது. விடியுங்காலத்தை எதிர்பார்த்து நாம் ஒன்றுகூடிப் பொறுமையுடன் காத்திருப்போம். வெளிச்சமான காலைநேரம் திரும்புகிறவரையில் தூங்காமல் நம்முடைய நம்பிக்கையில் தளராமல், நல்லகாலம் பிறப்பதை எதிர்பார்த்துக்கொண்டிருப்போம். நமக்குள்ளே இன்னும தெளிவான ஆலோசனைகளோடுகூடிய வழிகள் ஏற்பட்டாலொழிய, பிளவு கட்டாயமாய் ஏற்பட்டுவிடும் என்று நான் மனவருத்தத்துடன் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அப்படி பிளவு ஏற்பட்டுவிட்டால் நாம் பிரிந்துபோகவேண்டிவரும். இந்த காங்கிரெஸானது அதை ஆதியில் ஸ்தாபித்தவர்கள் ஏற்படுத்திய மார்க்கப்படி ராஜாங்க ஒழுங்கின் வரம்புகளுக்குட்பட்ட வழியில் எப்போதும்போலச்செல்லும்படி அதை பிரத்தியேகமாய் விட்டுவிடவேண்டிவரும். அவ்வித வழியொன்றே நன்மை பயக்கத்தக்க வழியாயுமிருக்கிறது.

மூட்டு மார்க்கங்கள்.

நம்மை ஆளுவோரிடமிருந்து எவ்வித உபகாரங்களையும் எதிர்பார்ப்பதில் காரியமில்லையென்றும், நாஷனல் காங்கிரெஸின் மார்க்கங்களில் ராஜாங்கவிஷயமான போராட்டங்கள் செய்வது வீண் பிரமையென்றும் ஆபத்தென்றும் புதுக்கக்ஷியார் அபிப்ராயம் கொண்டிருப்பதாய்த் தோன்றுகிறது. உண்மையான ஆங்கிலேய அதிகாரிக்கு மிதவாதத்தில் திருப்தியில்லையென்றும், ஒழுங்கையீறுத சீர்திருத்தக்காரரை அவ்வதிகாரி அந்தரங்கத்தில் வெறுப்

புடன் நடத்துவதாயும் புதுக்கக்ஷியார் சொல்கிறார்கள். அயர்லாந்தில் "சின்பீன்" (Sin Fein) கக்ஷியரைப்போலே நமது புதுக்கக்ஷியாருக்கு ராஜாங்க வரம்புகளுக்குள்பட்ட கிரமமான மார்க்கங்களில் நம்பிக்கை முற்றிலும் அற்றுப்போய்விட்டது. ஆனால் தங்கள் புஜபலத்தினால் ஏதாவது சாதித்து விடலாம் என்கிற நம்பிக்கையும் அவர்களுக்கில்லாதிருப்பது அவர்களுடைய விவேகத்தைக் காட்டுகிறது. தவிர, துரைத்தனத்தாருக்கு இடைஞ்சல் உண்டாக்குகிற நோக்கத்துடன் வரிகளைச் செலுத்த வேண்டாமென்றும் அவர்கள் ஜனங்களுக்குப் போதிக்கிறதில்லை. நான் பேசுவது அக்கக்ஷியின் முக்யஸ்தர்களைப்பற்றிமட்டும் பேசுகிறேன். அக்கக்ஷியின் நோக்கங்களெல்லாம் விஸ்தாரமான பலவழிகளிலும் நாம் ஒதுங்கிநின்று எதிர்க்கிற உபாயத்தை சாதிக்கவேணுமென்பதே. இது வெகுசாய் "ஹங்கெரி" (Hungary) தேசத்தின் தற்கால சரித்திரத்திலிருந்து தோன்றிய ஓர் உபாயமென்று நான் நினைக்கிறேன். யாரையும் உபத்திரவிக்காமல் ஆங்கிலேய சம்பந்தமான எல்லாவற்றையும் கட்டோடே விட்டுவிலகுவதுதான் இதன் சுருக்கமான கருத்து. மேற்சொன்ன கக்ஷியின் மார்க்கத்தை நான் அறிந்துகொண்டமட்டில் அது எப்படியென்றால், கவர்ன்மெண்டாரின் கீழ் எந்த அலுவலிலும் நாம் சேவிக்கமாட்டோமென்று விலகிவிடவேண்டியது. சம்பள ஊழியமானாலும் சரி, சட்ட சபைகள், லோகல் போர்டுகள், முனிசிபாலிட்டிகள் இவைகளில் மெம்பராகவானாலும் சரி, பிரிடிஷ் நியாயஸ்தலங்களையும் இவ்வாறே நீக்கிவிட்டு அவைகளுக்குப் பதிலாக அங்கங்கே பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது. [இதில் ஒரு விசேஷம். அதாவது, பஞ்சாயத்துகோர்ட்

டுகளைப்போன்ற பிரேரேபணைகளினால், ராஜாங்கவிஷயப் போராட்டங்கள் முற்றிலும் பட்டினிகிடக்கும் லாயர்மார்களுடைய காரியமல்ல வென்பதை இங்கே கவனிக்கத்தக்கது.] துரைத்தனத்தாரால் பராமரிக்கப்பட்டுவருகிற எல்லா பாடசாலைகள், சர்வகலாசாலைகளிலிருந்தும் நாம் விலகிக்கொள்ள வேண்டியது. சுருக்கமாய், ஒவ்வொரு காரியத்திலும் துரைத்தனத்தார் பேரில் சாய்கிற நமது வழக்கத்தை விட்டுவிட்டு, துரைத்தனத்தாரே இல்லாதது போல் பாவித்து நினைக்கவும், நடக்கவும் நாம் பழகவேண்டியது. இருந்தபோதிலும், இவ்வளவு காரியத்தையும் சரீர பலவந்தத்தை முன்னிடாமல் ஜனங்களின் அன்னியோன்னியக் கட்டுப்பாட்டினாலேயே சாதிக்கவேண்டும். யாரும், இதுவரையில் தோன்றிய எந்த கக்ஷியாரும், துராகிர்தமானவன் செய்கையையாவது, சட்ட விரோதமான காரியத்தையாவது போதிக்க முன்வரவில்லை.

இந்த வழிகளெல்லாம் பொறுமையில்லாதமனோவியாபாரிக்கடுத்த முறட்டுமார்க்கமென்றும், அது சற்றும் பிரயோசனப்படாதென்றும் எனக்குப்படுகிறது. நான் விசனத்தோடு சொல்கிறேனே அல்லாமல் கோபத்தினால் சொல்லவில்லை. சுதேச வாஞ்சையினால் உண்டான இந்த புதிய தோற்றத்திலும், சாத்தியமில்லாத உத்தேசத்தைத் தழுவிய இந்த ஆவலாதிகளிலும் நான் அனுதாபம் காட்டக்கூடாதவனல்ல. ஆனால் பிரகிருதத்தில் நடவடிக்கையில் உள்ள சங்கதிகளை கவனிக்கவேண்டும். அவைகளை நாம் ராஜவிஸ்வாசத்துடன் கவனிப்பதுடன், எவனொருவன் தன் பாலியத்தில் ஒரு காரியத்தை முன்னிட்டு ஆவேச பூரிதனாய் சிற்சில சமயங்களில் மெய்மறக்கவில்லையோ அவன் உபயோகமற்றவனென்பது. உண்மையே ஆயினும் அவ்வித

ஆவேசத்துக்கு மெட்டும் கடிவாளமும் அவசியமென்பதும் உண்மையே என்பதை கவனிக்க வேண்டியது. தெளிவான புத்தியினால் ஆளப்படாத உற்சாகமானது அனேகமாய் பயங்கரமான விபத்துகளில் போய் முடியும்.

ஒரு நகரத்தின் மூன்று தலைவாசல்களின் பேரிலும் மூன்று விளம்பரங்கள் எழுதப்பட்டிருந்த கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். முதல் விளம்பரம் "தைரியமாய் இரு" என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாவது விளம்பரத்தில் "தைரியமாய் இரு; பின்னும் பின்னும் தைரியமாய் இரு என்று" கண்டிருந்தது. மூன்றாவது விளம்பரத்தில் கண்ட தென்னவென்றால்:-"மிதமிஞ்சிய தைரியமாய் இருந்துவிடாதே" என்று கண்டிருந்தது. வெறும் முரட்டுத்தனம் தைரியமாகாதென்பதை மறந்து விடுகிறீர்கள். மற்ற தேசத்தாருடையவும், மற்ற காலங்களினுடையவும் சரித்திராதிகளிலிருந்தும் அவசரமாய் எடுக்கப்பட்ட கோட்பாடுகள் முற்றிலும் அபாயகரமுள்ளவைகள். ஏனெனில், நிலைமைகள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. ஒரு தேசத்தில் ஒரு காலத்தில் ஒரு விதபலனைக்கொடுத்த காரியம் மற்றொருதேசத்தில் மற்றொருகாலத்தில் வித்யாசமான பலனைக்கொடுக்கலாம். எல்லாசந்தர்ப்பங்களிலும் அனுஷ்டிக்கத் தக்கதாய் அவ்வளவு விசாலமும் பொதுவுமான கோட்பாடு எங்குமே கிடையாதென்பதை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். தேசநன்மைக்காக துன்பத்துக்காளாகிற பேர்களை அவர்கள் பட்ட அவஸ்தைகளுக்காகவும், நஷ்டங்களுக்காகவும் ஜனங்கள் பூசித்தபோதிலும் அவர்களை சிரேஷ்டமான விவேகிகளாக ஜனங்கள் எப்போது மதிக்கிறதில்லை யென்பதோடு அவர்களுடைய செய்கையைப் பார்த்து எவ்வளவு அதிச

யிக்கிறார்களோ அவ்வளவு அச்செய்கையை அனுஷ்டிக்கிறார்களில்லை என்பதையும் நீங்கள் மறந்து விடுகிறீர்கள். இப்படி நான் சொல்வது உங்களுக்கு விந்தையாகப்படலாம். ஆயினும், அது முற்றிலும் உண்மையே. இதற்கு திருஷ்டாந்தங்களுக்கு நான் வெகுதூரம் போகவேண்டியதில்லை. உங்கள் மனோ நிச்சயங்களின்படி நடக்கிற தைரியம் உங்களுக்குத்தான் உண்டென்றும், மிதவாத கக்ஷியார் நங்கள் தேசத்துக்கு துரோகிகளென்றும், தேசத்துக்கு ஹிதவஞ்சகம் செய்கிறவர்களென்றும் நினைத்து நீங்கள் பெருமை பாராட்டுகிறீர்கள். ஆனால் நம்பிக்கை என்பது ஒன்று உண்டென்பதையும், பழம் பழுத்து பலவந்தமில்லாமல் கிடைக்கக்கூடிய சமயத்துக்காகப் பொறுமையுடன் பேசாமல் காத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையானது உண்டென்பதையும் நீங்கள் மறந்து விடுகிறீர்கள். உங்களுடைய நோக்கங்களெல்லாம் பெருந்தன்மை யுள்ளவைகளா யிருக்கலாம். ஆனால் நீங்கள் எதிர்பாராவிட்டாலும், உங்கள் மார்க்கங்களினால் நிச்சயமாய் விளையக்கூடிய ஆபத்துகளுக்கு இத்தேசத்தை இழுத்து விடாதேயுங்கள். கவர்ண்மெண்டு காலேஜ்கள், ஸ்கூல்களை அடைத்துவிட்ட மாத்திரத்திலாகிலும், எல்லா முனிசிபாலிடிகளையும், டிஸ்டிரிக்டு போர்டுகளையும் எடுத்துவிட்ட மாத்திரத்திலாகிலும், இத்தேசத்தின் சட்டசபைகளில் ஜனங்களின் பிரதிநிதிகள் மெம்பர்களாய் உட்கார மறுத்துவிட்ட மாத்திரத்திலாகிலும், தர்மயுகமானது நிச்சயமாய் வந்துவிடப் போகிறதில்லை. ஆத்திரமானது செளரியமாகாது. வேளையிலும் அவேளையிலும் அதிகாரிகளை நிந்திப்பது சுலபமான காரியம். ஆனால் ஒரு தேசத்தாரை உருவாக்குவது அவ்வளவு சுலபமல்ல. ஒன்று மாத்திரம்

எனக்கு நிச்சயம். ஒன்றுமட்டும் நான் அறிவேன். அதாவது, என்னதான் வீராவேசத்துடனிருந்தபோதிலும் வெறும் பிதற்றலினால் நமக்கு பிரயோசனமுண்டாகாது. நமக்கு வேண்டியது காரியம், தலைமை வகிப்பது, ஒழுங்குக்கு மீறுமல் நடக்கும் பயிற்சி; இவைகள் தான் நமக்கு வேண்டியது. கூடுமானால் துரைத்தனத்தாரோடு ஒற்றுமையாயிருந்து உண்மையாய் உழைக்கவேண்டியது. இல்லாவிடில், பொது தருமத்துக்கும், ராஜாங்க ஒழுங்குக்கும் கட்டுப்பட்டாவது நடக்க வேண்டியது. தற்கால தத்தளிப்புகளினால் நாம் அதைரியப்பட்டு விடக்கூடாது. நம்முடைய ஆவல்கள் இப்போதே நிறைவேறாமையினால் நாம் மனந்தளரக்கூடாது. நமது நேர்மையான நடத்தையிலும், நமது மேன்மையான நோக்கத்திலும் கருத்துள்ளவர்களாய், தைரியத்துக் கிடமில்லாத சமயத்திலும் எப்படி ஒரு போர்வீரன் என்ன வந்தாலும் வரட்டும் என்கிற தைரியத்தை மேற்கொண்டு நடப்பானே அப்படி நாமும் நம்முடைய மார்க்கத்தில் நடக்கவேண்டியது.

இப்போது நீங்கள் அனுசரிக்கிற வழியிலேயே நின்றுவிடாதபடி நான் உங்களை பிரார்த்தித்துக் கொள்கிறேன். வெறும்கற்பனைகளினால் மயங்கிப்போகவேண்டாம். துரைத்தனத்தை "பாய்காட்டு" செய்வதினால் பிரிடிஷ் அரசாட்சியை நீங்கள் நிறுத்திவிட முடியாது. தற்கால நிலைமையில் உங்களுடைய எண்ணம் நிறைவேற வேணுமானால் நமக்கு ராஜாங்க சுதந்தரங்களை தீவிரப்படுத்தக்கூடிய ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் துரைத்தனத்தாரோடு ஒற்றுமையாய் சேர்ந்துநடப்பதைத்தவிற வேறேவழியில்லை. நாம் அதற்கு தகுதியானவர்கள் என்று காட்டிக்கொள்

ளாத வரையில், இங்கிலாந்தானது தனது அரசாட்சியைக்கைவிடாமல்நடத்தியே தீரும். உங்களுக்கு சுவய அரசாட்சி உண்மையில் வேண்டியதானால், அந்தப் பொறுப்புக்கு நீங்கள் தகுதியுள்ளவர்களென்று காட்டிக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் தங்களுடைய வேலை பரிபூரணமாய் முடிந்துவிட்டதென்றும், தங்களுடைய கடமை நிறைவேறிவிட்டதென்றும் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு விலகிக்கொள்வார்கள்.

புதுக்கக்ஷியாரை உண்மையாக பாவிக்க கூடவில்லை.

உங்களுடைய பிரயத்தனம் நிறைவேறுகிறதென்றும், ஜனங்களை அவர்கள் சொந்தமாய் ஆண்டுகொள்ளும்படி விட்டுவிட்டு ஆங்கிலேயர் இத்தேசத்தைவிட்டு விலகிவிடுகிறார்களென்றும் வைத்துக்கொள்வோம். அந்த க்ஷணமே தேசம் முழுமையும் என்ன குழப்பத்திலும் கலவரத்திலும் ஆழ்ந்துவிடும் என்பதை சற்று நினைத்துப்பாருங்கள். நிஜமாகவே, புதுக்கக்ஷியைச் சேர்ந்தவர்களை நான் உண்மையாக பாவிக்ககூடவில்லை. இவ்வாறு நான் சொன்னதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஒழுங்கும் சமாதானமு முள்ளவழிகள் பலிக்காமற் போனதையிட்டு அவர்கள் ஏதோ கொஞ்சம் மனத்தாங்கல்கொண்டிருப்பதாய் மட்டும் நினைக்கிறேன். பலவருஷங்களாக இந்த நாஷனல் காங்கிரெஸானது கடற்கரையின் மணற்குவியலை உழுது கொண்டிருப்பதாயும், நியாயமான சாதகங்கள் கிடைக்குமென்று எதிர் பார்க்கக் கூடிய காலங்களெல்லாம் வரவர தூரத்தில் நகர்ந்து கொண்டே போவதாயும், இரந்து கேட்கிறவழியை உறுதியாய்ப் பற்றி காங்

க்ரெஸானது நம்மையும் தேசத்தையும் மயக்குவதாயும் அவர்கள் சொல்கிறார்கள். நியாயவாதங்களும் பணிந்து செய்யப்படும்பிரார்த்தனைகளும் பயனற்றவைஎன்று அவர்கள் சொல்கிறார்கள். அவ்வித பணிவுக்கு பிரதியாய் கிடைப்பது அவமரியாதையும் அலக்ஷியமுந் தானென்று சொல்கிறார்கள். இவ்வித மனோநிலையினால் வெளியாகிற எந்த ஆத்திரமுண்டோ அது கொஞ்சமேனும் நியாயமுள்ளதல்லவென்பது ஒவ்வொரு சீர்திருத்தத்தின் சரித்திரத்தையும் கவனிப்பவர்கள் அறிவார்கள். இவ்விதக்கடுமையும் கோபமும் கூடிய மனோநிலையானது சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் விரோதமான ஆவேசத்தில் லகுவாய் நழுவிவிடலாம். தவிர, நிர்ப்பந்தவழிகளினால்தான் ஜனங்களின் அமரிக்கையைக் காபாற்றமுடியும் என்கிற சாக்கை நமது எதிரிகள் சொல்வதற்கும் அது சாதகமாய் உதவும். நீங்கள் அப்படி ஒன்றும் இல்லையென்று மறுத்த போதினுங் கூட, ராஜத்துரோகமான அபாய வழிக்கே நீங்கள் மெதுவாயும் நிச்சயமாயும் நகர்ந்து கொண்டிருக்கிறீர்களென்று நான் அஞ்சுகிறேன்.

நமது எதிரிகளுக்கு சாதகமாய் உதவும் படியான காரியங்களை நீங்களே செய்துவிடாதபடி நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். எப்போதும் போல காங்கிரெஸி னிடத்தில் உறுதியாய் நின்று, அதன் கோட்பாடுகளுக்கடங்கி, அதை ஆதியில் ஸ்தாபித்தவர்கள் ஏற்படுத்திய மார்க்கத்தை அனுசரியுங்கள். நாம் இப்போது எந்த அநீதியான குறைகளைப்பற்றி வருந்திநிற்கிறோமோ அவைகள் உங்கள் மனதில் உறுத்துவது போல் எங்கள் மனதில் உறுத்தவில்லையென்று நினைக்கிறீர்களா? இத்தேசத்தின் அரசாட்சியில் நமக்குநியாயமாயுள்ள பங்

கிலிருந்தும் நம்மை விலக்கியிருப்பதைப்பற்றி நீங்கள் மனம்வருந்துவது போல் நாங்கள் மனம்வருந்தவில்லை யென்று நினைக்கிறீர்களா? இத்தேசத்தை பஞ்சையாக்கி வருகிற வருஷவாரிவெளியேற்றத்தைப்பற்றி நீங்கள் மனம் வருந்துவது போல் நாங்கள் மனம் வருந்தவில்லை யென்று நினைக்கிறீர்களா? எல்லா அபிவிர்த்திகளுக்குந் தடையாக இருந்து கொண்டு தேசத்தில் எங்கேபார்த்தாலும் பாடசாலைகளும், சாமான்ய ஜனங்களுக்கு உதவக்கூடிய சம்பளமில்லாத கீழ்தரப்படிப்பும், ஏற்படுவதற்குக் குந்தகமாய் இருக்கிற ராணுவச்செலவின் பளுவைப்பற்றி நீங்கள் மனம்வருந்துவது போல் நாங்கள் மனம்வருந்தவில்லை யென்று நினைக்கிறீர்களா? நமக்கு ராஜரீக சுதந்திரங்கள் கிடைப்பதற்காக நீங்கள் எவ்வளவு தீர்மானமாய் இருக்கிறீர்களோ அவ்வவு தீர்மானமாய் நாங்கள் இல்லை யென்று நினைக்கிறீர்களா?

இங்கிலாந்தில் போராட வேண்டும்.

நான் ஒரு சங்கதி உண்மையாக உங்களைக் கேட்கிறேன். இத்தேசத்திலாவது இங்கிலாந்திலாவது கிரமவழிகளில் போராடுவதை நாம் விட்டுவிடுவது பயித்தியகாரத்தனமல்லவா? அதிலும் இங்கிலாந்தில் அவ்வித வேலையை நிறுத்துவது மிகவும் பிசகான காரியம். அங்கே சாமான்ய பொதுஜனங்கள் தான் ராஜாங்ககாரியங்களில் மிகுந்த சொல்வாக்குடைய வர்கள். உயர்ந்த வகுப்பாரல்ல. நீங்கள் ஏதாவது வாய்பொத்தி கைபொத்தி நின்று அவர்களைப் போய் யாசிக்கும்படி நான் உங்களைக் கோரவில்லை. தங்கள் கண்ணியத்தில் பற்றுள்ள அத்தேசத்தாரை அவர்கள் பல முறையும் நமக்கு செய்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி கேட்க

வேண்டுமென்றே கோருகிறேன். நம்மைப்பற்றி இங்கிலாந்து தேசத்தில் ஜனங்கள் யாதொன்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். அவ்வறியாமைதான் நமது மார்க்கத்தில் பெருந்தடையாயிருக்கிறது. இந்தியாவின் அரசாட்சி பரிஷ்காரமாய் நடக்கிறதென்று அவர்கள் நம்பும்படி நம் விரோதிகள் செய்திருக்கிறார்கள். தற்காலத்தில் இத்தேசத்தின் நிலைமையை பிரிடிஷாருக்கு உள்ளபடி தெரிவித்தால் அவர்கள் நாம் கோருகிற சீர்திருத்தங்களை சந்தோஷமாய் ஆமோதிப்பார்கள். இருந்தபோதிலும், சீர்திருத்தத்தினால் யாதொரு வகுப்பாருடைய மாமூல் சுதந்தரங்களுக்கு ஹானியுண்டாமோ அவ்வகுப்பார் சகஜமாய் ஆக்ஷேபிப்பார்கள். அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்க வேண்டும். ஆகையால் இங்கிலீஷ் பொது ஜனங்களின் மனதில் நமது குறைகளைப் பதியவைப்பது நமதுகடமை. பொய் புரட்டுகளினால் கெடாமல் உண்மையான அறிவிப்புகளினால் உண்டாகிற இங்கிலீஷ் பொதுஜன அபிப்ராயம் அதன் சாராம்சத்தில் நியாயமுள்ள தாகவே இருக்கும் என்பது நிச்சயம். அவ்வித அபிப்ராயம் நமக்கு சாதகமானால் மட்டும் நம்முடைய உத்தேசங்களை நாம் நிறைவேற்ற வழி ஏற்படும். ஆகையால் நம்மால் கூடிய எல்லா விதங்களிலும், பிரசங்கங்கள் செய்தும் பத்திரிகைகளில் எழுதியும் நமது குறைகளைக் குறித்து அடிக்கடி போராடி, நமது அபிப்ராயங்களை இங்கிலாந்து ஜனங்கள் அறியும்படி முயற்சி செய்யவேண்டியது. நமக்கு பலத்த விரோதிகளிருக்கிறார்களென்பதையும் அவர்கள் இங்கிலீஷ்ஜனங்களின் மனதைப்பேதப்படுத்தி கலக்கத் தங்களால் ஆனவரையில் முயற்சித்துக்கொண்டிருக்கிறார்களென்பதையும் அவர்களை

எதிர்ப்பதற்கு நமக்கு சாதகமான இங்கிலீஷ் பொது ஜன அபிப்பிராயபலத்தை நாமும் உண்டாக்கிக்கொள்ள வேண்டியது அவசியமென்பதையும் நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். பிரிடிஷ் குடிகளின் சாமான்ய சுதந்தரங்களை மட்டும் கோருகிற நம்மிடத்தில் அக்குடிகள் அனுதாபம் காட்டுவார்கள். இந்த வேலையெல்லாம் இப்போது லண்டனிலிருக்கும் பிரிடிஷ் கமிடியார் செய்து வருகிறார்கள். அதற்காக அவர்களுக்கு நாம் எவ்வளவு நன்றியறிவுகாட்டி, எவ்வளவு உதவிகள் செய்யவேணுமோ அவ்வளவு நாம் செய்கிறோமில்லை. இங்கிலாந்தில் உள்ள நமது நண்பர்கள் நமக்காக ஓயாமல் உழைத்து வருகிறார்கள். நமக்கு இன்னும் கடினமான நிர்பந்தங்கள் நேரிடாமல் இவ்வளவோடே நாம் தப்பினது அவர்களாலான தர்மமே ஒழிய வேறில்லை. நமது க்ஷேமத்தின்பொருட்டு அவர்கள் பாடுபட்டு வருவது மல்லாமல் தங்கள் பணத்தையும் நமக்காக செலவிட்டிருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய காரியார்த்தமாய் பணத்தை ஜலம்போலக் கொட்டியிருக்கிறார்களென்று நான் சொல்வது அலங்கார வார்த்தையல்ல, உண்மையான சங்கதி.

நம்முடைய தேசபலத்தைக் கட்டுவதற்கு நாம் நம்முடைய முயற்சியையேபொறுத்து நடக்கவேணுமென்பதை நான் மறுக்கவில்லை யானாலும், இத்தேசத்து ஆங்கிலேய அதிகாரக் கூட்டத்தாரை ஆளக்கூடிய மேலதிகாரம் இங்கிலாந்தில் தான் இப்போது இருக்கிறது. ஆகையால் இங்கிலாந்தில் நாம் நடத்தும் ராஜாங்க விஷயமான போராட்டம், வெறும் வியர்த்தமான சிரமமும் பணச்செலவும் உள்ளதாகாதென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேணும் அது தப்பாமல் இத்தேசத்தின்

அரசாட்சிமுறையைச் சீர்படுத்தி அதற்குப் புதியஉயிர்க்களையுண்டாக்கும் சம்பளமில்லாத கீழ்தரப்படிப்பு போன்ற விஷயங்களை இங்கிலீஷ் ஜனங்கள் தாராளமாய் அங்கீகரிப்பதுடன் அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும்படி அவர்கள் இத்தேசத்து ஆங்கிலேய அதிகாரிகளை நெருக்குவார்கள். இவ்வதிகாரிகளை அவர்கள் பாட்டில் விட்டால் அவ்வித சீர்திருத்தங்களை அவர்கள் வியவஸ்தையில்லாமல் தள்ளிவைத்துக்கொண்டே போவார்கள். இவ்வதிகாரிகளுக்கு ஒரு வேலை நன்றாய்த்தெரியும். அதாவது, மினுட்டுகள் (Minutes) எழுதுவதும், பிறகு ஒன்றும் செய்யாமலிருந்து விடுவதும், இதில் நன்றாய் பழகியிருக்கிறார்கள். பின்னும் அவ்வதிகாரிகளுடைய பிசகுகள் வெளியாவதினால் அவ்வதிகாரிகளின் கொட்டம் சற்று நிச்சயமாய் அடங்கும். ஆகையால் இங்கிலாந்தில் நாம் அடிக்கடி ஓய்வில்லாமல் போராடி வரவேண்டும். சிரத்தையில்லாமல் சிற்சில சமயங்களில்மட்டும் அவ்வாறுசெய்வது போதாது. ஆகையால் இவ்விஷயத்தை காங்கிரெஸ் சபையார் முக்யமாய் கவனிக்கவேண்டியதென்று நான் சொல்வேன். ஆனால் நாம் தைரியமாயும் உறுதியாயும் வேலை செய்வதோடு தக்ஷணமே நமது உத்தேசங்கள் சித்தியாய்விடும் என்றெதிர்பாராமல்காலாந்திரத்தில் முடிவை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் இருக்கவேண்டியது. எல்லாவற்றையும் விட, ஆங்கிலேய ஜாதியாருடைய நம்பிக்கையை நாம் பழையபடி சம்பாதிக்க முயற்சிக்கவேண்டும். அதை நாம் இப்போது இழந்திருக்கிறோம். காரணமென்னவெனில், பொறுப்பில்லாத அமிதவாதிகளில் சிலருடைய தாறுமாறான பேச்சு வார்த்தைகளும், இத்தேசத்து ஜனங்கள்பேரில் பகைபாராட்டி அவர்களை சாஸ்வதஅடிமைக

ளாக்க விரும்பும் பேர்வழிகள் வெகுமுயற்சியாய் பரப்பும் பொய்களும் தூஷணங்களுந்தான். இதேபேர்வழிகள் தான் நாம் அறிய இங்கே ஒன்றுமில்லாதிருக்க, மிகுந்த அபாயகரமான கலகத் தீ இங்கே மூண்டு விடப்போவதாய் மிஸ்டர் மார்லியும் இந்தியா கவர்ன்மெண்டும் நம்பும்படி செய்தார்கள். இவர்கள் தான் ஒரு லிபரல் துரைத்தனத்தாரால் நமக்குக் கிடைக்கக்கூடிய தகுந்த சாதகங்களிலேதும் நமக்குக்கிடைக்காதபடி குந்தகப்படுத்திவிட்டார்கள். இவர்கள் தான் நமது ராஜாவிஸ்வாசத்திலும், நம்முடைய காரியங்களை நாமே நிர்வாகிக்கிற திறமையிலும், இங்கிலீஷ் ஜனங்களுக்கு அவநம்பிக்கை யுண்டாகும்படி செய்தவர்கள்.

மனந்தளரக்கூடாது.

நான் மறுபடியும் உங்களுக்குச் சொல்கிற தென்னவென்றால்:—நாம் முன்னுக்கு வருவது சற்று மெதுவாயிருந்த போதிலும் நாம் மனந்தளரக்கூடாது. கடிகார முள்ளை பின்னுக்குத் தள்ளிவைத்த போதிலுங்கூட தளரக்கூடாது. லோகாரூடியில் இப்படிக்கெல்லாம் நேரிடுவது சகஜம். ஆனால் சரித்திராதிகள் வெறும புரளியாயிருந்தாலல்லாமல், இங்கிலீஷ்காரர் சுவாதீனத்தைத் தங்களுடையவிசேஷ ஐசுவரியமாக மதிக்கப்பட்டவர்கள் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் அவர்கள் மதிக்கிற சுவாதீனம் ஆசரணையில் கிரமம் கிரமமாய் வந்து மெதுவாய் நாளடைவில் விசாலப்படுவதாயிருக்கும் என்பதையும் மறந்துவிடாதீர்கள். கிரமமான வழிகளில் போராடிவருவதினால் நம்முடைய உத்தேசத்தை நாம் சாதிக்க வேண்டுமே யொழிய துரைத்தனத்தாரைத் தனியாய் விட்டுவிலகி நிற்பதினாலல்ல என்பதை நான் வற்புறுத்துகிறேன். மனதில் உதிக்கும் தோற்றங்கள் எவ்வளவு மேன்மை

யுள்ள தாயிருந்த போதிலும் அவைகள் உண்மையாக மாட்டா. ராஜாங்கம் நடக்க வொண்ணாதபடி அவ்வளவு விஸ்தாரமான "பாய்காட்டு" நடத்துவதென்பது மூளை கெட்டுப்போனவர்களின் கற்பனாயோசனையாகவே எனக்குப்படுகிறது. சுதந்தரங்களுக்காக நாம் திடமாய்ப் போராடவேண்டும். அதைவிட்டு ஆரம்பத்திலேயே நமது முயற்சிகளுக்கு உடனே வெளிப்படையான பலன்கள் கிடைக்கவில்லை யென்று போராட்டத்தை விட்டுவிலகி விடுவது மதிப்புக்குறைவானகாரியம். என்மட்டில் நான் எப்போதும் மனந்தளர்ந்ததுமில்லை, இனிமனந்தளரவும் உடன்படேன்.

அதிகாரப் பிரிவினையும் மிஸ்டர் கோக்கலேயும்.

மாகாண "அதிகாரப் பிரிவினை."

அதிகாரப்பிரிவினை விஷயமான ராயல் கமிஷன் முன்பாக ஆனரெபிள் கோபால கிஷ்ண கோக்கலே C. I. E. அவர்கள் கொடுத்த ஸ்டேட்மெண்டு பின்வருமாறு:—

இந்தியா கவர்ன்மெண்டார்வசத்தில் அந்த கவர்ன்மெண்டாருக்கும் மாகாணக் கவர்ன்மெண்டார்களுக்குமுள்ள சம்பந்தங்களில் உள்ள அதிகாரத்தை ஜாஸ்தியாக சுவாதீனம் செய்துகொள்ளும். இப்போதிய முறையை நான் பலமாய் ஆக்ஷேபிக்கின்றேன். ஆனாலும் அதிகாரப் பிரிவினையானது, மாகாண கவர்ன்மெண்டார் மீது பிரதான கவர்ன்மெண்டார் தற்காலத்தில் செலுத்திவரும் அதிகாரத்தில் மிக்க பாகத்தைப் பிரிக்கும்பொழுது, அவ்வாறு பிரிக்கப்படும் அதிகாரத்திற்குப் பதிலாக வேறொன்றையும் ஸ்தாபிக்காமற் போகுமேயானால், அதிகாரப்பிரிவினையைப்பற்றிப் பின்னும் அதிக பலமாய் ஆக்ஷேபிக்க வேண்டியவனாயிருப்பேன். என்னுடைய மனதில் தோன்றுவது என்னவென்றால், தற்காலநிலையின் முக்கிய கெடுதியானது, மாகாண கவர்ன்மெண்டார் உட்படவேண்டியிருக்கிற அதிகாரத்தின் அளவைப் பொறுத்திருக்கவில்லை; ஆனால் அவ்வதிகாரத்தின் சுபாவமானது முற்

றிலும் உத்தியோகஜன்யமாய், அந்த அதிகாரம் வெகு தூரமான இடத்திலிருந்து செலுத்தப்படுவதையும் பொருத்திருக்கின்றது. ஆனால் வெகு தூரத்திலிருந்து கேவலம் உத்தியோக ஜன்யமான அதிகாரமானது பரும்படியாய்ச் செலுத்தப் பட்டாலும், அது யாதொரு அதிகாரமும் செலுத்தப்படாமலிருப்பதைவிடச் சிலாக்கியமே. நிச்சயமாய், எனக்குத்தற்காலத்திய மாகாண கவர்ன்மெண்டுக்குப்பதிலாக கலப்பற்ற "அற்ப ஸ்வேச்சாதிபத்தியம்" (Despotism) பெறுவதில் ஆசையில்லை. சாதாரணமாய் இந்த தேசத்தின் ஆளுகையை நடத்திவருகிற இந்தியா கவர்ன்மெண்டார், மாகாண கவர்ன்மெண்டார், ஆகிய இரண்டு கவர்ன்மெண்டுகளிலுமுள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் ஒரே கூட்டத்தி (Service) லிருந்து தெரிந்தெடுக்கப்படுகிறது உண்மையே. ஆகையால், மற்றப்படி சமமாய் இருக்குமானால், அவர்கள், தங்களுக்கு முன் வரும் விஷயங்களை முடிவாய்த் தீர்மானிக்கச் சமமாகவே வல்லவர்களாயிருப்பார்கள் என்றே நாம் பாவித்துக் கொள்ளலாம். ஆனால் மற்ற விஷயங்கள் சமமாய் இருக்கவில்லை. மாகாண உத்தியோகஸ்தர்களின் சார்பில் அந்தந்த ஸ்தலத்தின் நிலைமையும் தேவைகளையும் பற்றிஅதிக நெருக்கமான பழக்கத்தைப் பெற்றிருக்கும் பிரயோஜனம் இருக்கின்றது. ஆனால், இதற்கு எதிரிடையாக, இந்தியா கவர்ன்மெண்டைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஸ்தலத்திலுண்டாகும் துவேஷாபிமானங்களி லிருந்து விலகியிருப்பதாயும், ஜாஸ்தியான மேன்பார்வையைப் பெற்றிருப்பதாயும் சொல்லிக் கொள்ளலாம். இவ்வாறான துவேஷாபிமான மின்மையான சுபாவமே இந்தியாவானது இன்றைக்கு ஆளப்பட்டு வருவதுபோல்

ஆளப்படும் ஒரு தேசத்திற்கு மிகவும் முக்கியமான வை. ரிப்பன் பிரபு காலத்தில் இந்த இராஜதானியில் ஸ்தல ஆட்சியைப் பரவச்செய்ததைப்பற்றிய சரித்திரத்தையும், மேலதிகாரிகளின் நிர்ப்பந்தத்தினுல் பஞ்சத்தையும், நிலத்தீர்வையையும் பற்றிப் பம்பாய் கவர்ன்மெண்டாருடைய நிர்வாகமுறையில் முக்கியமான மாறுதல்கள் சமீபகாலத்தில் நடந்திருப்பதையும், நான் சொல்லும் வார்த்தைக்குச்சுமாரான உதாரணங்களாய் எடுத்துச்சொல்லலாம். முடிவான தீர்மானத்தைச் செய்யக்கூடிய அதிகாரிகள் மாகாணத்திலேயே இருப்பார்களே யானுல், ஆளுகையின் முறையை நடத்திவைக்க மிக்க நல்ல சந்தர்ப்பம் மாகாண ஜனங்களின் அபிப்பிராயங்களுக்கு ஏற்படும். ஆனுல் இப்படிப்பட்ட நிலைமையிலும், குற்றங் கூறுவதைவெறுக்கும் உத்தியோகஸ்தருடைய சுபாவமானது அவர்களிடத்தில் ஏராளமான உணர்ச்சியை எப்பொழுதும் உண்டாக்கும் என்பது நிச்சயம். அப்படியுண்டாகும் உணர்ச்சியானது பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தின் பலத்தையும் உபயோகத்தையும் கெடுக்காமல் இருக்கமாட்டாது. ஆகையால், அதிகாரப்பிரிவினை என்பது, கல்கத்தாவிலிருந்தோ, சிம்லாவிலிருந்தோ பம்பாயின்பொருட்டு, முடிவாய்த்தீர்மானம் செய்யும் அதிகாரிகளின் வாசஸ்தானத்தை மாற்றுவதேயொழிய வேறென்றுமல்ல வென்றிருக்குமாயின், அப்படிப்பட்ட அதிகாரப் பிரிவினையைவிட இப்போதிருக்கும் ஏற்பாடுகள் இருப்பதே நல்லதென்று நான் நினைப்பேன்.

ஆனுல் கமிஷன்முன்பாக இருக்கும் கேள்வியின் நோக்கமானது மேற்சொல்லியதைவிட முக்கியமானதென்று நான் நம்புகிறேன். இந்த நம்பிக்கையோடேயே

அதிகாரப் பிரிவினை விஷயத்தைப்பற்றி மிகுதியாய்ப்
பரிந்துபேச நான் முன்வந்திருக்கிறேன். இப்போது
ஒரு புதிய நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறோம். அந்த
நிலைமையில், ஜனங்களுடைய உண்மையான நலத்தை உத்
தேசித்தும் ஆளுகையைப்பற்றி அதிகரித்துக் கொண்டே
வரும் அதிர்ப்தியைத் தடுக்கும்பொருட்டும், வரிசெலுத்
துவோர்களின் பிரதிநிதிகளுக்கு மாகாணத்தைப்பற்றிய
விஷயங்களில் உண்மையான செல்வாக்கைக் கொடுக்க
வேண்டியது அவசியமாயிருக்கின்றது. இந்த விஷயத்
தைப்பற்றிச் செய்யப்படும் எந்தஏற்பாடுகளும், தற்காலத்
தேவைகளுக்கு ஒத்தனவாயிருக்கவேண்டியது மல்லா
மல், எதிர் காலத்தில் அதிகரித்துண்டாகும் பாத்தியங்க
ளுக்குத் திர்ப்திகரமாய்ப் பரிகாரம் செய்யுமாறு காலக்கிர
மேணவிரிவாக்குவதற்கு யோக்கிய முள்ளனவாயுமிருக்க
வேண்டும். இப்போதுள்ள ஏற்பாடானது இந்த முடிவைப்
பெற முற்றிலும் தகுதியற்றதாயிருக்கின்றது. மாகாண
சம்பந்தமான விஷயங்களில் முடிவாய்த் தீர்மானம்செய்யும்
அதிகாரத்திற்கு ஆஸ்தானமாய் இப்போதிருக்கும் இந்தியா
கவர்ன்மெண்டைப் போயடையக்கூடிய மாகாணப் பிர
திநிதிகளின் சங்கியையானது, அவசியமாகவே மிகவும் குறை
ந்த அளவாகவேயிருக்கவேண்டும். மேலும் அந்த கவர்ன்
மெண்டார்முன், மாகாணக்கேள்விகளை யேதேனும் உப
யோகமுள்ளவிதமாய்க் கொண்டுவர அவர்களுக்குண்டா
கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைச்சலாக இருக்குமே
யொழிய வேறுவிதமாய் இருக்கமாட்டாது. ஆகையால்
ஜனப்பிரதிநிதிகள் மாகாண ஆளுகைமுறையில் அதி
கரித்துக்கொண்டும்வரும் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய
நிலைமையில் வைக்கவேண்டுமே யானால், மாகாணவிஷ

யங்களைமுடிவாய்த் தீர்மானிக்கும் அதிகாரத்தின் ஆஸ்தானத்தை மாகாணத்தலைஸ்தானங்களுக்கு மாற்றிக்கொண்டு வரவேண்டியதாய் ஏற்படுகின்றது. இந்திய இராஜமந்திரியானவர் (The Secretary of State for India) மாகாணச்சட்ட நிர்மாண சபைகளைச் சீர்திருத்த இப்போது சிந்தித்துவருகிறார். ஆயினும் இந்த நோக்கத்தைக்கொண்டு உண்மையாய்ச் சீர்திருத்தம் செய்யவேண்டுமானால், மாகாண கவர்ன்மெண்டார்களிடமிருந்து, இப்பொழுது அவர்கள்மேல் இந்தியாகெவர்ன்மெண்டார்செலுத்திவரும் அதிகாரத்தில் மிக்க பாகத்தை நிவர்த்திசெய்து, அதிகாரப்பிரிவினையின் உறுதியான ஏற்பாடுகளை நடைபெறச் செய்யாதவரையில் உண்மையான சீர்திருத்தத்திற்கு அற்பமான ஆதாரமேயிருக்கின்றது.

ஆயினும் அப்படிப்பட்ட எந்த அதிகாரப்பிரிவினை விஷயத்திலும் நான் மூன்று நிபந்தனைகளைச் சேர்த்து வைப்பேன். முதலாவது நிபந்தனை என்னவென்றால், எல்லா முக்கியமான மாகாணங்களிலும் கவர்ன்மெண்டின் உருவமானது, இங்கிலாந்திலிருந்து நியமனம் பெற்ற ஒரு கவர்னரையும் ஒருகாரிய நிர்வாகசபையையும் கொண்டதாயிருக்க வேண்டும். அவ்வக்காலங்களில் இந்தியாவின் ஆளுகையைப்பற்றிய விஷயங்களில், ஆங்கிலேய ஜனசமூகத்தின் சுபாவங்களிற்பழகிச் சுத்தமான மனதுடன் வருபவர்களினால் நன்மை யுண்டென்பதில் எனக்கு நம்பிக்கையிருக்கின்றது. மேலும் இந்த தேசத்தில் கவர்ன்மெண்டாருடைய மேன்மையான உத்தரவாதங்கள், பிரத்தியேக புருஷர்களைவிட மூன்று அல்லது நான்கு பேர்கள் சேர்ந்த ஒரு சபையாரால் மிக்கத்திறமாய்நிறைவேற்றக்கூடும் என்றும் நான்நினைக்கின்றேன். இ

ண்டாவது நிபந்தனை என்னவென்றால், மாகாண (பட்ஜெட்) அரசிறைக்கணக்கைப்பற்றிப் பூர்ணவிவாதம் செய்யும்பொருட்டு அது மாகாணசட்ட நிர்மாண சபையாரிடம் ஒப்புவிக்கப்படவேண்டும். இந்த மாகாண சட்ட நிர்மாணசபையானது சமீபகாலத்தில் விரிவுபெற்று அதிகமாய் ஜனப்பிரதிநிதியாகப்போகிறதென்று நம்புகின்றேன். சட்ட நிர்மாண சபையாருக்கு திருத்தங்களை எடுத்துச் சொல்ல அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். அரசிறைக்கணக்கு, சபையார்களால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். மூன்றாவது நிபந்தனை என்னவென்றால், சட்ட நிர்மாண சபையின் பிரதிநிதி சிலர்-மெம்பர்களில் மூன்றில் ஒருபாகஸ்தமிரண்டு வைத்துக்கொள்வோம்—மாகாண ஆளுகையைப்பற்றி ஒரு குறிப்பிட்ட சங்கதியை விவாதத்திற்காகக் கொண்டுவரவேண்டுமென்று அந்த சபையின் பிரசிடெண்டைக் கேட்டுக்கொண்டால், அந்த விஷயத்தைப் பற்றி விவகரிக்க அந்த சபை கூடும்படி செய்யவேண்டும். இரண்டாவது மூன்றாவது நிபந்தனைகளின் நோக்கம் என்னவென்றால், அரசிறை, நிர்வாகம் ஆகிய இந்த விஷயங்களில் இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் செலுத்தி வரும் அதிகாரத்தில் ஒரு பாகத்திற்குப் பதிலாக சட்டநிர்மாண சபையில் தடையின்றி விவகரிக்கும் அதிகாரத்தை அந்த மாகாணத்திலேயே வரிசெலுத்துவோர்களின் சார்பாய் ஸ்தாபிப்பதேயாகும்.

இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகாரப் பிரிவினையைப்பற்றி அடியிற்கண்ட உபாயத்தை நான்வற்புறுத்துகின்றேன்.

முதலாவது,—அரசிறையைப் பற்றி:—ரெவினியூ செலவு, இவற்றில் எதையேனும் பற்றித் தனித்தனியான

தலைப்புகள் (Heads) இருக்கவேண்டுமென்று நான் நினைக்கின்றேன். ஆனால் யாதேனும் சில தலைப்புகளில் ரிவினியூக்களும் செலவுகளும்சேர்ந்து முற்றிலும் இந்தியா கவர்ன்மெண்டதாயும், மற்றத்தலைப்புகள் முற்றிலும் மாகாணத்தியதாயும் இருக்கவேண்டும். இவ்வாறாக நான், இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்து இப்பொழுது மாகாண கவர்ன்மெண்டார் பெற்று வருகிற கிராண்டுகளுக்குப் பதிலாக, மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு பிரத்தியேகமான ரெவினியூ வருவாய்களைப் பகிர்ந்து வைப்பேன். மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு நான் ஒப்புவிக்கும் மூன்று முக்கிய (Major) தலைப்புகள், நிலத்தீர்வை (Land Revenue) ஆயம் (Excise) காடு (Forest) இவைகளேயாம். இவைகள் ஜன சமூகத்தினுடைய தினசரி ஜீவனத்தோடு நெருக்கமாய்ச் சம்பந்தப்பட் டிருக்கிறபடியால் அவைகளை மாகாண கவர்ன்மெண்டாருடைய பூர்ணமான அதிகாரத்திலேயே உசிதமாய் வைக்கலாம். இதற்கு மாறாகவே, அபினி, உப்பு, கடற் சுங்கம், விதிக்கப்பட்ட வரிகள், முத்திரைக் கடுதாசிகள், ரிஜிஸ்திரேஷன், சுதேச ராஜாங்கங்களிலிருந்துவரும் கப்பங்கள், இவற்றோடு தபால், தந்தி, நாணயசாலை, (தங்கசாலை) ரெயில்வே, பின்னும் பிரதான பாசனவேலைகள், இவைகளிலிருந்துவரும் ரிவினியூக்களையும் செலவுகளையும் முற்றிலும் (Imperial) இந்தியா கவர்ன்மெண்டின் பாகமாய்ப் பாவிக்கலாம். இந்தமாதிரி பிரிவிணைசெய்தால் எல்லாமாகாணகவர்ன்மெண்டார்களுடைய ரிவினியூ வசூல்கள் அவர்களுடைய தற்காலச்செலவு திட்டத்திற்கு அதிகமாகக் காணப்படும். இந்தியா கவர்ன்மெண்டார் விஷயத்திலோ இதற்கு மாறாகக்காட்டும். பிரதான கவர்ன்மெண்டாருக்கு உண்டாகும் இந்தக் குறைச்சலை

ஈடு செய்வதற்காக அந்த கவர்ன்மெண்டாருக்கு மாகாண கெவர்ன்மெண்டார் வ்ருஷா வருஷம் நிச்சயிக்கப்பட்ட தொகைகளை பகுதியாய்க் கட்டிவரவேண்டும். இந்தத் தொகை இவ்வளவு என்பதை, ஒவ்வொரு மாகாணத்திலும் பஞ்சத்தின் பொருட்டு சராசரி செலவழியக்கூடியதாயிருப்பதையும், மாகாண ஐவேஜியிலிருந்து அங்கங்கேயுள்ள (Local Bodies) லோகல் சபையார்களுக்கு ஜாஸ்தியான தொகைகளைக் கொடுக்கவேண்டிய அவசியத்தையும் ஜாக்கிரதையாகக் கவனித்துத் தீர்மானிக்கவேண்டும். இவ்வாறு செலுத்தப்படும் பகுதிகளைப் ஐந்து அல்லது பத்து வருஷங்களுக்கு ஒருதரம் புதுப்பிக்கவேண்டும். அப்படி புதுப்பிப்பதை பற்பல மாகாணங்களின் ரெவினியூ மெம்பர்கள் சேர்ந்து இந்தியா கவர்ன்மெண்டாரின் அரசிறை மெம்பரின் அக்கிராசனத்தின்கீழ் நடத்தப்படும் ஒரு (Conference) ஆலோசனையில் செய்யவேண்டும். சடுதியாயும் அபூர்வமாயும் நேரும் அவசர சங்கதிகளை சமாளிப்பதற்காக, இராஜப்பிரதிநிதிக்கு இந்தப் பகுதித்தொகைகளைத் தாம் உசிதமாய் நினைக்கிறபடி மாற்ற அதிகாரம் இருக்கவேண்டும். அவ்வாறு மாற்றுவதில் குறையுற்றதாய் நினைக்கும் எந்த மாகாண கவர்ன்மெண்டாரும் ஸிகிரெடரி ஆப் ஸ்டேட்டு என்னும் இராஜமந்திரியிடம் அப்பீல் செய்துகொள்ளப் பாத்தியமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

தற்காலத்தில், மாகாண கெவர்ன்மெண்டார்களுக்கு வரி விதிக்கும் அதிகாரங்களைக் கொடுக்கமாட்டேன். ஆனல் இந்த விஷயத்தைப்பற்றி, புதிய ஏற்பாடுகள் எவ்வாறு வேலைசெய்கின்றன வென்பதைப்பற்றிப் போதுமான அனுபவம் உண்டானபிறகு மறுபடியும் ஆலோசிக்கலாம்.

மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு மாற்றிவிடவேண்டுமென்று பிரேரேபிக்கப்பட்ட மூன்று தலைப்புகளான ரிவினியூ விஷயத்தில், வரியை அதிகப்படுத்துவனவாய் அப்போதப்போது நிலத்தீர்வையில்செய்யப்படும் மாறுதல்கள், எந்தப் பெயரினால் அவைகளைப்பற்றி பிரஸ்தாபித்து வந்தாலும், ஒருவிசேஷித்த அதிகாரத்திற்குள்பட்டிருக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது. ஏனென்றால், மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு அவைகளினால் ஜாஸ்தியான ரிவினியூ வருவதில் இதற்குமுன் இருந்ததைவிட அதிகமான அக்கறை உண்டாகும் என்பது திண்ணம். ஆகையால், ஏற்பட்ட தீர்வைகளை மாற்றும் விஷயங்களையெல்லாம் மாகாண கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்வதற்கு முன்னால் அவ்விடத்திய சட்ட நிர்மாணசபையார் முன் விவாதத்திற்கு வைக்கவேண்டுமென்று பிரேரேபிக்கின்றேன்.

கடன் வாங்கும் அதிகாரங்களைப் பற்றியோவென்றால், அவைகளையும் தற்காலத்தில் எவ்விதத்திலும் இந்தியா கவர்ன்மெண்டார்வசமே வைப்பதில் எனக்கு விருப்பம் இருக்கின்றது. மாகாண கெவர்ன்மெண்டார்களுக்கு, தனித்தனியாய்க் கடன்வாங்கும் அதிகாரம் கொடுத்துவிடும் பக்ஷத்தில், அவர்களுக்குள்ளே அல்லது அவர்களுக்கும் இந்தியா கவர்ன்மெண்டார்களுக்குமுள்ளே போட்டியுண்டாகாமல் தடுப்பது அசாத்தியமாய்ப்போய் விடுமென்றும், இதனால் அவசியமாய் இப்போதிருப்பதைவிட ஜாஸ்தி வீதமான வட்டி கொடுக்கும்படி நேரிட்டுப் பொதுவாய் வரிசெலுத்துவோருக்கு நஷ்டமுண்டாகுமென்றும் நான் அஞ்சுகின்றேன். ஆயினும் மாகாண கவர்ன்மெண்டார் தங்களுடைய ரிவினியூவுக்குத் தக்க

படி, இந்தியா கவர்ன்மெண்டாரால் வருஷாவருஷம் வாங்கப்படுகிற மொத்தக் கடன்தொகையில் ஒரு பாகத்தை அவசியமானால் கேட்டு வாங்கிக்கொள்ள பாத்தியமுள்ளவர்களாகச் செய்யும்படி ஒரு வழி யேற்படுத்துவதில் எனக்கு சம்மதம். பஞ்ச காலங்களில் பஞ்சத்திற்காக சேகரித்து வைத்திருக்கிற தொகையைச் செலவழித்து விட்டிருக்கும் மாகாண கவர்ன்மெண்டார்களுக்குக் கடன் வாங்கவேண்டியது அவ்சியம் என்று தோன்றினால், அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாருக்கிருக்கும் கடன் வாங்கும் அதிகாரத்தில் முதல்பாத்தியத்தைக் கொண்டவர்களாயிருக்கவேண்டும்.

செலவுவிஷயத்தைப்பற்றிப் புதியஉத்தியோகங்களை ஏற்படுத்தும் விஷயத்திலும், சம்பளம் பென்ஷன் இவைகளின் திட்டங்களைப் பற்றியும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு இப்பொழுதிருக்கும் அதிகாரத்தைக் குறைப்பதில் எனக்கு சம்மதமில்லை. இது நீங்கலாக, மாகாண கவர்ன்மெண்டார் தங்களுடைய ரிவினியூக்களைத்தங்களுக்கு யுக்தமாய்த் தோன்றுகிறபடி செலவிடப் பூர்ண அதிகாரத்தைக் கொடுப்பதில் எனக்கு இஷ்டம்.

நிர்வாகத்தைப்பற்றிய விஷயங்கள்:—

அரசிறை விஷயமான அதிகாரப்பிரிவினையைப்பற்றி இவ்வளவு தான். நிர்வாகத்தை பற்றிய விஷயங்களுக்கு வருங்கால், எனக்குத் தோன்றுகிற பிரிவினையின் முதலாவது அம்சம் என்னவென்றால், இராணுவத்தினாலும் கப்பற்படைகளினாலும் உள்ளதற்காப்புகள், அன்னிய இராஜாங்க விஷயங்கள், நாணயங்கள், கஸ்டம்கள், தபால், தந்தி, ரயில்வே, பொதுவாய்த்தீர்வைவிதித்தல், பொதுவான சட்ட நிர்மாணம், பின்னும் இவைபோன்ற

வைகள், நேரே இந்தியா கவர்ன்மெண்டாரின் வசம் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்பதும், தேசத்தின் மற்ற உள்நாட்டு நிர்வாக விஷயங்கள் மாகாண கவர்ன்மெண்டார்களிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்பதுமே. இவ்வாறு மாகாணகவர்ன்மெண்டார்களிடம் ஒப்புவிக்கப்பட்ட காரியங்களைச் செய்வதில் சிறு விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டார் பிரவேசிக்காமல் இருக்க வேண்டியது. ஆயினும், பெரிய இராஜதந்திர காரியங்களை தேசத்தின் உள்நாட்டு நிர்வாக விஷயத்திலும் இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய வசத்திலேயே வைத்துக் கொண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்வதனால் பற்பல மாகாணங்களிலும் ஒரேதன்மையான நிர்வாகம்நிச்சயமாய் ஏற்படுவதுடன் சீர்திருத்தங்களும் செய்யக்கூடும். இந்த சீர்திருத்தங்களை மாகாண கெவர்ன்மெண்டார்கள் செய்யும்படி விட்டுவிட்டால் சீர்திருத்தம் செய்ய ஆரம்பிக்கவே மாட்டார்கள். உதாரணமாக, இந்தியா கவர்ன்மெண்டாரிடத்தில் பஞ்சத்தையோ மகம்மாரியையோ நிவர்த்திக்கும் விஷயமாய் பற்பல மாகாணங்களிலும் செய்யப்படும் இராஜதந்திரங்களில் வேற்றுமை உண்டாகாமல் தடுக்கவோ, அல்லது இலவசமான கட்டாய ஆரம்பப் படிப்பைப்பரவச் செய்வதும் நீதி இலாகாவையும் நிர்வாஹ இலாகாவையும் வெவ்வேறாய்ப் பிரிப்பதும் பின்னும் இவை போன்ற முக்கியமான சீர்திருத்தங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரவோ, அதிகாரம் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட இராஜதந்திர விஷயமாய்ப் பொதுவான அதிகாரத்திற்கு உட்பட்டு மாகாண நிர்வாக விஷயங்களில்மாகாண கவர்ன்மெண்டாருக்கு நிர்ப்பந்தமில்லாமல் இருக்கவேண்டும்.

ஜில்லா அதிகாரப்பிரிவினை.

நான் இப்பொழுது ஜில்லா ஆளுகையைப்பற்றிப் பேச வருகிறேன். இங்கேயும் அதிகாரப்பிரிவினையின் அவசியமானது வெளிப்படையா யிருக்கின்றது. ஆனால் அந்த அதிகாரப்பிரிவினையானது ஆளுகையைப்பற்றிய காரியங்களில் ஜனப்பிரதிநிதிகளை ஜாஸ்தியாய்ச் சேர்ப்பதற்கு வேண்டிய உபாயங்களைக் கொண்டதாயிருக்க வேண்டும். நிர்வாக அதிகாரம்பெற்றடிபார்ட்டுமெண்டுகளை அதிக்கப்படுத்தியிருப்பதினாலும், மாகாண கவர்ன் மெண்டுகளின் சிக்கிரடெரி ஆபீசுகளில் செலுத்திவரும் அதிகாரம் வரவர அதிகரித்துக் கொண்டே வருவதினாலும், ஜில்லாவுக்குத் தலைமையாயிருக்கிற கலெகட்டருடைய நிலைமையானது மிகுதியாய்க் கெட்டுப்போயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஜனங்கள் மிகவும் எளிதான ஆளுகையை அபேக்ஷிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதில் மிக்கபாகம் ஸ்தலத்திலேயே அபேக்ஷிக்கிறார்கள். ஆனால் இந்த உத்தேசமானது கலெக்டருக்கு அதிகமாக அதிகாரத்தைக் கொடுப்பதினால் சித்திக்க மாட்டாது. கலெக்டர் தன்னுடைய ஜில்லாவில் ஒருவாறான தந்தையின் அதிகாரத்தை செலுத்திப்பிரயோஜனமடையக் கூடியதாயிருந்தகாலம் கடந்துவிட்டது. படிப்பானது பரவிக்கொண்டு வருவதும், புதியஎண்ணங்களின் கொளரவமும், தேசபாஷா பத்திரிகைகள் வரவர அதிகரித்து வருவதும், பழைய காலத்திய கலெக்டரின் கருணையுள்ள ஸ்வேச்சாதிபத்தியத்தை திரும்ப ஸ்தாபிப்பதை அசாத்தியமாகச்செய்து விட்டன. ஒரே பரிகாரம், கிராமங்களிலும் அதிகாரப் பிரிவினைக்கு வேண்டிய உறுதியான ஏற்பாடுகளைச் செய்து அங்கேயிருந்து ஸ்தல சுயஅரசாட்சியை

அமைத்து வருவதில் இருக்கின்றது. அந்தவேலையிலுள்ள கிராமத்திலேலோ அல்லது ஆரம்பத்தில் சம்பவிக்கக் கூடிய தவறுதல்களினாலோ அது தடைப்படலாம் என்பதில் சந்தேகமில்லை. கிராமப்பஞ்சாயத்துகளை ஏற்படுத்த வேண்டும். லோகல் போர்டுகளும், முனிசிபல் போர்டுகளும் உண்மையாகவே ஜனப்பிரியமுள்ள சபைகளாகச் செய்யப்படவேண்டும். இப்போது அந்தச் சபைகளுக்கு கிடைக்கக்கூடியதை விட ஜாஸ்தியான வருவாய்கள் அந்தச் சபைகளுக்குக்கிடைக்கும்படி செய்யவேண்டும். கடைசியாக, ஜில்லா கௌன்சில்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அந்த கௌன்சில்களை கலெக்ட்டர் முக்கியமான விஷயங்களில் ஆலோசனை கேட்கக் கடமைப்பட்டிருக்கவேண்டும். அந்தக் கௌன்சில்களுடைய ஒத்தாசையின்பேரில் கலெக்ட்டர்கள், ஜில்லாவின் ஆளுகையைப்பற்றிய விஷயங்களை, ஸ்தலத்திலேயே, வர வர ஜாஸ்தியாகமுடிவாய்த்தீர்மானம் செய்ய அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

கிராமப்பஞ்சாயத்துகள் :— நான் முதல் முதல் கிராமப்பஞ்சாயத்துகளைப்பற்றிப் பேசுகிறேன். இந்த இராஜதானியில் (பம்பாயில்) உள்ள பிரிடிஷ் ஜில்லாக்களில் சுமார் 26,000 கிராமங்களிருக்கின்றன. அவற்றில் சுமார் 16,000 - கிராமங்களில் 500-க்குகுறைந்த ஜனத்தொகையிருககிறது. பின்னும் 5,000 கிராமங்கள் 500-க்குமேல் 1,000க்கு உள்பட்ட ஜனத்தொகையுள்ளனவாயும், பாக்கியுள்ள கிராமங்கள் 1000-க்கு மேற்பட்ட ஜனங்கள் உள்ளனவாயு மிருக்கின்றன. 500-ம் 500-க்கு மேற்பட்டும் ஜனத்தொகையுள்ள கிராமங்களிலெல்லாம் 5 அல்லது 7 பேர்கள்கொண்ட ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தும்படி சட்டம் பிறப்பிவிக்கவேண்டும். 500 - ஜனத்தொகைக்குக்குறைந்த கிராமங்கள் அக்

கம் பக்கத்திய பெரிய கிராமங்களோடு சேர்க்கவோ அல்லது யூனியன்களாகச்செய்யவோ படவேண்டும். இந்தப் பஞ்சாயத்தில் அமர்கின்றவர்கள், முற்றிலும் கிராமத்தலைமைக்காரனும், கிராம போலீசு பேடல் என்று தனியாக ஏற்பட்டிருக்கிற இடங்களில் அவனும், கிராம ஆலோசனைக்காரனும், தக்கண (Dekhan) விவசாய நிவர்த்தி ஆக்ட்டுப்படி நியமிக்கப்படுவோருமாம். இவர்கள் கிராமங்கள்தோறும் நியமிக்கப்படுவார்கள். ஏனென்றால் அந்த சட்ட நிபந்தனைகள் இராஜதானிமுழுவதும் வியாபிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட குறைந்த நிலத்தீர்வை—10 ரூ. என்றுவைத்துக்கொள்ளுவோம்.—செலுத்தி கிராமத்தார்களால் தெரிந்தெடுக்கப்படுகிற 2-அல்லது 3-பேர்களுங்கூட இருக்கவேண்டும். இந்தப் பஞ்சாயத்தார்களுக்கு அடியிற்கண்ட கடமைகளும் அதிகாரங்களும் கொடுபடவேண்டும்:

(a) 50-ரூபாய்க்கு அதிகப்படாத பண வியாச்சியங்களைத் தீர்மானித்தல். இந்த வியாச்சியங்களில் பஞ்சாயத்தார்செய்யும் தீர்மானமானது, பூர்ணமான பக்ஷபாதம் அல்லது மோசம் நடந்திருப்பதாய்ச் சொல்லாதவரையில், முடிவான தீர்மானமாயிருக்கவேண்டும். இந்த இராஜதானியில் வருஷந்தோறும் கொண்டுவரப்படும் மொத்த வியாச்சியங்களில்— சுமார் $1\frac{1}{2}$-லட்சத்தில்—சரிபாதி, அல்லது எழுபத்தையாயிரம், வியாச்சியங்கள் 50-ரூபாய்க்குக் குறைந்த வியாச்சியங்களாகவே யிருக்கின்றன. பஞ்சாயத்தார்கள் கிராமங்களுக்குப் பொருத்தமானபடி ஸ்தலத்திலேயே ஒருவிதமான கலப்பற்ற நீதியைச் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கலாம். இது நியாய ஸ்தலங்களில்

நடக்கும் செலவையும், தீர்மானத்தையும், ஒழுங்குதவறு தலையும்விட மிகவும் சிலாக்கியமானதே. சிவில் விவகாரங்களில் இப்படிப்பட்ட அதிகாரத்தைப்பஞ்சாயத்தார்கள் மகாராஷ்டிரருடைய அரசாட்சியிலும் இந்த இராஜதானியில் ஆங்கிலேய ஆளுகையின் துவக்கத்திலும் செலுத்தி வந்தார்கள். வியாச்சியச்செலவுக்காக வியாச்சியத்தின் பெறுமானத்தின்பேரில் ரூபாய்க்கு ஒரு அணா விகிதம் வசூலிக்கலாம். கட்சிக்காரர்களுக்கு ஸ்டாம்பு செலவும் மற்ற கட்டணங்களும் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

(*b*) அற்ப குற்றங்களாகிய, திருட்டுப்போன சொத்தின் பெறுமானம் ரூ. 10-க்கு அதிகப்படாத சொற்பத் திருட்டு, சொற்ப அடி தடிகள், சொற்பக்காயம் உண்டாக்கல், வசவு, நூசென்ஸுகள் குற்றங்கள் போன்றவைகளை விசாரித்தல்.

(*c*) கிராமத்துக்குரிய மராமத்துவேலைகளைச் செய்து முடிப்பதும் கண்காணிப்பதும்.

(*d*) கிராமக்காடுகளை நிர்வகிப்பது.

(*e*) சாங்கிஷனாயிருக்கிற கைத்தொகைகளைக் கிராமத்தில் விநியோகிப்பது.

(*f*) பஞ்சம், மகம்மாரி இவற்றின் பரிகாரங்களைப் பற்றிய காரியங்களை நடத்துவது.

(*g*) கிராம நீர்ப்பாய்ச்சல், கிராமசுத்தி இவைகளில் அதிகாரம் செலுத்துவது.

(*h*) . பள்ளிக்கூடங்களை மேல்விசாரணைசெய்வது.

(*i*) ஆடுமாடுகளின் கொண்டித்தொட்டிகளை மேல்விசாரணை செய்வது.

பஞ்சாயத்தார்களுக்கு ஐவேஜியானது, தாலூக்கா போர்டாரால் கொடுக்கப்படுவதும், சிவில் வியாச்சியங்களில் வசூல்செய்யப்படும் செலவு தொகைகள், ஸ்தலத்திலேயே விதிக்கப்படும் அபராதங்களும் இடுதண்டங்களும், கிராமக்காடுகளிலிருந்துவரும் வசூல்களும், கொண்டித்தொட்டி வருமானங்களும் ஆகும். கொவாப்பிரேட்டிவ் கிரெடிட் சொஸைடிட்டி (Co-operative Credit Society) விஷயத்தில் நடத்தப்படுவதுபோல, ஒருவிசேஷித்த உத்தியோகஸ்தரை நியமித்து, கொஞ்சகாலம்வரையில் இந்த பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி, வழிகாட்டி, அவைகளுடைய வேலைகளைக் கவனித்துவரும்படி கவர்ன்மெண்டார் செய்ய வேண்டியது அவசியமாகலாம்.

தாலூக்காபோர்டுகள்.

ஸ்தல சுய அரசாட்சி யென்னும் ஏணியில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அடுத்தபடியில் இருப்பது தாலூக்கா லோகல்போர்டுகளாம். இங்கே அதனுடைய சுவரூபம் ஏற்கனவே யிருக்கின்றது. ஆனல் இப்பொழுது இருக்கிற சபையார் ஏறவோ குறையவோ அதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்டிருப்பது மன்றி, அவைகளுடைய வருவாய்கள் மிகசொற்பமா யிருக்கிறபடியால் அவைகளின் அங்கத்தினர்கள் தங்கள் வேலையில் உண்மையில் பற்றுள்ளவர்களாய் இருப்பார்களென்று எதிர்பார்ப்பது அவ்வளவு சரியா யிருக்கவில்லை. இந்த சம்பந்தமாய் நான் வற்புறுத்தப் பிரியப்படும் முதல் சீர்திருத்தம் என்னவென்றல், தாலூக்கா லோகல்போர்டு மெம்பர்கள் எல்லாரையும் இப்பொழுது ஜனங்கள் நியமிப்பதாய்ச் செய்ய வேண்டும். அவசியமான பொழுது மாமல்தார் வீட்டிங்கு

களில் வந்திருக்கும்படி அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். கவர்ன்மெண்டாருடைய புத்திமதியையும் எச்சரிப்பையும் அசட்டை செய்துவிட்டால் சிலகாலம் அந்த போர்டை ஸஸ்பெண்டுசெய்து, அதற்குப்பதிலாகச் சிலரை நியமித்துப்பின்னால் அந்த போர்ட் வேலைசெய்யும்படி செய்யும் அதிகாரத்தை கவர்ன்மெண்டார் தங்கள் வசமே வைத்திருக்கவேண்டும். இப்படிச்செய்வதால்தான், இப்போதுள்ள நிலைமையில், போதுமான பொறுப்புணர்ச்சியை இந்த போர்டார்களிடத்தில் உண்டாக்கலாம். சொற்ப காலத்திற்கு என்ன அசௌகரியம் நேர்ந்தாலும், கடைசியில் அது உண்மையான ஸ்தல சுய அரசாட்சி முறையைப் பலப்படுத்துவதால் ஈடாக்கிவிடும். ஆனால் தாலூக்கா போர்டுகளின் அமைப்பில்செய்யப்படும் ஒரு சீர்திருத்தமானது அப்பொழுதே அந்த போர்டாருடைய சுவாதீனத்தில் அதிகரித்த வருவாய்களை வைக்காத பக்ஷத்தில், சொற்ப பிரயோஜனமுள்ளதாகவே யிருக்கும். இந்த இராஜதானியில் இந்த போர்டுகளின் ரிவினியூவானது தற்காலத்தில் முக்கியமாய் ஒருஅணா தீர்வையிலிருந்தோ, அல்லது மாகாண வருவாய்களிலிருந்து கிடைத்த பகுதிகளிலிருந்தோ, டிஸ்திரிக்டு லோகல் போர்டாரால் பிரித்துக் கொடுக்கப்படும் தொகையாக இருக்கிறது. சென்னப்பட்டணத்தில் தாலூக்கா போர்டார்கள், தங்களுக்கே, ஒருஅணா வரியிலிருந்து வரும் வருமானத்தில் பாதியை வைத்துக்கொண்டுவிடுகிறார்கள். மற்றப் பாதிதான் டிஸ்திரிக்டு லோகல் போர்டார்களுக்குப்போய்ச் சேருகின்றது. இவ்விடத்திலோவென்றால், டிஸ்திரிக்டு போர்டார்கள் வரிவருமானத்தைப் பிரித்துக்கொடுப்பதைத் தங்களிடமேவைத்துக் கொண்டு, படிப்புக்காக

உள்ள பாகமும் வைத்தியத்திற்காகவும், மிருக வைத்தியத்திற்காகவும் கொடுபடும் தொகைகளும் நீங்கலாக, பாக்கித்தொகைகளில் தங்களுக்கு எவ்வளவு அவசியம் என்று தோன்றுகின்றதோ அவ்வளவு தொகையையும் தங்களுக்கே வைத்துக்கொண்டு, மிஞ்சியதொகையைப் பற்பல தாலூக்காபோர்டுகளுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். அதனுடைய பிரயோஜனம் என்னவென்றால், தாலூக்காபோர்டார்கள் சாதாரணமாய், பாகிக்கப்பட லாயக்காயிருக்கிற பாதித்தொகையைக் காட்டிலும் குறைவாகவே பெறுகிறார்கள். இவ்வாறாக இந்த இராஜதானியின் மூன்று பாகங்களிலும் 1905-06 இந்த வருஷத்தில் வரி வருமானங்களிலிருந்து டிஸ்டிரிகட்டு போர்டார் படிப்புக்காகவும் வைத்தியத்திற்காகவும் மிருக மருத்துவத்திற்காகவும் கொடுபடும் தொகைகள் நீங்கலாக, தங்களுக்கே நிறுத்தி வைத்துக்கொண்ட தொகைகளும், அவர்களால் தாலூக்கா போர்டுகளுக்கு பிரித்துக்கொடுக்கப்பட்ட தொகைகளும் அடியிற்கண்டபடியாம்:—

வடபாகம்:— டிஸ்திரிகட்டு போர்டுகள்-3·23 லக்ஷம்.
தாலூக்கா போர்டுகள்-2·23 லக்ஷம்.

மத்தியபாகம்:— டிஸ்திரிகட்டு போர்டுகள்-3·64 லக்ஷம்.
தாலூக்கா போர்டுகள்-1·08 லக்ஷம்.

தெற்கு பாகம்— டிஸ்திரிகட்டு போர்ட்டுகள்-2·39 லக்ஷம்.
தாலூக்கா போர்டுகள் 37 ஆயிரம்.

பின்னும் 1904-05 இந்தவருஷத்தில் தொகைகள் அடியிற்கண்டபடியாகும்:—

வடபாகம்:— டிஸ்திரிகட்டு போர்டுகள்-2·23 லக்ஷம்.
தாலூக்கா போர்டுகள்-83 ஆயிரம்.

மத்தியபாகம்:— டிஸ்திரிகட்டு போர்டுகள்-3·53 லக்ஷம்.
தாலூக்கா போர்டுகள்-1·32 லக்ஷம்.

தெற்குபாகம்:— டிஸ்திரிகட்டு போர்டுகள்-2-72 லக்ஷம்.
தாலூக்கா போர்டுகள் 99 ஆயிரம்.

இப்பொழுது நான் பிரேரேபிப்பது என்னவென்றால், ஒரு அணு தீர்வை வருமானத்தின் மொத்தத் தொகையையும், படிப்புக்காக வுள்ளபாகமும், வைத்தியத்துக்காகவும், மிருக மருத்துவத்துக்காகவும் கொடுபடும் தொகைகளும் நீங்கலாக, தாலூக்கா போர்ட்டார்களுடைய சுவாதீனத்திலேயே வைக்கவேண்டும். டிஸ்திரிகட்டுபோர்டார்கள் தங்களுக்கு உண்டாகும் நஷ்டத்தை ஈடு செய்வதற்காக எக்ஸைஸ் தீர்வையிலிருந்து ஒரு பாகத்தையோ, மாகாணப் பொக்கிஷத்திலிருந்து ஒரு பகுதியையோ பெறவேண்டும். தற்காலத்தில் தாலூக்கா போர்டுகளும் டிஸ்திரிகட்டு போர்டுகளும், ஜில்லாக்களின் சுய அரசாட்சியில் சிறிதும் பெரிதுமாகிய அம்சங்கள் என்று சொல்லுமாறு இருக்கின்றன. இவைகளுக்குப் பதிலாக கிராம பஞ்சாயத்தும், தாலுக்கா போர்டும் முறையே சிறிதும் பெரிதுமாகிய அம்சங்களாகசெய்யப்பட்டால், கிடைக்கக்கூடிய வருவாய்கள் சொற்பமாயிருக்கிறதற்கு மிகவும் ஒத்ததாயிருக்கும். மேலும், ஸ்தல சுய அரசாட்சியானது மிகவும் ஜாஸ்தியாய் திர்ப்திகரமான பிரயோஜனத்தைத்தரும். அன்றியும்இந்திய ஜில்லாக்களுடைய விஸ்தீர்ணமானது மிகவும் ஜாஸ்தியாயிருக்கிறபடியால் கிராமங்களில் மிகவும் பலமாயிருக்கிறதும், தாலுக்காக்களில் சுமாராய்ப் பலமாயிருக்கிறதும், காரிய சித்தியோடு கூடின ஸ்தல சுய அரசாட்சிக்கு இன்றியமையாதது

மான, அங்கங்குள்ள ஐக்கியமத்திய உணர்ச்சியானது ஜில்லாவுக்குப்போகும் பொழுது ஜாஸ்தியாய் குறைந்து போய் விடுகிறது. இராஜதானியிலுள்ள ஒருஜில்லாவின் சராசரி விஸ்தீர்ணம்சுமார் 4000 சதுரமயிலாகவும், தாலுக்காவின் விஸ்தீர்ணம் 400 சதுரமயிலுக்கு அதிகமாகவும் இருக்கின்றது. தாலூக்காபோர்டுகளில் அமர்ந்திருப்பவர்கள்தாலுக்காவின் பற்பல பாகங்களின் ஸ்திதியையும் தேவைகளையும் சுமாராய்த் தெரிந்திருப்பார்களென்று எதிர்பார்க்கக் கூடும். ஆனால் அப்படிப்பட்ட சுவானுபவம் டிஸ்திரிகட்டுபோர்டு மெம்பர்களுக்குத் தங்கள் ஜில்லா முழுவதைப்பற்றியும் இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால் டிஸ்திரிகட்டு போர்டு மெம்பர்கள் தங்களுடைய, அல்லது துரைத்தனத்தாருடைய, உத்தியோகஸ்தர்களின் ஆலோசனையைக் கேட்டு மிகுதியாய் நடத்தவேண்டும். அவர்களுக்குத் தங்கள் காரியங்களின் ஆளுகையில் திர்ப்திகரமாய்ப் பொதுவான அதிகாரத்தைச் செலுத்தவல்லவர்களாயிருக்கும்படி போதுமானபடி ஸ்தலத்தின் ஞானமும், ஸ்தல ஐக்கிய உணர்ச்சியும் இருந்தாலும், எந்த அளவுக்கு தாலூக்கா போர்டார்கள் தகுதியுள்ளவர்களா யிருக்கின்றார்களோ அந்த அளவுக்கு அந்தக்காரியங்களை நடத்தத் தகுதியுள்ளவர்களாய் இருக்கவில்லை. பங்கிடுவதற்கு ஜாஸ்தியாய் ஸ்தல ரிவினியூக்கள் கிடைப்பனவாயிருந்தால் டிஸ்திரிகட்டு போர்டுகளுக்கு அவைகளில் பின்னும் உறுதியான ஒருபாகம் கிடைப்பதைப்பற்றி நான் கவனிக்கமாட்டேன். ஆனால் கிடைக்கக் கூடிய வருவாய்கள் மிகவும் சொற்பமா யிருக்கிறபடியால் — ஜில்லாவிலிருந்து பிரத்தியேகமாயிருக்கிற தாலூக்காவின் ஸ்தலத் தேவை

களுக்கே போதாதபடியிருப்பதினால்,—மிகவும் உத்தமமான ஏற்பாடு எனக்குத்தோன்றுவது என்னவென்றால், அவைகள் முழுவதையும் தாலூக்கா போர்டார்களின் சுவாதீனத்திலேயே வைத்து, அதனால் அங்கங்கு சுயஅரசாட்சியானது சுமாராய் பலன்தரக்கூடிய அளவுக்கு வரும்படி அதற்கு உண்மையான ஒரு அவகாசத்தைக் கொடுக்கவேண்டுமென்பதே. தாலூக்கா போர்டார்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட கிராம பஞ்சாயத்தார்களுக்கு சிறிய தொகைகளைப் பகிர்ந்துகொடுக்கக் கடமைப்பட்டிருக்கவேண்டும்.

தாலூக்கா போர்டார்களுடைய அதிகாரங்களைப் பற்றி, இப்போதைய சட்டத்தின் நிபந்தனைகள் போதுமானபடி விரிவாயிருக்கின்றனவென்று நான் நினைக்கிறேன். ஆயினும் தாலூக்கா போர்டார்களுடைய பட்ஜெட்டுகளை (வரவுசெலவு கணக்குகளை) மாற்றுவதில் டிஸ்திரிக்ட் போர்டார்களுக்கு உள்ளதும் அவர்கள் அடிக்கடி செலுத்திவருவதுமான அதிகாரத்தை எடுத்து விடுவதில் எனக்குப்பிரியம். தாலூக்கா போர்டார்கள் தங்கள் வருவாய்களுக்குட்பட்டு, பிறருடைய கையிடுகையின்றித் தங்களுடைய பட்ஜெட்டுகளை ஏற்படுத்த சுவாதீனமுள்ளவர்களாய் இருப்பதில் எனக்குப்பிரியம். மேல் அதிகாரிகளுடைய சாங்கிஷன் இல்லாமலே அவர்கள் மற்றவர்களோடு ஒன்றுசேர்ந்து, ஒரேசெலவாய்ச்செய்யவோ, ஒரேசிப்பந்திகளாய் வைத்துக்கொள்ளவோ, அதிகாரமும் கொடுக்க எனக்கு இஷ்டம்.

முனிசிபாலிட்டிகள்.

தாலூக்கா போர்டுகளின் அமைப்பைப்பற்றி நான் மேலே சொல்லியிருப்பவை ஜில்லாவிலும் தாலூக்காவிலும் உள்ள பட்டணங்களி லிருக்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் பொருந்தும். இந்தச் சபையார்களை இப்பொழுது ஜனங்கள் நியமிப்பதாய்ச் செய்யவேண்டும். கவர்ன்மெண்டாருடைய புத்திமதியையும் எச்சரிப்பையும் அசட்டை செய்துவிட்டால் சிலகாலம் அந்தச் சபையாரை சஸ்பெண்டுசெய்து அவர்களுக்குப்பதிலாகச் சிலரை நியமிப்பதினால் அவர்களை வேலைசெய்யும்படிச் செய்யும் அதிகாரத்தைக் கவர்ன்மெண்டார் தங்கள்வசமே வைத்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஆரம்பத்தில் உண்டாகக்கூடிய தவறுதல்களைக் கவனிக்காமலே இந்த முனிசிபாலிட்டியார்களிடத்தில் அபின்னமான உத்திரவாதத்தைச்சுமத்தினாலொழிய, இந்த ஸ்தாபனங்கள் ஸ்தல ஆளுகையைப்பற்றிய திறமையான உபகரணங்களாகவுமாட்டா. மேலும் அவைகள், சுய அரசாட்சியாகிய தந்திரத்தில் ஜனங்களைக் கற்பிக்கும் கல்விச்சாலையாக உபயோகப்படும் உத்தமமான காரியத்தை நிறைவேற்றவுமாட்டா. தாலூக்கா போர்டுகளைப்போலவே நமது முனிசிபாலிட்டிகளும் தங்கள் வருவாய்களின் குறைவினால் பாதிக்கப்படுகின்றன. ஆனால் படிப்பும், சுகாதாரத்தையும், தண்ணீர் சௌக்கியத்தையும்பற்றியபெரியதந்திரங்களும்நீங்கலாக, மற்ற விஷயங்களில் அவைகள் தங்களையே சார்ந்திருக்க வேண்டுமென்பது கிரமமே. பெரிய தந்திரங்கள் நிச்சயமாகவே இந்த சபையார்களின் திராணிக்கு முற்றிலும் அதிகமானவைகள். மாகாண ரிவினியூக்களிலிருந்து ஆரம்பச்

செலவுக்காக நிச்சயமான தொகைகளைக்கொடுத்து உதவி செய்யாவிட்டால் அவைகளை நிறைவேற்றுவது அசாத்திய மாகும். மேலும் அவைகளின் எல்லைக்குள்ளே அதிகரித்துக்கொண்டேவரும் கல்வித்தேவைகளுக்குத்தகுதியான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் கவர்ன்மெண்டாரிடமிருந்து விசேஷ ஒத்தாசை இன்றியமையாதது. அதிகாரங்களைப் பற்றி இப்போதைய ஆக்ட்டுமொத்தத்தில் போதுமானது. ஆனால் இங்குமங்கும் இப்போதைய நிர்ப்பந்தங்களைச் சிறிது சிறிது நிவர்த்திப்பது அவசியமாயிருக்கலாம்.

டிஸ்டிரிக்ட்டு போர்டுகள்.

டிஸ்டிரிக்ட்டு போர்டானது, தாலூக்கா போர்டுகளையும், முனிசிபாலிட்டிகளையும் காட்டிலும் சிறிது வித்தியாசமாய் இருக்கின்றது. அதன் அதிகார எல்லையானது பெரிதாயிருக்கிறபடியால், உத்தியோகஸ்தர்களாயிராமல் தகுந்த ஸ்திதியிலிருக்கும் கனவான்கள் ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம்போகத் தயாராகஇருப்பவர்களாய் பிரசிடெண்டு வேலைக்குக்கிடைக்காதவரையில் கலெக்டரையே பிரசிடெண்டாக வைத்துக்கொள்ளுவது இலாபகரமானதே. அந்த போர்டில் எக்ஸிகூடிவ் இன்ஜினியரும், ஸிவில் ஸர்ஜனும், வித்தியா இலாகா இன்ஸ்பெக்டரும் இருப்பது விரும்பத்தக்கதே. ஆகையால் அதன் மெம்பர்களில் நாலில்ஒருபாகம் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படவும், மற்ற நாலில் மூன்றுபாகம் ஜனங்களால் நியமிக்கப்படவும் வேண்டுமென்பது எனது இஷ்டம். ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு தாலூக்கா போர்டும் முனிசிபாலிட்டியும் ஒரு மெம்பரை நியமிக்கவேண்டும். ஜில்லா பட்டணத்திய முனிசிபாலிட்டியார் 2 மெம்

யர்களை நியமிக்கவேண்டும். ஜில்லா முழுமைக்கும் ஒரு விசேஷித்த சபையாரைப் புதிதாய் உண்டாக்குவதில் எனக்கு இஷ்டம். அந்தச் சபையார் ஐந்து அல்லது ஆறு மெம்பர்களை நியமிக்கும் விசேஷமான பெரிய உரிமையைப் பெற்றிருக்கவேண்டும். நியமனம் பெறுகிறவர்கள், ஒருவிதமான அந்தஸ்தும் ஐந்து வருஷங்களாய் வித்தியாபட்டம் பெற்றுள்ளவர்களும், மாதம் ஒன்றுக்கு ரூபா 75 ம் அதற்கு மேற்பட்ட பென்ஷனும் (உபகாரச்சம்பளம்) பெறும்கவர்ன்மெண்டுபென்ஷனர்களும், ரூபா 200 அல்லது அதற்குமேற்பட்ட கிஸ்தி செலுத்தும் நிலக்காரர்களும், வருஷம்ஒன்றுக்குரூபா 2000-க்குக் குறையாததொகையின் பேரில் இன்கம்டாக்ஸ்செலுத்தும் வியாபாரிகளும் வர்த்தகர்களும், மற்றவர்களும், ஆகஇருக்கவேண்டும். இவ்வாறாக; புனா டிஸ்ட்ரிக்டை எடுத்துக்கொண்டால், டிஸ்டிரிக்ட்டு போர்டில் 36 மெம்பர்கள் இருப்பதை நான் விரும்புவேன். அவர்களில் 9-பேர்கள் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் படவும், மற்று 27-பேர்கள் அடியிற் கண்டபடி ஜனங்களால் நியமிக்கப்படவும் வேண்டும்:—8-பேர்கள் 8தாலுக்கா போர்டுகளினாலும், 2 பேர்கள் புனா நகரத்தின் முனிசிபாலிட்டியாராலும், 11 பேர்கள் மற்ற முனிசிபாலிட்டிகளால்ஒவ்வொருவர்விதமாயும், 6பேர்கள் மேலே சொல்லிய விசேஷித்த சபையாராலும் நியமிக்கப்படவேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட ஒருபோர்டு, அதனுடைய சுவாதீனத்தில் போதுமான வருவாய்களை வைக்க முயற்சி செய்யும் பக்ஷத்தில், உபயோகமுள்ள வேலையைச்செய்யுமென்று எதிர்பார்க்கலாம். ஒரு அணா தீர்வையினால் வரும் முழுவருமானத்தையும், படிப்புக்காக வைத்திருக்கும் பாகமும், வைத்தியம், மிருக

மருத்துவம் ஆகிய இலைகளுக்குக் கொடுபடும் தொகைகளும் நீங்கலாக, தாலுக்கா போர்டுகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், எக்ஸைஸ் ரிவினியூவில் ஒருபாகத்தை,— 100-க்கு 10-விழுக்காடு என்று வைத்துக்கொள்ளுங்கள்,— அல்லது அதன் ஸ்தானத்தில் மாகாண ரிவினியூவிலிருந்து அதற்குச் சரியான தொகையைச் சேர்த்து டிஸ்திரிகட் போர்டுகளுக்கு கிடைக்கும்படி செய்யவேணுமென்றும், ஏற்கனவே நான் மேலே பிரேரேபித்திருக்கிறேன். எக்ஸைஸ் ரிவினியூவில் ஒருபாகம் லோகல் போர்டுகளுக்குக் கிடைக்கும்படி செய்யும் விதியானது புதியதல்ல. சுமார் 30-வருஷங்களுக்கு முன்வரையில் ஒரு அணு தீர்வையானது எக்ஸைஸ் ரிவினியூவின் மொத்தத் தொகையின் பேரில், அல்லாவிட்டாலும் அதன் ஒருபாகத்தின் பேரில், விதிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கும், ஒரு ஸ்திரமான தொகையான $1\frac{1}{2}$-லக்ஷம் மாகாணத்திலிருந்து (Provincial) ஸ்தலத்துக்கு (Local) கொடுக்கப்பட்ட பகுதியாக "எக்ஸைஸ் ரிவினியூவின் பேரில் வசூலிக்கப்பட்ட ஒரு அணு தீர்வைக்குப்பதிலாக செய்யப்பட்ட பகுதி" என்று வழங்கிவருகிறது. இராஜதானியின் எக்ஸைஸ் ரிவினியூவானது இப்போதைய அளவினதாய் இல்லாதிருந்தபொழுது இந்தக் கட்டுக்குத்தகையான பகுதி ஏற்பட்டது. அதனால் போர்டுகளுக்குமற்றப்படி கிடைத்திருக்கக்கூடிய விர்த்தியம்சத்தில் ஒருபாகம் இல்லாமல் போய்விட்டது. போக்குவரவுகளின் விஷயத்திலாயினும் எவ்விதத்திலும் டிஸ்டிரிகட் போர்டுகள், உண்மையில் மாகாண ரிவினியூக்களின் பேரில் பொறுக்க வேண்டியதான பாரத்தின் மிக்க பாகத்தை வகிக்கவேண்டியிருக்கின்றதென்ற சங்கதியை நோக்கின், எக்ஸைஸிலிருந்துவரும் வருமானத்தில் குறை

ந்தது பத்தில் ஒருபாகமேனும், இந்த சபையார்கள் தங்கள் கடமைகளை திர்ப்திகரமாய் நிறைவேற்ற வல்லவர்களாகும்படி, அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்பது அதிக்கிரமமாய்க் கேட்பதாகமாட்டாது. இந்த போர்டுகளின் அதிகாரத்தைப்பற்றி, இப்போதைய சட்டதிட்டமே மொத்தத்தில் போதுமென்று நான் நினைக்கிறேன். ஆனாலும் முனிசிபாலிட்டி விஷயம்போலவே, நிர்ப்பந்தங்களிற் சில நிவர்த்தியாக வேண்டியிருக்கலாம்.

டிஸ்டிரிகட்டு கவுன்ஸில்கள் (ஆலோசனை சபைகள்).

நான் இப்பொழுது மிகவும் முக்கியமான விஷயமான ஜில்லா ஆலோசனை சபைகளைப்பற்றிப் பேச ஆரம்பிக்கிறேன். ஜில்லா ஆளுகையில் இப்போதைய ஏற்பாட்டின் மூன்று கெடுதல்கள்: அதன் இரகசியம், அதன் பூரண உத்தியோகப் பான்மை, அதன் நிர்வாக முறையிலுள்ள தாமதங்களாம். ஜனங்களுடைய நலத்தைப் பாதிக்கும் முக்கியமான விஷயங்கள் அவர்களுக்குத் தெரியாமலே உத்தியோகஸ்தர்களுடைய ரிபோர்ட்டுகளின் பேரிலேயே விசாரித்து முடிவு செய்யப்பட்டு,முடிவான உத்தரவுகள் மட்டும், ஜனங்கள் அவைகளுக்குக் கீழ்ப்படிவதுதான் பாத்தியம் போல, யாவருக்கும் தெரியும்படி பிரசுரம் செய்யப்படுகின்றன. அடிக்கடி மேலும் கீழுமாகச் செய்யப்படும் ரிபரென்ஸ்கள்-அற்பவிஷயங்களைத் தீர்மானிப்பதிலுங்கூட — நீண்ட காலமாயும் அலைச்சலாயுமுள்ள தாமதங்களை யுண்டாக்குவதுமல்லாமல் சாமானிய கிராமவாசிகளுக்கு தொந்தரவை உண்டாக்குவனவாயும் இருக்கின்றன. ஜில்லாவில் நிர்வாக கவர்ன்மெண்டாரின்

முக்கியப் பிரதி நிதியாயிருப்பவர் கலெக்டர் ஆவார். அதிகாரம் செலுத்துவதில் கண்காணிப்பின்மையால் உண்டாகும் கெடுதல்களைத் தடுப்பதற்காக, அவருடைய வேலையில் வரிசைக்கிரமமான கண்டிப்புகளுக்கு அவர் உட்படுத்தப்பட்டிருக்கிறார். ஆயினும் இந்தக் கண்டிப்புகள் எல்லாம் உத்தியோகஸ்தர்களிடமிருந்தேயாம். அவைகளெல்லாம் அவருடைய கூட்டத்தைச்சேர்ந்த அங்கத்தினர்களாலேயே செய்யப்படுகின்றன. அவர்களுக்குள் ஒருகாலத்தில் அவர் முதன்மையான உத்தியோகஸ்தராய் இருப்பார். அவைகள் அதிகாரத்தை முற்றிலும் கெடுதலாய்ச் செலுத்துவதைத் தடைப்படுத்த உதவலாமாயினும், திறமையான ஆளுகையை ஆதரிப்பதில் அதிகப் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்க மாட்டா வென்றும், அவைகள் நிச்சயமாய் அவருடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதைத் தடைப் படுத்து மென்றும் நான் அஞ்சுகின்றேன். இப்போதைய நிலைமைக்கு அவசியமாயிருப்பது என்னவென்றால், தூரத்திலிருந்து செலுத்தப்படும் இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களின் கண்டிப்புகள் அல்ல; ஆனால் ஆளுகையினால் பாதிக்கப்படுவோர்களுக்குச் சார்பாய் ஸ்தலத்திலேயே கொஞ்சம் கண்காணிப்பேயாம். இதற்காக, ஒவ்வொரு ஜில்லாவிலும் உத்தியோகஸ்தர்களல்லாத மற்றவர்களின் ஆலோசனைசபை சிறிதாய் ஒன்று இருக்கவேண்டு மென்பது எனது இஷ்டம். அந்தச்சபையார்களில் மூன்றில் இரண்டு பேர்களை டிஸ்டிரிகட்டு போர்டில் உத்தியோகஸ்தர்களாயில்லாதவர்களாலும், மூன்றில் ஒருபாகமுள்ள மெம்பர்களைக் கலெக்டராலும் நியமனம் செய்விக்கவேண்டும். இவ்வாறாக புனாவில் 9 மெம்பர்கள்

அடங்கிய ஒரு ஜில்லா ஆலோசனை சபை இருக்கவேண்டு மென்று நான் விரும்புவேன். அவர்களில் 6 பேர்கள் மேலே சொல்லியபடி அமைக்கப்பட்ட டிஸ்டிரிகட்டு போர்டில் உத்தியோகஸ்தர்க ளல்லாதவர்களா யிருப்பவர் களாலும், 3 பேர்கள் புனு கலெக்டராலும் நியமிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஆலோசனை சபை ஏற்படுத் தப்பட்டால் முக்கியமான விஷயங்களில் எல்லாம் கலெக் டர் அந்த சபையோடு கலந்து யோஜிக்க வேண்டியதைக் கட்டாயப்படுத்துவேன். அன்றியும், ஜில்லாவின் ஆளுகை சம்பந்தமான சமானிய விஷயங்களை மேலான உத்தியோக ஸ்தர்களுக்கு அனுவசியமாய்த் தெரியப்படுத்தாமலே, ஸ்த லத்திலேயே முடிவு செய்யும்படியாக அந்த ஆலோசனை சபையாரோடு சேர்ந்து செலுத்தக் கூடிய பெரிய அதிகா ரங்களை ஜாஸ்தியாகவும் நான் கலெக்டருக்கு கொடுப் பேன். இவ்வாறு என்ன அதிகாரங்களை உள்ளபடியே கொடுக்கவேண்டு மென்பது, அதற்காகக் குறிப்பிட்டு நிய மிக்கப்படும் ஒரு கமிட்டியாரால் தீர்மானிக்கப்படவேண் டும். கலெக்டர்முன் வரும் விஷயங்களை நான் பெரும் படியாய் நான்கு தலைப்புக்குள் வகுப்பேன் :—

(a) இரகசியமான விஷயம்.

(b) மத்தியதர கவர்ன்மெண்டுக்கு ரிபர் செய்யப்பட வேண்டியதும், ஜில்லா ஆலோசனை சபையினுடைய அபிப்பிராயத்தைக் கலெக்டர் தெரிந்து கொண்டு கவர்ன் மெண்டுக்கு அனுப்பவேண்டியதுமான விஷயம்.

(c) ஜில்லா ஆலோசனை சபையாரைத் தம் அபிப்பிரா யத்தோடு இணங்கும்படி செய்யக்கூடுமானால் கலெக்டரே முடிவாய்த்தீர்மானம் செய்யக்கூடியதும், ஆனால் அப்படிச்

செப்ப முடியா விட்டால் மத்தியதர கெவர்ன்மெண்டாருக்கு ரிபர்செய்ய வேண்டியதுமான விஷயம்.

(*d*) ஜில்லா ஆலோசனை சபையாருடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாயும் அவர் தமக்கு யுக்தமாய்த் தோன்றியபடி முடிவு செய்யலாகும் விஷயம்.

இரகஸ்யமான விஷயங்கள் அவசியமாகவே ஜில்லா ஆலோசனை சபையாரிடமிருந்து விலக்கி வைக்கவேண்டியவைகள். (b), (c), (d) விஷயங்களைப்பற்றி, அவைகளின் கீழ்வரக்கூடிய விஷயங்களின் நீதியை அடியில் நான் குறிப்பிடுகின்றேன். என்னுடைய உத்தேசம், எனது அபிப்பிராயத்தில், என்ன விஷயங்கள் பிரேரேபிக்கப் பட்டு பற்பல விதமாய்முடிவுசெய்யலாம் என்பதை உதாரணமாகக் காட்டுவதேயொழிய அப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பூரணமான ஒரு ஜாப்தாவைத் தெரிவிப்பதல்லை வென்பதை அறிந்து கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.

(*b*) வகுப்பின் கீழ் வரக்கூடிய விஷயங்கள்.

(1) சட்ட நிர்மாண பிரேரேபனைகள்.

(2) ரிவிஷன் முடிவைப்பற்றிய பிரேரேபனைகள்.

(3) தண்ணீர் வரிவிஷயத்தைப்பற்றிய ஆலோசனை.

(4) நிலத்தீர்வை வஜாசெய்வதைப்பற்றிய சிபார்சுகள்.

(5) புதிதாய் முனிசிபாலிடிகளை ஏற்படுத்தல்.

(6) புதிய எல்லைகளுக்குள் சட்ட அனுஷ்டானத்தை விசாலித்தல்.

(7) தண்டப் போலீசை வைத்தல்.

(8) புதிதாய் வேலைகள் நடத்தல்.

(c) வகுப்பின் கீழ் வரவேண்டிய விஷயங்கள்.

(1) மதுக்கடைகளை ஏற்படுத்துவதும், ஓரிடத்தில் வைப்பதும் எடுத்து விடுவதும்.

(2) நிலத்தீர்வைகளை நிறுத்திவைத்தல்.

(3) கட்டட அபராதங்களை வசூலித்தல்.

(4) நகர சர்வேயைப்பற்றிய பிரேரேபணைகள்.

(5) காடுகளிலிருந்து சாமான்கள் கொண்டுவருவதைப்பற்றிய ஒழுங்கு.

(6) புதிதாய் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதும் பழைய பள்ளிக்கூடங்களை மூடிவிடுவதும்.

(7) கிராமப் பஞ்சாயத்துகளையும் யூனியன்களையும் ஏற்படுத்தல்.

(8) தாலுக்கா போர்டுகள், முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துகள், யூனியன்கள் இவைகளை நிறுத்திவைத்தல்.

(9) பெஞ்சு மேஜிஸ்திரேட்களை நியமித்தல்.

(10) சந்தைகளையும், ஊர்வலங்களையும் பின்னும் இவைபோன்றவைகளையும் பற்றிய விதிகள்.

(11) கோர்ட்டாப் வார்ட்ஸ் ஆக்ட்ப்படி சொத்துக்களை ஒப்புக்கொள்ளல்.

(d) வகுப்பின் கீழ் வரலாகும் விஷயங்கள்.

(1) மகாமாரி, பேதி, மற்றப் பெருவாரிகள்.

(2) அமரிக்கையை ஆதரிக்கும் ஏற்பாடுகள்.

(3) பஞ்சத்தைப் பரிகாரம் செய்ய ஏற்பாடுகள்.

மெம்பர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தில் கலெக்டருடைய நோடீசுக்கு கொண்டு போகவேண்டிய விஷயங்களென்று தாங்கள் நினைக்கிற விஷயங்களையோ குறைகளையோ அவைகளைப்பற்றி ஆலோசிக்கப்புகுவதை நான் அனுமதிப்பேன். மேலும் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களையும் நிபுணர்களுடைய ஞானத்தை அபேக்ஷிக்கிற விஷயங்களையுந் தவிர, மற்றத்தம் ஜில்லாவின் காரிய நிர்வாஹ ஆளுகையைச் சேர்ந்த இல்லாகாக்களிலெல்லாம், கலெக்டரை உண்மையான தலைவராகச் செய்ய விரும்புவேன். ஜில்லா ஆலோசனை சபைகள், ஆலோசனை சொல்லுபவர்களாக மட்டுமே, அதாவது, அவர்கள் செய்யும் தீர்மானம், கலெக்டர் அதை ஒப்புக்கொண்டால் ஒழிய, அனுஷ்டானத்துக்கு வரமாட்டாது என்கிற அர்த்தத்தில் ஆலோசனை சொல்பவர்களாகவே, யிருப்பார்கள். இந்த சபையாரை ஏற்படுத்திப்பிறகு அதிகமான அதிகாரங்களைக் கலெக்டருக்குக் கொடுக்கும்பக்ஷத்தில், கலெக்டருக்கு மேலே, இராஜதானியில், மத்தியதர கவர்ன்மெண்டு என்ற ஒரே உயர்ந்த அதிகாரத்தை வைக்க நான் விரும்புவேன். இப்படிச்சொல்வதினால் என்ன அர்த்தமென்றால், சிந்து (Sindh) விலிருப்பதைத்தவிர மற்ற எல்லா கம்மிஷனர் * அதிகாரங்களையும் எடுத்துவிடுவது என்பதேயாம். அப்பொழுது கலெக்டர்கள் நேரே மத்தியதர கவர்ன்மெண்டோடேயே கடிதப் போக்குவரவுகளைச் செய்வார்கள். ஒருக்கால் நிர்வாஹ சபையில் மூன்றாவது மெம்பர் ஒருவரை ஜாஸ்தியாய் நியமிப்பது அவசியமாகும். ஜில்லா ஆளுகையைப்பற்றிப் பொது

* கலெக்டருக்கும் கவர்ன்மெண்டுக்கும் மத்தியில் பம்பாயில் கமிஷனர் என்று உத்தியோகஸ்தருண்டு.

வாய் மேல்விசாரணைசெய்ய கவர்ன்மெண்டாருக்கு வல்லமையிருக்கும் பொருட்டு இன்ஸ்பெக்டர் ஜெனரல்களை நியமிக்கவேண்டியது அவசியமாகும். அவர்கள் இராஜதானி முழுவதும் சுற்றுப்பிரயாணம்செய்து கவர்ன்மெண்டாருக்காக இன்ஸ்பெக்ஷன் வேலையைச் செய்வார்கள். உயர்ந்த சாஸ்திரஞானத்தையோ நிபுணர்களுடைய ஞானத்தையோ அபேக்ஷிக்கிற அப்படிப்பட்ட ஆளுகையின் இலாகாக்களுக்கு நிபுணர்களான ஆலோசனைக்காரர்களும் அவசியமாயிருக்கும். கலெக்டர்களுக்கு, உத்திரவு கொடுக்கும் ஒரே அதிகாரிகள் மத்தியதர கவர்ன்மெண்டார்களாகவே யிருப்பார்கள்.

மேலே பிரேரேபிக்கப்பட்டபடி ஜில்லா ஆலோசனை சபைகளை ஏற்படுத்துவதினால் பிரயோஜனமான காரியம் உண்டாகுமென்று நான் நினைக்கின்றேன். இப்படிப்பட்டயாதொரு சபையையும் புதிதாய் உண்டாக்கவேண்டியதில்லையென்றும் தற்கால நிலைமையில் அவசியமாயிருக்கும் ஒரே விஷயம் கலெக்டருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுப்பதேயாம் என்றும், அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லக்கூடியதெல்லாம் என்னவென்றால், அப்படிப்பட்ட யோசனையைச் சொல்லுகிற பேர்கள் தற்காலத்திய மனோபாவத்தை சரியாய் அறியவில்லை என்பதே. இப்படி பிரேரேபிக்கப்படும் போக்கை அனுசரிப்பதினால் உத்தியோகஸ்தர்களின் திறமையை அதிகப்படுத்தலாமென்று பாவித்துக்கொண்டாலும் அப்படி அதிகப்படுத்தல்மட்டுமே செய்யவேண்டிய காரியமாய் இருக்கவில்லை. பழையமாதிரியான காருண்ணியமுள்ள கலெக்டரின் சுவேச்சாதிபத்தியத்தை மறுபடியும் உண்டாக்குவது இப்பொழுது சாத்தியமில்லையென்றும் இந்த

நோக்கமாய்ச் செய்யப்படும் எந்தப் பிரயத்தினமும் தவறிப்போவது மல்லாமல், யாவராலும் வெறுக்கப்படுமென்றும் நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எங்கேயும் உள்ள ஜனங்களுடைய க்ஷேமமானது, ஆளுகையின் கவலையானது தங்கள் பேரில் கேவலம் பரவிக்கொண்டு மட்டும் இருக்க வேண்டும் என்பதல்ல; ஆனால் தாங்களே அதன் சூத்திரத்தைப் பிடித்து இழுக்க அனுமதிபெறவேண்டும் என்பதே. ஜில்லா அதிகாரிகளிடத்தில் தேசபாஷையில் அறிவு அதிகமாயிருப்பதும், ஜனங்களோடு ஜாஸ்தியாய்ப் பழகிவர அதிக உறுதியாய் பிரயத்தினங்கள் செய்வதும், எல்லாம் மேலெழுந்த வாறான பரிகாரங்களே ஒழிய, தீங்கின் உண்மையான மூலத்தைப் பற்றிக்களையக் கூடியனவல்ல. எங்களைச் சுற்றிலுமிருக்கும் ஆளுகையில் எங்களுக்கு ஒரு பற்றுதல் வேண்டும். கல்விகற்றவகுப்பினர்கள், இன்று ஆளுகையைப்பற்றிக் குற்றங்கூறுபவர்களாகவே யிருக்கின்றார்கள். ஏனென்றால் கெவர்ன்மெண்டார் அவர்களை ஒத்து உழைக்கும்படி சேர்த்துக் கொள்ளும் யூகத்தை உணரவதில்லை. சில உத்தியோகஸ்தர் கல்விகற்ற வகுப்பார்களுக்கும் சாமானிய ஜனங்களுக்கு முள்ள பற்றுதல்கள் ஒன்றுக்கொன்று விரோதமானதென்று நினைத்துக்கொண்டு, படித்தவர்களுடைய பிரியமின்மைக்குப் பதிலாக சாமானிய ஜனங்களுடைய நன்றியறிதலைப் பெறுவதனால் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள நம்பியிருக்கின்றார்கள். ஆயினும் இது ஒரு பிராந்தி. இதை எவ்வளவு சீக்கிரம் விடுகின்றார்களோ அவ்வளவு சீக்கிரம் நன்மையுண்டாகும். படித்த வகுப்பினர் தேசத்தின் மூளையாயிருக்கின்றார்கள். அவர்கள் இன்றைக்கு நினைப்பதை

மற்றவர்கள் நாளைக்கு நினைப்பார்கள். ஆளுகையில் ஜனங்களை நெருக்கமாய்ச் சமபந்தப்படுத்தல் என்னும விஷயமானது, உள்ளபடியே ஆளுகையின் வேலைகளில் படித்த வகுப்பினரை சம்பந்தப்படுத்துவதேயாகும். அடிப்பீடத்தில் கிராம பஞ்சாயத்துகளையும் மத்தியில் ஜில்லா ஆலோசனையும் சபைகளையும், உச்சியில் திருத்திய சட்ட சபையையும் கொண்டு நடத்தினால் தற்கால அவசரங்கள் சம்பந்தப் பட்டவரையில் இந்தவிஷயம் சுமாராய்ச் சாதிக்கபபட்ட தாகும்.

சிம்லா திருத்தப் பிரேரேபணைகள்

பம்பாய் பிரெஸிடென்ஸி சபையின் அபிப்பிராயங்கள்.

1. உள்நாட்டு (Home) டிபார்ட்மெண்டில் (பப்ளிக்) இந்தியா கவர்ன்மெண்டாரின், 1907-ஆம் ஆகஸ்டு-மீ 24உ 2311 நெ. லெட்டரில் அடங்கிய பிரேரேபணைகளுக்கு இணங்க, பின்வரும் அபிப்பிராயங்களை பம்பாய் ராஜதானி சங்கத்தாரின் ஆலோசனை சபையார் உத்திரவின்படி, மிகவும் வணக்கத்துடன் தெரிவிப்பது.

2. இராஜ்யபார விஷயங்களில் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட இப்போதிருப்பதைவிட இன்னும் அதிக அவகாசம் இந்தியர்களுக்குக் கொடுப்பதற்கும், பொது ஜனங்களுடைய தினசரி ஜீவனதசையை நன்ருய் அறிந்து, அவர்களுக்காக பாத்தியத்துடன் பேசக்கூடியவர்கள், அந்த சாமான்யஜனங்களுடைய தேவைகளையும் எண்ணங்களையும் நன்று வெளிப்படுத்துவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வதற்கும்,

எல்லா வகுப்பாரையும், கவர்ன்மெண்டுடனும், அதின் உத்தியோகஸ்தர்களுடனும் நெருங்கிக் கலக்கும்

படி கூட்டுறவு செய்விப்பதற்கும், கவர்ன்மெண்டின் காரியங்களை உருவாக்குவதில் அவர்கள் இப்போதைவிட கார்யாம்சையான பங்காளிகளாகச்செய்வதற்கும்,

இதன் பலனாக, இராஜ்யபாரநிர்வாக வேலையி லேயே அவர்களுக்கு இப்போதைவிட அதிக பாத்யதை கொடுப்பதற்கும், இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோ கங்களில் இப்போதைவிட இன்னும் ஏராளமாய் அவர் களை நியமனம் பண்ணுவதற்கும், இந்தியா கவர்ன்மெண் டார் இச்சைப்படுவதை இந்தச் சபையார் பாராட்டி நன்று உணருகிறார்கள்.

3. மேற்கண்ட விஷயங்களில், ஜனங்களின்சார்பாகக் கூறப்பட்ட பாத்யதையின் விசேஷ நியாயத்தைத் தெ ரிந்துகொண்டதற்கும், இந்திய ஜனங்கள் ஒருநாளும் பிறழ ஒண்ணாதென்று எண்ணும்படியாக (ராஜாங் கத்தார் செய்திருக்கும்) வாக்குறுதிகளை நிறைவேற்றுவ தில், மற்றவர்களுடைய லாபங்களையும் தங்களுக்குள்ள கடமைகளையும் கைவிடாமலே, மனக்கசப்பும் லோபமு மின்றி, ஒருவாறு முன்னேக்கிச் செல்லக்கூடுமென்று வெ ளியிட்டதற்கும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு, இந்த சபையார் நன்றி யுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

4. என்றாலும், இந்தியா கவர்ன்மெண்டாரின் லெட் டரில் வெளிவிட்ட பிரேரேபணைகள், அவர்கள் விரும்பி யதை முடிக்கவோ, அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்ற வோ, சற்றேனும் திருப்திகரமாகவாவது போதுமானதாக வாவது இருக்கவில்லை என்று தாங்கள் வருந்துவதையும் தங்களுக்கு நேர்ந்த புண்போன்ற ஆசாபங்கத்தையும் இந்தச் சபையார் வெளியிடாமல் இருக்கக்கூடவில்லை.

ஆயினும், மேற்படி பிரேரேபணைகள் பரீட்சார்த்தமென்றும் (தாத்காலிகமென்றும்) முடிவானதல்லவென்றும் கூறப் பட்டிருக்கிறதனாலும், தவிர, இவைகளைப்பற்றி ஜனங்கள் சார்பாகச் செய்யப்படும் கவனமான பரிசோதனைகளோ, அநுதாபமான ஆலோசனைகளோ, விரும்பிய திருத்தங்களின் விஸ்தாரமான விகிதங்களோ, இவைகள் எல்லாம் கவர்ன்மெண்டார் வருந்தி வேண்டுகிறார்களென்றதனாலும் சபையார் சற்றே தேறுகிறார்கள். இந்த வேண்டுகோளுக்கும் சமயத்துக்கும் இணங்க, இந்தச் சபையார் தங்களுக்கிருக்கும் ஆட்சேபணைகளையும், தாங்கள் வேண்டும் திருத்தங்களையும் சவிஸ்தாரமாகப் பின்வருமாறு விளக்கும் தங்கள் விஞ்ஞாபனத்தை கவர்ன்மெண்டாருக்கு நன்றியோடு தெரிவித்துக்கொள்ள வேண்டுகிறார்கள்.

5. நியாய பூர்வகமான திருத்தத்திற்கு பிரேரேபிக்கப்படும் ஏற்பாட்டில், பூமியுடைய பிரபுக்களும், வியாபார வகுப்பாரும், கைத்தொழில் வகுப்பாரும், தம்தம் குறைகளையும் அபிப்பிராயங்களையும் தங்கள் சொந்தப் பிரதிநிதிகளைக்கொண்டு தெரிவிக்கத் தகுந்தபடி இடங்கொடுக்கப்பட வேண்டியதின் கிரமத்தையும் உசிதத்தையும் சபையார் முழுதும் உணர்கிறார்கள். ஆனால், பொது ஜனங்களின் குறைகளும் எண்ணங்களும் சிற்றரசர்கள், பாளையப்பட்டுகள், வர்த்தகச் செல்வர்கள், கைத்தொழிற் கங்காணிகள் மூலமாய் சரிவர உள்ளபடி வெளிவரும் என்ற நம்பிக்கை சபையாருக்கு இல்லை. ஏனென்றால், இவர்களின் நோக்கங்கள் ஜனங்களின் நோக்கங்களுக்குமாறாயும் சமானமில்லாதனவாயு மிருக்கின்றன. மேலும், ஜனங்கள்பால் தெளிவுடன்பேச யோக்கியதையு

மில்லை. அவர்கள் ஜீவன உபாயங்களையும் அறியார்கள். ஆகவே இக்குறைகளும் எண்ணங்களும், அவர்களிடமே யுதித்து, கிராமம் சிறுபட்டினம் இவைகளில் ஜீவன தசைகளை நன்று கண்டு, கிருஷிகர்கள், வியாபாரிகள், தொழிலாளிகள் இவர்களுடன் நிகர்வியாய் தடங்கலில்லாமல் கூடிக்குலாவிய படித்த வகுப்பார் வாயிலாகவே நன்று வெளிவரும். தவிர, மேற்கூறின பூமியுடைய பிரபுக்களும், வியாபாரிகளும், தொழிலாளிகளும், சட்டங்கள் ஏற்படுத்துவதென்ன, இராஜ்ய நிர்வாகஞ் செய்வதென்ன, இந்த விஷயங்களில் தங்கள் வாயிலாகவே தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அவகாசம் வேண்டுமென்று தீவிரமான ஆசையுடையவர்களா யிருக்கிறார்களோ என்பதுவே சபையாருக்கு சந்தேகமாயிருக்கிறது. அதற்கு வேண்டிய யோக்யதையோ அவர்களுக்கு ஒருக்காலும் இருந்ததில்லை. மேலும் தங்கள் கூட்டத்தாரையே வேண்டாமல் யோக்யதையும் நாணயமு முள்ள யார்மூலமாயினும் தங்கள் அபிப்பிராயத்தை வெளிவிட அவர்கள் விரும்புவார்கள்.

6. கவர்ன்மெண்டார் தங்களுடைய ஏற்பாடுகளையும் எண்ணங்களையும் ஜனங்களுக்குச் சரியாகத் தெரிவிப்பதிலும், கவர்ன்மெண்டின் உத்தேசங்களைத் துஷ்டர்கள் பிசகாயக்கூறி கவர்ன்மெண்டாருக்குக் கெட்ட எண்ணமிருக்கிறதென்ற அபசப்தத்தை மாற்றுவதிலும், கவர்ன்மெண்டாருக்கு நேரும் கஷ்டமானது, தாங்களே தடுத்துத் தாங்களே பாதுகாக்கக் கூடுமான ஹேதுக்களால் உண்டாகின்றதென்று சபையார் தைரியமாய்ச் சொல்லத் துணிவார்கள். 1892ல் கொடுக்கப்பட்ட சட்டசபையில் கேள்விகேட்கும் உரிமையானது முற்றிலும்

உபயோகமற்றுப்போய் விட்டது. ஜனப்ரதிநிதிகள் எவ்வளவுதூரம் அதை ப்ரயோசிக்கலாமோ அவ்வளவும் ப்ரயோசிக்காமையால் அங்ஙனம் கெட்டுப்போகவில்லை. அந்த உரிமையைச் செல்லுந்தூரம் ப்ரயோகிப்பதற்கு இடைஞ்சல்கள் ரூல்களிலேற்பட்டிருப்பதாலும், கேள்விகளுக்கு, கபடமானதும், அதிருப்திகரமானதுமான பதில்கள் ஒருதரமல்ல பலதரங்களிலும் மனம் புண்ணுகும் வண்ணம் கவர்ன்மெண்டு பிரதி நிதிகள் அளிப்பதாலுமே, அந்த உரிமை உபயோகமற்றுப்போயிற்று. இந்தப்ரசின உரிமைப் ப்ரயோகத்தை சர்க்காரார் நாளுக்கு நாள் சலிப்புடனும் கோபத்துடனும் கருதுவதையும், ஆளுவோரின் அந்தரங்கத்துக்கு ஜனங்களை அழையாமல் அவர்களின் பிரதிநிதிகளைத் தூர விலக்கிவைத்து வருவதையும் அடிக்கடி துக்கத்துடன் சபையார் கண்டுவருகிறார்கள்.

7. ப்ருகிருத்தில் ஏற்படுத்தப்போகும் அட்வைஸரி கௌன்ஸில் என்கிற யோசனை சபையானது, அதின் பிரயோசனத்தைப் பெரும்பாலும் கெடுத்து ஜனங்களுக்குத் தீங்கு செய்யக்கூடிய நிபந்தனைகள் கலவாதிருக்குமாகில், ஒருவாறு சற்று க்ஷேமகரமானது என்று சபையார் நினைக்கலாகும்.

அட்வைஸரி கௌன்ஸில்.

8. யோசனை கேட்பதற்குமாத்திரமாக ஒரு இம்பிரியல் யோசனை சபை ஏற்படுத்துவதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் பின்வருமாறு பிரேரேபித்திருக்கிறார்கள் :—

(a) அந்த சபை இந்தியா முழுமைக்குமாக 60 அங்கத்தினர்களுளதாகும். அதில் 20 அரசர்களும், எங்கெங்கே தகுந்த அந்தஸ்தும், பெருமையும் வாய்ந்த நில-

தாரர்கள் காணப்படுமோ அப்பேர்க்கொத்த ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சில உசிதமான சங்கியைகொண்ட ஜமின்தார்களும் இருப்பார்கள்.

(*b*) அங்கத்தினர்கள் ஐந்து வருஷத்துக்கு ஒருதரம் ராஜப்ரதிநிதியால் நியமிக்கப்படுவார்கள். அதன் முடிவில் மறுபடியும் நியமனம் பெறும் யோக்கியத்தையுள்ளவர்களாவார்கள்.

(*c*) சட்ட பூர்வகமாக அந்தசபை ஏற்படாது. ஒரு விதமான உத்யோகமுறைமையான அதிகாரமும் அதற்குக் கொடுக்கப்படமாட்டாது.

(*d*) அந்த சபையாருடைய வேலை, யோசனை சொல்வதற்கு மாத்திரம் அப்போதைக்கப்போது அவர்களுக்குக் குறிப்பாக விடுக்கப்படும் விஷயத்தைப் பற்றி அவர்கள் வியவகரிப்பதாகும்.

(*e*) கவர்ன்மெண்டாரின் இச்சைப்படிக்கு, தனியேனும், சேர்ந்தானும், சிலரைமாத்திரம் வரவழைத்தேனும் அவர்கள் அபிப்பிராயம் கேட்கப்படும். கூட்டாலோசனைக்கு சபைமுழுவதுமாவது அல்லது பாகமாவது எப்போதாவது கூட்டப்பட்டால், அதில் நடக்கும்சமாசாரங்கள், ரகசியமாயும், கிரமஒழுங்குள்ளதாயும், அந்தரங்கமானதாயும், கருதப்படவேண்டியது விதியாகும். கவர்ன்மெண்டு உசிதமென்று எண்ணுகிற பிரகாரம் அவ்விஷயங்களை அவர்கள் எந்த விதத்திலும் உபயோகிக்கக் கூடுமானாலும், ஜனங்களுக்குப் பிரசுரக்கப்படமாட்டா.

9. நிர்வாகவிஷய ஏற்பாடுகளையும், கிரியாவிஷய பிரேரேபணைகளையும்ப்பற்றி, எல்லாவகுப்பாரிலும் யோசனை சொல்ல யோககியதை யுள்ளவர்களுடைய அபிப்பிராயங்

களை வெளியிழுப்பதற்கு, தடங்கலற்றதும் நெருங்கியதுமான யோசனை கலத்தலுக்காகவே, இந்த சபை முக்கியமாய்நோக்கத்தை யுடையதென்று கவர்ன்மெண்டார் கூறியிருக்கிறார்கள். மேலும், இந்தச்சபை கவர்ன்மெண்டாரின் காரியங்கள், எண்ணங்கள், நோக்கங்கள் இவைகளைப்பற்றி சரியான சமாசாரத்தைப் பரவச்செய்தற்கான ஒருகருவியுமாகுமாம்.

ஆளும் சிற்றரசர்கள்.

10. மேற்கூறிய நோக்கங்களைப்பெற்று ஏற்படும் ஒரு ஆலோசனை சபையில், பிரிடிஷ் இந்தியாவின் பாகமேயாகாத சமஸ்தானங்களது மன்னர்கள் எவ்விதம் உரிமையுடனும் உபயோகத்துடனும் கலக்கக்கூடுமென்று இந்தக் கமிட்டியாருக்கு விளங்கவில்லை.

11. தங்களுக்கும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் பொதுவானதும், மண்டலீக மானதுமான க்ஷேம லாபங்களை சிரத்தையாய்ப் பாதுகாப்பதில், தேசமன்னர்கள் கவர்னர் ஜனரலுடன் ஒத்துக் கலப்பதானது பரஸ்பரம் அதிக நன்மை பயக்கத்தக்கதான ஒரு ஏற்பாடென்றே இந்தக் கமிட்டியார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏனெனில், நாகரீகம் அதிகம் பெருகிய சில ஸ்வதேச ஸமஸ்தானங்களில் ராஜ்ய நிர்வாக முறைமையின் மர்மமும், நடவடிக்கையும், பிரிடிஷ் பிராந்தியத்தில் வழங்குபவைகளுக்கு அநேகமாய் ஒத்திருக்கின்றமையால், முன்னைவிட இப்போது இந்த ஒத்துக் கலத்தலானது நிறைவேறக்கூடும் என்றாலும், இந்த ஏற்பாடானது இயல்பாக உபயோகமுள்ளதும் புகழக்கூடியதுமே யாயினும், பிரிடிஷ் இந்தியாவின் இராஜ்ய நிர்வாகச் சீர்திருத்தத்திற்கெ

ன்றும், அதின் குடிகளுடைய க்ஷேமாபிவிர்த்திக் கென்றும் நினைத்திருக்கும் ஒரு சட்ட பூர்வீகமான ஏற்பாட்டில் இது கேவலம் லேசான பங்குகூட ஆகமாட்டாதென்று இந்தக் கமிட்டியார் சொல்லத்துணிவார்கள்.

12. சந்தேகமில்லாமலே, பொதுவான க்ஷேமார்த்தங்கள் விளைந்திருக்கின்றன. பிரிடிஷ் இந்தியாவிலுள்ள ஜனங்களைப்பாதிப்பது போலவே, தேசமன்னர் குடிகளையும் சமானமாகப்பாதிக்கும் பஞ்சம், மகம்மாரி, படிப்பு, தேசாந்தரவரி, உப்பு, அபின், மது, ரயில்வே இவைகளின் சம்பந்தமான விஷயங்களில், ஸ்வதந்தரரான அரசர்களும் மன்னர்களும் ஒத்துழைத்தலானது, வளர்ந்துவரும் ஒரு குறைவைத்தணித்து, இந்திய ஏகாதிபத்தியத்தின் பகுதிகளுக்குள்ள சம்பந்தங்களை அதிக நேசமாக அபிவிர்த்தி செய்யும் என்பதும் உண்மையேயாகும். ஆனால், இந்தக் கூட்டுறவானது, தங்கள் தங்கள் ஸமஸ்தானங்களில், பிரிடிஷ் அதிகாரிகளால் அங்கிகரிக்கப்பட்டதும், சிபார்சுசெய்யப்பட்டதுமான ஏற்பாடுகளில், தேசமன்னர்கள் ஒத்துழைத்தலைத்தவிர வேறில்லையென கமிட்டியார் காட்டவேண்டியதாயிருக்கிறது. இந்த ஏற்பாடுகள் தேசமன்னர்களின் பிரஜைகளுக்கு அனுகூலமாயிருக்கலாமென்று எதிர்பார்க்கலாமாயினும், பிரிடிஷ் இந்தியாவின் இராஜ்ய நிர்வாகத்தைத் திருத்தவோ, ஜனங்களின் அபீஷ்டங்களை திருப்திசெய்யவோ பிரஸ்தாபப்பிரேரேபணையானது திறமையுள்ளதுஎன்று சொல்லமுடியாது

13. ஸ்வதேச ராஜ்யங்களின் க்ஷேமார்த்தமாய், இந்த சங்கத்தார் எப்போதும் அநுதாபப்பட்டிருக்கிறார்கள். அத்தேசங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் உள்ள சம்பந்தங்களை நன்கு வரையறுக்கும் விஷயங்களும், அந்த

ச்சார்பு தேனங்களில் பட்டத்துக்கு வரக்கூடியவர்களின் போட்டி பாத்தியங்களும் ஸ்வீகார ஸ்வதந்திரங்களும், ஏகாதிபத்யத்தில் ரக்ஷணையின்பொருட்டு அவைகளின் ஒத்துழைப்பு ஆகிய விஷயங்களும், கவர்னர் ஜனரலுக்கும் தேசமன்னர்களுக்கும் தடங்கலில்லாத கவடற்ற யோசனை செய்யவேண்டியதும் வெகுநாள் குறையை ஒருவாறு நீக்கக்கூடியதுமான விஷயங்களென்று இக்காலத்தில் அறியத்தக்க தென, இந்தக்கமிட்டியார் தங்களுக்கு வாய்ந்திருக்கும் இந்த சமயத்தில் விநயத்துடன் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறார்கள்.

14. மேற்கூறிய நோக்கங்களுக்காக, தேசமன்னர் வகுப்பிலிருந்து குறிப்பிட்ட சில ஆலோசனை சொல்லுவோரை ஏற்படுத்தி ஒப்புக்கொள்ளுவது ஜன அபிப்பிராயத்துக்கும் திருப்திகரமாயிருக்கு மென்பதில் ஐயமில்லை. இந்தசபையில் யோசனைசொல்ல தேசமன்னர்கள் கவர்ன்மெண்டாரால் அழைக்கப்படவேண்டும். அப்படி வேண்டும்போ தெல்லாம், கவர்னர் ஜனரல் இஷ்டம் போல ஆடும் பம்பரங்களாகாமல், பெருநில மன்னர்கள், தங்கள் உயர்ந்த அந்தஸ்தின் உரிமை வசத்தாலும், குறுநில மன்னர்கள் சகோதராளின் அநுமதியின்பேரிலும், தங்கள் கடமைகளை நிறைவேற்ற அவகாசம் பெறுபார்களாயின் தங்களுக்கு உரித்தான செல்வாக்கை பெருமையுடனும் உபயோகத்துடனும் ப்ரயோகிக்க அவகாசம் உண்டு.

15. இங்ஙனமன்றி, பிரிடிஷ் கவர்ன்மெண்டின் குடிகளாகிய நிலதாரர்களோடு சரிசமானமாய் தேசமன்னர்களையுட்காரச் செய்வதும், பொதுஜன விஷயங்களில் அதிக வெளிப்படையான காரியங்களை செய்யச்சொல்வதும், நிர்வாகியர்களுக்கு ஒத்தாசை செய்யச்செய்

வதும், நிர்வாகச்சட்ட விஷயங்களில் தங்கள் எண்ணங்களையும், விருப்பங்களையும் வெளியிட வேண்டுவதும், பிரிடிஷ் இந்தியாவின் கவர்ன்மெண்டு காரியங்களை உருவாக்குவதில் கார்யாம்சையான பங் காளிகளாக வேண்டுவதும், பொதுஜன நன்மை நிற்க, தேசமன்னர் க்ஷேமலாபத்தை யுத்தேசித்தும் விரும்பக்கூடாத ஏற்பாடென்றே இந்தக் கமிட்டியாருக்குத் தோறுன்கிறது.

16. மெம்பர்களின் அபிப்பிராயங்களை கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமிருக்கும்போது மாத்திரம், தனித்தோ, சில்லரையிலோ, சேர்த்தோ, கேட்கப்படுவதும், அந்த அபிப்பிராயங்களும், யோசனைகளும் அனுதரவு செய்யப்படக்கூடியதும், அவர்கள் பொறுப்பை விகற்பமாக எடுத்துக்காட்டித் தனியான சட்டத்தால் பிறக்காத அந்தஸ்துள்ளதும், அரூபமான அதிகாரமுமுடையதும், ஆன சபையின் அங்கத்தினராக தேசமன்னர்கள் நியமனம்பெறுவாராகில் அது அவர்களை ஜனங்கள் மதிப்பிலும் தங்கள் சொந்த கவுரவத்திலும் பங்கப்படுத்தும் என்பது திண்ணம். தங்கள் ஸ்வராஜ்யங்களில் இயங்கும் அதிகாரத்தை நிர்விக்னமாய் நடத்துவது யாருடையதயவினுல் பெறப்படுமோ அவர்களைப்பூஜிப்பதாவது, தங்கள் நாடுகளுக்குப் புறம்பே, எவர்களுடைய குறைகளிலும், தேவைகளிலும் தங்களுக்கு நேரே யாதொரு சம்மந்தமில்லேயோ அந்த ஜனங்களின் க்ஷேமலாமத்தைப்பற்றி கவலைப்படுவதாவது, இரண்டிலொன்றைக் கைப்பற்ற ஓட்டுவது நியாயமா, அன்பா ?

17. பிரிடிஷ் இந்தியாவில், நிர்வாக சட்ட விஷயங்களை நிர்ணயஞ்செய்ய தேசமன்னர்களுக்கு அதிகாரம் கொடு

படது, பொதுஜனங்களுடைய க்ஷேமவிருத்தம். இந்த ஸ்வேச்சாதிபர்கள், ஸ்வராஜ்யம்பெறப்பாடுபடும் ஜனங்களின் ஆசையில் நேரே அநுதாப உணர்ச்சி சற்றுமில்லாதவர்கள். பிரிடிஷ் இந்தியாவின் நிர்வாக விஷயங்களைப்பற்றியாவது, அங்கிருக்கும் ஜனங்களின் குறைகளைப்பற்றியாவது, கிஞ்சித்தேனும்தாமாகவேஅறிந்தவர்களல்லர். நிர்வாகசம்பந்தமான பெரிய சிடுக்குப் புதிர்களைநெருங்கி ஆராய்ந்துணர, வெகுவாய் ஸ்வதேசசமஸ்தானங்கள் அவகாசம் கொடுக்கப் போதுமான விசாலத்தையுடையன வல்ல. கருத்திலும் கிரியையிலும் கூட ஸ்வாதீனம் தாங்களே பெருதவர்களாயிருக்கிறார்கள். பிரிடிஷ் இந்தியாவில் ஜனகோஷ்டிகளை அடியோடு கிளப்பிவரும் நவீன விருப்பங்களை அறியவாவது, சரிவர தெரிவிக்கவாவது இத்தேச மன்னர்களை எதிர்பார்க்கக்கூடுமா? யோசனை கேட்போரும், யோசனை சொல்வோரும், சமானமான அறிவு, யோக்யதை, பொறுப்பு ஸ்வதந்தரம் உடையவர்களாக இராவிட்டால், தடங்கலில்லாத அபிப்பிராயக் கலப்பு எங்கேயிருந்துவரும்? தற்கால ஸ்திதியில், தேசமன்னரில் பெரும்பாலரிடத்தில் இந்த லட்சணங்கள் இருக்கவுமில்லை, இருக்கவும் முடியாது.

நிலதாராபிரபுக்கள்.

18. இன்னும், ஜமீன்தார்கள் நியமனமும் தேசமன்னர் நியமனத்துக்கு அபேதமானதே. ஆனால், இந்த ஜமீன்தார்கள் பிரிடிஷ் கவர்ன்மெண்டாரின் குடிகளாகவே, நிர்வாகசட்ட விஷயங்களை காரியமாக தங்களுக்கு உரித்தான செல்வாக்கைச் செலுத்தவும், தங்கள்குறைகளையும், விருப்பங்களையும், அபிப்பிராயங்க

ளையும் கவனிக்கப்படத்தக்கதாய்ச் செய்யவும் பாத்திய தையுடையர்களாயிருக்கிறார்கள். இதுதான் வித்தியாசம். கவர்ன்மெண்டாருக்கும் தங்கள் செல்வாக்கின் ஆவரணத்துக்குள் வருவோருக்கும் நடுவே பிரயோசனமுள்ள மத்யஸ்தர்களாக அவர்கள் எதிர்பார்க்கப்படலாம். பொதுவாய் நிர்வாக ஏற்பாடுகளிலும், அதிலும் குறிப்பாக பஞ்சம் மகம்மாரி விஷயங்கள் சம்மந்தப்பட்டவைகளிலும், உயிர்கல்வி அவர்களிடம் உள்நுழைந்து பரவி இம்மாதிரியான ஊழியத்துக்கு அவர்கள் யோக்யதையை நாளுக்குநாள் அதிகப்படுத்த, அதிகப்பிரயோஜனத்தை அவர்கள் கூட்டுறவானது செய்யலாகும்.

19. என்றாலும் இந்தஜமீன்தார்களும்நிலசுவானகளும் இதுகாறும், பொதுஜனவிஷயங்களில் மும்முரமாய்ப் பாடுபட்டுழைக்கவேண்டிய யோக்யதை தங்களுக்கிருக்கிறதாக ஒரு அடையாளமாவது கொடுத்ததுமில்லை. சட்டநிர்மாணம், கிரியாரூபமான நிர்வாகம் ஆகிய விஷயங்களில் தங்கள் அபிப்பிராயங்களை வெளிவிடத் தங்களுக்கு அவகாசம் கிடைக்கவேணுமென்ற ஆவலையாவது ரூபித்ததுமில்லை. நல்லத்திற்கோ கெடுதலுக்கோ, பிரிடிஷ் ஆதிபத்யகாரியமானது, தத்தம் ஆத்மார்த்தத்தையும், கோஷ்டியினிடத்து அவர்களுக்கிருக்கும் செல்வாக்கையும் விர்த்திபண்ணுவதைவிட்டு அடியோடே அழித்துவிட்டது. இப்போது ஏதோ சப்பைகட்டுக்கட்டி அதை மறுபிறப்புக்குக்கொண்டுவரப்பார்ப்பது விருதாவாய்ப் போவதுமல்லாமல், விரும்பத்தக்கதுமல்ல. இந்த தேசத்தின் பிரஜைகளின் க்ஷேமாபிவிர்த்தியை தலைக்கிளப்பாமல் அமுக்குவதானல், இந்த சபைக்கட்டுகள் தவிர வேறு விஷயமான தந்திரம் இல்லை.

20. யோசனை (அட்வைஸரி) சபைகளில் இந்த ஜமீன்தார்களுக்கு ராசிக்கு அதிகமான கவுரவம் கல்பித்ததற்கு கவர்ன்மென்டார் விடுத்த லெட்டரில் யாதொரு முகாந்தரமும் கூறப்பட்டதை இந்தக்கமிட்டியார் காணார்கள். வங்காளமாகாணத்திலிருப்பது போல, பம்பாய்ராஜதானியில் ஜமீன்தார்கள் இல்லை. கூர்ஜரத்து தாலூக்தார்களும், ஸிந்து ஜமீன்தார்களும், தக்ஷிணத்து ஸார்தார்களுமே நம்மாகாணத்துக்குப் பிரபுக்கள். இந்தப்பிரபுக்களினிடத்து கவர்ன்மென்டாருக்குத் திடீரென்றுண்டான நடைநோக்கமும் மாறின மதிப்பும், ஜனங்களுக்கு அதிக ஆச்சரியத்தை உண்டாக்கினதன்றி அவர்கள் அங்கீகாரத்துக்கு ஒப்பவில்லை. இதுவரையிலும் அவர்கள் வேறுவிதமாக பாவிக்கப்பட்டு வந்தார்கள். இதேபிரபுக்களை ஒருவருக்கொருவர் கிருத்ரமஞ் செய்துகொடுக்காமல் காக்கக் கணக்கில்லாத ஏற்பாடுகள் கவர்ன்மென்டார் செய்ததை, நியாயசபை சாஸநத்தில் காணலாம். இதே விஷயமாய்ச் சென்ற 30 வருஷகாலத்துக்குள் வெவ்வேறு விதமான ஐந்துமசோதாக்கள் ஏற்படுத்தப்பட்டன.

1876 ஹுத்திய 14-வது ஆக்ட்
1881 ஹுத்திய 20————
1834————11————
1876————20————
1906————11————

இவர்களில் அநேகர் கடன் பட்டு மீளாது முழுகி யிருக்கிறார்கள். தங்கள் சொந்தக் காரியங்களையே கவனித்து வர சாமர்த்திய மற்றவர்கள். கடனுக்கிடான அவர்களுடையசொத்துக்கள் சர்க்கார் இதற்கென்றேற்படுத்திய உத்யோகஸ்தர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்குள் படிப்பு மதிக்கக்கூடிய விதம் பரவவில்லை. அவர்களில் அநேகருக்கு இங்கிலீஷ்பாஷையே தெரியாது.

அவர்கள் படிப்பும் புத்தி திறமையும் மிகத்தாழ்ந்தன. தங்களைமிஞ்சிய காலஸ்திதியாலும், தங்களுடைய சொந்த ஊனத்தினாலும், ஜனங்களின் இயல்பான பரம்பரைத் தலைவர்களாகயிருந்த அந்தஸ்தை இழந்தனர். இவர்களின் கொடுமையினின்றும் தங்களை விடுவிக்க உதவியை நோக்கும் குடியானவர்கள் இந்தப்பிரபுக்களைக் கொடுங்கோலார் என்றே இதுகாறும் மதித்திருந்ததை சர்க்காரும் அநுதபித்தது அறிந்தவிஷயமே. வியாபாரமும் கைத்தொழிலும் இப்பிரபுக்களிடமிருந்து லவலேச ஆதரவும் பெறவில்லை. ஜனக்ஷேமாபிவிர்த்தி காரியங்களில், மேன்மையான அநுதாபத்தை வகிக்கக்கூடிய யோக்யதையும் இவர்களிடத்துக் காணப்படவில்லை.

21. உபயோகமான யோக்யத்தை யுடையவர்களாயிருப்பார்களேயாகில், தங்களுக்குஉரிமையான செல்வாக்கை ப்ரயோகிக்க அவர்களுக்கு பாத்யதை யிருப்பதை கமிட்டியார் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யோக்கியதை பெற்றிருந்தாலும், இந்தியர்களின் அபிப்பிராயக்களஞ்சியத்தின்ஒருஅம்சத்தைத்தான்அவர்கள் சொல்லக்கூடும். அதுவும், விரல்வைத்து எண்ணக்கூடியதும், வெகுவாய்சுயநய திருஷ்டியுடையதும் மனோவிசாலமில்லாததுமான வகுப்பாரின் அபிப்பிராயமன்றோ? மேலும் நிர்வாக அதிகாரிகளிடத்துத் தொங்குண்டிருத்தலே, அவர்கள் அபிப்பிராயத்தை நிர்பயமாய் வெளியிடக்கூடாமல் தடுக்கும். இப்பிரபுக்களில் அபிப்பிராயங்களும், நோக்கமும் பொதுஜனங்களின் சம்மதத்தைக் கையாண்டிருக்கிறது என்று சர்க்கார் நம்புவது, கேடுவிளைக்கும் பிசகென்றும், ஜனங்களுக்கு ஆபத்தென்றும் விநயத்துடன் கமிட்டியார் தெரிவிக்கிறார்கள்.

நடுவகுப்பார்.

22. ஏகாதிபத்ய யோசனை சபைக்குச் செய்யப்போகும் ஏற்பாட்டில் விசித்திரமான ஒரு விசேஷம் என்னவென்றால், அந்த சபையில் வர்த்தகம், கைத்தொழில், பொதுவாய் சாஸ்திரீயப் பிழைப்பு, இவ்வகுப்பாளர்களின் பிரதிநிதிகள் ஸ்தானம்வகிக்க இடங்கொஞ்சமேனும் கொடுபடவேயில்லை. இவர்கள் வேணுமென்றே நீக்கப்பட்டார்களா, ஏதோ தவறுதலாய் சேர்க்கப்படவில்லையா என்று அறிய கமிட்டியாருக்கு சாத்யப்படவில்லை. அவர்களை நீக்கின காரணம் யாதாயினும், பெரியவர்த்தகச் செல்வர்களுக்கும், கைத்தொழில் ஆரம்பித்து நடத்திய தீரர்களுக்கும், தேசகாரிய விஷயமாய் மற்றவர்கள்போல லாப நஷ்டம் உண்டு. அவர்கள் இந்திய ஜனத்தொகையில் ஏனையோர்க்குச் சளைக்காத சக்திவந்தர்களும் பலத்தவர்களுமான பகுதிகளாவார்கள். இவ்வகுப்பாரில்படித்தவர்கள், தங்கள்படிப்பு, ஸ்வதந்தரம், தன்னலமறுப்பு இவைகளால் பொதுஜனங்களின் அந்தரங்கமான நம்பிக்கையை சம்பாதித்திருக்கிறார்கள். இதைகவர்ன்மெண்டார் அலட்சியம் செய்வது காரியக்காரத்தனமான ஊக்கமல்ல, அபாயத்துக்கும் ஏதுவாகும். இப்பகுதியாரை விலக்குவதால், செய்யப்போகும் சீர்திருத்தத்தில், தங்களுக்கு எவைகளைப்பெற விருப்பமோ அந்த அபிப்பிராயங்களை மாத்திரம் பொறுக்கிப் பெறும் அதிகாரத்தை அதிகாரிகள் தாங்களே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவ்வபிப்பிராயங்களையும் ஏனையோர்களிடத்து கிரகிப்பதைவிட, கிஞ்சித்தும் மனவிசாலத்தையடையாத பரதந்திராளான வகுப்பாரிடமே கிரகிக்கவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு எண்ணமிருப்பதாக நிச்சயமாய் ஜனங்கள் நினைப்பார்கள்.

கிரியா நிர்வாக அதிகாரம்.

23. ஏகாதிபத்ய யோசனை சபையிலிருந்து ஜனங்கள் தாங்களே பிரதிநிதி நியமிக்கும் ஸ்வதந்திரத்தை முற்றிலும் ஒழித்ததின் பயன், யாருடைய அபிப்பிராயமும் யோசனையும் நல்ல ராஜ்ய நிர்வாகத்திற்கு இன்றியமையாத அஸ்திவாரமோ அன்னோரிடத்தில்கவர்ன்மெண்டாருக்கு அந்தரங்கமான நம்பிக்கை இருக்கிறதென்பதற்குஅத்தாட்சியாகவாவது, நீதிபூர்வகமான அபிவிர்த்திக் காரியங்களில் எடுத்துவைக்கும் ஓர் முன்னடியாகவாவது கிரகிக்கக்கூடாததாகும். எல்லா மெம்பர்களும் ராஜப்பிரதிநிதியாலேயே நியமிக்கப்படுவார்களேயானால், மாகாணத்து கவர்ன்மெண்டார் யாருக்கு சிபார்சு செய்கிறார்களோ அவர்களே நியமிக்கப்படுவார்களென்பதுதான் பலனாகும். ஏனெனில்,ராஜப்ரதிநிதியானவர்மெம்பராக்கப்படுவோரின் குணாதிசயங்களை ஸ்வதாவாய் அறிந்து பொறுக்கி யெடுக்கக்கூடுமென்று எண்ண இடமில்லை. நடைபெறும் ராஜதந்திரத்துக்கு எதிர்வாதம்செய்வதிலும், ஸ்வதந்திர தர்மத்தை அநுஷ்டிப்பதிலும் சுட்டிக்காட்டக்கூடிய ஜனத்தலைவர்களை, மாகாணத்து கவர்ன்மெண்டார்கள் அநேகமாய் சிபார்சுசெய்யமாட்டார்கள். ஜனங்களுடைய க்ஷேமார்த்தத்தை உத்தேசித்து எந்தக்கட்சி தகுந்தபடி பிரதிநிதித்வத்தைப்பெறவேண்டுமோ, அந்தக் கட்சியோரைப்பொறுக்கிநியமனம் பண்ண ராஜப்ரதிநிதிக்கும் அசாத்தியமாகும். நியமனம் பெற்ற மெம்பர்களும், யாருடைய சிபார்சினால் தங்களுக்கு அந்த கவரவம் கிடைத்ததோ அன்னோர்களுடைய இச்சைக்கு இணங்கிநடப்பதை விட்டு மாறாக நடக்கும் உணர்ச்சிக்கு வெகுவாய் ஆளாகமாட்டார்கள். மேலும்

தங்களைப் புனர்நியமனஞ்செய்ய செல்வாக்குடையோர் செய்யும் ஏற்பாடுகளுக்கு விரோதமாய்ப் போதுமானஸ்வதந்திரத்துடன் தங்கள் அபிப்பிராயங்களை நிர்பயமாய் வெளியிடவுமாட்டார்கள். அப்படியன்றி நிஷ்பட்சபாதமாயும் நிர்பயமாயும் அவர்கள் வேலை பார்த்தாலுங்கூட, அன்னோர்உடன்படும்போது, தங்கள் சொந்த க்ஷேமத்தை உத்தேசித்து அப்படி உடன்பட்டதாக எண்ணப்படுவார்களேயன்றி, ஏதோ தாங்கள்செய்வது மனப்பூர்வமாய் நல்ல காரியத்தைச் செய்கிறோமென்றதிடமான நம்பிக்கையுடையவர்களாக பொதுஜனங்களால் நினைக்கப்படமாட்டார்கள். அங்ஙனம் நினைக்கப்படாததும் குற்றமாகாது. இத்தகையபலனை கவர்ன்மெண்டார் கோருகிறார்களென்றெண்ணலாமா? கூடாது. ஆகவே, அந்த ஆபத்தினின்றும் காக்கவேண்டிய யுக்தத்தைக் கவர்ன்மெண்டார் தெரிந்து பின்பற்றுவார்கள் எனக் கமிட்டியார் நம்புகிறார்கள்.

24. சட்ட பூர்வகமான அங்கீகாரம் வேண்டாததும், எந்தக்காரியத்தையும் தாங்களே ஆரம்பிக்க யதாக்ரமமான அதிகாரமில்லாததும், இச்சாமாத்ரம் கூட்டப்படுவதும், வேணுமென்றால் மட்டும் யோசனைகேட்கப்படுவதும், நிர்வாக அதிகாரிகள் இஷ்டப்ரகாரம் அபிப்பிராயங்கள் கிரகிக்கப்படுவதும், ரகசியமென்றும், விதிக்குக்கட்டுப்படாததென்றும், அந்தரங்கமென்றும் பாராட்டப்படும் நடவடிக்கைகள்உள்ளதும், நிர்வாக அதிகாரிகள் நினைத்தப்பிரகாரம் மெம்பர்களின் அபிப்பிராயங்களும், யோசனைகளும், மதிக்கப்பெறுவதும், நிராகரிக்கப்படுவதும், நிர்வாகத்தார் சரியென்று நினைத்தால் உபயோகப்படுத்தக்கூடியதும், ஆனால் ஒருபோதும் பிரசுரிக்கப்படமாட்டாததுமான, கௌரவத்தையுடைய விரல் விட்டு எண்ணக்கூடிய யோசனைக்காரர்க

ளின் கோஷ்டி ஒன்று சிருஷ்டிக்கப்பட்டால், அதன்பலனே, "இந்தயோசனைக் கூட்டங்களெல்லாம்பொறுப்பற்றவைகள் என்று சுட்டிக் காட்டுவதும் தவிர, இவைகளினின்று ஏதாவது நல்ல பிரயோஜன பலன்கள் உண்டாகுமென்று சங்கிக்கிறேன்" என்று, திருத்தப்ரேரோணைகட்கு ஆட்சேபம்கொண்டுவந்த மிஸ்டர் எச். ராபர்ட்ஸன் பார்லிமெண்டு சபையில், சொன்னதேயாகும்.

25. மேல்விதித்த நிபந்தனைகளும், ஒழுங்குகளும், முழுஏற்பாட்டையும்பிரயோசனமற்றதாயும், மாயாஸ்வரூபமாயும் ஆக்கிவிடும். இதுவரையிலும், நிர்வாக அதிகாரிகள் என்ன செய்து வந்தார்களோ அதுவேதான் இன்னுமும் நடைபெறும். ஆனல் என்ன வித்யாசமென்றால்: பொறுக்கிஎடுத்த யோசனைக்காரர்கள் பெயரெல்லாம் பிரசித்தப் படுத்தப்படுமாம்; அவர்கள் ஏகாதிபத்திய ஆலோசனைக்காரர்களென அழைக்கப்படுவார்களாம்; இதுவரையும் நிர்ப்பந்த எல்லையொன்றின்றி, கவர்ன்மெண்டார் இஷ்டப்படி, யாரையோ, எந்த சமயத்திலோ, எந்த மாதிரியாகவோ யோசனை கேட்டுவந்ததை விட்டு, இப்போதிய யோசனையானது அவ்விதம் பொறுக்கியெடுப்பதைக் கட்டுப்படுத்தி ஆவரணத்தைக் குறுக்கும். இதுவே வித்தியாசம். இது முன்னிலும் விர்த்தியாம்சமுடையதன்று.

26. நிர்வாக கவர்ன்மெண்டின் அதிகாரமும் பொறுப்பும் பலங்குறையாது நிலைத்திருக்க வேண்டும் என்று சர்க்கார் தடுத்துச் சொல்ல வேண்டியது அஸந்தர்ப்பம் என்று இந்தராஜதானி சங்கத்தாரின் கமிட்டியார் விநயமாய் விஜ்ஞாபிக்கிறார்கள். யாருடைய வளரும் அபிலாஷைகளைத்திருப்திசெய்வது கவர்ன்மெண்டு ஏற்பாட்டின் நோக்கமோ அன்னோர்களின் பொறுப்புற்ற வாதியா

யினும் பிரதிநிதியாயினும் வேறுவிதமாய் விரும்புவான் என்று கமிட்டியார் அறிந்திருக்கவில்லை. கட்டுக்கேசற்றும் அடங்கியிராத சர்க்கார் அதிகாரத்துக்கு கடிவாளம்போடவும், அவர்கள் பொறுப்பும் பொது ஜனங்களின் அப்பிப்பிராயத்துக்குக்கஞ்சித்து அஞ்சிநடக்கவும், வேண்டுமென்பதே கமிட்டியார் வாதிப்பதாகும்.

27. சட்டப்பூர்வகமான அங்கிகாரமற்றதும், யதாக்ரமமான அதிகாரம் யாதொரு விதமாயும் கொடுக்கப்பெறுததுமான ஒரு சபை யாதொரு மேலதிகாரமும் செலுத்த வாய்க்காது. நிர்வாகத்தாருக்கு மனசிருந்தால் விஷயங்கள் தங்கள் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதும், தங்கள் அபிப்பிராயங்கள் மதிக்கப்படும் என்ற நன்னம்பிக்கை யில்லாததுமான சபை மெம்பரின் கௌரவமானது வ்ருஷளீவரம் * போல் வீணையாகும். தங்களுடைய அபிப் பிராயங்களையும் ஆலோசனை களையும் உள்ளபடி ஜனங்கள் அறியக்கூடிய நிஸ்ஸந்தேகமான ஆதாரம் இல்லாவிடில் அவர்கள் வேலை கானலில் எரிக்கும் நிலவாகும். தனித்தனியே யோசனைகேட்பதாவது, ஸ்வலாபாஸ்பதமாய் பிரஜைக்குழிவீழ்த்தும் கூட்டுறவுகளுக்குக் காரணமாகும். இதுவும் விதிக்கப்பட்ட ரகஸ்ய நடவடிக்கையால், ஒருவேளை வெளிவந்துவிடுமோ என்ற ஆபத்தில்லாமலே, நிர்பயமான ஒருஆதரவை சித்தப்படுத்தும். யாருடைய யோசனையானது ஜனங்கள் அறியக்கூடாதபடியும், குற்றங்குறைகூறப்படாத படியும், சொந்த மென்றும், நிர்விதீய மென்றும் அந்தரங்கமென்றும் ரக்ஷிக்கப் படப்போகிறதோ அப்பேர்ப்பட்ட யோசனையினின்றும் உபயோகமான உதவிபெறப் பாலதன்று. அவ்வி

* மலடியை வரித்தல்.

தம் தூண்டப்படும் அபிப்பிராயமும், யோசனையும், பிரதிநிதித்வமாயும், நிர்பயவசனீயமாயு மிராது. அவைகள் வரம் பெற்ற சில பொறுக்கு மனுஷர்களுடைய அபிப்பிராயமும் யோசனையு மாயிருக்கு மாகையால் பிரதிநிதித்வமாயிராது. யாதொன்றையும் தாங்களே ஆரம்பிக்கும் அதிகாரம் பெறாத போதும், பொதுவான ராஜ்யதந்திர தர்மத்தை வியவ்க்ரிக்க பாத்யதை இல்லாதபோதும், ஜனங்களுடைய விருப்பங்களையும் குறைகளையும்எடுத்துக் கூறி அவைகளின் பரிகாரத்தை நாடக் கூடிய பாத்யதையாகிற விண்ணப்பஞ் செய்யும் சுவதந்தரமும் அவர்களிடமிருந்து நீக்கப்பட்ட காலத்தும், அந்த யோசனைகளும் அபிப் பிராயங்களும் நிர்பயவசனீயமுமாகாது. ஆகவே இச்சபையார் வாயிலாக பொது ஜன அபிப்பிராயம் பாத்தியம் பெற்றுவது சரியாகவாவது வெளிவருதற் கிடமில்லை. இதுவரையும் இருந்துவருகிறது போலவே அதிகாரிகளின் பொறுப்பும் சபையார் நெருங்கிஅணுகவாவது செல்வாக்கினுல் பாதிக்கவாவது முடியாமல் நெடுந்தூரத்திலேயே நிற்கும்.

ப்ராச்சிய (கீழ்த்திசை) ராஜ்யதந்திர தர்மம்.

28. ப்ரேரேபித்த ஏற்பாடானது, ராஜாவானவன்யோக்கியதையுள்ள பெரியோர்களின் யோசனையைக் கேட்க வேண்டுமென்றும், கேட்டபிறகு, ஜனங்களின் சரியான மனதின்னதென்று தான்நினைத்த பிரகாரம் ஆட்சி செய்ய வேண்டுமென்றும், எப்போதும் அங்கீகரிக்கப்பட்ட பிராச்சிய ராஜதந்தர தர்மத்தின் பரம்பரையாய் கிடைத்திருக்கும் புராதன சம்பிரதாயத்தை ஒட்டியதென்று இந்தியா கவர்ன்மெண்டாரின் லெட்டரில் வாதிக்கப்படுகிறது. கிழக்

குத்தேசத்தார் கோஷ்டியில் மேற்குதேசத்தாரின் சம்பிரதாயத்தை நாட்டிசிலவிஷயத்தில்நேர்ந்தவிபரீத மேதுமின்றி, இந்த ஏற்பாடானது,தேசதர்மத்தில் நவீனமாறுதல் ஒன்றும்செய்யப்போகாதென்றும்,அந்தலெட்டர்கூறுகின்றது. ஆனால்இது ஆதாரமொன்றின்றித் தாங்களே சங்கல்பித்த யுக்திவாதமென்று இந்த கமிட்டியார் நினைக்காமலிருக்க முடியவில்லை. யௌவனதசையைப் போக்கிவிட்டு, நாசமுறுங்காலத்திருந்தப்ராச்சிய ராஜ்யதந்தரத்தின்விஷயமாய், இந்தியா கவர்ன்மெண்டார் முன்னிலும்விட அதிக கவனம் செலுத்துவதாக இந்தக்கமிட்டியாருக்குத் தோன்றுகிறது. பிராச்சியமன்னர்களும், பகிரங்கமான சபையில் மந்திராலோசனை ஏற்றுக்கொள்ளும்போது, பூர்ண லட்சணம் பெறாதுபோனாலும், ஏதோ ஒருவிதமான பிரதிநிதித்வ ஸ்வரூபத்தை மனமறியாமலேனும் வணங்கியிருந்தார்கள். அரசன் யதார்த்தமாய், மதியூகியாயும் கார்யசித்திக்காரனையும் இருப்பானேயானால், அப்பேர்ப்பட்ட பிராச்சிய மன்னன், தன்யோசனைக்கு பாத்ரானானவர்களில் பெரும்பாலரின்அபிப்பிராயத்தை இச்சைப்படிநிராகரித்து, மனம்போனபடி நடந்திருக்கவுமில்லை. பிரிடிஷ் ராஜ்யபரிபாலன முறையின்படி,பார்லிமெண்டுசபைகளில்நடந்தேறும்எந்த ஏற்பாடும் அந்த அரசனால் எப்படிச்சிறிதும் நிராகரிக்க முடியாதோ, அவ்விதமாகவே, நல்லொழுங்கு பெற்றதும், அமைதி நிலைத்ததுமான எல்லா இந்திய ஸமஸ்தானங்களிலும், பகிரங்கமான ஸதஸ்ஸில்,கேட்கப்படுவோரின் யோசனையை, ராஜா தம் உத்தம தர்மப்படி சற்றும் அநாதரவு செய்யக்கூடியதாகவே யிருந்ததில்லை. பிரஜைகளின் ஜாதியிலுற்பவிக்காத அயல் அரசனுக்குக் கிடைக்கக்கூடாத சௌகரியங்கள் ப்ராச்சியமன்னர்களுக் கிருந்தனவென்ப

தும், மேற்குதேசத்தில் சித்தப்போக்கான அதிகாரத்தனைச் செலுத்தும் அரசனைக் கண்டித்துவரும் சாதனங்கள், தேச மன்னர்களைக் காட்டிலும் விஜாதீயமான பிரிடிஷ் ஆட்சியார்க்கே அதிக ஆவசியகம் என்பதும் மறக்கற்பாலதன்று.

29. இந்தியா கவர்ன்மெண்டார் ஒருநாளுமில்லாமல் ஆச்சரியகரமாக அநுஷ்டிக்க விரும்பும் இதே ராஜ்யதந்திரமானது, சுமார் 50 வருஷங்களுக்குமுன் அநுஷ்டேயகரமெனஎடுத்துரைக்கப்பட்டபொழுது, அதுபிரிடிஷ்பார்லிமெண்டால் சபதம்வைத்து ஒழிக்கப்பட்டதை சர்க்கார் கவனிக்கத் தக்கதென இச்சங்கக் கமிடியார் விநயத்துடன் வேண்டுகிறார்கள். 1861 ஸ் த்திய இந்தியா கவுன்சில் மசோதா ஏற்படுத்தப்படுவதற்கு முன்னமேயே, காமன்ஸ் சபையில் மிஸ்டர் அயர்டனும், பிரபுக்கள் சபையில், எல்லென்பரோ, க்ரே, இப்பிரபுக்களும், இதைப்போன்ற பிராசீய ராஜ்யதந்திர தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்று தூண்டிவிட்டது அங்கீகரிக்கப்படாமல் போயிற்று. அந்த மசோதாவின் சுற்றுச்சுழட்டலான பிரகரணங்களில் அநேகத்தை அடித்துவிட்டு, ஆசியாகண்டத்தாருடைய அநாகரீகமான மனநிலைக்கு அதிக அநுசரணையாயிருக்கும்வண்ணம் அந்தமசோதாவைமுழுவதும் மாற்றவேண்டுமென்று ஸர் சார்ல்ஸ்வுட்டை மிஸ்டர் அயர்டன் கேட்டுப்பார்த்தார். எல்லன்பரோபிரபுவும், ஹிந்து மன்னனொருவன் சபை கூட்டி, பிரஜைகளை அபிப்ராயம் கேட்டுக்குறைகளை அறிவது மாத்திரம் அநுஷ்டித்துத் தான் எது யுக்தமென்று எண்ணுவானே அப்படி நடத்துவதான வழக்கம் பெற்ற அந்த சபையே, இந்தியாவுக்கு, சவுகரியமான மிகவும் திறமைவாய்ந்த சட்ட

நிர்மாண யந்திரமென்று, கூறியிருக்கிறார். அந்த ஆலோசனை சபையும், தன்காரியங்களை ரகஸ்யமான மீட்டிங்குகளிலும், அந்தரங்கக்கடிதப்போக்குவரத்திலுமநடத்தவேண்டுமென்றும் அந்த பிரபுவே மீண்டும் வாதாடியிருக்கிறார். க்ரே பிரபு மெற்சொன்ன விஷயமாகவே ஒரு திருத்தப்பிரரேபணை செய்தார். ஆனால், கொண்டுவரப்பட்ட திருத்தப்பிரேரேபணையானது, இந்தியா நாடுகளை இங்கிலாந்து சம்பாதித்த காலம் தொடங்கி அன்றுவரையும் இங்கிலாந்து அநுஷ்டித்திருக்கும் எந்த ஒழுங்குமுறையிலும் யாதொரு உதாரணத்தையும் பெறாததாயும் விசித்திர லக்ஷணத்தையுடைய ஒருசபை நிர்மிக்கமுயல்வதாயுமுளதென்று மூத்த க்ரே பிரபுவும், ரிப்பன் பிரபுவும், சக்ரவர்த்தியின் கவர்ன்மெண்டு சார்பில் வாக்களித்தபிறகு, அந்தப்பிரேரேபணையோ பிரிவினையின்றி எல்லாராலும் கூடாதென்று நிராகரிக்கப்பட்டது. இன்னும், அவ்வித சபைக்கு யதார்த்தமான அதிகாரம் ஒன்றிராது, கவர்னர் ஜனரலிடம் செல்வாக்குப் பெறாது, அடிக்கடி அதன் அபிப்பிராயம் அநாதரவு செய்யக்காண்கும், அப்போது, செல்வாக்கும் மதிப்புமுடையவர்கள் அந்த சபையில் ஆஸனம் வகிக்க மறுப்பார்கள். ஆகவே யோசனைக்கு என்று ஏற்பட்ட அந்த சபையும், உபயோகிக்கப்படாமல், மானபங்கத்தையும் அடையுமென்றும் அந்த பிரபுக்கள் கூறியுள்ளார்.

30. "நாங்கள் பிராச்சிய நாகரீகத்தின் பிரதிநிதிகளல்ல. ஆனால் மேல்திசை நாகரீகம், அதன்கிரியாவிசேஷம், அதன் தத்வம், அநுஷ்டானம், இவைகளைக்கைப்பற்றியவர்களே" என்று ஆர்ப்ரோத்தில் இந்தியாமந்திரிதானேசமீபத்தில் சந்தேகமில்லாதபடி வாக்குறுதி செய்திராவிட்டால், இந்தியா கவர்ன்மெண்டார் பிராச்சிய ராஜ்யதந்திரத்

தையும், அதன் சம்பிரதாயங்களையும் அநுஷ்டிக்க விரு
ம்பிக்கூறிய கூற்றை, இந்தக்கமிட்டியார் மிகவும் திகிலு
டனே நோக்கி யிருப்பார்கள். அந்த மந்திரி கூறியதே
இந்தியா கற்ற பாடமாகும். பிரிடிஷ் ஆதிபத்யத்தோடு சம்
பந்தப்பட்ட ஆதிகால முதலே இந்தியா எதை நல்ல
தென்று அங்கிகரிக்கக் கற்பிக்கப்பட்டதோ அந்த தர்மம்
அதுவே. காலப்பிற்பாடாகிய இந்த வேளையில் அந்த
தர்மத்தின் நிலையினின்றுலவலேசம் நீங்குவதும், பிராச்சிய
சம்பிரதாயத்துக்குப் பின்னழுவிப் போகப் பார்ப்பதும்,
பொது ஜனங்களின் மனதைச் சஞ்சலப் படுத்தி, கவர்ன்
மெண்டாரின் நிலையை அவமதிப்புக்குட்படுத்துமென்று
இந்தக் கமிட்டியார் நிச்சயமாய் உணர்வார்கள்.

31. ஆகவே ஏகாதிபத்ய ஆலோசனை சபையின் ஏற்
பாட்டைக் கைவிட்டு ஒழித்தலேவேண்டும். அன்றேல், முற்
றிலும் மாற்றவாவது வேண்டுமென்று கமிட்டியாருக்குத்
தோன்றுகிறது. மேலே எடுத்துக் காட்டியபடி தேசமன்
னர்களை அபிப்பிராயம் கேட்கும் காரியம் நீங்கவேறேஉண்
மையான பிரயோசனத்துக்கு ஆஸ்பதமிருப்பதாகத் தோ
ன்றவில்லை. முக்யத்தில் எதற்காக இந்த யோசனை சபை
கள் ஏற்படுத்தப் பட்டு உபயோகப் படுத்தப்படப் போகி
ன்றனவோ அப்பேர்ப்பட்ட நிர்வாக சம்பந்தமான ஏற்
பாடுகள் இந்தியா முழுவதுக்கும் ஒரே மாதிரியாக இருக்
கமுடியாது. அவ்விஷயமாய், மாகாணத்து சபைகளும்,
அவைகளோடு கூட ஜில்லா சபைகளுமே போதுமென்று
கமிட்டியார் சொல்லத் துணிவார்கள். இந்த சபைகளி
னுடைய யோசனைகளும்அபிப்பிராயங்களும் இந்த கவர்ன்
மெண்டாருக்கு கிரமமாய்த் தெரிவிக்கப்படும். இங்
ஙனம் பெறப்படும் யோசனை அபிப்பிராயங்களையே

ஏகாதிபத்யயோசனை சபையானது சரி யென்று அங்கீ கரிப்பதானால் அப்படிச் செய்வது அதிகப்படியாகும், அநாவசியமுமாகும். அன்றி, அபிப்பிராய விரோதப் பட்டால், இன்னசெய்வதென்று தோன்றாத கஷ்டத்துக் க்குள்ளாக்கும். நிராகரிக்கும் பட்சத்தில் ஆபத்துக்கிட மான விஷமத்துக்கு ஏதுவாகும்.

மாகாணத்து ஆலோசனை (அட்வைஸரி) சபைகள்.

32. மாகாண யோசனை சபைகள்விஷயமாய், கமிட்டியார் எடுத்துக் காட்டிய பிரகாரம், பிரேரேபிக்கப் பட்ட ப்ரக ரணங்களும் நிபந்தனைகளும் அச்சபைகளைப் பாதிக்கும் வரையில் மாத்திரம் மேற்கூறிய தங்கள் அபிப்பிராயங்களி லேயே, தங்கள் கடமையென்று, கவர்ன்மெண்டாருக்கு ஆட் சேபனைகளையும், திருத்தங்களையும் எடுத்துக்காட்டி யிருக் கிறபடியால், இங்கே அவைகளை மீண்டும் எடுத்துரைத் தல் அநாவசியமென்று இக்கமிட்டியார் நம்புகிறார்கள்.

விசேஷமான காரியங்களில் மாகாணத்து கவர்ன் மெண்டார் அபிப்பிராயம் பெறும்வண்ணம், இப்போ தைக்காட்டிலும் விரிவான அடிப்படையுடைய யோசனை சொல்லக்கூடிய பொறுக்கு மனுஷாளுடைய சபை ஒன்று மாகாண கவர்ன்மெண்டாருக்கு ஏற்படுத்த வேண் டியது என்று இந்தியா கவர்ன்மெண்டார் விரும்புகிறார்க ளெனவும், குறுநிலக் குடிகளும், சில்லரைக் கைத்தொழி லாளிகள், வியாபாரிகள் முதலாளிகள், உத்யோகஸ்தர்கள்— இவர்களும், இந்தச் சபைகளில் பிரதிநிதித்வம் வகிக்க வேண்டியது அவசியமெனவும் இந்தியா கவர்ன்மெண்டார் விரும்புகிறார்களெனக் கமிட்டியார் அறிகிறார்கள்.

மாகாணத்திய பெரிய நிலசுவான்களை, ஏகாதிபத்ய யோசனை சபையில் பிரதிநிதித்வம் வகிக்கும் மாகாணத்திய மெம்பர்களோடும், மாகாண கவர்ன்மெண்டின் தலைமை அதிகாரியால், மாகாணத்திய இதர வகுப்பாரின் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கத் தேர்ந்தெடுத்து ராஜப்ரதிநிதியின் அங்கீகாரம் பெறும்வண்ணம் நியமிக்கப்படும் பிரதிநிதிகளோடும் சேர்க்க, குறித்த காரியமாய்த் தேவையான நபர்கள் கூடிவிடுமென்று காட்டப்படுகிறது. ஆனும் தேச மன்னர்கள் இந்தச்சபையில் அங்கம்வகிக்க நியமனம் பெறக்கூடாதென்றும், பிரிடிஷ் இந்தியாவில் நிர்வாக விஷய ஏற்பாடுகளைப் பரியாலோசனை செய்வதில் பேச அவர்கள் ஒருவிதமான உரிமையையும் பெற யோக்கியர்களல்லர் எனவும், கமிட்டியார் ஏற்கனவே விஜ்ஞாபித்திருக்கிறார்கள். பர்ட்வான், காசி, தர்பங்கா தேச மகாராஜாக்களைப்போல இந்த இராஜதானியில் பூமி மன்னர்கள் கிடையவே கிடையாது. எல்லா வகுப்பினரையும் அதிகாரிகளோடு நெருங்கிய பழக்கத்துக்குக் கூட்டிவைக்க வேண்டுமென்றும், நிர்வாக ஏற்பாடுகள், காரியத்தரமான பிரேரேபணைகள்—இவை விஷயமாய், கவர்ன்மெண்டின் நோக்கத்தை உருப்படுத்துவதில் அவர்களுக்கு செல்வாக்குள்ள ஒரு ஸ்வதந்திரத்தை கற்பிக்க வேண்டுமென்றும், கவர்ன்மெண்டாருக்கு யதார்த்தமாய் அபிப்பிராய மிருக்குமாகில், நிலக்காரர்கள், இன்னும், வியாபாரிகள், கைத்தொழிலாளிகள், முதலாளிகள், உத்யோகஸ்தர்களான எல்லா வகுப்பினரும், இந்த மாகாண யோசனை சபைகளில் தங்கள் இனத்தின் தொகைஅந்தஸ்து விசேஷங்களுக்குத் தக்கபடி சரியான எண்ணிக்கையுடைய பிரதிநிதிகளை நியமிக்க இடம்பெற வேண்டும்.

34. செய்யப்போகும் ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள காரியம் நடத்தற்கான ஒழுங்குகள், சபையார்தானே காரியங்களை ஆரம்பித்து நடத்தவும், தாராளமாய் விவகரிக்கவும், விரிவான போதுமான அவகாசம் இருக்கும்படி, மாற்றப்படவேண்டுமென்று கமிட்டியார் வணக்கத்துடன் வேண்டுகிறார்கள். அதிகாரிகள் பிரியப்பட்டால் மாத்திரம் அபிப்பிராயங் கொடுப்பது என்ற நிர்ப்பந்தமில்லாமல், தங்கள் மாகாணத்தில் ஜனங்களைப் பாதிக்கும் விசேஷ ஏற்பாடுகளைப் பற்றி அவசியமானபடி காரியத்தை சூசிப்பிக்கவும், யோசனை சொல்லவும், ஆட்சேபணைகளை எடுத்துக்காட்டவும், தடங்கலற்றதான அதிகாரத்தை இந்த ஆலோசனை சபைகள் பெறவேண்டும் இந்த ஏற்பாடுகளும் சட்டபூர்வகமாய்த் தீர்மானிக்கப்படவேண்டும். பிரத்யேகமாய் ஒவ்வொருவருடைய அபிப்பிராயம் அறிவதற்கான விதி ஒழிக்கப்படவேண்டும் எனக் கமிட்டியார்வேண்டுகிறார்கள். ஏனெனில், அப்படி யோசனை செய்வது பொதுஜன க்ஷேமத்தை விர்த்திபண்ணுவதைவிட்டு கெடுதல்விளைக்கவே ஏதுவாகும். எப்படி என்றால், விருத்தமான லாபார்த்த யோசனைக்காரர்களுக்கு தடங்கலில்லாதபடிகாரியஞ்செய்யும் லாகவத்தையும், சதியோசனைக் காஸ்பதத்தையும் தூண்டிவிடும். மெம்பர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையையுண்டாக்கும். சபையோர் கூட்டத்திற்கே பொறுப்புணர்ச்சியின் லவலேசத்தையும் நீக்கிவிடும். பிரத்யேகமாய் ஒவ்வொருவரையும் அபிப்பிராயங் கேட்டுத்தெரிவதைவிட, அதற்கு வித்தியாசமான சபையின் கூட்டுப்பொது அபிப்பிராயமே, அநேகமாய் அதிக பலனுள்ளதாகையால், அப்பேர்ப்பட்ட சபையின் ஏகோபித்த யோசனைக்கே

இந்தியா கவர்ன்மெண்டார் சிறந்த மதிப்புவைத்திருப்ப தாக வெளிக்கூறியிருப்பதால், கமிட்டியார் எடுத்துக்காட் டும் திருத்தங்கள் அங்கீகரிக்க அநர்கமாயிருக்கமாட்டா வென்று நம்பத்துணிவார்கள். அப்படிப்பட்டசபையின் ஏகோபித்த அபிப்பிராயமும் யோசனைகளும் ரகசியமெ னவும் அந்தரங்கமெனவும் பாராட்டப்படக் கூடாதெ ன்றும், பொது ஜனங்கள் தெரிந்துகொண்டு அவர் கள் அதில் குற்றங் குறைகளை எடுத்துக் கூறும்படி அவகாசமுற்றவாய் இருக்கவேண்டுமென்றும் கமிட்டி யார் பின்னும் வேண்டுகிறார்கள். அப்படிச் செய்வதே யோசனை சபைகளைப் பற்றினமட்டில் தேவையான பொ றுப்புணர்ச்சியைச் சித்தப்படுத்தும். ஜனங்களைப்பற்றின மட்டில், அவைகளிடத்து ஜனங்களுக்கு இருக்கவேண்டிய நம்பிக்கையையும் உண்டாக்கும்.

35. மாகாணயோசனை சபைகளில் இந்தியப்பிரதிநிதி களோடு சர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத ஐரோப்பிய ர்கள் கூடிக்கலத்தலானது எவ்விதத்திலும் விரும்பத்தக் கதே. என்றாலும், பொதுக் கார்யத்துக்குத்தேவையான கூட்டுறவுக்கு ஆஸ்பதமாய், அபிப்பிராயங் கேட்பதும் சேர்ந்து யோசனைசெய்வதும், ப்ரத்யேக யோசனைக் கும், ரகசியயோசனைக்கும் மேலாக அங்கீகரிக்கப் பட்டால் மாத்திரம், இவர்களுடைய சேர்க்கையானது, தவறான எண்ணங்களையும் கேடு விளைக்கும் மனநோக் கத்தையும் நீக்கி, இப்போதினும் நல்ல அபிப்பிராயக் கலப்பை விர்த்திபண்ணுவதில் பலன் தருவதாகும்.

36. யோசனை சபைகளின் அபிப்பிராய யோசனைகள் விசாலித்துப் பலன்பயக்கும் வண்ணம் போதுமான ஏற்

யாடு பண்ணப்பட்டாலொழிய, பிரேரேபித்த ஒரு ஏற்பாடானது ஆசாபங்கத்துக்கும், அவமதிப்புக்கும் கொண்டுவிடும் என்று கமிட்டியார் வணக்கத்துடன் அபிப்பிராயப் படுகிறார்கள். யோசனை சபையார் ஏகோபித்து யாதாயினும் ஒரு நிர்வாக ஏற்பாட்டைச் சரியல்லவென்று சொல்லும் பட்சத்தில், அதைக் கைவிடவேண்டும். மூன்றிலிரண் டம்சத்தார்கள் சம்மதியாத காரியத்தை, அவர்கள் அங்கிகரிக்கும்படி திருத்தவாவது வேண்டும், அல்லது அவ்வேளைவிட்டுவேறுகாலத்தில் யோசிக்க ஒத்தியாவது வைக்கவேண்டும். தங்கள் அபிப்பிராயமோ யோசனையோ தடங்கலின்றி அநாதரவு செய்யப்படுமென்று தெரிந்தால், அவ்வளவு கேவலமான ஒரு ஸ்திதியினின்று, இப்பேர்க்கொத்த பொறுப்பான பெரியகாரியங்களுக்கு அகப்படும் பெரியவர்களும், சுவபாவமாய் நீங்க முயலுவார்கள். எங்கே அதிகாரமில்லையோ அங்கே பொறுப்பு மிராது. நிகிர்ஷ்டமான பெருமையையும், சந்தேகாஸ்பதமான பிரயோசனத்தையுமுடைத்தான ஒரு ஸ்தானத்தை வகிக்க ஏற்றுக்கொள்ளுவோர் பொதுஜனங்களினுடைய நம்பிக்கையைப் பெறுவோர் ஆகார்கள். இதன் பலனோ, முதல்தரமான பிரயோசனத்தைக் கூடியவரையில் பயக்கத்தக்கதும், ராஜ்ய நிர்வாக தர்மத்தை யொட்டிய ஒருநூதன பரீட்சார்த்தமான கிரியையை பெரும்பாலும் விசாலிக்கத்தக்க யோக்யதையுற்றதுமான ஒரு ஏற்பாடானது, 1861ஸு த்தில் மூத்தகிரேபிரபுவும், ரிப்பன் பிரபுவும் கூறியுள்ளபடி, அநுஷ்டிக்கப்படாமல், அவமதிப்பை அடைவதாகும்.

ஜில்லா யோசனை சபைகள்.

37. உயர்பதவியில், ஏகாதிபத்ய யோசனைசபைகள் ஏற்படுத்துவதைக் காட்டிலும், அடிப்புறத்தில் ஜில்லா யோசனை சபைகள் ஏற்படுவதே நிரம்பவும் விரும்பத்தக்கதென கமிட்டியார் தெளிவாய் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த சபைகளினின்றும் எதிர் பார்க்கப்படும் பயன்படும் கைங்கரியமெல்லாம், ஏகாதிபத்ய கவர்ன்மெண்ட் இருப்பிடத்திலாவது, மாகாணங்களிலாவது பயன்படுவதைககாட்டிலும், ஜில்லாக்களிலேயே அதிக பலன் தரத்தக்கதும், கிரியா விசேஷத்தை யுடையதுமான யோக்யதையை அடைவதுடன், அந்த ஜில்லாக்களிலேயே அவைகள் அதிகம் வேண்டியு மிருக்கின்றன. நிர்வாக சம்பந்தமான ஏற்பாடுகள், கிரியார்த்தமான பிரேரேபணைகளால் பாதிக்கப்படும் க்ஷேமலாபங்கள் இவைகள், ஜில்லாக்களிலுள்ள ஜனங்களினுடைய க்ஷேமத்தையே வெகுவாய்ப் பற்றினவா யிருக்கும். அவ்விடங்களிலேயே இவ்வேற்பாடுகளும், ப்ரேரேபணைகளும், தீட்சணியமாய் உணரப்பெறும். விஷயந்தெரிந்து அறிவோடு விவகரிக்கப்படும். நூதனமாய் சிருஷ்டிக்கப்படும் பெரும் கடமைகள் அளிக்கக்கூடிய பொது ஜன நல விஷயமான படிப்பு, பழக்கங்கள், வெகுநாளாய் நாடின அபேட்சையைத் திருப்திசெய்யும். கவர்ன்மெண்டாரின் எண்ணங்களையும், ஜனங்களுடைய குறைகளையும் ஒருங்கே சரிவர பரஸ்பரம் தெரியப்படுத்தும் ஒரு வகுப்பாரை வரப்போகும் சிறந்த பொது நிலைமையும் பெரியதான பொறுப்புணர்ச்சியும் வெளிப்பட அழைக்கும்.

38. ஜில்லா யோசனைச்சபைகள் சம்பந்தமாய், ஏற்கெனவே அடியிற்கண்டபடி, மாகாணசபை விஷயமாய்ச்

சொன்ன திருத்தங்களையும் சாவதானங்களையுமே இங்கே விரும்புகிறார்களென கமிட்டியார் சொல்ல வேண்டிய தில்லை யென்று நம்புகிறார்கள்:—

(a) சபையார் முழுவதையும் கவர்ன்மெண்ட் நியமனஞ் செய்வதைவிட, அவர்களின் பெரும் பாலாரை ஜனங்கள் நியமனஞ்செய்ய ஏற்றல்;

(b) அதிகாரிகள் விரும்பினால் மட்டும் அபிப்பிராயங் கொடுப்பது என்ற நிர்ப்பந்தத்தை விட்டு, தாங்களே காரியங்களை பிரேரேபிக்க அதிகாரம் கொடுக்கப்படல்;

(c) எவைகளைப்பற்றியோசனை சொல்லபாத்தியமோ அப்பேர்ப்பட்ட விஷயங்களை சட்டபூர்வகமாய் நிர்ணயித்தல்;

(d) பிரத்யேகமாய் யோசனைகேட்பது, ரகசியத்தில் கேட்பது—இவற்றிற்குப்பதிலாக, பகிரங்கமாய் சபையோரின் ஏகோபித்த யோசனை கேட்பது;

(e) யோசனை கேட்கப்படுவோர்களின் அபிப்பிராயம் யோசனை இவைகளை முற்றிலும் அநாதரவு செய்யாமல் தக்கபடி பாதுகாத்தல்.

39. பொது ஜனங்களுடைய அந்தரங்கத்தையும் நம்பிக்கையை யுடையதும், போதுஜன அபிப்பிராயத்தை நன்றுதெரிந்து நிர்பயமாய் சொல்லக் கூடிய பிரதிநிதி மெம்பர்களைப்பெற்றதும், முன்னிலும் அதிகமாகத்தானே காரியத்தை எண்ணிச்செய்யும் சக்தியுடையதும், எல்லாருமறியும்படி, ஜனங்கள் குற்றங்குறையை எடுத்துக்காட்டும்படி சபையார் எல்லாம் ஏகோபித்துயோசனை சொல்லக் கூடியதும், அவர்கள்யோஜனை, அபிப்பிராயம் இவைகளை அநுசரித்து காரியம் நடத்தப்படும்படி தகுந்த பந்தோபஸ்து செய்யப்பெற்றதுமான, மாகாணத்துக்கும் ஜில்லாக்

களுக்கும் ஏற்படப்போகும் யோசனைசபைகள், நன்மையைத்தருமென்று எண்ணப்படுவதோடு, கவர்ன்மெண்டுக்கும் ஜனங்களுக்கும் முதற்றரமான கைங்கரியத்தைச் செய்யுமென்று நியாயமாய் எதிர் பார்க்கவும் படலாம்.

சட்ட நிர்மாண சபைகள்.

40. மண்டலாதிபத்யத்துக்கும் மாகாணத்தாருக்குமென ஏற்பட்டிருக்கும்சட்டநிர்மாண சபைகளின்சம்பந்தமாய்,பிரேரேபிக்கப்பட்ட மாறுதல்களை வ்யவகரிக்குமுன்னே, இந்தியா கவர்ன்மெண்டாரின் சார்பில், ஸர்ஹாரல்ட் ஸ்டூவர்ட் லெட்டரில் கூறியுள்ள பொதுவானகுறிப்புகளையும், பிரேரேபணைகளையும் பற்றி, கமிட்டியார் தங்களுக்குள்ள நோக்கங்களை விருப்பத்துடன் விக்ஞாபிக்க வேண்டுகிறார்கள்.

41. மேலே வெளியிட்ட பிரேரேபணைகளினுடைய பொதுவான நோக்கமானது, இதுவரையும் பொதுக் காரியங்களில் ஸ்வப்ரயோஜனத்தைக் கருதாது, கைவிடாமல் உழைப்பவர்களைப் பகிரங்கமாகத் தூற்றுவதும், கவர்ன்மெண்டாரின் காரியங்களைக் குற்றங்குறைகூறி, அவர்கள் தப்பிதங்களை,அறிவு,ஸ்வதந்தரம்,தைரியம் இவைகளோடு உள்ளபடி வெளியிட்டதனுல் அதிகாரிகளின் அநுதாபத்துக்குப் பாத்ராளாகாத ஒருவகுப்பாரை அவமதிப்பதுமாக இருக்கின்றனவெனக் காணக் கமிட்டியார் வருந்துகிறார்கள். ராஜாங்கதோரணையான ஒரு பகிரங்கமான சாஸநத்தில், இப்பேர்க்கொத்த தேசலாபாலாபமான விசேஷங்களுள்ள சமயத்தில், அன்னோர்கள் பேரில் சர்க்கார் மார்ச்சரியத்தை வெளிப்படையாய்க் கொண்டாடுவது கவர்ன்மெண்டார் தங்கள் கவுரவத்

துக்குத் தகுமா என்று கவனிக்கவேண்டியது. படித்த இந்தியர்களிடத்து அடாததும், வெளிப்படையானதுமான விசேஷ அவநம்பிக்கையைக் காட்டுவதும், அந்த படிப்பாளிகளுக்கும் மற்றோர்க்கும் பிரிவினை உண்டாக்குவதும் சர்க்காரின் நல்ல ராஜ்ய தந்திரத்துக் கேற்றதல்ல என்று கமிட்டியார் வணக்கத்துடன் சொல்வார்கள்.

42. இப்பெரிய தேசத்து சாமானிய பொது ஜனங்களெல்லாரும் தங்கள் அரசனுக்கு ராஜவிசுவாசம் பூண்டவர்களென்பது, மகாராணியவர்கள் காலஞ்சென்றபோழ்து, சந்தேகிக்கக்கூடாததும் எதிர் பார்க்காததுமாய் ஜனங்களுக்குண்டான ஆழ்ந்த வியசனத்தினாலும் தீவிர பக்தியினாலும் நன்று வெளியாயிற்று. ஜனங்களிடத்திற் கசிந்தொழுகியிருக்கும் இந்த இராஜபத்தியானது கவர்ன்மெண்டார் யாருடைய உதவியைக் கோரியிருக்கிறார்களோ அந்த வகுப்பாரால் விளைந்ததல்ல. யாரை அதிக மதியீனமாயும் நன்றியில்லாமலும் கவர்ன்மெண்டார் உத்தியோகமுறையில் தூற்றி நம்பிக்கைக் குறைவாக நடத்துகிறார்களோ அந்த படிப்பாளிகளான இந்தியர்களாலேயே உண்டானது.

43. தற்காலம் ஜனங்களிடத்துக்காணப்படும் கலக்கமானது ராஜத்துரோகக் கலவரையினால் மாத்திரம் உண்டானதல்ல; படிப்பாளிகளான இந்தியர்களுக்கு நியாயமாய் உதிக்கக்கூடிய மேலான ஆசைகளையே அஸ்திவாரமாக உடையதென இந்தியாகவர்ன்மெண்டார் நாளடைவிலேயே தெரிந்து ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றுகூறி, பின்னும், அந்த ஆசைகளை ஒருவாறுபூர்த்தி பண்ணும்பொருட்டு கவர்ன்மெண்டார் இப்போது வெளிவிட்டிருக்கிற விச

லமும் நல்லெண்ணமுள்ளதுமான ஏற்பாடு ஜனங்கள் குறைகளை தீர்க்கவேணுமென்னும் சர்க்கார் விருப்பத்தின் பலனென மதிக்கப்படவில்லையென்றும், சென்ற அக்டோபர்மாசத்தில் ஸிம்லாவில் கூடின மண்டலாதிபத்ய சட்ட நிர்மாணசபையில் பேசினபோது சர்ஹென்ரி ஆடாம்ஸன் முறையிட்டார். ஜனங்களுக்கு முன்பாக வெளியிடப்பட்டிருக்கும் சீர்திருத்த ஏற்பாடு முழுதும் அடங்கிய இந்தியா கவர்ன்மெண்டார்லட்டரில், அடிமுதல் நுனிவரையில் மறைவில்லாமல் காணப்படும் படிப்பாளிகளான இந்தியர்கள் மேலுள்ள மாற்சரியமே இப்படி மதிக்கப்படாமலிருந்ததற்குக் காரணமென எடுத்துக்காட்டுவது தங்கள் கடனென்று கமிட்டியார் கருதுகிறார்கள். சீமையில் ராஜாவின் கவர்ன்மெண்டாராவது, இந்தியா கவர்ன்மெண்டாராவது உண்மையிலே அவ்வித மாற்சரிய உணர்ச்சியை பாராட்டார்களென்று கமிட்டியார் நம்புகிறார்கள். ஜனங்கள் க்ஷேமத்தை யுத்தேசித்து, சர் ஹாரோல்ட் ஸ்டீவர்ட்டின் கடிதம் நிச்சயமாய் விளைந்திருக்கிற தீமையான எண்ணத்தை நீக்கும்வண்ணம் கமிட்டியார் விநயத்துடன் கோருகிறார்கள்.

பிரதிநிதித்வம்.

44. லார்ட் க்ராஸ் மசோதாவில் *பிரதிநிதித்வமே சற்றும் ஏற்கப்படாது நீக்கப்பட்டது, அதற்கு ஓர்பெரிய குறைவு. எனெனில், அந்த மசோதாவில் அந்த முறையையே அங்கீகரிக்காது நீக்கியும், இந்தியா கவர்ன்மெண்டார் பார்த்து அவர்களுக்கு நல்லெண்ணமும் பகுத்தறிவுமிருந்தால் அம்முறைக்கேற்ப மசோதாவை அநுஷ்டிக்கும்படிவிட்டும் சிறிது ப்ராதிநித்ய முறையிலானும்

* 1892-ம் வருஷம்.

இந்தச்சபைகள் சீர்திருத்தத்தை யடையட்டும் என்று எண்ணிய இந்தியர்களின் கிரமமான ஆசைகளைப் பார்லிமெண்டு ஏமாற்றி விட்டதென்று பொதுவாய் உணரப்பட்டது. 1892 ௵ இந்திய மசோதாவின் வியவாஹாரத்தில் க்ளாட்ஸ்டன் பேசின பேச்சிலிருந்து இந்த விஷயமாக மேற்கோளாய்ப் பின்வருவதை வரைவது அவசியம்:— "இந்தப் பார்லிமெண்டுக்கு முன்னால் வியவஹரிக்கப்படும் பெரிய விஷயமானது, இந்திய அரசாட்சியில் பிராதிநித்யப் பகுதியை ஏற்படுத்துவதற்கான பெரிய க்ஷேமார்த்தமான காரியம். அந்த விஷயமொன்றே மற்றெல்லாவற்றையும் மறைத்துத் தன்னுள் அடக்கிக்கொள்ளும். அதுவே இன்னும் உயிர்நிலை போன்ற விசேஷத்தை யுடையது. இந்திய ஜனங்களுடைய உண்மையான ஹிருதயத்தையும் மனதையும், அவர்கள் நிஜமான எண்ணங்களையும், உத்கிருஷ்டமான மனோ தர்மத்தையும், நாடவேதே நாம் வேண்டுவது. இதற்கும் பாதையில் பயம் உண்டு. தைரியமின்றிக் கீழ்ப்படுதல் என்னும் ஓர் அபாயம் இருக்கிறது. மற்றோர் அபாயமுமுளது. அதாவது, ஒரு தனியான கட்சியைச் சேர்ந்தவர்களேனும், அல்லது தனியான உரிமைகளை உடையவர்களேனும் தங்கள் தங்கள் லாபத்துக்காக முயலுகையில் தேசத்துக்காகப் பேசுவது போல் பாசாங்கு செய்யக்கூடும்."

45. மதம், நடை, உடை, பாவனைகள், எண்ணங்கள் எல்லாம் தங்களுடைய தேசத்துக்கு முற்றிலும் விருத்தமான ஒரு தேசத்தையாளும் பொறுப்பு, குறிப்பாக அப்பேர்ப்பட்ட தேசம் தற்காலத்தில் இடைவிடாத பெரிய மாறுதல்களை யடைந்து கொண்டிருக்கும்போது, சமீபகாலத்தில் கணிசமாக அதிகரித்தேதீரும். பொது ஜனங்

களின் எண்ணங்களை அறியாமையாலோ, தெள்ளியெடுத்த சிலர் அபிப்பிராயத்தை மாத்திரம் நம்பினதாலோ, கவர்ன் மெண்டார் சரிவரத் தேர்ந்தறியக்கூடாத விஷயங்கள் அநேகம் கிளம்பும். பிரேரேபித்த, அல்லது குறிப்பிட்ட, சட்ட சம்பந்தமான ஏற்பாட்டை பொதுஜனங்கள் எவ்வளவுதூரம் அங்கீகரிக்கிறார்கள் என்று கவர்ன்மெண்டார் நிர்ணயிப்பதும் அந்தப் பிரதிநிதிகளானப் பகுதியின் உதவியிலேதானாகும். இந்தப் பிரதிநிதிகளின் சங்கியை தகுந்த அளவினதா யிருந்தாலொழிய, பாரமான பொறுப்பினின்றும் கவர்ன்மெண்டார் சரிவர விடுபட மாட்டார்கள்.

46. மாகாணத்து சபைகள் விஷயமாக, "ப்ராதிநித்ய பகுதியை ஏற்படுத்தியபலன் எதிர்பார்த்தபடி கார்ய சித்தியாகவில்லை என ஒப்புக்கொள்ளப்படுகிறது" என்று ஸர் ஹாரோல்ட் ஸ்டூவர்ட்டின் லட்டரில் கண்டகுறிப்புரை தப்பென்று கமிட்டியார் விநயத்துடன் வெளியிடல் கடனெனக் கருதுகிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒப்புக்கொள்ளுதல் ஒன்றையும் கமிட்டியார் அறியார்கள். மேலும், 1893௵ முதல், இந்த சீர்திருத்தம்பெற்ற சபைகள் எந்த ராஜதானிகளிலும் மாகாணங்களிலும் ஏற்பட்டிருக்கின்றனவோ அங்கேயெல்லாம், கவர்னர்களும் தலைமை அதிகாரிகளும் தாங்கள் நேரே அறிந்த பிரகாரம், அந்த சபைகள் திருப்திகரமாய் வேலைசெய்து வந்திருக்கின்றன வென்றும், அந்த மாகாணசபைகளின் ஜன ப்ரதிநிதிகள் அப்போதைக்கப்போது செய்த வேலைக்கும் உதவிக்கும் பூர்ணமான புகழையும் அளித்திருக்கிறார்களென்றும், கமிட்டியார் விநயத்துடன் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஞாபக மூட்டுவார்கள். ஏகாதிபத்ய

சட்டசபையிலுங்கூட ஜனப்ரதிநிதிகள் செய்த ஊழியம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தங்களுக்கு வெளிப்படையாய் விளங்கும் காரணங்களையிட்டு பிரத்யேக ஸ்துதிசெய்வது சரியல்லவென்று கமிட்டியார் சும்மாவிருந்தாலும், மண்டலாதிபத்ய சபையிலோ, மாகாணச் சபையிலோ, சர்க்கார் நியமனம்பெற்ற அங்கத்தினரைக் காட்டிலும், ஜனப்ரதிநிதிகளே, நல்ல ஆட்சியினிமித்தம், கிரியாம்சையாயும், பலனுள்ளதாயும், இடைவிடாமலும் ஒத்தாசை செய்திருக்கிறார்களென்று கூறப்பின்வாங்கார்கள்.

வக்கீல்கள் அபரிமிதம்.

47. மாகாணத்து சட்டசபைகளில் இந்த பிரதிநிதி முறையானது, வக்கீல் தொழிலுக்கு அளவுக்கு மீறிய மேம்பாடு உண்டாயிருக்கிறதென்றும், விசேஷித்த மற்ற உரிமைக்காரர்களின் பகுதிகளுக்கு அத்தொழிலாளர் பிரதிநிதிகளாகவில்லை என்றும் இயங்கிவரும் முறைப்பாட்டைக்குறித்து, அந்த முறைப்பாடு முகாந்திர நியாயமுள்ளதாயில்லையென எடுத்துக்காட்டுவது தங்கள் கடனென கமிட்டியார் கருதுகிறார்கள். மாகாணத்து சபைகளுக்கு ஜில்லா போர்ட்டுகளினாலும் முனிசிபாலிடிகளாலும் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்களில், நிலமுடையோர் சங்கியைவிட, வக்கீல்கள் சங்கியையே அதிகமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால், அதிலிருந்து கிரகிக்கக்கூடிய வியவகாரத்தில் இரண்டுவிதமான போலி உண்மைகள் இருக்கின்றன: முதலில், இந்த வக்கீல்களில் பலர் நிலமுடையோர்களாயிருக்கிறார்கள் என்ற வெளிப்படையான விஷயம் சற்றும் கவனிக்கப்படவில்லை. இரண்டாவது, அந்தச்

சபைகளில் வக்கீல்கள் தங்கள் கூட்டத்தாருக்காவது தங்கள் சொந்தமான லாபங்களைப்பற்றியாவது பிரதிநிதிகளாகவாவது வாதிகளாகவாவது ஸ்தானம்வகிக்க வில்லையென்பதைமறந்தார்கள்போலும். சாஸ்திரத்தொழிலாளிகள், வியாபாரிகள், நிலதாரர்கள் போலின்றி, ஒருபோதும் விசேஷமான சொந்தப் பிராதிநித்யத்துக்குப் பாத்தியம் கூறினவர்களேயல்ல.

48. வக்கீல்கள் அதிகப்படி நியமனம் பெறுவது, தங்கள் சாமர்த்யத்தாலும், நற்குணங்களாலும் எல்லா வகுப்பாருடைய பொது நம்பிக்கையைப் பெற்றிருத்தலாலுந்தான். வேறு விதமாய்ப் பெறக்கூடியதை விட தங்கள் தொழிலிலேயே பெறும் தேர்ச்சியும், ஜயமும், அவர்களுக்குள்ள முயற்சி, சாமர்த்தியம், பிரேரபகாரம் முதலியவற்றுக்கு நம்பிக்கையான நிரூபணமாகும். ஜனங்கள் அவர்களைக் கவனிக்கும் வண்ணம் அவர்கள் உத்தியோகமே பலவந்தப் படுத்துகிறது. சட்ட நிர்மாணவிஷயமாய் அவர்கள் செய்யவேண்டும் ஊழியத்துக்கும்,அதுவே ஜீவியகாலம் வரையில் பழக்கிவைப்பதாயு மிருக்கிறது. படிப்பினாலும், விஷயங்களைக் குறிப்பாய் அறிவதனாலும், நிர்ப்பயமாய் சிந்திப்பதனாலும், வாதிக்கும்சாமர்த்தியத்தினாலும், ஜனங்களின் விருப்புநோக்கங்களை வெளியிட்டுப் பேசவல்லவர்களென எல்லா வகுப்பாரும் அந்தவக்கீல்களையே ஆதரிக்கிறார்கள். ப்ரத்யேகமான ஓர்வகுப்பாரையும் அவர்கள் ப்ராதிநித்யம்செய்ய நாடுவதில்லை. எல்லா வகுப்பாருடைய க்ஷேமலாபத்தையும் பட்சபாதமில்லாமல் வாதாடி எடுத்துப்பேசுகிறவர்கள். அவர்கள் நிர்வாக அதிகாரிகளிடத்தில் ஒரு விதத்திலும் தொங்குகிறவர்களல்ல. ஆகையால், பொது ஜனங்களுக்கிருக்கும் குறை

களையும், விருப்பங்களையும், அஞ்சாது வெளியிட்டுப்பேச வல்லவர்களென்று நம்பப்படுகிறார்கள். தர்மசாஸ்திர சட்டங்களை வாசித்தநிமித்தம் பயிற்சியடைந்த மனதோடும், அதின்முறை அநுஷ்டானங்கள் இவைகளைக்கசடற அறிந்திருக்கும் அறிவோடும், ஆட்சியமைப்பில் சட்ட சபைக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையில் யாருடைய லாபாலாபங்கள் பாதிக்கப்படுகின்றனவோ, அந்தப்பொது ஜனங்களுக்கு, திறமானவும், ஏற்றனவுமான ப்ரதிநிதிகளாவார்கள் அந்த வக்கீல்களே. எக்காலத்திலும் எத்தேசத்திலும், ஜனங்களினுடைய உரிமைகளை வாதித்துப்பேசுவோரும், அவர்கள் ஸ்வதந்தரத்தைப் பாதுகாப்பாரும் வக்கீல்களே-யாவார்கள். அதிகாரிகளுடைய உரிமையில்லாத ஆக்ரமிப்புகளைக் கண்டுபிடிக்கும் அறிவும், எதிர்க்கும் சக்தியும் ஒருங்கேயுடையவர்கள். நமது சட்டநிர்மாண சபைகள், அவைகளிடத்தில் நம்பிவிடப்பட்டு அவைகளினின்று எதிர்பார்க்கப் படுவதான வேலையைச் சரியே செய்து முடிக்கவேண்டுமானால், இப்போதைக்காட்டிலும் அதிகமாக விவகாரத்துக்கு வரக்கூடிய பெரிய விசேஷ காரியங்களைப் பிசகின்றி மதித்து, சரியாய் இயற்ற வேண்டியதற்கான உத்கிருஷ்டமான ஜனங்களாகியும் சுயநலங்கருதாத பரோபகார பக்தியோடு தேசவிசுவாசத்தைச் சேரப்பெற்றவர்களாகியும், பற்பல ஜாதி, மதம், கொள்கைகளையுடைய இத்தேசத்து ஊழியத்துக்கு இந்த வக்கீல்களை முன்கொண்டு வந்தது இந்தப் பிரதிநிதித்வ முறையின் குணமேயன்றி குற்றமல்ல.

49. சட்டநிர்மாணசபையில் வக்கீல்கள் அபரிமிதமாய் இருப்பது, பொது ஜனங்களுக்குக் கெடுதலை விளைத்திருந்ததாகக் காண்பிக்கப்பட்டாலொழிய, அந்த

முறைப்பாட்டில் தருந்த நியாயமேயில்லை. ஸர் ஹாரோல்ட் ஸ்டுவேர்ட் லட்டரில் இப்படிக் காணப்படவில்லையென அறிய கமிட்டியார் சந்தோஷிக்கிறார்கள். 1893 ஸூ முதல் திருத்தம்பெற்ற சட்டசபையின் தஸ்தாவேஜீகள் தரும் சாட்சியமானது, இதுவரையில் செய்யப்பட்ட வேலையிலிருந்து, வக்கீல்கள் மாத்திரம் செய்த வேலையைக் கழித்துப் பார்த்தால், சட்ட நிர்மாணம் மிகவும் அல்பமான பலனைக் காண்பிக்கும் என்னும் தீர்மானத்தை எடுத்துக் காட்டும். பம்பாய் ராஜாதானியைப்பற்றி மாத்திரம் கமிட்டியார் நேர் அநுபோகத்தில் அறிந்திருக்கிறபடியால், தங்கள் அபிப்பிராயங்களை அந்த ராஜதானியைக்குறித்தே வரையறுப்பார்கள். ஆகவே பம்பாய் சட்டநிர்மாண சபையில் வக்கீல்கள் செய்திருக்கும் வேலையை இந்தியா கவர்ன்மெண்டார் கவனிக்கும்படி கமிட்டியார் வேண்டுகிறார்கள். சமீபத்தில் நடந்தேறிய ரிவினியூ சம்பந்தமான சட்ட நிர்மாணத்தில், பயிரிடுவோன், நிலமுடையோன், நிலசுவான்தாரர்கள், சாவகாரி இவர்களுடைய லாபாலாபங்களை நிஷ்பக்ஷபாதமாய் அவர்கள் வெளிவிட்டு வாதாடியிருக்கிறார்கள். உள்ளூர் சபையில் இந்த ராஜதானியின் வடபாரிசத்துக்குஸ்தானம் வகிக்கும்பேர்பெற்ற வக்கீலைக் காட்டிலும், குர்ஜரத்து ஏழைக்குடியானவன் கஷ்டத்தைப்பற்றி இடைவிடா விசுவாசத்துடனும் முழு அநுபோக அறிவுடனும் மற்ற யாரும் வாதித்ததில்லை. அந்த கனம்பொருந்திய பிரதிநிதியின் குறிப்புரைகள் தவறென்று சபையில் அதிகாரிகளால் மறுக்கப்பட்ட பொழுது, உண்மையை விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்படுத்தும்படி செய்து, அந்த விசாரணையில் அவர்பரோபகாரபக்தியுடனும், சளைக்காத உழைப்போடும் உதவி செய்தார்.

அதன்பலனாக, அவர் அபிப்பிராயங்கள் யதார்த்தங்களையே வெளியிட்டன வென்று ஏற்பட்டது மன்றி, முறையிடப்பட்ட கஷ்டங்களும் நிர்வாக சட்டங்களால் செவ்வையாக நீக்கவும் பட்டன. டிஸ்டிரிகட் போர்டுகள், டிஸ்டிரிகட் லோகல் முனிசிபாலிடிகள், பம்பாய் நகர முனிசிபாலிடி, இவைவிஷயமாய் நடந்தேறிய சட்டநிர்மாணங்களில், நாட்டார் நகரத்தார் இருவரின் லாபாலாபங்களை ஒருங்கே கூடியவரையில் வெகுவாய் நல்ல உருவுக்குக் கொண்டுவந்தவர்கள் வக்கில்களே யாவார்கள். போலீஸ் மசோதாவைப்பற்றி சமீபத்தில் வாதம் நடந்தபொழுது, ஜனங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அதிகாரிகளின் அக்கிரமமான அதிகாரத்தை எதிர்த்துத் தடுப்பதிலும் அவர்கள் வேலைமெத்த கிரியாம்சையாயிருந்தது. அப்படி நடந்ததற்கும், அவர்கள் கொண்டுவந்து ஒப்புக்கொள்ளப்பட்ட திருத்த ப்ரேரேபணைகளே சாட்சியாகும். அவர்கள் செய்திருக்கும் சிரேஷ்டமான வேலைக்கு இப்போது எடுத்துக் காட்டியவை சுவல்ப உதாரணங்கள். இவைபோதும். எவ்வளவு அவசியமோ அதற்கதிகம் எடுத்துக்காட்டி கவர்ன்மெண்டாருக்குத் தொந்தரை செய்ய கமிடியார் பிரியப்படவில்லை.

படித்த வகுப்பார்.

50. இத்தேசத்தில் படித்த வகுப்பாரிடத்தில் சர் ஹாரோட் ஸ்டூவர்ட் லட்டரில் காட்டப்பட்டிருக்கும் அநுதாபமின்மை மாத்திரமல்ல, அடம் வாய்ந்த விரோதப் பான்மையினாலே ஜனங்கள் மனதில் ஜனித்திருக்கும் விசனகரமான உணர்ச்சியை இந்தியா கவர்ன்மெண்டார் கவலையுடன் கவனிக்கவேண்டியது அவசியமென்று கமிட்

டியார் நினைக்கிறார்கள். ராஜாங்க சம்பந்த விஷயங்களி லிருந்து, படித்த வகுப்பை நீக்கவும், பொது ஜனங்களைப் பாதிக்கும் விஷயங்களில் அவர்களுக் குரிமையான செல் வாக்கைஅபகரிக்கவும், அதிகாரிகள் முயலுகிறார்கள் என்ற கலக்கமும் எங்கும் பரவிய பயமும் எல்லாப்புறங்களிலும் உரைக்கப்படுகின்றன. பிரிடிஷ் ஆளுகையானது பெருமை பாராட்டக்கூடிய அதன் காரியசித்தி இந்த படித்த வகுப் பாரை இந்தியாவில்உண்டாக்கினதேயாம். ஆளுவோர்நினை ப்பதுபோல நினைக்கும் வழிகளைக்கைப்பற்றினோரும், நல்ல அரசாட்சியால் அடையப்படுபவும் அபேட்சிக்கப் படு பவுமான நன்மைகளைச் செவ்வனே உண்மையாய் உணரு வோரும், அப்படித்தவர்களைக் காட்டிலும் பிறிதோர் வகுப்பாரில்லை. பிரிடிஷ் அரசாட்சியை வேறு விதி யில்லை யென்று ஏற்காது, நன்மை பயக்கத்தக்கது என் றே ஒப்புக்கொண்டு அந்த ஆட்சியால் இப்போதும் இனி யும் நல்லதுவிளையுமென்று மேலான அறிவினால் மதித்தி ருப்பதே, அவ்வரசாட்சியில் பக்திக்கு மூலகாரண மாகும். ஏற்கெனவே சொன்னபிரகாரம் அந்த ராஜவிசு வாசம் அந்த வகுப்பாரிடமிருந்து மற்றவர்களுக்கும் கசிந்து வந்திருக்கிறது. அந்த வகுப்பாரில் பொறுப்பேற்ற தலைவர்களால் வெளியிடப்படும் தக்கவிருப்பங்களுக்கும், அவர்களுக்கு எதிரிடையான அக்ரமமான விருப்பங்களு க்கும், வித்யாசம் கண்டுபிடிப்பது சர்க்காரின் சக்திக்கு மீறியதல்ல. தக்க அபேட்சைகளை மறுத்தும், நிலையான அபிவிர்த்திக்கு நியாயமாய் வழிவிடாமலும் ஒரு வகுப்பார் அனைவரையும் அன்னியர்களாக்குவது, விவேகிகள் அவசி யம் கைவிடவேண்டியகாரியம். இப்போதிருக்கும்மேலான ஆசைகளுக்கு அவகாசம் கொடாமலும், பிற்காலத்தும்

ஒருவிதமான நம்பிக்கைக்கு ஹேதுவில்லாமற் செய்தும் படித்த இந்தியர்களை மனமொடிந்து கலங்கும்படி ஒட்டி விடுவது வெளிப்படையான ஆபத்து என்பதிற்சந்தேக மில்லை. படித்தவர்களின் அபிப்பிராயத்தை அநாதரவு பண்ணவாவது, அதைவெளிவராமல் நசுக்கவாவது பார்ப் பது பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு அசாத்யமானகாரியம். ஏனென்றால் அந்த அபிப்பிராயங்களுக்கு சில அதிகாரிக ளால் அடக்கக்கூடாதவண்ணம் அசந்தர்ப்பமாய் வாயுண் டாயிருக்கிறது. படித்தவர்களில் சிலரை சர்க்கார் உத்யோ கத்தில் சேர்த்துக்கொள்வது போதாது. ராஜாங்கவிஷ யங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், நிர்வாகக் காரியங்களை மேல்விசாரணை செய்யவும், உத்யோகஸ்தரல் லாத படிப்பாளிகளுடைய யோக்யதைக்குத் தடங்கலில் லாத அவகாசம் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் சேர்க் கையினாலேயே, ஆளுவோரும், ஆளப்படுவோரில் எல்லா வகுப்பாரும், ஒன்றாய் சேர்க்கப்படுவதன்றி, உத்யோகக் காரியத்தனமும் மலினப்படாது பலத்தையடையும். இப் போது தலையெடுத்த சிறுவர்களையும் இனிப் பிறக்கப் போ கிற சந்ததியாருடைய மனதுகளையும் எண்ணங்களையும் படித்தவர்களே சரிவர உருவாக்கவேண்டும். இதைவெளிப் படையான அவநம்பிக்கையுடன் நோக்குவது, பிரிடிஷ் அரசாட்சியின் விரோதிகளை நல்லதென்று சொல்லக் கூடிய ராஜதந்திரமாகும்.

தடைக்கட்டு தந்திரம்.

51. படித்த வகுப்பாரின் செல்வாக்குக்கு ஒரு தடைக் கட்டு ஏற்படுத்துவதே பிரஸ்தாபப்ரேரேபணைகளின் மர்ம மெனத்தோன்றும். இந்தக் காரியம் பிரயாசையல்ல. உயர்

வகுப்பாரும் கீழ்த்தர வகுப்பாரும் பொதுவாய் படிப்பாளிகளான புத்தி விசேஷமுள்ளவர்களுக்கு ஒவ்வாதவர்களாயிருக்கிறார்கள். தங்களுடைய லாபத்துக்கு விரோதிகளாயிருக்கிறார்களென்று உயர்தர வகுப்பார் படிப்பாளிகளை எதிர்க்கிறார்கள். கீழ்வகுப்பாரோ தங்கள் தாழ்ந்த எண்ணங்களை படிப்பாளிகள் கண்டிக்கிறார்கள் என்று அன்னோரிடம் வைரம் காண்பிக்கிறார்கள். ஆனால் இந்த வேலையானது, புத்தி விசாலித்த பரோபகார சிந்தையுள்ள மந்திரித்துவத்துக்கு அழகல்ல.

52. தங்களுக்கு உரிமையான செல்வாக்கை ப்ரயோகிக்க முழு அவகாசத்தையும், ராஜாங்க விஷயங்களில் புகுந்துவேலைசெய்யப்போதுமான தூண்டுதலையும், நிலக்காரர்களுக்கும் பணக்காரர்களுக்கும் கவர்ன்மெண்டார் உண்டாக்குவதற்கு யாதொரு ஆட்சேபனையும் இருக்கவும் முடியாது, இருக்கவும் கூடாது. ஆனால், முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் வகுப்பாருடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரிக்க, அவைகளுக்கு திருப்திசெய்யப்போதுமான சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று வாதிப்பவர்களுடைய பெருகும் செல்வாக்கைக் குறைக்கும் வண்ணம் கவர்ன்மெண்டார் தங்கள் ஒத்தாசைக்கு, சுயலாபத்தைக் கருதினோரையும், படிப்பில்லாதவர்களையும் அழைப்பதுவேறுகாரியம், அதுமுற்றிலும் ஆக்ஷேபிக்கத்தக்க அநுசிதமானகாரியம். நிர்வாகஅதிகாரிகளின் அமிதமான அதிகாரத்தை தத்காலமட்டத்தில் நிறுத்தவேதோ சொல்பகாலத்துக்கு இந்தத் தடைக்கட்டு உதவியாகக்கூடும். இதுதான் சர்க்கார் எண்ணம் என்று கமிட்டியார் நம்பக்கூடாவிடினும், இதுவேமுடிவாகும் என்பதை அவர்கள் மறைக்கக்கூடவில்லை. மேலும், படித்தவகுப்பாருடைய நல்லெ

ன்னத்தைத் தங்கள் பட்சத்தில் கட்டிக்கொள்ளவேண்டு மென்ற சர்க்காரின் விருப்பத்துக்கு, இந்த முடிவு ஏற்ற தல்ல என்று கமிட்டியார் வணக்கமாய் எடுத்துக்காட்டு வார்கள்.

53. இப்போது வேண்டப்படும் சீர்திருத்தங்களின் சரியான நோக்கமானது, ஜனசமூகத்தை பிரிவினைப்படுத்தவாவது, தடைகட்டவாவது கூடாது. ஆனால், பலவகுப்பாருக்கும் அவரவர்களுக்கேற்றபடி பிரதிநிதி பாத்தியங்கள் கொடுத்து சமரசப்படுத்துவதாகும். இதின் பலனை, ஒருபுறம், எல்லாவகுப்பாருடையவும், எல்லா லாபத்துறைகளுடையவுமான பிரதிநிதிகளைத் தெரிந்து, அப் பிரதிநிதிகளின் அறிவு, அநுபோகம், யோசனை, கூட்டுழைப்பு இவைகள் சர்க்காருக்குக் கிடைக்கக் கூடியதாகும். மற்றொருபுறம், ஜாதி, வகுப்பு, மதக்கொள்கைகள், ஆகிய வித்தியாசங்கள் பாராட்டாமல், எல்லாருடைய அபிவிர்த்தியையும் க்ஷேமத்தையும் ஓங்கச்செய்து பொதுநலத்துக்கு முயன்று வேலைசெய்ய அந்த ப்ரதிநிதிகளை சர்க்கார் தூண்டித் தட்டிக்கொடுக்கவும் கூடும்.

*ப்ரதேச ப்ராதிநித்யம்.

54. இந்தியாவுக்கு ப்ரதேச ப்ராதிநித்யம் ஏற்றதல்லவென்ற கவர்ன்மெண்ட் அபிப்பிராயம் பிசகென்று கமிட்டியார் சொல்லவேண்டியிருக்கிறது. அந்தப்ரதேசமுறையானது, பலவிதங்களில், ஜனங்களுடைய ஜீவியத்தில் வெகுவாய் உட்புகுந்திருக்கும்பொழுது, நிர்வாகம், சட்ட நிர்மாணம், இவைகளின் தேவையான காரியசம்பந்தமாய் ஏற்றதல்லவென்றுசொல்லக்கூடாது.

* அதாவது அந்தந்தப்ரதேசத்துக்கு அந்தந்த பிரதிநிதிகளை நியமித்தல்.

55. இந்துக்களுக்குள் வழங்கும் ஜாதி ஏற்பாட்டை விட அசையாத கட்டுப்பாடு இருக்கவேமுடியாது. அது கூட, தேசாந்தரமாறுபாட்டுக்கு உள்ளாய்விட்டது. பிராமணர்களைப்போன்ற ஒருமைப்பட்ட ஜாதிகளும், இதர ஜாதிகளும் ப்ரதேச வித்தியாசத்தால் உட்பிரிவினைப்பட்டு பலஜாதிகளாக பகுப்பையடைந்திருக்கின்றன. ஆகவே, ஒருஜாதியாரே, தங்களுக்குள் விவாஹம்பண்ணிக்கொள்ளவும் சமபந்தி போஜநஞ்செய்யவும் கூடாமல் நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மகம்மதியர்களும், தேசாந்தர விதி வசத்தால் பஞ்சாப் மகமதியர்களென்றும், மகாராஷ்டிர மகமதியர்களென்றும், வங்காளா மகமதியர்களென்றும், குர்ஜ்ஜர போராக்களென்றும், கட்ச் மேமர்களென்றும் தனித்தனி இனத்தாராகப் பிரிந்திருக்கிறார்கள்.

56. இந்திய தேசங்களும், பாளையப்பட்டுகளும், தேச விதியை அநுஷ்டித்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகாராஷ்டிரர்கள் ராஜாவென்றுவது, ராஜபுத்திரர்கள் அரசனென்றுவது, பஞ்சாபிகள் சக்ரவர்த்தியென்றுவது ஒரு, வரும் ஒருகாலத்திலும் இருந்ததில்லை. ஹிந்துஸ்தான சக்ரவர்த்தி யென்றும், ஹைதராபாத் நிஜாம் என்றும், ஸதாரா ராஜாவென்றும், கர்னடக நவாப் என்றும், உதயபுரி, மைசூர், கோலாப்பூர் மகா ராஜாக்களென்றும், பரோடா கெயிக்வார் என்றும், இந்தூர் ஹோல்கார் என்றும், குவாலியர் ஸிந்தியா என்று மாத்திரமே நம்மில் வழங்கிவந்திருக்கிறது.

57. இந்து தர்மசாஸ்திரமும் ப்ரதேசவித்யாச விதியால் பாதிக்கப்படாமல் இருக்கவில்லை. கல்கத்தா, காசி, சென்னபட்டணம், பம்பாய் முதலிய இடங்களில் இயங்

கிவரும் ப்ரத்யேக சாஸ்திர சம்ப்ரதாயங்களையும், வெவ்வேறு விதமாய் அர்த்தம் வாதிக்கப்பட்ட பண்டிதர்களுடைய பாஷ்யங்களையும் அநுசரித்து, அவைகளுக்கேற்ப பற்பல மாகாணங்களில் ஹைகோர்ட்டுகள் இன்றைக்கும் அந்த தர்மசாஸ்திரத்தின் அபிப்பிராயங்களை நிர்ணயித்து அவற்றின்படி நியாயந் தீர்க்கின்றன.

58. ஆதிகாலந்தொடங்கி, கிராம கோஷ்டியானது இந்தியாவில் இராஜாங்க நிர்வாக முறையின் அடிப்படையான அம்சமாயிருந்துவருகிறது. ஒவ்வொரு கிராம கோஷ்டியும், பலவேறுஜாதி மதஸ்தர்கள் அடங்கியதும், புரோகிதன், மிராசுதார், குடியானவன், செட்டி, தச்சன், கொல்லன், குயவன், நாவிதன், செக்கிலியன், தோட்டி என்ற பலவிதத் தொழிலாளிகளைக்கொண்டதுமான உயிருள்ள உருப்படியாம். அதன் அமைப்புக்கு ஆதாரம் சாகுபடி நிலமோ, ப்ரதேசமோதான். இந்த முறையானது எந்தப் பரீட்சையையும் சமாளித்திருக்கிறது. இந்த தேசத்துக்கு நன்று, ஏற்றது, என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஹிந்து மகம்மதிய அரசனாலும் ஒருங்கே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்ஙனமாக, சென்ற சிலகாலமாய், அது ஒப்புக்கொள்ளப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் போனால் அப்படிப்போனது அபிவிர்த்திக்காவது பொதுஜன க்ஷேமத்துக்காவது ஏதுவாயிருக்கவில்லை.

59. தேசத்தாரின் ஜீவியத்தைப் பாதிக்கக்கூடிய தேச வித்தியாச விதிவசத்தின் கிரியையைப்பற்றிக் கூறின இந்தச் சாட்சியத்தை எல்லாம் விட்டுவிட்டு, இந்தியாவுக்கு ப்ரதேச ப்ராதிநித்யம் தகாதென்று கூறுதலும், பிரிவினையும்

கலகமும் மாத்திரம் விளைக்கக்கூடிய ஜன க்ஷேமத்துக்குக் கெடுதலான சப்பைக்கட்டான தந்திரங்களும், ஜாதி வகுப்பு மத வித்தியாசங்களும் நிறையப்பெற்ற ஒரு ஏற்பாட்டை அங்கிகரிப்பது அபாயத்துக்கேதுவான தப்பிதமாகும்.

பிரேரேபிக்கப்பட்ட நியாமகத் தொகுப்புகள். (ELECTORATES.)

60. வகுப்பாரின் லாபங்கள், ஜாதிப்பொறாமைகள், வர்ணமத வித்தியாசங்கள் என்ற அஸ்திவாரத்தைக்கொண்டு ராஜ்யபார ஆலோசனை சபைகளும் நிர்வாகஸ்தானங்களும் ஏற்படுத்தப் பார்ப்பது முற்றிலும் அபாயகரமென்று கமிட்டியாருக்குத் தோன்றுகிறபடியால், ஸர் ஹாரோல்ட் ஸ்டூவர்டின் லெட்டரில் கண்ட பிரேரேபணைகள் ஜனங்களெல்லாராலும் விபரீதமென்று மறுக்கப்பட்டு, பயத்துடனும், அவநம்பிக்கையுடனும் கிரகிக்கப் பட்டிருக்கின்றபடியால், அந்த விஷயத்தை இந்தியா கவர்ன்மெண்டார் கவலையுடன் கவனிக்க வேண்டுமென்று கோருகிறார்கள்.

61. இப்படிச் செய்வது, சற்றும் பிறழாத நிஷ்பக்ஷபாதத்தோடு எப்போதும், வகுப்பு, ஜாதி, மத வ்யவகாரங்களுக்குப் புறம்பே நின்ற பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் இதுகாறும் அங்கீகரிக்கப்பட்டு அநுஷ்டித்து வந்த தந்திரங்களினின்று திடீரென்று சர்க்கார் விலகுவது ஆகும். இப்படி விலகுவதும் கவர்ன்மெண்டாரின் கஷ்டங்களை அதிகமே படுத்தும். ஏனென்றால், இப்போது நடைபெறுபவும், பிறழாத நடுநிலைமையைப் புத்தி பூர்வகமாய்க் கடைப்பிடித்து அதனால் இதுகாறும் வளர்க்கப் பெற்றவுமான பலமான மனோரதங்களுக்கு நேர் எதிரியாக கவர்ன்மெண்டாரை வைத்துவிடும். வர்ண கோஷ்டி

வக்ரங்களும் வித்யாசங்களும் இன்னும் முற்றிலும் நசித்துப்போகா விட்டாலும் கூட, கவர்ன்மெண்டார் அநுஷ்டிக்கவேண்டும் ராஜதந்திரத்தை மேல் நின்று நடத்துவதிலாவது, கடைசி நோக்கத்தை உருப்படுத்துவதிலாவது அவைகளை உபயோகிக்கக்கூடாது. வித்யாசப்பட்ட வர்ணமதங்களை சமரச பாவத்துக்குக் கொண்டுவருபவும், பொதுநலத்தை விர்த்திசெய்யத் தேவையானவும், பலிக்கத்தக்கவுமானவைகளை நாடி முடிக்க முயலும்படி எல்லா இனத்தாரிலும் மெத்தத் தெரிந்தவர்களைத் தூண்டுதலே, பிரிடிஷ் ராஜதந்திரத்தின் ஏகநோக்கமாயும், கவர்ன்மெண்டார் தாங்களே முயலவேண்டிய பெரிய காரியமாயுமிருக்கிறதென்று கமிட்டியார் இறைஞ்சி விக்ஞாபிக்கிறார்கள்.

62. இதுகாறும், பிரதிநிதி நியமன ஸ்வதந்திரம்பெற்றவர்கள், வர்னம், மதம், அந்தஸ்துகளை கிஞ்சித்தேனும் பாராட்டாது, யார் நம்பிக்கையுடன் பிரதிநிதி ஸ்தானம் வகிப்பார்களோ, யார் தங்கள் அபிப்பிராயங்களைக்காரியம் பலிக்கும் வண்ணம் வெளியிட்டு வாதிக்கவல்லவர்களோ அவர்களையே பொறுக்கி யெடுத்திருக்கிறார்கள். இந்த மார்க்கத்திலேயே யின்னும்போக உத்ஸாகப்படுத்தாமல், வகுப்புமேலீடு, மதவகுப்புக்கட்சி ப்ரதிகட்சி, இவைகளையே இந்தநூதனதந்திரம் தூண்டிவிடும். இதன் நிச்சயபலனை கவர்ன்மெண்டையே கட்சிகளில் ஒரு தரத்தாரும் நம்ப மாட்டார்கள்.

ஹிந்துக்களின் மேம்பாடு.

63. இப்போதிருக்கும் ஏற்பாட்டில் ஹிந்துக்கள் ஏனையோரைவிட அபரிமிதமாயிருந்து வருவதற்கும், மிகவும்

சொல்பமாக மகம்மதியர்கள் ப்ரதிநிதிகளாக நியமனம் பெற்றிருப்பதற்கும், ஸர் ஹாரோல்ட் ஸ்டுவர்ட் லெட்டரினின்றும் முழுவதும் காணப்படாத காரணங்கள் உண்டு.

64. எத்தேசத்திலும் ப்ராதிநித்ய முறையானது, ஆள், ஆஸ்தி, படிப்பு முதலியவைகளை ப்ரதான யோக்யதையாகக்கொண்டு ஏற்பட்டுள்ளது. ஹிந்துக்கள் மற்றவர்களைக்காட்டிலும் மிகவும் ஜனம் பெருத்தவர்கள் என்பதும், மற்றவர்களைக்காட்டிலும் அவர்களிடத்தில் ஆஸ்தி, படிப்பு, யோக்யதை கொஞ்சமுங்குறைவில்லையென்பதும், வாஸ்தவத்தில், ஏனை வகுப்பாரைவிட அவர்கள் அதிகமான ப்ராதிநித்யம் பெற உரிமையுள்ளவர்கள் என்பதும், கமிட்டியாருடைய அபிப்பிராயம். இவ்வளவு வெளிப்படையான ஒரு பாத்யதையை இடைஞ்சல்செய்வதும் குறைக்கப் பார்ப்பதும் அதிர்ப்திக்குக் கொண்டுவிடும். அதைக்கிண்டிவிடுவது விவேகமல்ல, அதை அசட்டை செய்வதும் க்ஷேமமல்ல.

65. முப்பதுகோடி ஜனங்களுக்குள் ஒருபகுதியான 6-கோடி 20 லட்சம் மகமதியரைமாத்திரம், மதங்காரணமாக, மற்றொருவரும் பெறாத உபசாரத்துக்குப் பாத்திரராகத் தனிப்படுத்துவது, அபாயத்தை விளைக்கத்தக்க, ராஜ்யதந்திர விருத்தமான, எத்தனம். விசேஷமான அல்லது அசாதாரண சந்தர்ப்பங்களையிட்டு, சொந்த உரிமைகளையும் லாபங்களையும் தனி ஏற்பாடுகளால் பாதுகாக்கவேண்டுமென்று மகம்மதியர்கள் வேண்டினால், அதே மாதிரியான சந்தர்ப்பங்களில் ஹிந்துக்களுக்கும், அவ்வித சம்ரக்ஷணையை அளிக்கக் கவலைவைக்க வேண்டியதன்றோ? மகம்

மதியர்கள் மிகுதியாயிருக்கும் இடங்களில், அந்த அமி தத்தைத் தொடாதுவிட்டு, ஹிந்துக்கள் மிகுதியை மாத் திரம் தலையெடுக்க வொட்டாமல் செய்யப் பார்ப்பது கவ ர்ன்மெண்டார் தங்கள்பேரில் கொண்ட பொறுமையென்றே ஹிந்துக்களுக்குப் புலப்படும். அது விஷயமாய் ஹிந்துக் கள் ஆத்திரப்படக் காரணமுண்டு.

66. டிஸ்ட்ரிகிட் போர்டுகளிலும் லோகல் போர்டுக ளிலும் பிரதிநிதிஸ்தானங்களை ஹிந்துக்களுக்குப்பங்கிடும் போது, நிலதாரர்களென்றும், விவசாயிகள், வர்த்தகர், கல்வித்தொழிலாளிகள் இவர்களென்றும், ஜாதிவித்தியாச ங்களை அனுசரித்துப்பங்கிடும்படி செய்து, மகமதியர் விஷ யத்திலும் அப்படிசெய்யாவிட்டால், இந்த வித்தியாசம் ஏன் என்று கேள்வி பிறக்கும். ஹிந்துமகமதியப்பிரதிநிதி களைப்பொறுக்குவதில் இந்தமாறுபாடான முறைக்கு நியா யம் கமிட்டியாருக்குத் தோன்றவில்லை.

67. சர்க்காரின்ப்ரதிநிதிகளின்அதிகப்படியை நிலைத்து நடத்த வேண்டுமென்ற நிபந்தனைச் குட்பட்டு, வகுப்பு களுக்கும், வர்னங் களுக்கும், உரிமை களுக்கும், விசா லித்த ப்ராதிநித்யத்தைக் கொடுக்க வேண்டுமென்றதே மனதில்வைக்கக்கூடிய பொதுவானமுறை என்று ஸார்ஹா ரோல்ட் ஸ்டுவர்ட்டின் லட்டரில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே விசாரித்த காரணங்களும், கருத்துக்களும் நிற்க, இவ்வித யத்நமானது கைகூடுமோ என்று வணக்கத் துடன் கமிட்டியார் சந்தேகிக்கிறார்கள்.

68. இனி உரிமைகள் விஷயமாயும், சட்ட நிர்மாண சங்கதிகளில், ஹிந்துக்களின் உரிமைகளுக்கு மாறாகவுள்ள மகம்மதியர், கிரிஸ்தவர், பார்ஸிகள் இவர்களுடைய உரி

மைகள் எவையேனுமிருக்கின்றனவாக கமிட்டியார் காணக் கூடவில்லை. சர்க்கார் உத்யோகமடைதல், நிர்வாக விஷயங்களில் சர்க்கார்தயவுபெறல், இவ்விஷயங்களில் மாத்திரம் ஒருத்தருக்கொருத்தர் விரோதமான உரிமைகள் கிளம்பி, ஆடுகின்றன. வர்ணம், ஜாதி, மதபேதங்களைப்பாராட்டாது, ஒரேவிதமான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி நியாயந்தீர்க்கப்படும் வரையிலும், சட்ட நிர்மாணஞ்செய்வதே முதல் தொழிலாய்க்கொண்ட சட்டநிர்மாணசபைகளில் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் பேதத்தை ஏற்படுத்தி அங்கீகரிப்பதற்கு ஆவசிகமுமில்லை, தகுந்த ஆதாரமுமில்லை. பிரிடிஷ் ஆளுகையின் கீழ், இந்து மகம்மதியர்களது லாபத்துறைகள் ஒன்றே. அவைகளைப் பாதுகாத்து விர்த்திபண்ணும் உத்தமமான மார்க்க மெதுவென்றால், இந்துக்களும் மகம்மதியர்களும் ஒத்துழைக்கும் உணர்ச்சியும், பரஸ்பர அநுதாபமும் பூண்டு சேர்ந்து வேலை செய்வதாகும். மனக்குறுக்க மானதையும், மதப்பித்தானதையும் வரவொட்டாமல் வெளியே ஒட்டி, நலம்வாய்ந்த ராஜ்யபார விஷயத்தில், உபயவகுப்பிலிருந்தும், ஆழ்ந்த புத்தியும், மயங்காச்சிந்தையும், இணங்கும் இயற்கையும் உள்ள பகுதியாரைச் சேர்த்துக்கொள்வதுமே, மிகவும் விரும்பத்தக்கதாகும். அப்படிச்செய்தால் சட்ட நிர்மாணசபையில் ஹிந்துக்களும் மகம்மதியர்களும், தத்தம் வகுப்புகளுக்கு மட்டும் பிரதி நிதிகளாக மதித்துக் கொள்ளாமல், சமூக முழுமைக்கும் பிரதிநிதிகளாக மதித்துக் கொள்வதுமன்றி பிறரும் மதிப்பார்கள்.

69. இதுவரையும் அநுஷ்டித்துவந்த ராஜ்யதந்திரம் இதுவேயாகும். அதன் பலம் பேதப்பட்ட வகுப்பு, மதம் இவைகளை, ராஜ்யபாரச்சேர்க்கை விஷயத்தில், ஐக்யப்படு

த்தி யிருக்கிறது என்பதை யாருந்தப்பாய் அறியார்கள். இந்தப்பலனை நேரிடாமல் தடைபண்ணப்பார்ப்பது விரும்பத்தக்கதென கமிட்டியார் நம்பமாட்டார்கள். அப்படி தடைபண்ணக்கூடிய குயுக்திகளையும் பேதங்களையும் தங்கள் பிரேரேபணைகளிலிருந்து இந்தியா கவர்ன்மெண்டார் நீக்கிவிடுவார்களென்று கமிட்டியார் நம்புகிறார்கள்.

70. சென்ற அக்டோபர்மாசத்தில்,ராஜப்ரதிநிதியைத் தங்கள் இனத்தாருக்காகக் காணப்போன மகம்மதியத் தலைவர்கள் சமர்ப்பித்த வேண்டுகோள் பத்திரிகையை கமிட்டியார் கவனித்துப் பார்த்திருக்கிறார்கள். மண்டலாதிபத்ய சட்ட நிர்மாண சபையிலாவது, மாகாணச்சட்ட நிர்மாண சபைகளிலாவது, மகம்மதியவகுப்பார், தங்கள் தொகைக்கும், ராஜாங்க சம்பந்தமாயும், சரித்திர சம்பந்தமாயுமுள்ள தங்கள் மாகாத்மியத்துக்கும் தக்கவாறு போதுமான அளவான பிராதிநித்யத்தைப் பெறவில்லையென்று முறையிட்டு வேண்டுகோள் பத்திரம் சமர்ப்பித்தவர்களின் அபிப்பிராயங்கள் சரியென்று இந்தியா கவர்ன்மெண்டார் அங்கிகரித்தார்களென்றும் அறிகிறோம். சங்கியை என்ற முகாந்திரத்தைப்பற்றிமேலேஏற்கெனவேதாங்கள்விக்ஞாபித்திருப்பதை கமிட்டியார் மீண்டும் கூறுகிறார்கள். தேசத்தின் பல பாரிசங்களிலுள்ள இந்துக்களைப்போலவே நடையுடை பாவனைகளையுடையவர்களும், ஜீவனோபாயங்களைத் தேடிப்பிழைப்பவர்களுமாய், ஹிந்துக்கள் சந்ததியாருமான, ஏராளமான மகம்மதிய ஜனங்கள் இருக்கிறார்கள் என்றதையும் மறக்கக்கூடாது.

71. இனி ராஜாங்கசம்பந்தம், சரித்திரமகிமை விஷயமாயுங்கூட, அந்த முகாந்திரம் அளவுக்குமிஞ்சி வற்புறுத்

தப்பட்டிருக்கிறதென்று எடுத்துக்காட்டுவதவசியம். அவர்கள் சார்பாய் உரைத்தவையில் வெகுபாகம் சரித்திரபூர்வமாய்த் தப்பாயுமிருக்கிறது. பிரிடிஷ் அதிகாரம் இங்கே தோன்றின காலத்தில், மகம்மதிய மண்டலாதிபத்யம் ஏற்கெனவே அஸ்தங்கதத்தை நோக்கிச்சென்றது. அரசுரிமையில், மகாராஷ்டிர அதிகாரம் அப்போது அதற்கிளைத்ததாகவில்லை. சரித்திர பூர்வமாய், ராஜபுத்ரர்கள் மகிமையிற் குறைந்தவர்களல்ல. தக்ஷிண ஹைதராப்பாக்கம், போபாலங்களைத்தவிர, மைசூர், காஸ்மீரம், திருவாங்கூர்களைப்போலவாவது, பரோடா, கோலாப்பூர், இந்தூர், க்வாலியார் முதலிய மகாராஷ்டிர நாடுகளைப்போலவாவது, பாடியாலா, நாபா என்ற சீக்கர் ராஜ்யங்களைப் போலவாவது, உதயபுரி, மேவார், ஜோட்புரி, ஜயபுரி என்ற ராஜபுத்ர ராஜ்யங்களைப் போலவாவது, முதல் மகிமை பெற்ற சுதேச மகம்மதிய ராஜ்யங்கள் ஒன்றுமில்லை.

72. சர்க்கார் உத்யோகம் கவுரங்களில் அதிகப் பங்கு பெற சுவபாவமாய் முயலும் சில மகம்மதியர்களைத் தவிர்த்து, மகம்மதிய சாமான்ய பொதுஜனங்கள், வியவசாயிகள், தொழிலாளிகள், வியாபாரிகள், வர்த்தர்கள், கூலியாட்கள் எல்லாருடைய தேவைகளும் குறைகளும், எந்த ஜனத்தொகையில் தாங்கள் ஒரு பகுதியோ அவர்களுடைய குறைகளும் தேவைகளுமாகவே இருக்கின்றன. இதற்கு எதிராக என்ன எண்ணப்பட்டாலும் சொல்லப்பட்டாலும், ஆங்கிலோ இந்திய நிர்வாஹத்தைப்பற்றி அவர்கள் நிலையும், அந்தந்த ப்ரதேசவிஷயங்களில் அவர்கள் நோக்கமும் அக்கம்பக்கத்திலுள்ள ஹிந்துக்களுடைய நிலையும் நோக்கமுமேயாகும்.

73. பெருமையும் விசேஷமுமுள்ள மகம்மதிய வகுப்பார், சபைகளிலும் பொதுஜன விஷயங்களிலும் தகுந்தபடி பிராதிநித்யம் பெறவேண்டுமென்றதை வாதித்துக்கூசாமல் சிபார்சுசெய்ய கமிட்டியார் தாங்களே சித்தமாயிருக்கிறார்கள். மகம்மதியர்களின் அபேட்சைகளிடத்தில் கமிட்டியார்க்கு பூர்ண அநுதாபமிருக்கிறது. அந்த அபேட்சைகள் ஒருநாளும் அநாதரவு செய்யப்படவில்லையென்றும், ஹிந்துக்களும் ஏனையோரும் செய்த ராஜாங்கப் பொதுவிஷய முயற்சிகளால் எப்போதும் வளர்க்கப்பட்டு வந்திருப்பதையும் எடுத்துக்காட்டுவது தங்கள் கடமையென நினைக்கிறார்கள். யாவத் ஜனங்களுக்கும் பொதுவாய் அதிக சுவதந்தரங்களை சம்பாதிப்பதற்கு ஏற்பட்ட ஒவ்வொரு முயற்சியிலும், இதர வகுப்பாருக்குக் குறையாது மகம்மதியர்கள் நன்மையையே அடைந்திருக்கிறார்கள். இதர வகுப்பாருக்குச் சரிசமானமாகவே மகம்மதியர்களுக்கு, ராஜாங்க மதிப்புக்கும் சர்க்கார் உத்யோகத்துக்கும் மார்க்கம் திறந்து விடப்பட்டிருக்கிறது. தாங்கள் விரும்பிய அளவு மகம்மதியர்கள் அவைகளெல்லாவற்றையும் கைக்கொள்ளாமற்போனால், அந்த பலனுக்கு கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் படிப்பு வசதிகளை உபயோகப் படுத்திக்கொள்வதில் அவர்கள் பின்வாங்குவது வேகாரணமன்றி, இதர வகுப்பாரின் சுயநய திருஷ்டியாவது பகையாவது காரணமல்ல. மற்ற வகுப்பாரோடு சரிசமானமாக அவர்களைவைக்க கவர்ன்மெண்டாரே எவ்வித முயற்சியும் செய்திருக்கிறார்கள். அந்த முயற்சி எதிர்ப்பார்க்கப்பட்ட ப்ரகாரம் பலிக்காவிட்டால் ஒருவரையும் நீக்காது எல்லாவகுப்பாருக்கும் இனத்தாருக்கும் பொதுவாய் ஏற்படுத்தப்பட்ட சாதனங்களை உப

யோகப்படுத்திக் கொள்ளும் யோக்யதையுடையவர்களில் போதுமான பேர்வழிகள் இல்லாததும், போதுமான பதார்த்தங்கள் இல்லாததும்; அந்தக் குறைவுக்குக் காரணமேயொழிய, ஏனைய காரணத்தால் விளைந்ததென்று கூறுவது அநியாயம்.

74. ராஜாங்க ஊழியத்தில் உந்நதமான சில உத்தியோகங்களை மிகவும் சாமர்த்யசாலிகளான சில மகமதியர்கள் பெற்றிருப்பதும், நாகரீகம் அபிவிர்த்தி இவைகளை நோக்கிப் பொதுவான சரியினுலேயே ஏற்பட்டிருக்கிறது. ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தானங்களையும் மாஜிஸ்ட்ரேட் ஸ்தானங்களையும் ஹிந்துக்களே முழுவதும் ஆக்ரமித்துக்கொண்டதில்லை. தங்கள் வேலைத்திறமையினுலும் அதிக சாமர்த்யத்தினுலும், மகம்மதியர்கள் அவ்வுத்யோகங்களை சம்பாதித்திருந்தால், அதுவும்; அந்த இனத்தார்செய்த விசேஷ முயற்சி காரணமாகவாவது, கவர்ன்மெண்டாரின் விசேஷ தயவினுலாவது கிடைத்திருக்கவில்லை. ஆனுல் பெரிய உத்யோகங்கள் கிடைக்கும் மார்க்கம் இத்தேச சுதேசிகளுக்கு, தங்கள் அபேட்சையும் சாமர்த்யமும் திருப்தியடையாவண்ணம், அடைபடக்கூடாது என்ற பொதுவான வேண்டுகோள் நிறைவேறி வருவதே அதற்குக் காரணம்.

75. பம்பாய் நகரப்பரிபாலன சபையில், எல்லா வகுப்பாரின் சந்தோஷ சம்மதத்துடன் யோக்யதையுள்ள ஒவ்வொரு மகம்மதியனும் அக்ராசன ஸ்தானம்வகிக்க நியமிக்கப்பட்டிருக்கிருன். டௌன் கௌன்ஸில்களிலும் ஸ்டாண்டிங் கமிட்டிகளிலும், தங்கள் சங்கியைக்கு எவ்வளவு கிடைப்பது நியாயமோ அதற்குமேலேயே, மகமதியர்கள், ஹிந்து பார்ஸிசகோதரர்களாலே பிரதிநிதியாகநியமிக்

கப்பட்டிருக்கிறார்கள். சட்ட நிர்மாண சபைகளில், தங்கள் சங்கியைக்கும் யோக்யதைக்கும் கணக்கான ஸ்தானங்களை மகம்மதியர்கள் வகித்திருக்கிறார்கள். பம்பாய் சட்டநிர்மாணசபையில் சர்க்கார் உத்யோகஸ்தர் அல்லாத மெம்பர்கள், ஜாதி, மத, வர்ணமுதலிய இழிவான பேதங்களைப்பாராட்டாது நியமனஞ் செய்திருக்கிறார்கள். யாவராயினும் அந்த கவுரவத்துக்குப் பாத்ரனானல், அவனையே பார்ஸியானாலும், மகம்மதியன் ஆனாலும், ஹிந்துவானாலும், சரி சம்மதத்தோடு தேர்ந்தெடுப்பதைக் கைப்பற்றி வருகிறார்கள். பலரும் ஏகோபித்த சம்மதத்தோடு கனம் கோகலேயை எப்படி நியமனஞ் செய்தார்களோ அப்படியே சர்வ சம்மதத்தோடும் ஸர் பிரோஸிஷா மேடாவையும் கனம் சயானியையும் பிரதிநிதியாக நியமித்தார்கள். சென்னப்பட்டணத்திலிருந்து கூட, மாகாணச் சட்ட சபையில்சர்க்கார்உத்யோகஸ்தரல்லா மெம்பர்கள், காலஞ்சென்ற மீர் ஹுமாயூன் ஜாதபகதர் ஸி. ஐ. இ. யைப் போலவும், அந்த கவுரவுத்துக்கு இடைவிடாது இரண்டு முறை நியமிக்கப்பட்ட கனம் நவாப்ஸையத் சாகிப் பகதர் போலவும் மகம்மதிய ப்ரதிநிதிகளை மண்டலாதிபத்ய சபைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இனி ஐக்யமாகாணங்களிலிருந்தும் உத்யோகஸ்தர் அல்லாத மெம்பர்கள், பகாஸாவைச் சேர்ந்த காலஞ்சென்ற நவாப் பய்யஸாலிகானை, மண்டலாதிபத்ய சபைக்குநியமனம்பண்ணினார்கள். பத்தில் ஒன்பது அம்சம் இந்துக்களான பேகார் நிலதாரர்கள்சென்ற நியமனகாலத்தில், கனம் ஷரிப்உத்தீன் என்னும் மகம்மதியரை பங்காளச் சட்டசபைக்குத் தங்கள் பிரதிநிதியாக நியமித்தார்கள். ஹிந்துக்களுக்குப் புகழ்ச்சியாகிய இந்தசங்கதிகளைப் பாராமலிருக்கக்கூடாது. ஹிந்துக்

கள்பால் பட்சபாதமின்றி நியாயம் பேசுவோமேயானால் மகம்மதிய வகுப்பாரில் உண்மையாய் யோக்யதையுடைய பிரதிநிதிகள் கிடைக்கக்கூடிய போதெல்லாம், அவர்கள் ஹிந்து சகோதரர்களுடைய பெருந்தன்மையான சம்மதத்தை அடைவதில் ஒரு இடைஞ்சலும் இருந்ததில்லை என்று அறியத்தக்கது.

76. 1893-வருஷத்துக்கும் இப்போதைக்கும் இடையுள்ள சொல்ப காலத்துக்குள்ளேயே இப்பேர்ப்பட்ட நன்மை விளைந்ததாகக் காட்டக்கூடுமானால், ஜாதி மத விரோதங்களைத் தாண்டி ஆத்திரம் விளைக்கக்கூடியதவறான ஏற்பாடுகளைக்கொண்டு அதிகாரிகள் தடைப்படுத்தாமல் இருப்பார்களானால், நாகரிகமும், புத்தி விசாலமும் அதிகரிக்க இப்போதைக்காட்டிலும் அதிக நன்மைகள் விளையும்; கட்டாயமாய்ப் பெறவுங்கூடும் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

77. மதசம்பந்தம் அல்லாத எவ்விதமாய்ப் பார்த்தாலும், ஹிந்துக்கள் நியமனம்பெறத் தங்கள் உரிமையை ஸ்தாபித்து வரும்போது, ஹிந்து ப்ரதிநிதிகள் ஏனையோரைவிட அமிதிமாயிருக்கிறார்களென்ற சங்கதியில் கிஞ்சித்தேனும் நியாயமில்லை. அந்த அமிதத்தையிட்டு, அக்ரமமென்ற எண்ணத்தைத் தூண்டுவது, யோக்யமானகாரியம் ஒன்றுக்கும் ஹேதுவாகாது. சங்கியை, ஆஸ்தி, படிப்பு என்ற தக்க முகாந்திரங்கள் வாய்ந்த பாத்யதை அவர்கள் பட்சத்தில் நிதர்சனமாய்க் காணப்பட, அவர்களுக்கிருக்கும் பல விசேஷங்களை ஹிந்துக்களின் யோக்யதைக் குறையின் காரணமாகக் கூறுவது சத்யமுமல்ல, நியாயமுமல்ல. அப்படியே மகம்மதியர் விஷயத்திலும், அவர்கள்

தங்கள் குறைகளை யுணர்ந்து வரும்போதும், அவை களுக்கு நிவிர்த்தி அவர்கள் கையிலேயே இருக்கும் போதும், அவர்களை இருட்டில் வைத்து, மாயா நம்பிக் கைகளைத் தூண்டிவிடுவது சத்யமுமல்ல, நியாயமுமல்ல.

78. ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் நடுவே திராசைக் கோணுமல் பிடிப்பது நிஸ்ஸந்தேகமாய் சர்க் காரின் கடமையாகும். சிறு பாலாரும் தக்கவண் ணம் ப்ராதிநித்யம் பெறவேண்டுமென்ற தர்மத்தை ஆட் சேபணையின்றி இந்த கமிட்டியார் அங்கிகரிக்கிருர்கள். ஆனுலும், இம்மாதிரியான ப்ராதிநித்யத்தைத்தரும் எந்த ஏற்பாடும் சகலஜனங்களுக்கும் திருப்தியை யுண்டாக்காது. எல்லாக் கட்சிகளையும் திருப்திசெய்யக்கூடிய ஒரு ஏற் பாட்டைக் கண்டுபிடிக்க பிரிடிஷ்பார்லிமெண்டாலும் கூட வில்லை. என்ருலும் கமிட்டியார் பின் வருவனவற்றை சர்க் கார் தயவுடன் கவனிக்கவேண்டுமென்று விநயத்துடன் சொல்லத் துணிவார்கள்:—

(a) நியாமகர்களை யமைப்பது ப்ரதேச நியமன தர் மத்தின்படி நீர்ணயிக்கப்படவேண்டும்.

(b) பிரதி அமைப்பிலும் போதுமான சங்கியையுள்ள நியாமகர்களைக் குறிக்கவேண்டும்.

(c) எந்த வகுப்பார் சிறுபாலாரா யிருப்பினும் ப்ரதேச சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப இந்துக்களுக்கும் மகமதியர்களு க்கும் உற்ற கணக்கான சங்கியை தீர்மானிக்கப்பட வேண்டும்.

(d) ப்ரதிநிதியனுப்பும் சுவதந்திரம் பெற்ற பொதுக் கூட்டத்தாராலேயே மெம்பர்கள் நியமிக்கப்படவேண்டும்.

79. சிறு பாலாரின் உரிமைகளைப்பாதுகாத்து ரக்ஷிப்பதற்கு அநுஷ்டிக்கப்போகும் எந்த ஏற்பாடும், ஒரே மாதிரியாயும், ஓரினத்தாரின் லாபத்துறைகளை மாத்திரம் கருதி ஏற்படுத்தப்படாததாயுமிருக்கவேண்டியது முக்யம். இந்துக்களுக்கு மாத்ரம் இழிவானதாயும், அதிகாரிகள் குறிப்பிட்ட ஒரு இனத்தாரை மாத்திரம் ஆதரவு செய்கிறார்கள் என்றசந்தேகத்துக்கு ஆஸ்பதமாயும் இருக்கும் ஒரு ஏற்பாட்டை கவர்ன்மெண்டார் ஆரம்பிப்பது அநுசிதம்.

80. இப்போதிருக்கும் பொதுவான முறைப்ரகாரம் நியமனம் பெறக்கூடிய மகம்மதிய மெம்பர்களுக்கதிகமாக, மகம்மதிய மெம்பர்களைமாத்திரம் நியமிக்க விசேஷ மகம்மதிய நியாமகர்களை சிருஷ்டித்து, மகம்மதிய வகுப்பாருக்கு அதிக அவகாச லாகவங்களையும், விசேஷித்த உயர்தர உரிமைகளையும் கொடுக்கப் போகிறதாக ஸர் ஹாரோல்ட் ஸ்டுவார்ட்டின் கடிதத்தில் 17-வது பாராவில் குறித்த ஏறபாடுகளை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதைப்பற்றி இந்த கமிட்டியார் வலுத்த ஆக்ஷேபணை செய்யவேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாடுகள், பொது ஜனங்களிடத்தில், அமைதிக்கும் திருப்திக்கும் அபாயமான ஜாதிமத விரோதங்களைப்பாராட்டும் உணர்ச்சியை உண்டாக்கும். சட்ட நிர்மாண சபையிலும், அதன் உபயோகத்தைக் கெடுத்து, அதன் கவுரவத்தை ஜனங்கள் மதிப்பில் குறைக்கக்கூடிய கட்சி ப்ரதி கட்சி வேகத்தையும் உண்டாக்கும்.

81. முந்தி 78-வது பாராவில் குறித்த தங்கள் ப்ரேரேபணைகள், எங்கிருக்கும் சிறு பாலாரின் உரிமைகளை

யும் போதுமானபடி ரக்ஷிக்குமென்றும், இழிவான வித்யாசங்களை விலக்குமென்றும், கலகத்தை வளர்க்காதென்றும், முழுப்ராதிநித்ய நியாமகரின் நம்பிக்கைபெற்ற ப்ரதிநிதிகளாக, சரி அச்சாகிய இந்தியர் மகம்மதியர் இருவரையும் நிச்சயமாய் நியமனம் பெறும்படி செய்யுமென்றும், கமிட்டியார் நம்பித்துணிவார்கள்.

சர்க்கார் நியமனம்.

82. ஜனங்களை நியமிக்கும்படியாய் எல்லா ஸ்தானங்களையும் விட்டுவிடுவது ஆவசிகமென்று கவர்ன்மெண்டார் எண்ணவில்லை என்றும், இப்போதுபோலவே சர்க்கார் நியமனம்பண்ணும்படி சில அம்சமான ஸ்தானங்களை சேமித்து வைத்துக்கொள்வது யுக்தமென்று அபிப்பிராயப்படுகிறார்களென்றும் சொல்லப்படுகிறது. ஏனென்றால் அந்தஸ்துள்ள இந்தியகனவான்கள் சாமான்ய ஜனக்கூட்டமான நியாமகரின் முன் அபேட்சகர்களாக மாட்டோம் என்கிறார்களாம்.

83. ஜனங்களுடைய சம்மதத்தை நாடும்படியான நிர்ப்பந்தமானது, தங்கள் நாட்டாரின் உரிமைகளைக் கவனிக்கும்படி அதை நாடுவோர்களைக் கட்டாயப்படுத்துகிறது. அப்படியிருக்க சாமானிய ஜனக்கூட்டமான நியாமகரின் முன் அபேட்சகர்களாக நிற்கமாட்டோமென்று அந்தஸ்துள்ள இந்திய கனவான்கள் தப்பித்துக்கொள்ள நியாயமில்லை. ராஜப்ரதிநிதியிடம் விண்ணப்பம்செய்துவிடை பெற்றுப்போன மகம்மதியர்களும் சர்க்கார் நியமனத்தின் காரியத்தைப்பற்றி தங்கள் அதிருப்தியை உறுதியான மொழிகளால்வெளி விட்டிருக்கிறார்கள். யாருடைய தயவினால் தாங்கள் நியமனம்பெறுகிறார்களோ அவர்கள் இஷ்டத்

தின்படி நடக்க எப்போதும் இஷ்டப்பட்டிருப்பதால் அத்தகையோர்களால் தீங்குண்டாகாவிட்டாலும் பிரயோஜன முண்டாகிறதில்லை. கவர்ன்மெண்டோடு மெம்பர்கள் ஒரே அபிப்பிராயமாயிருந்தால், அப்படி யிருப்பது நிர்பயமாய்த் தங்கள் சொந்தபுத்தியின் பயனாகநேரிட்டதென்று ஜனங்கள் அறிவது மிகவும் விரும்பத்தக்கது. சர்க்கார் நியமனம்பெற்று புனர் நியமனத்தை விரும்புவோரின் எண்ணங்களால் வெளிவந்த அபிப்பிராயமென்று ஜனங்கள் உணர்வார்களேயானால், அதன் மதிப்பும் குன்றிவிடும்.

84. ஜனங்கள்பண்ணும் நியமனங்களின் ஏற்றத்தாழ்ச்சிகளை சரிசமானஞ் செய்வது அவசியமாயும் யுக்தமாயும் இருக்கும்பொழுதும், அல்லது இருந்தாலும், அப்போது துலாக்கோலைச் சரியாய்ப்பிடிக்க கவர்ன்மெண்டுக்கு ஒரு சாதனமாயிருப்பதன்றி, இந்த சர்க்கார் நியமனமுறைக்கு வேறு பலமான உபயோகமில்லை. நிதானத்துடன் நல்ல காரியத்துக்குப் ப்ரயோகிக்கக்கூடிய இந்த அதிகாரம் தங்கள் கையிலேயே யிருக்க, சிறு வகுப்பாராகிய ஒரு குறிப்பிட்ட இனத்தாரின் உரிமைகளை மாத்திரம் பாதுகாக்கும் பொருட்டு விசேஷத்ததும், அடாத ஏற்ற வித்யாசமானதுமான ஒரு தந்திரத்தை கவர்ன்மெண்டார் நாடிப் போவது அநாவசியம்.

85. சட்டநிர்மாண சபைகளில், உத்தியோக வகுப்பாரின் பிராதி நித்தியத்துக்கும், இந்த நியமனங்களே மார்க்கமாகும்.

சர்க்கார் பிரதிநிதிகளின் அதிசங்கியை. (மேஜாரிடி.)

86. இந்தியாவில் நடைபெறும் சர்க்கார் பிரதிநிதிகளின் சாசுவத அதிசங்கியையைக்குறைக்காமல் காப்பாற்றுவது இந்தியா கவர்ன்மெண்டுக்கு உரியதும் ஆவசிகமானதுமான பலம் என்ற தர்மத்தின் நியாயத்தைக் கமிட்டியார் மறுக்கத்துணிவதால், அந்தகவர்மெண்டின் மேம்பாட்டையே ஆட்சேபிக்கக் கருதியதாக தாங்கள் குற்றஞ்சாட்டப்படுவார்களோ என்று சற்றும் அச்சமுறத் தேவையில்லை என்று கமிட்டியார் விநயத்துடன் நம்புகிறார்கள். இயல்பாகவே, அந்த மேஜாரிடி அவசியமென்று கவர்ண்மெண்டார் வாதிக்கிறார்கள். ஆனால் அது ஒருபோதும் ஆட்சேபிக்கப்பட்டதல்ல என்றாவது, அது அபிப்பிராய பேதப்பட இடமில்லாததென்றாவது நிருபிக்கப்படவில்லை, நிருபிக்கக்கூடியதுமில்லை. பிரிடிஷ் ஆதிபத்தியத்தைச் செலுத்தும் முறையின் சில அம்சத்தை ஆட்சேபிப்பவர்கள், அந்த ஆதிபத்தியத்தின் இருப்பையே ஆட்சேபிக்கிறார்கள் என்று வாதிப்பது, அதிகாரிகளுக்கு கவுரவமுமல்ல, நியாயமுமல்ல. சட்டசபைகளே ஏகதேசத்தில் கோல்ஓச்ச வேண்டுமென்று உரிமைகொண்டாட இந்தியாவில் ஒருவரும் கனவு காணவில்லை. உரிமைகொண்டாடுவதெல்லாங் கூடி, அந்த சட்டசபைகள், பும்ஸத்வ மில்லாததும், நிஷ்ப்ரயோசனமுள்ளதுமான ஸ்திதிக்குத்தாழ்த்தப்படக் கூடாதென்பதே.

87. சர்க்கார் ப்ரதிநிதியின் அதிசங்கியைக்கான ஏற்பாடே, சர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத ப்ரதிநிதிகளின் தொகையைக்குறைக்கும் ஆவசிகத்தை விதிக்கிற

தென்றதை இந்தியா கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையினால், அந்த ஏற்பாடு, சட்டசபையின் பிரயோசனத்தைக் குறைக்கிறது. எப்படியென்றால்,பிரா திநித்தியத்துக்கு சுவதந்திரமுள்ள நானாவித உரிமைகளின் ஏற்றதும் கிரியாம்சையானதுமான பிராதிநித்யத்தை அந்த சபையில் நடைபெறாமல் தடுக்கும். சர்க்கார் பிரதிநிதிகளின் அதிசங்கியைக்கான ஏற்பாட்டின் ஆவசிகத்தைப் பற்றி விசாரித்துக் கவலையுடன் கவனிக்க, இது ஒன்றே போதுமான காரணமாகும்.

88. இந்த அதிசங்கியை எப்போதும் இருக்குமானால், அது ஜனப்ரதிநிதிகளின் அதிகாரத்தையும் அவர்கள் பொறுப்பையும் குறைப்பதன்றி, உத்தியோகஸ்தர்களின் அதிகாரம், பொறுப்பின்மை இவ்வுணர்ச்சிகளை அதிகப் படுத்தியேதீரும். இந்த இரண்டுவிதக் கெடுதல்களும் கண்டிக்கப்பட்டு கூடியவரையில் விளையாத வண்ணம் காக்கப்படவேண்டும்.

89. மேன்மையும் அநுபோகமுள்ள உத்யோகஸ்தர்களில் அநேகர் தங்கள் முக்கியமான நிர்வாகவேலைகளிலிருந்து பிரிக்கப்படுதல், ஜனங்கள் பொது க்ஷேமத்துக்குக் கெடுதல் விளைக்காமல் இருக்கமாட்டாதென்று ஒப்புக் கொள்ளப்படுகையில், சர்க்கார் பிரதிநிதிகள் சில சமயங்களில் ஆஜராகாமற்போவதால் கெடுதல் வராதபடி போதுமான பலமுற்றதாக உத்யோகஸ்தரின் மெஜாரிடி அவசியமென்பதைக் கமிட்டியார் அறியவில்லை. சட்ட நிர்மாணம்என்ற சாதாரண ஆவரணத்துக்குள் பலவேறு இடங்களிலிருந்துநியமிக்கப்பட்டவர்களும்,நானாவிதமான உரிமைகளைச்சேர்ந்தவர்களுமான, இந்திய ஐரோப்பிய உத்

யோகஸ்தர் அல்லாத மெம்பர்கள், கவர்ன்மெண்டு ப்ரேரேபணைகளை ஆட்சேபித்துத் தடுத்தால், அப்போது கவர்ன்மெண்ட் ஜனப்ரதிநிதிகளின் அபிப்பிராயத்துக்கு இணங்குவது அதன் அதிகாரத்தை மலினப்படுத்தவாவது, கவுரவத்தைக்கெடுக்கவாவது முடியாது. கவர்ன்மெண்டார் ஜனப்ரதிநிதிகளிடத்தில் அதிக நம்பிக்கைவைப்பது, ஜனங்கள் கவர்ன்மெண்டினிடத்தில் அதிகநம்பிக்கை வைப்பதற்கேதுவாகுமென்றும், கவர்ன்மெண்டார் ஜனங்களிடத்தில் அநியாயமானதும் அதிகமானதுமான அவநம்பிக்கையை வைத்திருப்பது, ஆளுவோருக்காவது ஆளப்படுவோருக்காவது யாதொரு நன்மையும் பயக்காது என்றும் நன்குரைக்கக் காலம் வந்துவிட்டது.

90. ஒருமைப்பட்ட ஜனப்ரதிநிதிகளின் மெஜாரிடியினுடைய அபிப்பிராயத்துக்கிணங்குவது யுக்தமல்லவென்றுகாட்ட அநேக முகாந்திரங்கள் கிளம்பக்கூடும். அவைகளில் முக்ய விசேஷத்தை யுடையன செலவுவரவு நிர்வாகத்தைப்பற்றினவாகும். இந்த சந்தர்ப்பங்களில் மெஜாரிட்டிக்கு உரியது யாது என்றால், சட்ட நிர்மாணம் மிக அவசரமாகாமல், கவர்ன்மெண்டார் முடிவுசெய்வதில் சிறு தாமதமும் ஜனக்ஷேமத்துக்குக் கெடுதலை விளைக்கும் என்று எண்ண இடமில்லாதபோது, கவர்ன்மெண்டார் அவைகளைத்திரும்பவும் கவனிக்கும்படி ஒத்திவைப்பதற்கும், மேலான அதிகாரிக்குத்தெரிவித்தறிவதற்கும், வேண்டிய அதிகாரமே. முதல் சொல்லப்பட்ட விஷயத்தில் ராஜப்பிரதிநிதியினிடத்து எப்போதும் தங்கியிருக்கும் ரத்துசெய்யும் அதிகாரம் போதுமான பாதுகாப்பாகும். பின்சொன்னவிஷயத்தில், கவர்ன்மெண்டார்

தங்கள் ஏற்பாடுகளையும் பிரேரேபணைகளையும் திரும்பவும் கவனிப்பது யுக்தமல்லவென்று நினைத்தால், ஜனப்ரதிநிதி அதிசங்கியையின் அபிப்பிராயத்தை தஸ்தாவேஜிகளில் எழுதிவைத்து, கடைசியாக நியாயம் கோரப்படும் மேலான நியாயஸ்தலத்துக்கு தீர்மானத்துக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கமிட்டியார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பார்லிமெண்ட் கமிட்டி.

91. இந்த அப்பீல்கோர்ட் போன்ற நியாயஸ்தலம், பிரிடிஷ் பார்லிமெண்ட் சபையிடமிருந்தே அதிகாரமும் பலமும் பெறவேண்டும். இப்போது நடைபெறும் ராஜாங்கமுறையில், கடைசிப்போக்காக இந்தியா கவர்ன்மெண்டாரும், ஆலோசனை சபையோடு விளங்கும் இந்தியமந்திரியும், பார்லிமெண்டாருக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பது பிரசித்தம். இந்தியாகவர்ன்மெண்டாரின் ஏற்பாடுகள் பிரேரேபணைகள் இவைகளுக்கு விரோதமாகத் தங்கள் அபிப்பிராயங்களை, மண்டலாதிபத்ய சட்ட சபையில், அதிசங்கியையான, அதாவது மெஜாரிடியான மெம்பர்கள், நேரே வெளியிடும்பொழுது, பார்லிமெண்டில் நியமிக்கப்பட்ட ஒருகமிட்டியின் மேல்விசாரணைக்கு அவைகள் அநர்ஹமென்று சொல்ல இடமில்லை. அதிசங்கியைக்காரரின் அபிப்பிராயத்துக்குக் காரணம் காட்டும்போதெல்லாம், இந்தியாகவர்ன்மெண்டார் அவர்களினின்றும் அபிப்பிராய பேதப்படவேண்டிய முகாந்தரத்தோடு கூட மேலேகூறிய கமிட்டிக்குத் தீர்மானத்துக்கு அனுப்ப வேண்டியதென்ற நிபந்தனைக்கு ஏற்பாடுசெய்யலாம்.

92. இந்த நியாயஸ்தலமாகிய பார்லிமெண்டு கமிட்டியானது தக்க கௌரவமுள்ளதாயிருந்து எல்லோருடைய

நம்பிக்கையையும் பெறவேண்டியதவசியமாகையால், அது பார்லிமெண்டின் இருகிளைகளிலிருந்தும் பொறுக்கியெடுத்து இரண்டு பிரதான கட்சிகளையுஞ் சேர்ந்தவர்களைக்கொண்டதாயிருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டானது தமக்குத் தோன்றினபடி முடிவுசெய்யும் சுதந்தரம் பார்லிமெண்டார் தங்கள் பிரதிநிதிகளின் துவாரா செய்யும் தீர்மானங்களால் மட்டும் கட்டுப்படுவதாகும். அதன் கௌரவமும் அதிகாரமும் குறையாமல் எப்போதும்போலவேயிருக்கும். இந்தியஜனங்களுக்கு மகா முக்கியமான விஷயங்களில் பார்லிமெண்டின் மேல்விசாரணை இப்போதுபோலிராமல் அதிகமாய் உண்மையாயும் பலன்படக்கூடியவிதமாயும் செலுத்தப்படும்.—இது ஒன்றுதான் வித்தியாசமாகும்.

ராஜப்ரதிநிதியின் சட்டநிர்மாணசபை.

93. 1892-ம்௵த்திய இந்தியா சபைகளின் சட்டப்படி, ராஜப்ரதிநிதியின் சட்ட நிர்மாணசபையில் அதிகப்படி மெம்பர்களின்சங்கியை 10-க்குக்கீழ்ப்படாமலும் 16-க்குமேல்படாமலும் வரையறுக்கப்பட்டது. அந்த ஆக்டின் சிலவிதிகள் I (4) செக்ஷன்படி, ராஜப்ரதிநிதியால் ஏற்படுத்தப் பட்டு 1893ம்௵ ஜூன்மீ 23உ விளம்பரரூபமாய் பிரசுரிக்கப்பட்டன. அதில், அதிகப்படி (additional) மெம்பர்களுள், 6 பேருக்கு மேற்படாமல் சர்க்கார் உத்யோகஸ்தர்கள் இருக்கவேண்டுமென்றும், மதராஸ், பம்பாய், வங்காளம், ஐக்கியமாகாணங்கள் இவைகளிலுள்ள சட்டசபைகளின் ஜன ப்ரதிநிதிகளால் நியமிக்கப்படும் சபைக்கொருவராக நால்வரும், கல்கத்தா வர்த்தக சங்கத்தார் நியமிக்கும் ஒருவரும், சேர்ந்த ஐந்து பேர்கள் இருக்கவேண்டு

மென்றும்கூறப்பட்டுள்ளது. உத்யோகஸ்தர்கள் வகிக்காத மிகுதி ஸ்தானங்களுக்கு, நானாவித வகுப்பார் சரியான ப்ரா திநிதியம்பெற இஷ்டப்பிரகாரம் அதிகப்படி மெம்பர்களை நியமிக்க ராஜப்ரதிநிதிக்கு அதிகாரம் விடப்பட்டது. நிர்வாகசபை மெம்பர்களும், வங்காள லெப்டினென்ட் கவர்னரும், சேனாதிபதியும், ராஜப்ரதிநிதியும், அதில் தங்கள் உத்யோக உரிமையால் மெம்பர் ஸ்தானம் வகிப்பார்கள். மண்டலாதிபத்ய சட்டநிர்மாண சபையின் பாகுபாடு பின்வருமாறு உத்தம சங்கியையாகிய 25 ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது:—

ராஜப்ரதிநிதி யுள்பட உத்யோகஉரிமை மெம்பர்கள்.	9
உத்தியோகஸ்தரான அதிகப்படி மெம்பர்கள்.	6
நாலு ராஜதானிகளாலும் மாகாணங்களினாலும் நியமிக்கப்படும் உத்யோகஸ்தர் அல்லாத பிரதிநிதிகள்.	4
வர்த்தக சங்கத்தாரால் * நியமிக்கப்படும் உத்யோகஸ்தர் அல்லாத மெம்பர்கள்.	1
ராஜப்ரதிநிதியால் நியமிக்கப்படும் அதிகப்படி மெம்பர்கள்.	5

94. இப்போது ப்ரேரேபித்திருக்கிறபடி, மண்டலாதிபத்ய சட்டநிர்மாண சபையின் உத்தம சங்கியை 53; ராஜப்ரதிநிதியைச் சேர்த்து 54 ஆக்க உத்தேசம். அவை வருமாறு:—

ராஜப்ரதிநிதியைச் சேர்த்து உத்யோக உரிமை மெம்பர்கள்.	9
உத்தியோகஸ்தரான அதிகப்படி மெம்பர்கள்.	20

* Chamber of Commerce.

ஜனங்களால் நியமிக்கபெறும்மெம்பர்கள்.	18
ராஜப்ரதிநிதியால் நியமிக்கப்படும் மெம்பர்கள்.	7

கவர்ன்மெண்ட் நியமனமெம்பர்கள்.

95. இப்போதிருக்கும் விதிகள் ப்ரகாரம் சர்க்கார் தரப்பு மெம்பர்கள் 25 ல் 6க்கு அதிகம் இருக்கப்பெறு திருக்கும்போது,பிரேரேபித்துள்ள மாறுதலால் அந்த சங்கியையை 54 ல் 20 ஆக உயர்ந்துவிடும். அதாவது, இரண்டு பங்குக்குச்சற்று மேலாக இருக்கவேண்டிய கவர்ன்மெண்ட் மெம்பர்கள் மூன்றுபங்குக்கு அதிகமாகிவிடும். சர்க்கார் தரப்பில் அதிசங்கியை யிருக்கவேண்டிய ஆவசிகமே இதற்கு முகாந்தரமாகக் காட்டப்படுகிறது. இந்த முகாந்திரவிஷயமாய் ஏற்கெனவே கமிட்டியார் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

96. இந்த சங்கியைகளைக் கவனமாய்ச் சோதித்துப் பார்த்தால், அனுவசியமான பெரும் மெஜாரிடி எப்போதும் கையிலிருப்பதை ராஜப்ரதிநிதி நம்பி யிருக்கலாமென்று அவை காண்பிக்கும். ஜனப்ரதிநிதிகளோ 18–பேர்தான். அவர்களிலும் வர்த்தக சங்கத்தாரால் நியமிக்கப்படும் இரண்டுபேரும் ஐரோப்பியர்களாகவே யிருப்பார்கள். ஜனப்ரதிநிதிகளான இந்தியர் 16 மெம்பர்களுக்கு எதிராக, உத்யோகஉரிமை, சர்க்கார் தரப்பு நியமனம், ஐரோப்பியர்கள், என்ற பாத்யதைகளால் ஏற்படும் 37 மெம்பர்களான அதிசங்கியை இருக்கவேண்டிய நியாயத்தை கமிட்டியார் அறியக்கூடவில்லை. கவர்ன்மெண்டாரே அமித அதிசங்கியையின் வைஷம்யத்தைக் கவனிப்பார்களென்றும், அதிகப்படி மெம்பர்களாக 16 உத்யோகஸ்

தர்களுக்கு மேல் இருக்கக்கூடாதென்ற கமிட்டியார் வேண்டுகோளை ஆதரவோடு மதிப்பார்களென்றும் அவர்கள் வணக்கமாய் வேண்டுகிருர்கள்.

நியமனம்பெற்ற உத்யோகஸ்தர் அல்லாத மெம்பர்கள்.

97. ஆளும் ஒரு தேசராஜாவை அதிகப்படி மெம்பராக நியமிப்பது ஆவசிகமுமல்ல, ஏற்றதுமல்லவென்று கமிட்டியாருக்குத் தோன்றுகிறது. ஏற்கெனவே மேலே கூறியிருக்கிற காரணங்களையிட்டு, ஆளும் அரசர்கள் க்ஷேமத்தை யுத்தேசித்தும், ஜனங்கள் க்ஷேமத்தை யுத்தேசித்தும், கவர்ன்மெண்டார் அந்த எண்ணத்தைக் கைவிடவேண்டுமென்று வேண்டுகிருர்கள்.

98. விசேஷ சாஸ்திர ஞானமுள்ளவர்களென்றும், சில்லரைகளான விசேஷ உரிமைகளுக்கு (மகம்மதியர் இரண்டுபேருக்குக் குறையாத) பிரதிநிதிகளென்றும், ராஜ ப்ரதிநிதியால் நியமிக்கப்படும் உத்யோகஸ்தர் அல்லாத அதிகப்படி 6 மெம்பர்கள் விஷயமாய், ப்ரேரேபணைகளை மாற்றுதவரையில், ப்ராதிநித்யம் பெருத பலவேறு முக்ய உரிமைகளை நோக்கி,, இந்தியா கவர்ன்மெண்டார் அந்த சங்கியைக்குறைக்க விரும்பாதிரார்கள் என்று கமிட்டியார் வணக்கமாய் நம்புகிருர்கள். ஏற்கெனவே இரண்டு மகம்மதிய மெம்பர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டுபேருக்குக் குறையாமல் அதிகப்படி மகம்மதிய மெம்பர்களை நியமிக்கவேண்டி ஏற்பாடு செய்யப்புகுவது அநாவசியம். ஏற்கெனவே விஞ்ஞாபித்த காரணங்களையிட்டு, அப்படிச் செய்வதும் உசித

மல்ல. ஆகவே நியமனம் பெறும் உத்தியோகஸ்தர் அல்லாத மெம்பர்கள் நாலாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும், அவர்களில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி ராஜ ப்ரதிநிதியே தேவையான மகம்மதியரை நியமிக்கலாமென்றும் கமிட்டியார் வேண்டுகிறார்கள். மேலே யெடுத்துக்காட்டியதில், மதிராஸ், பம்பாய், ஐக்யமாகாணங்கள்—இவ்விடங்களது சபைகள் ஏற்கெனவே செய்து வருகிறதுபோல, மாகாணச் சபைகளெல்லாம் ராஜப்ரதிநிதி சபைக்குத் தாங்களே மகம்மதியர்களை நியமிப்பதும் அநேகமாய் நடைபெறக்கூடியதே. பஞ்சாப்பும், கீழ்வங்காளம் அஸ்ஸாமும் அதேமாதிரி அவ்வளவு தூரமாவது செய்யும் என்று நியாயமாய் எதிர்பார்க்கக்கூடும்.

ஜனங்கள் நியமிக்கும் மெம்பர்கள்.

99. ஜனப்ரதிநிதிகளின் சங்கியைப் பாகுபாடுகளைப்பற்றிக் கவனிப்பது பொது க்ஷேமத்தை யுத்தேசித்து மிகவும் முக்யமானது. சர்க்கார் பிரேரேபணை இப்போதிருக்கிறபடி, அவர்களின் தொகை பின்வருமாறு நியமனம் பெறும்படி 18 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது:—

ஐரோபிய வர்த்தக சங்கத்தாரால்	...	2
மாகாணச் சபைகள் உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களால்	...	7
பிரபுக்களாலும், பெரிய நிலதாரர்களாலும்.		7
மகம்மதியர் களால்	... ...	2

கோடிக்கணக்காக எண்ணக்கூடிய பெரிய ஜனத்திரளால் நியமனம் பெற 7 ஸ்தானங்களை மாத்திரம் ஏற்படுத்தி, சிற்றினங்களும், விசேஷ உரிமைகளும் நியமிக்கும்படி

11 ஸ்தானங்களை அமர்த்தி வைப்பதும், நடைபெறும் முறையைச் சீர்திருத்த வேண்டுமென்று வாதிப்பவர்களுக்குப் பெரியகலக்கத்தையும் பீதியையும் உண்டாக்கும் என்று மிகுந்த வணக்கத்துடன் தெரிவிக்கப்படுகிறது. அப்படிச்செய்வது விர்த்திக்கு முன்வைத்தகாலல்ல, பின் செல்வதற்கே வைத்ததாகும். பிரேரேபித்த மாறுதல்கள் பொது ஜனங்களினுடைய நன்மையை உத்தேசித்ததவனல்ல. மேல்தரத்தாராகிய சிலவகுப்பாருடைய விசேஷ நன்மைக்காகவே ஏற்பட்டனவாகின்றன. அவைகள் படித்தார்களின் உத்கிருஷ்டமான அபீஷ்டங்களைத் திருப்திசெய்யப்போவதாகத் தோன்றவில்லை. அவர்களுக்கு இடைஞ்சல் செய்து கீழ்ப்படுத்தவே எண்ணப்பட்டமையாகக்காணப்படும். இந்தியாவில் அமரிக்கை யின்மையானது படித்த இந்தியர்களின் இயற்கையானஉத்கிருஷ்டமான அபீஷ்டங்களை ஆதாரமாகஉடைய தென்று சென்ற அக்டோபர் மீ 18வுயில் சர் ஹார்வே ஆடாம்ஸன் கூறியதை இந்திய கவர்ன்மெண்டார் வாஸ்தவமென்று எண்ணியிருப்பார்களானால், இப்படிப்பட்ட திருத்தங்களால் ஜனங்களின் குறைகளைத்தீர்ப்பதற்குக்கவர்ன்மெண்டார் ஒருருஜு அம்சம் காட்டுவதாக எப்படிப் புகழ்ந்துகொள்ளக்கூடுமோ அறியக்கூடவில்லை.

100. ஜனப்பிரதிநிதிகளின் உண்மையான அதிகம் 4-லிருந்து 7. இந்த ஜாஸ்தியும், இப்போது ராஜப்ரதிநிதி சபைக்கு ப்ரதிநிதி யனுப்பும் உரிமையை வகிக்கப் பெறாத கீழ்வங்காள அஸ்ஸாம், பஞ்சாப், பர்மாஎன்ற 3மாகாணச்சபைகளின் அதிகத்தால் ஏற்பட்டதாகும். கீழ்வங்காள அஸ்ஸாம், பஞ்சாப், பர்மா இவைகளைப் புதிதாய்ச் சேர்த்ததினாலே, மதராஸ், பம்பாய், வங்காளம், ஐக்ய

மாகாணங்களே இவைகளில் படித்த இந்தியர்களின் அபே க்ஷைகளை எப்படித் திருப்திசெய்யப்படக்கூடுமென்று கமிட்டியார் காணமுடியவில்லை.

பெரிய நிலதாரர்கள்

101. இந்திய கோஷ்டியில், பிரபுக்கள் மாத்திரமேயின்றி, பெரிதும் சிறிதுமாகிய நிலதாரர்களின் பிரதிநிதிகளாகத் தக்கவர்களான பெரிய நிலசுவான்தாரர்களுக்கு, கணிசமான பிராதிநித்யவுரிமையைக் கொடுக்க வேண்டிய ஆவசிகம் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு தெளிவாய் மனதில் பட்டிருக்கிறது எனச்சொல்லப்படுகிறது. ஆகையால் பின்வருமாறு பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது:—

(*a*) வருஷம் 1-க்கு நிலகிஸ்தியாக ரூ. 10,000-க்குக் குறையாமல் செலுத்துகிற நிலசுவான்தாரர்களில் 100 முதல் 150 வரையுள்ள மாகாணப்ராதிநித்ய நியாமகரால் ப்ரதி ராஜதானி அல்லது மாகாணத்துக்கும், ஒருத்தர் வீதம், ராஜப்ரதிநிதி சபைக்குநேரே 7 மெம்பர்கள் அனுப்ப நியமிக்கப்படவேண்டும்.

(*b*) வருஷம் 1க்கு ரூ. 10,000க்குக் குறையாது கிஸ்தி கொடுக்கும் நிலதாரர் களிலிருந்தாவது, தங்கள் சங்கியையிலிருந்தாவது, மாகாணச்சபை நிலதார மெம்பர்கள், ராஜப்ரதிநிதி சபைக்கு நிலதார ப்ரதிநிதி யொருவரை நியமிக்க வேண்டும்.

(*c*). இந்த வகுப்பாரில் 7 ப்ரதிநிதிகள், சர்க்கார் நியமனமுறையால் ராஜப்ரதிநிதி சபைக்கு நியமிக்கப் படவேண்டும்.

கவர்ன்மென்டாருக்கு நேர்ந்திருக்கும் விசன எதுவான கலவரத்தைப்பற்றி கமிட்டியார் ஆச்சரியப்பட

வில்லை. முதல் பிரேரேபணையைக் குறித்து, அது எப்படி அதிருப்திகரமாகவும் ஆட்சேபத்துக் கிடமாகவும் நேரக்கூடு மென்று கவர்ன்மென்டாரே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இரண்டாவதைக்குறித்து நிலமுடைய வக்கீல்களும் வியாபாரிகளும் நிலதாரர்கள்என்று அழைக்கப்பட பாத்திய முள்ளவர்களானால், நிலதார மெம்பர்கள் என்று ப்ரத்யேகமாய் அழைக்கப்படும் மெம்பர்களாக கவர்ன்மெண்டார் யாரைக்குறிக்கிறார்களென்று அறியக்கூடவில்லை. இனி மூன்றாவதைக்குறித்து, அந்த ப்ரேரேபணை தெளிவாய் அறியக்கூடியதுமன்றி, நடைபெறவுஞ் சாத்யமாகும். ஆனால், அதினால்சர்க்கார் நியமனம் பெறுவோர் சங்கியை அதிகரிப்பதுதான் விளையும்.

102. என்றாலும், இந்த நிலதாரர்களைத் தெரிந்தெடுப்பதாவது கவர்ன் மெண்டே நியமிப்பதாவது கவலை யுண்டாக்கவேண்டியதில்லை. பிரஸ்தாப பிரேரேபணையே ஆட்சேபிக்கக் கூடியது. லட்சானு லட்சமான ஊமைஜனங்களுக்குக் கொடுக்கும் பிரதி நிதிகளைப் போலவே 700 அல்லது 1000 வரையிலுள்ள நிலதாரர்களுக்குத் தனி சுதந்தரமாகப் பிரதிநிதிகள் கொடுப்பது ஒருபரிகாச மாகவே கற்ற வகுப்பார் எல்லோராலும் கருதப் படுகிறது.

103. இந்த வகுப்பாரை ப்ராதிநித்யஞ்செய்ய நியமிக்கப்படும் மெம்பர்களும்இதில் சேர்ந்தவராகவே இருக்கவேண்டுமென்று வற்புறுத்தல், விசேஷ சுவதந்திரம்பெற்ற சிலருடைய நம்பிக்கையைப் படித்தவர்கள் பெற்றிருந்த போதிலும் கூட, அந்தப் படித்தவர்களைச் சட்ட சபையிலிருந்து வெளியே வைத்து விடவேண்டியதே

அதிகாரிகள் கருத்தெனத் தோன்றக் கூடியது. இதுவும் முகாந்திர மற்ற தல்ல. 700 முதல் 1,000 வரை நிலதாரர்களின் இச்சா நியமனத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், எவ்வளவு போக்யனாயிருந்தாலும் நம்புதலுடையவனாயிருந்தாலும், அவன் ஏழையாயிருக்கும் காரணம்பற்றி மாத்திரம், பிரதிநிதியாக நியமிக்கக்கூடா தென்பதற்கும் கவர்ன்மென்டாருக்கு நியாயம் சற்றுமில்லை. தங்களுக்குப் பிரியமும் நம்பிக்கையிருக்கும் பட்சத்தில், கனம் கோக்கலே போன்ற ப்ரதிநிதிகளை நிலதாரர்கள் நியமிக்கக் கூடா தென்று அவர்களுக்குச் சொல்ல என்ன நியாயமிருக்கிறது?

104. பிரஸ்தாப திருத்த ஏற்பாட்டின் இந்தபாகத்தை மறுபடியும் கவனித்துப் பொது ஜனங்களினுடைய பெரிய உரிமைகள், அந்தஸ்துள்ள சிலருடைய உரிமைகளுக்காகக் கைவிடப்படாமல், மாற்றப்பட வேண்டுமென்று சர்க்காரைக் கமிட்டியார் வேண்டுகிறார்கள். இந்தச் சிலருக்கு வைத்திருக்கும் ப்ராதான்யம் அவர்கள் தற்கால அந்தஸ்துக்கேற்கா தென்று ஏற்கெனவே மேலே காண்பிக்கப்பட்டிருக்கிறது. நிலகிஸ்தியாக 10,000 ரூபாய்க்கு குறையாது செலுத்தும் நில சுவான்தாரர்கள் பம்பாய் ராஜ தானியில் மிகவும்சொற்பமே. பெரிதும் சிறிதுமான எல்லா நிலதாரர்களுடைய உரிமைகளையும் அவர்கள் நடுநியாயமாயும் பிசகில்லாமலும் ப்ரதிநிதியாக எடுத்துக் கூறுவார்கள் என்று சொல்லவும் கூடாது. வேறுசில ராஜதானியிலோ, மாகாணங்களிலோ, இதைவிட பெரிய தானதும் அதிக செல்வாக்குள்ளதுமான நிலதார வகுப்பு இருக்கின்றது என்பதிற் சந்தேகமில்லை. அவர்கள் ப்ரத்தியேகமாய்ப் ப்ராதிநித்யம் வகிக்கப் பாத்தியம் பெறவேண்டுமென்பது கவர்ன்மெண்டாரின் விருப்பமானல், அவர்

களுக்கு ஒதுக்கிவைக்கப்படும் ஸ்தானமும் 3-க்கு மேற்பட க் கூடாதென்று வணக்கமாய் விஜ்ஞாபிக்கிறார்கள்.

வர்த்தக சங்கங்கள்.

105. பெருந்திரளான இந்திய வியாபாரிகளின் பெரிய வர்த்தக லாபத்துறைகள் சமான ப்ராதிநித்யத்தை ஒரே காலத்தில் பெறுமானால், கல்கத்தா, பம்பாய் வர்த்தகச் சங்கங்களுக்கு * இரண்டு பிரதிநிதிகளை நியமிக்கும் சுவந்திரத்தைக் கொடுக்கப்போகும் பிரேரேபணைக்கு இந்தக் கமிட்டியார் யாதொரு ஆட்சேபணையும் சொல்லார்கள். கல்கத்தா, பம்பாய் வர்த்தக சங்கங்களிலிருந்து இந்திய வியாபாரிகள் ஒதுக்கப்படவில்லை யாயினும், அந்தச்சங்கங்கள் முக்யமாய் ஐரோப்பிய வியாபாரக்காரர்களுடைய லாபத்துறைகளையும், விருப்பங்களையும் ப்ராதிநித்யஞ் செய்கின்றன என்பது மெய். இப்போது செய்யப்படும் பிரேரேபணைப்ரகாரம், இந்திய வியாபாரக் கூட்டத்தாரின் லாபத்துறைகள் ப்ராதிநித்யத்தை யடையமாட்டா.

106. பம்பாய் ராஜதானியில், வர்த்தகச் சங்கங்கள் யாரைப் ப்ராதிநித்யஞ் செய்கின்றனவோ அதற்கு சமானமான ப்ராதிநித்யத்துக்குப் பாத்தியங்கொண்டு விர்த்தியுமாகிவருகின்ற வேறுவியாபாரிகள் வர்த்தகர்களடங்கிய வகுப்பார் பீஸ்றுணி வியாபாரச்சங்கம், யந்திர சுவான்தார்கள் கூட்டம், இவைகள் இருக்கின்றன. இந்தியா முழுவதிலும்இந்த வகுப்பார், சங்கியையிலும் ப்ராதான்யத்திலும் விர்த்தியடைந்துவருகிறார்கள். அவர்களுக்கு நியாயஞ் செய்யவேண்டி, எல்லா ராஜதானி மாகாணங்களிலிருந்தும் இரண்டு மெம்பர்களை நியமனஞ்செய்ய பாத்தியத்தை அவர்களுக்குக் கொடுத்து இந்தியாகவர்ன்மெட்டின்சபை

---

* Chambers of Commerce.

யில் சரிவர ப்ராதிநித்யம்பெற கவர்ன்மெண்டார் ஏற்பாடு பண்ண வேண்டுமென்று கமிட்டியார் வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஏதோ குறிப்பிட்ட தொகை இன்கம் டாக்ஸாகச் செலுத்துவோருக்கு, ப்ரதிநிதி நியமன பாத்தியதையைக் கொடுக்கலாம். பலவேறு ராஜதானி மாகாணங்களின் வித்யாசத்துக்கேற்ப, நாநாவித வியாபாரம் கைத்தொழில்களின் ப்ரதான்யம், மதிப்புக்கேற்றபடி ப்ராதிநித்ய நியாமகர்களை ஏற்படுத்தலாம். வேண்டுமானால், அந்த உரிமையும் முறை விதமாக ப்ரயோகிக்கப்படலாம்.

107. ஜன சமூகத்தால் பொறுக்கி நியமிக்கப்பட்ட ப்ரதிநிதிகள்.

(1) மதிராஸ், (2) பம்பாய், (3) வங்காளம், (4) கீழ் வங்காள ஆஸ்ஸாம், (5) ஐக்யமாகாணங்கள், (6) பஞ்சாப், (7) மத்யமாகாணங்கள், (8) பர்மா ஆகிய பேதப்பட்ட எட்டு மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு மெம்பர்கள் ஏற்படும்படி, மாகாணச் சபைகளின் உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களால் இந்தியா கவர்ன்மெண்ட் சபைக்கு நியமிக்கப்படும் ப்ரதிநிதிகளின் சங்கியை 7-லிருந்து 16-க்கு உயர்த்தப்பட வேண்டுமென்று கமிட்டியார் வணக்கமாய் விஜ்ஞாபிக்கிறார்கள். அப்படி ஏற்படும் இந்தியா கவர்ன் மெண்ட் சபை பின் வருமாறு பாகுபாட்டைப் பெறும்:—

கனம் ராஜப்ரதிநிதி	1
உத்யோக உரிமை மெம்பர்கள்	8
சர்க்கார்நியமன உத்யோகஸ்தர்கள்	16
சர்க்கார்நியமன உத்யோகஸ்தரல்லாதவர்கள்.	4

வர்த்தகச்சங்கங்களால் நியமனம்பெறும் உத்யோகஸ்த ரல்லாதவர்கள்.	2
இந்திய வியாபாரக்கூட்டத்தாரால்நியமன ம்பெறும் உத்யோகஸ்தரல்லாதவர்கள்.	2
நிலதாரர்களின் ப்ரதிநிதிகள்.	3
மாகாணச்சபையாரின் பொறுக்கிய ப்ரதிநிதிகள்.	16
மகம்மதியவகுப்பாரின் பொறுக்கிய ப்ரதிநிதிகள்.	2

ராஜப்ரதிநிதி நீங்கலாக, உத்யோக உரிமை மெம்பர்கள், சர்க்கார்தரப்பு உத்யோகஸ்தரான மெம்பர்கள், சர்க்கார் நியமனம்பெற்ற உத்யோகஸ்த ரல்லாதவர்கள், கல்கத்தா, பம்பாய் வர்த்தகச்சங்க ப்ரதிநிதிகள், கூடிய 30–ப்ரதிநிதிகளிடமிருந்து கவர்ன்மெண்டாருக்கு யாதொரு இடைஞ்சலாவது, அக்ரமமான எதிர்ப்பாவது இருக்கவேமாட்டாது என்று நாம் அனேகமாய் ஒப்பலாம். ஜனப்ரதிநிதிகளான 23 பேருக்கு எதிராக, இந்த 30-பேர்களால் போதுமான நம்பக்கூடிய மெஜாரிடி அநேகமாய் சாதாரண காரியங்களுக்கெல்லாம் கிடைக்கும். நிர்வாகத்தாரை அபஜயப்படுத்த எவ்விடத்திலும் எக்காலத்திலும் ஒரு விருப்பமும் இல்லை. பொதுஜன லாபத்துறைகள்போதுமானபடி ப்ராதிநித்யம் அடையவேண்டுவதையே விரும்புவோர்களின் நியாயமான அபேட்சைகள், மேலேகூறிய எங்கள் பிரேரணைகள் சர்க்காரால் ஆதரவுடன் அங்கீகரிக்கப்பட்டால், திருப்தி பெறுமென்று, கமிட்டியார் நன்றாய் அறிவார்கள்.

108. ப்ரதிநிதிகளைத் தேர்ந்து நியமிக்கும் உரிமை பெற்றவர்களை அவர்கள் நியமனவிஷயத்தில் கட்டுப்படுத்

தப்படாதென்றும், பலவேறு நியாமகத்தொகுதிகளின்நன்னம்பிக்கையைப் பெறபாத்தியங்கொண்டாடுவோர்க்கும், அல்லது நன்னம்பிக்கையைப் பெறுவோர்க்கும், நிலம் என்றும் பணம்என்றும் யாதொரு நிர்ப்பந்தத்தையும் எற்படுத்தக்கூடாதென்றும் இந்த ராஜதானிச்சபைக் கமிட்டியார் வணக்கமாய் விஜ்ஞாபிக்கிறார்கள்.

* * * *

[பம்பாய் சட்ட சபைவிஷயமாய் இந்த சபையாரின் அபிப்பிராயங்களடங்கிய பாராக்களை விட்டு விட்டோம்.]

சட்ட சபைகளில் கேள்விகள்.

119. எந்தக்கேள்விகள் சமயோசிதமல்ல வென்றும் பொதுநன்மைக்கு விரோதமென்றும் கவர்ன்மெண்டார் நினைக்கிறார்களோ அவைகளைக் கேட்கவொட்டாமல் தடுக்க கவர்ன்மெண்டுக்குப் பாத்தியமுண்டு. அப்படித் தடுப்பதைத் தவிர, வேறு எவ்விதமான நிர்ப்பந்தங்களும் இந்த விஷயத்தில் கூடா.

120. இப்போதுள்ள ஒழுங்குகளின்படி, எதையேனும் தெரிந்துகொள்ள விரும்பி மாத்திரம் கேள்வி கேட்கப்படலாம்; வாதத்தைக் கிளப்பும் படியானதும் சந்தேக சூசனையுள்ளதுமான கேள்விகளைக்கேட்கக்கூடாது. கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில்களைப்பற்றிப் பின்னும் தர்க்கம் செய்யக்கூடாது. இந்த ஒழுங்கைமாற்றி, கேள்வி கேட்பதில் உள்ள நியாயங்களை யெடுத்துக்காட்ட மெம்பர்களுக்கு அனுமதி கொடுத்து, கேட்பவரின் நோக்கத்தைப்பற்றி யெவ்வித சந்தேகமுண்டாகாமலும், அதிருப்திகரமான பதிலைச்சொல்ல முகாந்தரமில்லாமலும், செய்யவேண்டும். எந்தக் காரணத்தினாலாவது

கொடுக்கப்படும் பதில் எதையறிந்துகொள்ளக் கேட்கப்பட்டதோ அதைத் தெரிவிக்கத் தவறுமானால், மறுபடியும் கேள்வி கேட்க அனுமதியிருக்கவேண்டும்.

121. ராஜப்பிரதிநிதி சட்டசபையானது ஏப்ரல் மாசம் முதல் ஜனவரி வரையில் கூடுகிறதில்லை. மாகாணச் சட்டசபைகளும் வெகுகாலம் கூடுகிறதில்லை. ஆகையால் இந்தக் காலங்களில், மெம்பர்கள் கேள்விகள் கேட்கவும், அந்தக் கேள்விகளை யெழுத்து மூலமாய்க் கேட்கவும் அனுமதியிருக்க வேண்டும். இரண்டு மாதத்துக்கு ஒரு முறை இப்படிக்கேட்க அனுமதியிருக்கலாம். இப்படியிருந்தால், கேள்விகள் அதிகமாகக் குவிந்துவிடா. துரைத்தன நிர்வாகத்தைப் பற்றிப் பல சங்கதிகள் ஜனங்களுக்குத் தெரியவேண்டியிருக்கின்றன. தெரிய மார்க்கமில்லாமல் வெகுகாலம் செல்லுமானால், பலவிதமான தப்பெண்ணங்களுக்குஇடமுண்டாகக்கூடும். அப்படி யுண்டாகாமல் தடுக்கும்படியான நன்மையும் இதிலிருக்கின்றது.

122. பின் வருபவைகளையும் இந்தச் சபையார் வேண்டுகிறார்கள்.

(*a*) ஏதாவது ஒருவிஷயத்தைப்பற்றி தஸ்தாவேஜுகளைக் காட்டும்படி ஒரு தீர்மானத்தை மெம்பர்கள் கொண்டுவரலாம். அப்படிக் கொண்டுவர கவர்ன்மெண்ட்மறுக்கும் பட்சத்தில், சட்டசபையில் வோட்டுகள் எடுக்கவேண்டும்.

(*b*) பிரதிநிதி மெம்பர்களில் மூன்றி லொருபாலாருக்குமேல் ஏதேனும் ஒரு விஷயம் உடனேயாவது தாமசமில்லாமலாவது வாதிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டால், வீண் தாமசமில்லாமல் சட்டசபை கூட்டப்படவேண்டும்.

(c) இப்படிச்செய்தால் கவர்ன்மெண்டுக்குத் தங்கள் முறையை விளக்கிச் சொல்லவும் தப்பெண்ணங்களையும் தப்பபிப்பிராயங்களையும் தவிர்க்கவும் இயலும்.

பட்ஜட் விவாதங்கள்.

123. கவர்ன்மெண்டின் திருத்தப் பிரேரணைகளின் படி, சட்ட சபைகளில் பட்ஜட், அதாவது, வரவு செலவு திட்டக்கணக்குகள், விவாதத்துக்கு வரும்போது, பற்பல இனங்களைத் தனியாகவாவது சிலவற்றை ஒன்ருய்ச் சேர்த்தாவது இலாகா உத்தியோக மெம்பர்கள் விளக்கிச் சொல்லுவார்கள் என்பது சரியான திருத்தம். ஆனல் இது சபையில் நடக்கும் விவாதங்கள் பிரயோஜன மற்றிருப்பதைத் தடுக்கமாட்டாது.

124. இப்போது மெம்பர்கள் தாங்கள் பேசும் விஷயங்களை எவ்வளவு நன்ருய்ப்படித்து, எவ்வளவு சாமர்த்தியத்தைக்காட்டிப் பேசினலும், ஒருவித பிரயோஜனமும் உண்டாவதில்லையென்கிற நம்பிக்கையுடன் பேசுகிருர்கள். இப்படியிருக்கும்போது மெம்பர்களுக்குப் புதிதாயொன்றைப் பிரேரேபிக்கவாவது, தக்கபடி பொறுப்புணர்ச்சி கொள்ளவாவது தூண்டுதல் உண்டாகிறதில்லை. தீர்மானங்கள் கொண்டுவரவாவது, சபையைப்பிரித்து வோட்டுகள் எடுக்கவாவது அதிகாரமில்லாமல் வெறும் பேச்சுகள் மாத்திரம் பேசுவதில் பிரயோஜன மின்னதென்று விளங்கவில்லை.

125. வரவு செலவுகளைப்பற்றி வோட் கொடுக்கும் அதிகாரமானது உத்தமமான பிரயோஜனமும் பிராதான்யமும் கொண்டது. அந்த அதிகாரம் கொடுப்பதால் ஒருவித தொந்தரவும் உண்டாகாது. அதனல் கவர்ன்

மெண்ட் தோல்வியடையுமென்பது இந்தியாவில் சாத்திய மென்று ஒருவனும் கனவு காணமாட்டான். பொதுஜனங் கள் என்ன நினைக்கிறார்கள் என்று மொத்தமாய் அறிவ தற்கு இது ஒரு வழியாகும். ஒரேவிதமாக மெம்பர்கள் ஒருவர் பின்னால் ஒருவர் பேசிக்கொண்டுபோகிற அவசி யத்தை இது நிறுத்திவிடும். மெம்பர்கள் தங்கள் அபிப் பிராயங்களை வோட் மூலமாய்த் தெரிவிக்க அதிகாரம் பெறுமலிருக்கையில், மெம்பர்கள் வெறும்பேச்சுகளுக் குத் தகாதமதிப்புக் கொடுக்கிறார்கள் என்று குற்றஞ் சொல்லுவது சரியல்ல.

126. கவர்ன்மெண்டுக்குப் பொதுவாய் மெஜாரிடியே கிடைத்துக்கொண்டிருக்குமென்று சொல்லியிருக்கிறோம். ஏதோ ஒரு சமயத்தில் கிடைக்கத்தவறினால், அது குறித்த விஷயம் மறுபடியும் கவனிக்கப் படவேண்டியதென் பதையும், அல்லது அது பார்லிமெண்ட் கமிட்டியான ஒரு அப்பீல் கோர்ட்டுக்குத் தெரிவித்து முடிவுசெய்து கொள் ளத்தக்கதென்பதையுங்காட்டும். மெஜாரிடி விரோதமா வதில் மோசமில்லையென்று ஏற்படுகின்றது.

127. 1861-ம் வருஷத்தில் சட்டசபைகள் ஸ்தாபிக் கப் பட்டபோது, இந்தியா செக்கிரிடெரியாயிருந்த ஸர் சார்லஸ் வுட் (Sir Charles Wood), கவர்னர் ஜனரலின் முன்னனுமதியின்றி வரவுசெலவு சம்பந்தமான எவ் விஷயமும் சபையில் கொண்டுவரப்படக்கூடாதென்று சொன்னபோது, மிஸ்டர் ப்ரைட் (Mr. Bright), பார்லி மெண்ட் சபையில் மெம்பர்கள் செய்யக்கூடியதுபோல இந்தியா சட்டசபைகளில் எந்த மெம்பரும் ரெவினியு விஷ யமாய்ப் பிரேரணை யெதுவுஞ் செய்யக்கூடாதோவென்று கேட்டார். அதற்கு, ஸர் சார்லஸ் வுட், பார்லிமெண்ட்

சபையில் எப்படியோ அப்படித்தான் இந்திய சபையிலும் நடக்குமென்று பதில் சொன்னார். ஆகவே, அரை நூற்றாண்டுக்கு முன்னால் சாத்தியமென்று மதிக்கப்பட்ட அதிகாரமானது இப்போது கொடுக்கப்படத் தகாததாகாது.

128. பட்ஜட் விவாதங்களுக்கு எல்லை கூடாது என்பது கருத்தல்ல. ஒரு மெம்பர் ஒரே திருத்தப் பிரேரணை தான் செய்யலாமென்றும், விவாதங்களெல்லாம் ஒரு வாரத்துக்குள் முடிந்துவிடுமென்றும், திருத்தப் பிரேரணைகள் பிரெசிடெண்டின் ஒழுங்குகளுக் குட்பட்டிருக்க வேண்டுமென்றுமிருந்தால், எவ்வித அசௌக்கியமும் நேரிடாது.

129. பட்ஜட் விவாதத்துக்கு வருமுன், சட்ட சபைகளிலுள்ள பிரதிநிதி மெம்பர்களும் கவர்ன்மெண்ட் மெம்பர்களும் ஒன்றுகூடி வெவ்வேறு இனங்களைக்குறித்து ஆலோசனை செய்யலாம். இப்படிச் செய்வதால் கவர்ன்மெண்டின் பிரேரணைகளிலுள்ள குற்றங்குறைகள் குறையக்கூடும்.

130. சில சமயம், முக்கியமாய் பம்பாய்ச் சட்ட சபையில், மாகாண வரவுசெலவுக் கணக்குகள் இந்தியா கவர்ன்மெண்டாரால் உறுதிசெய்யப்பட்டு அநுஷ்டானத்துக்கு வந்தபிறகு, மாகாண சபையில் விவாதத்துக்கு வருகின்றன. என்ன பிரயோஜனம்? இந்தியா கவர்ன்மெண்டின் பட்ஜட்டானது மார்ச்சுமாசம் துவக்கத்திலும், மாகாணக் கவர்ன்மெண்டுகளின் பட்ஜட்டுகள் அந்த மாசக் கடைசியிலும் விவாதத்துக்கு வரவேண்டும். அவசியமானால், இந்தியாகவர்ன்மெண்டு ஸிம்லாவுக்குப் போகும் தினத்தைச் சிலநாள் ஒத்திவைக்கலாம். பொது நன்மையின்பொருட்டு இப்படிச் செய்யலாம்.

131. விவாதங்கள் நடக்கும் ஒழுங்குகளையும் சீர்ப்படுத்தவேண்டும். கவர்னர்ஜனரல் சபையில் அதிகப்படி (additional) மெம்பர்களில், கடைசியாக நியமிக்கப்பட்டவர் முதலாகவும், மற்றவர்கள் அவரவர் நியமன தேதிகளின்படியும், முறையே பேசவேண்டும்; கவர்ன்மெண்ட் மெம்பர்கள் கடைசியாகப் பேசவேண்டும். மாகாணச் சபைகளில், உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்கள் முதலாகவும், உத்தியோகஸ்தரரன மெம்பர்கள் பிறகும், கவர்ன்மெண்ட் மெம்பர்கள் கடைசியாகவும் பேசவேண்டும். இதுதான் இப்போதுள்ள ஒழுங்கு. இதனால் கவர்ன்மெண்ட் மெம்பர்கள் சொல்லுவதற்குப்பதில் பிரதிநிதி மெம்பர்களால் சொல்லமுடியாமல் போகிறது. அடுத்த வருஷந்தான் சட்டசபை கூடும்போது சொல்ல முடியும். இதனால் பிரதிநிதி மெம்பர்களுக்குப் பெருத்த அசௌகரியம் நேரிடுகிறது. ஏதாவது திருத்தமாவது ஆட்சேபமாவது செய்யப்படும்போது, கவர்ன்மெண்ட் பக்கத்து மெம்பர்கள் உடனே பதில் சொல்லும்படியாயும், அந்தப்பதிலுக்குப் பதிலும், அவசியமானால், உடனே சொல்லும்படியாயும் ஏற்பட்டால், விவாதத்தின் பிரயோஜனம் அதிகமாவதன்றி, வீண்காலமும் போகாது.

நிர்வாக சபை.

(The Executive Council).

132. நிர்வாக சபைகளில் இந்தியர்களை நியமிப்ப தைப்பற்றி எந்த ஏற்பாடும் சொல்லப்படவில்லை. காரணமும் தெரியவில்லை. லண்டனிலுள்ள இந்தியா கௌன்ஸிலில் இரண்டு இந்தியர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்ததில் லார்ட் மார்லியின் நோக்கம், இந்தியர் ஏகாதிபத்திய சபைகளில் பங்குபெறப் பாத்தியம் பெற்றவர் என்று காட்டுவது. அதே நோக்கம் இந்திய சபைகளுக்கும் ஒப்புமல்லவா? ராஜப் பிரதிநிதி நிர்வாக சபையிலும், மாகாண சபைகளிலும் இரண்டொரு இந்தியர் நியமிக்கப்படுவது அவசியம். இப்படிச் செய்தால்மட்டும், கவர்ன்மெண்ட் மனதில் வைத்திருக்கும் எண்ணம், அதாவது, ஜன (Racial) வேற்றுமையால் உண்டாகும் அதிருப்தியைத்தணித்து, இந்தியரில் எல்லா வகுப்பாரும் கவர்ன்மெண்ட் நிர்வாகத்தில் பங்குபெறச் செய்ய வேண்டுமென்ற எண்ணம், நிறைவேறும்.

133. முடிவில், இந்த விண்ணப்பம் நீண்டுவிட்டதற்காக பம்பாய் பிரெஸிடென்ஸி சபையின் கௌன்ஸிலார் கவர்ன்மெண்டின் மன்னிப்பைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அறிவார்கள். ஆனால் சமயம் மகா முக்கியமானதாயும், ஸர் ஹாரொல்ட் ஸ்டூவர்ட்டின் கடிதத்தில் விவகரிக்கப்படும் விஷயங்கள் பலவாயுமிருப்பதால் அப்படி நீண்ட தெரிவிப்பு அவசியமாயிற்று. ஜனங்களுக்குப் படிப்படியாய், தைரியமாயும் நம்பிக்கையுடனும், சுதந்தர பாத்தியங்கள் கொடுக்கும்படியான கடமையைச் செலுத்துவதில் கவர்ன்மெண்டுக்கு உதவும்படியான வாத

த்தையாவது பிரேரணையையாவது கௌன்ஸிலார் விட வில்லை. இந்தச் சுதந்தரபாத்தியங்கள் வெகு காலத் துக்கு முன்னாலேயே கொடுக்கப்படவேண்டியவை கொடு படாமல் நின்றிருக்கின்றன. இப்போதுங்கூட இவைகள் கொடுக்கப்படுமானால், மகா மகிமைதங்கிய சக்கிரவர்த்தி யவர்களின் பிரஜைகளில் நியாயப்புலனும் நல்லெண்ண மும் கொண்ட எல்லோரது அவாக்களைத் திருப்தி செய் யும்.

இப்படித் தங்கள் பணிவுள்ள ஊழியர்,

(ஒப்பம்). பிரோஸஷா M. மோடா,

கௌன்ஸிலின் பிரெஸிடெண்டும், செயர்மனும்.

டினஷா எடல்ஜி வாச்சா,
அமிருதீன் தியாப்ஜி,
சேமனலால் H. சேதல்வாட்.

ஆனரெரி செக்கிரிடெரிகள்.

Cully
27573